
# திருக்கோயில்


நவம்பர் – டிசம்பர் 1982 ரூ. 2-50





மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்குத் தமிழக ஆளுநர் மேதகு எஸ். எல். குரானா அவர்கள் வருகை தந்தபோது, அறங்காவலர் குழுத்தலைவர் திரு வி. என். சிதம்பரம் அவர்களும் மற்றும் அறங்காவலர்கள், துணை ஆணையர், உதவி ஆணையர், நிர்வாக அதிகாரி ஆகியவர்களும் சிறப்பான முறையில் ஆளுநர் அவர்களை வரவேற்றுத் தரிசனம் செய்துவைத்தனர். அதுபோது மேதகு ஆளுநர் அவர்கள் அத்திருக்கோயிலில் உள்ள புரதான நகைகளைப் பார்வையிட்டு வியந்து போற்றி மகிழ்ந்தார்கள் (18-12-82).

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு அமெரிக்காவைச் சார்ந்த ஹாவாய் என்னுமிடத்தில் இந்தியக் கலாச்சாரத்தையும், தமிழகத்திற்கே உரிய சைவ சித்தாந்த தத்துவக் கொள்கையினையும் தீவிரமாகப் பரப்பி அரும்பெரும் தொண்டுகள் ஆற்றிவரும் சிவத்திரு சிவாய சுப்பிரமணிய சுவாமிகள் என்னும் அமெரிக்க நாட்டுத் தவமுனிவர், தம்முடைய நாற்பது சீடர்களுடன் திருத்தல யாத்திரையாக எழுந்தருளிய பொழுது, அறங்காவலர் குழுத் தலைவர் திரு வி. என். சிதம்பரம் அவர்களும், மற்றும் அறங்காவலர்கள், நிர்வாக அதிகாரி முதலியவர்களும் சுவாமிகளைச் சிறப்பான முறையில் வரவேற்றுத் தரிசனம் செய்து வைத்தனர். அமெரிக்க நாட்டு தவத்திரு சுப்பிரமணிய சுவாமிகள் அவர்கள் திருக்கோயிலைச் சுற்றியுள்ள நான்கு சித்திரை வீதிகளிலும் ஊர்வலமாக அழைத்துவரப் பட்டு மிகவும் சிறப்பான முறையில் வரவேற்கப்பட்டார்கள். (19-1-1983)



முகப்பு

அருள்மிகு வள்ளியம்மை உடனுறை
திருமுருகன் திருக்கோயில்,
வள்ளிமலை

# திருக்கோயில்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

| மாலை : 24 | திருவள்ளுவர் ஆண்டு 2013, துந்துபி ஆண்டு-மார்கழி & தை [நவம்பர் & டிசம்பர் 1982] ரூ. 2-50 | மணி : 13 & 14 |
|---|---|---|

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

*திருக்கோயில்* திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப் பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங் களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட ''சந்தாதாரர்கள்'' ஒவ்வொரு வரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறை யாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற் பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொரு வருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளி நாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

1. அறநிலையச் சுற்றறிக்கை
2. திருவாசகத்தில் திருச்சதகத்தின் இலக்கிய நலச் சிறப்புகள். —ந. ரா. முருகவேள்.
3. வள்ளலார் கண்ட பெருநெறி —டாக்டர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்
4. திருவள்ளுவரும், அருணகிரி நாதரும் —அருள்மொழியரசு, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்
5. தண்டமிழ்ச் சான்றோர் பண்டிதமணியார் —ந. ரா. முருகவேள்.
6. 'போரேறு' நுண்பொருள்கள் —மகாவித்வான், பத்மவிபூஷண் திரு. பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்
7. திருமந்திரயோகம் —கவியோகி, மகரிஷி தவத்திரு சுத்தானந்த பாரதியார்
8. திருக்கடல் மல்லைத்தலசயனம் (தலவரலாறு) —ந. ரா. முருகவேள்.
9. ஆலவாய் நகரில் அருள் வள்ளல் 'அறநெறி அண்ணல்' —'சைவ சேவாமணி' திரு. கி. பழநியப்பனார்
10. நம்மாழ்வாரின் பரதத்துவ நிர்ணயம் திரு. எஸ். கிருஷ்ணசாமி அயங்கார், எம். ஏ., பி.எல்.
12. உபதேச ரத்தினமாலை —ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
13. இறைவனின் திருநடனம் —அ. இராஜராஜன் எம்.ஏ., எம். எல்.
14. அவனது இன்னருள் — திரு. உ. வே. ஆர். கண்ணன்.
15. கூடலூர் அழகர் கோயில் —திரு. இராஜ். பவுன்துரை, எம்.ஏ., எம்.பில்.
16. இன்றைய உலகுக்கு இராமலிங்கர் நெறி —தவத்திரு ஊரன் அடிகள்
17. நாவலர் நாட்டார் ஐயாவின் நல்ல பெரு விளக்கம் —ந. ரா. முருகவேள்.
18. உறையூர்த்தான்தோன்றீசுவரர் திருக்கோயில் கல்வெட்டுக்கள் —டாக்டர் இரா. கலைக்கோவன்
19. திருக்கச்சூர்த் திருக்கோயில் —திரு. வி. சிவ பாத சேகரன், பி.எஸ்சி.
20. திருவிருத்தமும், குறுந்தொகையும் —ந. ரா. முருகவேள்

**இந்து சமய அறநிலையய் ஆட்சித்துறை வெளியீடு**

ஆணையாளர் அலுவலகம்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை—600 034

# சுற்றறிக்கை ந. க. எண். 4381/83-எச். 1 நாள் 21.1.1983

பொருள் —தோப்புக் குத்தகை—தென்னந்தோப்புக் குத்தகை—ஏலத்தில் விடுவதில் தாமதமான நடவடிக்கையைத் தவிர்த்தல்—அறிவுரை வழங்கப்படுகின்றது.

தமிழகத் திருக்கோவில்களுக்குச் சொந்தமான தென்னந் தோப்புகள் உள்ளன. இந்தத் தென்னந்தோப்புகளின் மேல்பலன், குத்தகைச் சட்டப்பிரிவு 116(2) (XIII)ன் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகளின்படி, பொது ஏலத்தில் விட வேண்டும். தோப்புகளின் மேல்பலன் குத்தகை, குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டத்திற்கு உட்படாதது. ஆனால், ஏற்கனவே ஏலத்தின்மூலம் குத்தகை எடுத்தவர், குத்தகைக் காலாவதியில் தோப்பைத் திருக்கோவிலுக்கு ஒப்படைக்காமல், ஏதாவது காரணம் சொல்லி வழக்குத் தொடர்ந்து, அது நிலுவையில் இருக்கும்போதும் தொடர்ந்து, மேல் பலனை அனுபவித்து வரும் நிலை, சில திருக்கோவில்களில் நிகழ்வதாக ஆணையர் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாறு தொடரப்படும் வழக்கு முடிவுற்ற பின்னர், தோப்பு மேல்பலன் உரிமையை உடனே சட்ட விதிகளின்படி பொது ஏலத்தில் குத்தகை விடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல், ஒரு திருக்கோவில் செயல்அலுவலர், ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகள் கழித்துக் குத்தகை விடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக, அரசின் கவனத்திற்கு வரப்பெற்று, காலத்தில் நடவடிக்கை எடுக்கத் தவறிய அந்தச் செயல் அலுவலர் மீது, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவருக்குத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நீதி மன்றத் தீர்ப்பிற்குப் பிறகும், தோப்புக் குத்தகையைச் சட்ட விதிகளின்படி ஏலத்தில் விடுவதற்குக் காலதாமதம் செய்வதை, அரசு வன்மையாகக் கண்டித்து, இனிமேல் இவ்வாறு காலதாமதம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

எனவே, திருக்கோவில்களுக்குச் சொந்தமான தோப்பின் மேல்பலன் அநுபவிக்கும் உரிமையை, சட்ட விதிகளின்படி பொது ஏலத்தில் விடுவதற்குச் செயல்அலுவலர்கள் மற்றும் அறங்காவலர்கள் காலம் தாழ்த்தாமல், அவ்வப்போது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இவ்வாறு நடவடிக்கை எடுக்காத செயல் அலுவலர்கள் மற்றும் அறங்காவலர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், நடவடிக்கை எடுக்கத் தவறிய காரணத்தினால் திருக்கோவில்களுக்கு ஏதேனும் இழப்பு ஏற்பட்டால், அதைச் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேலும் தோப்புக் குத்தகை ஏலத்தில், சில திருக்கோவில் நிர்வாகிகள் அடிநிலம் சாகுபடி உரிமையையும் சேர்த்து, ஏலம் விடுவதாக அறியப்படுகிறது. இவ்வாறு விடுவதால், அடிநிலம் சாகுபடி உரிமை, பொதுதர்ம சட்டத்தின்படியும், சாகுபடியாளர் உரிமைச் சட்டப்படியும் சாகுபடிதாரருக்குப் பாதுகாப்பு அளிப்பதால், குத்தகைக் காலாவதியில் தோப்பு மேல்பலன் உரிமையை, திருக்கோவில் நிர்வாகிகள் ஏலம் விடும்போது, ஏற்கனவே அனுபவித்து வந்த குத்தகைதாரர், மேற்படி சட்டங்களின் நிழலில் பாதுகாப்புக் கேட்டு, வழக்கு மன்றம் செல்ல ஏதுவாகிறது. ஆகவே, தோப்புக் குத்தகை ஏல அறிவிப்பில் அடிநிலம் சாகுபடி உரிமையைச் சேர்க்கக்கூடாது என்றும், இதைக் குறிப்பாக ஏல நிபந்தனைகளில் ஒன்றாகச் சேர்க்க வேண்டும் என்றும், திருக்கோவில் நிர்வாகிகளுக்கு அறிவிக்கப்படுகிறது.

பொதுவாக, தோப்புகள் மேல்பலன் உரிமைக் குத்தகைக் காலம் ஓராண்டுக்கு மட்டுமே நிர்ணயிக்கப்பட வேண்டும். ஓராண்டுக்குமேல் குத்தகைக் காலம் நிர்ணயிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அறங்காவலர் குழுத் தீர்மானம் பெற்றும், சம்பந்தப்பட்ட உதவி ஆணையர் அல்லது துணை ஆணையரின் முன் அனுமதி பெற்றும் தான், குத்தகைக் காலம் நிர்ணயிக்கப்படவேண்டும்.

மேற்காணும் அறிவுரையைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு கடைப்பிடிக்கிறார்களா என்பதைத் துணை ஆணையர்கள், மற்றும் உதவி ஆணையர்கள் கண்காணிக்க வேண்டும் என்றும், தவறு செய்யும் செயல் அலுவலர்கள் அறங்காவலர்கள்மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அதிகாரிகளைப் பணிக்கப்படுகின்றது.

(ஒப்பம்) ஆர். ஷண்முகசிகாமணி,
ஆணையாளர்.

பெறுநர்:

1. அனைத்துத் துணை ஆணையாளர்கள், மற்றும் துணை ஆணையர் (ஆய்வு), சென்னை.
2. அனைத்து உதவி ஆணையர்கள்
3. துணை ஆணையர்-செயல் அலுவலர், அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி.
4. உதவிஆணையர்-செயல் அலுவலர்கள் உள்ள திருக்கோயில்.
5. முதன்மைத் தணிக்கை அலுவலர், சென்னை.
6. அனைத்து மண்டலத் தணிக்கை அலுவலர்கள்.
7. நிர்வாகச் செயலாளர், இராமநாதபுரம் சமஸ்தானம் திருக்கோயில்கள், இராமநாதபுரம்.
8. தேவஸ்தான மேலாளர், சிவகங்கை சமஸ்தானத் தேவஸ்தானம், சிவகங்கை.

—oOo—

# திருவாசகத்தில் திருச்சதகத்தின் இலக்கிய நலச் சிறப்புகள்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## முன்னுரை :

அமிழ்தினும் இனிய நமது தமிழ்மொழியின் கண் உள்ள அரும்பெறல் இலக்கியங்கள் பற்பல. அவற்றுள் அறிஞர்களும் அருளாளர்களும் உள முவந்து ஒருங்கே போற்றும் பெருஞ் சிறப்பு மிக்கது திருவாசகம். அதன்கண் உள்ள திருச் சதகம் என்னும் பகுதி, பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப் பெற்ற, உருக்கம் மிக்க உயர்ந்த பல கவிதைகளைக் கொண்டுள்ளது ஆகும். ''திகைப்பு உணர்ச்சியினை வெளிப்படுத்தும் கவிதைகள், மிகவும் அழகு வாய்ந்த சிறந்த கவிதைகள் ஆகும்; மேலும், இக்காலத்தில் அழியா நிலையில் நிலைபெற்று ஓங்கித் திகழும் ஒருசில தெய்விகப் பாடல்கள், உண்மையிலேயே தூய அழுகைக் கவிதைகளேயாகும்'' (''The songs of despair are the loveliest song; And some, now immortal, are the purest of sobs''—P. B. Shelley) என்பர் அறிஞர்.

## திருச்சதகம்

அம்முறையில், திருப்பெருந்துறையில் குருந்தமர நீழலில் தம்மை ஆட்கொண்டு, தமக்குத் திருவைந்தெழுத்தை அறிவுறுத்தியருளிய ஞானாசிரியனாகிய சிவபெருமான் 'நலமலி தில்லையுள் கோலமார்தரு பொதுவினில் வருக' என்று அருளிச் செய்து மறைந்தனனாக, 'விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன்' என்றும், 'கண்டும் கண்டிலேன் என்ன கண் மாயமே' என்றும், 'தாயிலாகிய இன்னருள் புரிந்த என் தலைவனை நனிகாணேன்' என்றும், திகைத்துப் புலம்பி அழுதழுது பாடிய அழகிய கவிதைகள் ஆதலின், திருச்சதகத்தின்கண் ஒப்புயர்வற்ற இலக்கியநலச் சிறப்பும், உள்ளத்தை உருக்கி உணர்வை நெகிழ்விக்கின்ற இன்பச் சுவையும் அமைந்து விளங்கக் காண்கின்றோம்.

## பத்துத் திருப்பதிகங்கள்

திருப்பெருந்துறைப் புராணத்தின்கண் ''சத்திய ஞானந்தரு தேசிகர் மோகம் சதகமாம்'' என்று கூறப் பெற்றுள்ளபடி, குருபக்தியாகிய தேசிகர் மோகமும், அவர்தம் பிரிவாற்றாமையாகிய சோகமும் ஆகிய சுவைகள் விரவி, நம்மனோர் உள்ளங்களைக் கொள்ளைகொள்ள வல்லனவாகத் திருச்சதகப் பாடல்கள் திகழுகின்றன. சதகம் என்னும் பெயருக்கு ஏற்ப நூறு பாடல்களைக் கொண்டுள்ள இப்பகுதி,

1. மெய்யுணர்தல்
2. அறிவுறுத்தல்
3. சுட்டறுத்தல்
4. ஆத்தும சுத்தி
5. கைம்மாறு கொடுத்தல்
6. அநுபோகசுத்தி
7. காருணியத்திரங்கல்
8. ஆனந்தத்து அழுந்தல்
9. ஆனந்த பரவசம்
10. ஆனந்த அதீதம்.

என்னும் பத்துவகைத் தலைப்புக்களை உடையதாய், ஒவ்வொரு தலைப்பும் தன்னகத்தே பத்துப் பாடல்களை உட்கொண்டதாய் அமைந்துள்ளது.

இப்பத்துவகைத் திருப்பதிகத் தலைப்புக்களும், சமய நெறி கடைப்பிடித் தொழுகும் சான்றோர்களின் ஆன்மிக வாழ்க்கையில், ''சீரடியார்கள் சிவானுபவங்கள் தெரிந்திடும் ஆகாதே'' (640) என்றபடி, முறைமுறையே எய்தும் அருளியல் அனுபவப் படிநிலைகளை அறிவுறுத்துகின்றன எனலாம்.

## தொல்காப்பிய மெய்ப்பாட்டியல்

நமது தமிழகத்தில் தோன்றிய சான்றோர்களுக்கெல்லாம், தம் பழமையினாலும் பெருமையினாலும் தலைசிறந்த சான்றோராகத் திகழ்பவர், ஒல்காப் பெருமைத் தொல்காப்பியம் இயற்றியருளிய தொல்காப்பியனார் ஆவர். நமது தொல்காப்பியம் போன்ற இனிய அரிய இலக்கண நூல் ஒன்றை, உலக மொழிகள் வேறு எதன்கண்ணும் காண்பது அரிது.

''பழமை பெருமைநூற் பண்பனைத்தும் வாய்ந்து
விழுமியர்கள் எல்லாம் வியப்ப-முழுமணியாய்ச்
செந்தமிழ்க்கே ஓர்சிறந்த தெய்விகநூலாய்
விளங்கும்
நந்தம்அருந் தொல்காப் பியம்'' (1)

''மொழிகள் பலப்பலதாம் மூதுலகில் உண்டு!
ஒழிவில் இலக்கணமும் உண்டு-வழிமுறையே
என்றாலும், தொல்காப் பியம்போல் இலக்கண
நூல்
ஒன்றேனும் இவ்வுலகத்தில்'' (2)

''வழுத்துபெரு மாண்புடைய மற்றை மொழிகள்
எழுத்தொடு சொல்லின் இயல்பே-முழுத்தும்
எடுத்துரைக்க மாட்டா திளைப்பப், பொருளும்
தொடுத்துரைக்கும் தொல்காப் பியம்!'' (3)

''எழுத்தொடுநற் சொல்லியல் பெல்லாம் இனிதே
முழுத்தும் விளக்கி மொழிந்து-விழுப்பமிகத்
தள்ளாப் பொருளியல்பும் சாற்றியதொல் காப்பி
யம்போல்
எள்ளாச்சீர் நூல்யாண்டும் இல்''

''பாணினியார் நூற்செறிவும், பண்பார் பதஞ்சலி
யார்
காணினிய திட்பக் கருத்தியலும்,-சேணினராம்
சீர்அரித்தாட்டில் சொற்றெளிவும்,அளவையும்சால்
பேரெழிற்றாம் தொல்காப் பியம்'' (5)

இத்தகு சிறப்புமிக்க தொல்காப்பியத்தின் கண், ஆசிரியர் தொல்காப்பியனார், பொருள் இலக்கணம் வகுத்துக் கூறுகின்றுழி, மெய்ப் பாட்டியல் என்னும் பகுதியில் நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்னும் எட்டு மெய்ப்பாடுகளையும், ஐந்திணைக்குரியனவாய் நிகழும் பல்வேறு கூறுபாடுகளையுமே குறித்தருளினார். அவற் றுள் அடங்காமல், அவற்றினும் வேறுபாடும் மெய்ப்பாடும் கொண்ட அருளியல் மெய்ப் பாடுகள் பிறவும் உள்ளன என்பது, திருவாசகத் தினாலேயே தெள்ளிதிற் புலனாகின்றது.

## (1) திருவாசக மெய்ப்பாட்டியல்

இவ்வகை உயர்ந்த இனிய தெய்விக மெய்ப்பாடுகளை உள்ளவாறு உணர்த்துவது, திருவாசகச் செந்தமிழ்த் தெய்வ மாமறையே எனலாம். சிறப்பாகத் திருச்சதகத்தின் முதற் பாடல், இங்கு நாம் குறிக்கொண்டு நோக்கத் தக்கது.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே

இந்தத் திருச்சதக முதற்பாடலின்கண், மெய் அரும்புதல்-விதிர்விதிர்த்தல்-கை தலை வைத்தல்-கண் ணீர் ததும்புதல்-வெதும்புதல்- உள்ளம்பொய் தவிர்தல்-சயசய போற்றி என்னுதல், என்னும் மெய்ப்பாடுகள் குறிக்கப் பெற்றிருத்தல், கூர்ந்து நோக்கி ஓர்ந்து உணரற் பாலது.

நெக்கு நெக்கு உள்ளுருகி உருகி,
நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்,

நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி,
நானா விதத்தால் கூத்து நவிற்றிச்,

செக்கர் போலும் திருமேனி
திகழ நோக்கிச் சிலிர்சிலிர்த்துப்,

புக்கு நிற்பது என்று கொல்லோ? என்
பொல்லா மணியைப் புணர்ந்தே!

எனவரும் புணர்ச்சிப்பத்துப் பதிகப் பாடலிலும் நெகிழ்தல் - உருகுதல்-நகுதல்-அழுதல்-தொழு தல் - வாழ்த்துதல் - கூத்து நவிற்றுதல் - சிலிர் சிலிர்த்தல்-நிற்றல்-இருத்தல்-கிடத்தல்-எழுதல் முதலிய, எத்தனையோ பல மெய்ப்பாடுகள் கூறப் பெற்றிருத்தல் காணலாம். இத்தகைய பல அருளியல் அனுபவ மெய்ப்பாடுகளை வெளிப் படுத்தியிருப்பது, திருவாசகத்திற்கும் திருச் சதகத்திற்கும் பெருஞ்சிறப்பை விளைப்ப தாகும்.

## (2) அன்பினை வேண்டல்

அருளாளர்கள் வேறு எதனையும் விரும் பார். இறைவனது திருவடிக்கண் தமக்கு மேன்மேலும் அன்பு பெருகுதல் வேண்டும் என்பது ஒன்றனையே விரும்புவர், இறைவன் பால் தமக்கு வேண்டுவனவற்றைத் தனித் தனியே பலகால் கேட்டுப் பெறுவதைவிட, எல்லாவற்றையும் பெறுவதற்குரிய மூலமுதற் பொருளாகத் திகழ்வதொன்றனை வேண்டிப் பெற்றுவிட்டால், பின்னர் அதன் வாயிலாக ஏனைய எல்லாப் பொருள்களையும் பெறுதல் கூடும். ஆதலின் இறைவன்பால் அன்பு ஒன் றனையே அடியவர்கள் இரந்து வேண்டுவர்.

''யாஅம் இரப்பவை,
பொருளும் பொன்னும் போகமும் அல்ல;
நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்;
உருள்இணர்க் கடம்பின் ஒலிதா ரோயே!''

எனவரும் சங்ககாலப் பரிபாடற்செய்யுட்பகுதி இவ்வுண்மையைச் செவ்விதின் உணர்த்தும். இதற்கு ஏற்ப, நம் மணிவாசகர் திருச்சதகத் தின் பாடல்கள் பலவற்றில், இறைவன்பால் அன்பு ஒன்றனையே இரந்து வேண்டல் காண லாம். ''அன்பர் உள்ளம் கரந்து நில்லாக் கள்வனே! நின்றன் வார்கழற்கு அன்புஎனக்கு நிரந்தரமாய் அருளாய், நின்னை ஏத்த முழு வதுமே'' (6), ''ஆடகச் சீர்மணிக்குன்றே! இடையறா அன்பு உனக்கு என் ஊடகத்தே நின்றுருகத் தந்தருள் எம் உடையானே'' (11), ''மைகலந்த கண்ணிபங்க! வந்துநின் கழற் கணே, மெய்கலந்த அன்பர் அன்பு எனக் கும் ஆக வேண்டுமே'' (73), 'வேண்டும் நின்கழற்கண் அன்பு' (74), 'தாராய் உடை யாய் அடியேற்குன் தாளிணை அன்பு' (87) எனவரும் திருச்சதகப் பாடல்கள் பலவும், இங்கு நாம் சிந்திக்கத் தக்கன.

## (3) அருள் இரந்து அழுதல் :

இறைவனின் அடியார்களாயினார் எவரும் அவனது அருளைப் பெற விரும்புவர். அருள் புரிந்து தம்மை ஆட்கொள்ளுமாறு வேண்டுவர்; இறைவனின் அருள் தமக்கு என்று கிடைக்குமோ என்று ஏங்குவர்; அருள் கிடைக்கவில்லையே என்று அழுது வருந்துவர். இதனைப் பின்வரும் திருச்சதகப் பாடலால் இனிதறியலாம்.

யானேதும் பிறப்பஞ்சேன்!
இறப்பதனுக்கு என்கடவேன்?
வானேயும் பெறில்வேண்டேன்?
மண்ணாள்வான் மதித்தும் இரேன்!
தேன்ஏய் மலர்க் கொன்றைச்
சிவனே! எம்பெருமான்! எம்
மானே! உன் அருள்பெறும் நாள்
என்று? என்றே வருந்துவனே!

## (4) தம்நிலைக்கு இரங்கல் :

அடியவர்கள் இறைவனின் அருளைப்பெற விரும்பி, அவனுடைய அருமையையும் பெருமையும் நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெஞ்சம் நெகிழ்வார்கள். இறைவனின் அருமை பெருமைகளை உணர உணர, அவர்களுக்குத் தம்முடைய அளவற்ற சிறுமையும் இழிதகவும், தாமே அவர்களுக்குத் தெளிவுறப் புலனாகும். ஆதலின் அவற்றை எண்ணி எண்ணி அடியவர்கள் பெரிதும் கவன்று வருந்தி இரங்குவர்.

அரியானே! யாவர்க்கும்
அம்பரவா! அம்பலத்தெம்
பெரியானே! சிறியேனை
ஆட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன்!
வியந்தலறேன்! நயந்துருகேன்!
தரியேன் ! நான் ஆமாறு என்?
சாவேன் நான் சாவேனே!

## (5) நெஞ்சொடு நோதல் :

அருளாளர்களின் பாடல்களில் நெஞ்சறிவுறுத்தல், நெஞ்சொடு நோதல் என்னும் நிலைகளிற் பல பகுதிகள் வரக் காணலாம். ஒருவரை வாழ்விப்பதும் தாழ்விப்பதும், எடுப்பதும் கெடுப்பதும் எல்லாம், அவர்தம் மனமேயாகும். 'மனம்போல வாழ்வு' என்பது பழமொழி. 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' என்பது திருக்குறள். நெஞ்சம்தான் ஒருவர்க்கு மிகவும் உற்ற துணை. 'துன்பத்திற்கு யாரே துணையாவார் ? தாம் உடைய நெஞ்சம் துணை அல்வழி'' என வினவுவர் திருவள்ளுவர். ஆதலின் அடியவர்கள் தம்முடைய நெஞ்சத்தினை நோக்கி, அடிக்கடி நொந்து கொள்வர். அம்முறையிற் பல பாடல்கள், திருச்சதகத்தில் அமைந்திருக்கக் காணலாம்.

''வேனில்வேள் மலர்க்கணைக்கும்,
வெண்நகைச் செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும்,
பதைத்துருகும் பாழ்நெஞ்சே!
ஊன்எலாம் நின்றுருகப்
புகுந்தாண்டான்; இன்று போய்
வானுளான் காணாய்; நீ
மாளாவாழ் கின்றாயே!''

''வாழ்கின்றாய் வாழாத
நெஞ்சமே! வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய்! ஆழாமற்
காப்பானை ஏத்தாதே!
சூழ்கின்றாய் கேடு, உனக்குச்
சொல்கின்றேன் பல்காலும்!
வீழ்கின்றாய் நீ, அவலக்
கடலாய வெள்ளத்தே''

## (6) அருள் நினைந்து அழிதல் :

இறைவன் தமக்குச் செய்த அருளின் திறத்தினையும், அவனது அளப்பரிய பெருங் கருணை இயல்பினையும், எத்துணையும் அரியனாகிய இறைவன் எத்துணையும் எளியனாகப் போந்து அருள்புரிந்து ஆட்கொள்ளவும், தாம் அவனது அருளைப் பெறுவதற்குரிய தகுதியிலராகக் கிடந்து உழலுகின்ற இழிதகவினையும் குறித்து, அடியவர்கள் நீளநினைந்து பெரிதும் வருந்துவர்.

''வெள்ளம்தாழ் விரிசடையாய்! விடையாய்! விண்ணோர்
பெருமானே! எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்,
பள்ளம்தாழ் உறுபுனலிற் கீழ்மேலாகப்
பதைத்துருகும் அவர்நிற்க, என்னை ஆண்டாய்க்கு
உள்ளம்தாள் நின்றுஉச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால்! உடம்பெல்லாம் கண்ணாய், அண்ணா
வெள்ளம்தான் பாயாதால்! நெஞ்சம் கல்லாம்!
கண்ணிணையும் மரமாம்! தீ வினையினேற்கே''
—21

''வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று,
போது நான் வினைக்கேடன் என்பாய்போல,
இனையன்நான் என்று உன்னை அறிவித்து, என்னை
ஆட்கொண்டு எம்பிரான் ஆனாய்க்கு, இரும்பின்பாவை
அனையநான் பாடேன்; நின்று ஆடேன்; அந்தோ!
அலறிடேன்! உலறிடேன்! ஆவிசோரேன்!
முனைவனே! முறையோநான் ஆனவாறு?
முடிவு அறியேன்; முதல் அந்தம் ஆயினானே''
—சதகம் 22

## (7) அருட்டிறம் வியத்தல் :

உண்மை அடியவர் ஆயினோர், இறைவன் தமக்குச் செய்த பல்வேறு அருட்செயல்களை நினைந்து நினைந்து, உள்ளம் நெகிழ்ந்து வியப்புறுவார்கள். எத்துணையும் எளிய தமக்கு, எத்துணையும் அரிய இறைவன் வலிந்து வந்து வழங்கிய அருள்திறத்தின் அருமை பெருமைகளை, நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் அடியவர்களின் உள்ளத்தில் எல்லையில்லாத வியப்புணர்ச்சி எழுதல் இயல்பு. அவ் வியப்புணர்ச்சி எழுந்தோறும், அவர்களுக்கு இறைவன்பால் அளவில்லாத அன்பும் பக்தியும் உருக்கமும் மேன்மேல் அளவின்றி வளர்ந்தோங்கும். அடியவர்கள், இறைவனின் அருட்டிறம் வியத்தலாகிய பெருநிலைக்கு,

''அத்தா! உன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்!
அருள்நோக்கில் தீர்த்தநீர் ஆட்டிக் கொண்டாய்!
எத்தனையும் அரியைநீ எளியை ஆனாய்!
எனையாண்டு கொண்டு,இரங்கி ஏன்றுகொண்டாய்!
பித்தனேன், பேதையேன், பேயேன், நாயேன்,
பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தாய் அன்றே!

இத்தனையும் எம்பரமோ? ஐயஐயோ!
எம்பெருமான் திருக்கருணை இருந்தவாறே!''

எனவரும் திருநாவுக்கரசர் பெருமானின் உருக்கம்மிக்க திருத்தாண்டகச் செய்யுள், இங்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வாறே அடியவர்கள் பலரும் தத்தம் பாடல்களில் இறைவனின் அருட்டிறம் குறித்து வியந்து, அளவிலா அன்புடன் போற்றிப் பாடித் துதித்து மகிழ்தலை, நாம் நம்சமய இலக்கியங்களில் எங்கும் காணலாம். இம்முறையில் திருச்சதகத்தின்கண் பலபாடல்கள் அமைந்துள்ளன:

''கேட்டுஆரும் அறியாதான்; கேடுஒன்று இல்லான்;
கிளைஇலான்; கேளாதே எல்லாம் கேட்டான்;
நாட்டார்கள் விழித்திருப்ப, ஞாலத்துள்ளே
நாயினுக்குத் தவிசுஇட்டு நாயினேற்கே
காட்டாதன எல்லாம் காட்டிப், பின்னும்
கேளாதன எல்லாம் கேட்பித்து, என்னை
மீட்டேயும் பிறவாமல் காத்து, ஆட்கொண்டான்!
எம்பெருமான் செய்திட்ட விச்சைதானே!''

—சதகம் 28

''வான நாடரும் அறியொணாதநீ!
மறையில் ஈறும்முன் தொடரொணாத நீ!
ஏனை நாடருந் தெரியொணாதநீ!
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா!
ஊனை நாடகம் ஆடுவித்தவா!
உருகி நான் உனைப் பருக வைத்தவா!
ஞான நாடகம் ஆடுவித்தவா!
நைய வையகத்து உடைய விச்சையே!''

—சதகம் 95

## (8) இறைவனைக் காணவிரும்பல்

அடியவர்கள் ஆசைகளையெல்லாம் அறுத்தவர்கள்; பற்றுக்களை எல்லாம் நீத்தவர்கள். பொதுவாக அவர்களுக்கு விருப்பமோ வெறுப்போ எதிலும் நிகழ்வதில்லை. அவர்களுடைய அறிவு இச்சை செயல்கள் அனைத்தும் இறைவனைப் பற்றியனவாகவே நிகழும். ஆசை அனைத்தும் அற்றவர்களாயினும், விருப்பம் அனைத்தும் விட்டவர்களாயினும்கூட, உண்மை அடியவர்களுக்கு,ஒருவகை ஆசையும்விருப்பமும் மேன்மேல் நிகழ்தல் உண்டு. அவ் ஆசையும்விருப்பமும், இறைவனை நேரே கண்ணாரக் கண்டு தரிசித்து மகிழ்தல் வேண்டும் என்ற ஒன்றேயாகும். இவ்வியல்பு அடியவர்களுக்கெல்லாம் பொதுவாக உரிய சிறப்பியல்பு ஆகும். மணிவாசகப் பெருமான் இறைவனை நேரே கண்ணாரக் காணவேண்டுமென்று, பெரிதும் துடிதுடிப்பும் பதைபதைப்பும் குதுகுதுப்பும் கொண்டவர். இதனை அவர்தம் பாடல்களில் நாம் பரக்கக் காணலாம்.

''மேலை வானவரும் அறியாததோர்
கோலமே! எனை ஆட்கொண்ட கூத்தனே!
ஞாலமே! விசும்பே! இவைவந்துபோம்
காலமே! உனை என்று கொல் காண்பதே?''

—43

''உண்டு ஓர் ஒண்பொருள் என்று உணர்வார்க்கெலாம்
பெண்டிர் ஆண் அலி என்று அறியொண்கிலை;
தொண்டனேற்கு உள்ளவா வந்து தோன்றினாய்!
கண்டும் கண்டிலேன் என்ன கண்மாயமே''

—42

''தாயில் ஆகிய இன்னருள் புரிந்த என்
தலைவனை நனி காணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள்கிலேன்
செழுங்கடல் புகுவேனே''

—சத.32

''எப்பால் அவர்க்கும் அப்பாலாம்
என் ஆரமுதேயோ!
அப்பா காண ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே''

—திருவா.417

''முத்தா உன்றன் முக ஒளி நோக்கி
முறுவல் நகைகாண
அத்தா சால ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே''

—திருவா.422

## (9) கழிந்த நாட்கு இரங்கல் :

இறைவனின் அடியவர்கள், தாம் உலகியல் வாழ்க்கை மயக்கத்திலேயே ஈடுபட்டு உழன்று திரிந்து அலைந்து, கழிந்த நாட்களைக் குறித்து நினைந்து மிகவும் வருந்துவர். இத்துணைக் காலத்தினை வீணாக்கி விட்டோமே; இறைவனைப் பற்றி முன்னரே நினைந்து உணர்ந்து தொழுது உய்யாமல், வாழ்க்கையை வீணாகக் கழித்து விட்டோமே, என்று பலவாறு நினைத்து உள்ளம் உருகி, வெதும்பி வேதனைப் படுவர். இஃது அடியவர்களுக்கெல்லாம் உரிய பொதுவான சிறந்த இயல்பாகும்.

''முன்பெலாம் இளைய காலம்;
மூர்த்தியை நினையாது ஒடிக்,
கண்கண இருமி, நாளும்
கருத்தழிந்து அருத்தம் இன்றிப்,
பின்பகல் உணங்கல் அட்டும்,
பேதைமார் போன்றேன்; உள்ளம்
அன்பனாய் வாழ மாட்டேன்;
அதிகை வீரட்ட னீரே''

''பாலனாய்க் கழிந்த நாளும்,
பனிமலர்க் கோதைமார் தம்
மேலனாய்க் கழிந்த நாளும்,
மெலிவோடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும்,
குறிக்கோள் இலாது கெட்டேன்;
சேல்உலாம் பழன வேலித்
திருக்கொண்டீச் சரத்து ளானே''

என்றெல்லாம், திருநாவுக்கரசர் கழிந்த நாள்களுக்கு இரங்கிப் புலம்புதல் காணலாம். ''போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே'' என்றும், ''ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தவாறே'' என்றும், அவரே பிற பதிகங்களிலும் கூடப் பெரிதும் வருந்தித் துயரம் உற்றுள்ளார். இம்முறையில் நம்முடைய மணிவாசகரும்,

சிந்தை செய்கை கேள்வி வாக்குச்
சீர்இல் ஐம்பு லன்களால்
முந்தை யான காலம் நின்னை
எய்திடாத மூர்க்கனேன்,
வெந்தையா விழுந்திலேன்; என் உள்ளம்
வெள்கி விண்டிலேன்;
எந்தை ஆய நின்னை யின்னம்
எய்தல் உற்று இருப்பனே'' சத.79—

''ஏழைத் தொழும்பனேன்
எத்துணையோ காலம் எல்லாம்
பாழுக்கு இறைத்தேன்
பரம்பரனைப் பணியாதே...'' —திருவா. 325

என்று பல பாடல்களில், கழிந்த நாட்களுக்கு இரங்கி வருந்தும் இயல்பினை, ஆங்காங்கு நாம் காணலாம்.

## (10) ஆடவும் பாடவும் வேண்டும்

அடியவர்கள் தமக்கென ஒரு வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாதவர்கள். ஆயினும் இறைவனைப் பற்றி, எப்பொழுதும் அன்பினால் பாடவேண்டும்; பாடிப் பாடித் துதிக்க வேண்டும்; அங்ஙனம் பாடித் துதிக்குங்கால் ஆனந்த பரவசம் மேலிட்டு, தம்மை மறந்து ஆட வேண்டும்; அங்ஙனம் ஆடியும் பாடியும் ஆண்டவனைத் தொழுது, அவனோடு கூடி மகிழ வேண்டும்; அதற்குப் பெரிதும் தடையாக உள்ள இந்த உடல் வீழவேண்டும்; தம்முடைய பொய்ம்மைகளும் குற்றங்களும் பாவங்களும் நீங்கி ஒழியவேண்டும் என்று பெரிதும் விரும்புவார்கள். அவ்விருப்பம் நிறைவேறுவதற்கு இறைவனிடத்திலேயே வேண்டுதல் செய்து விண்ணப்பித்துக் கொள்வார்கள். அடியவர்களின் இவ்வியல்பினை, மணிவாசகப்பெருமான் அருளிய திருச்சதகத்தின் இறுதிச் செய்யுள் மிகவும் அழகுற வெளியிடுகின்றது.

''பாடவேண்டும் நான் போற்றி! நின்னையே
பாடி நைந்து நைந்து உருகி நெக்கு நெக்கு,
ஆடவேண்டும் நான் போற்றி! அம்பலத்து
ஆடும் நின் கழற் போது நாயினேன்
கூடவேண்டும் நான் போற்றி! இப்புழுக்
கூடு நீக்கு எனைப் போற்றி! பொய்எலாம்
வீடவேண்டும்நான் போற்றி! வீடுதந்து
அருளு, போற்றி! நின் மெய்யர் மெய்யனே!''
சத.100—

## முடிவுரை:

இங்ஙனம் அடியவர்களுக்கெல்லாம், அவர்கள் எந்த இடத்தில் தோன்றினாலும், எந்தக் காலத்தில் தோன்றினாலும், எந்தச் சூழ்நிலையில் எவ்வாறு வாழ்ந்தாலும், அவர்களுக்கெல்லாம் இயல்பாக எழக்கூடிய மெய்ப்பாடுகளையும், அவர்கள்பால் இயல்பாக வெளிப்படும் உணர்ச்சி நலன்களையும், அவர்களின் பொதுவான பலவகை ஒழுகலாறுகளையும் எல்லாம், அடியவர்களுள் எல்லாம் தலைசிறந்த அடியவராகிய மாணிக்கவாசகப்பெருமான், தாம் அருளிச் செய்த திருச்சதகம் என்னும் சிறந்த திருவாசகப் பகுதியின்கண் நன்கினிது விளங்கித் தோன்றுமாறு, தமது ஞானத்திறமும் பக்தி நலமும் புலப்பட்டுத் தோன்றும் வண்ணம், அருளிச்செய்திருக்கும் அருமையும் அழகும் அற்புதமும், நாம் பெரிதும் நயந்தும் வியந்தும் மகிழ்ந்தும் போற்றிப் புகழ்தற்குரியன.

அன்பினை வேண்டல், அருள் இரந்து அழுதல்,
அவலமாய்க் கழிந்தநாட்கு இரங்கல்,
மன்பெரும் இறைவன் அருட்டிறம் வியத்தல்,
மனம்நெகிழ்ந்து உருகுதல்; நெஞ்சப்
புன்புலன் நோதல், இறைவனைக் காணத்
துடித்தல், புகழ்ந்துரைத்து இறைஞ்சல்,
என்பன எலாம்கொள் திருச்சத கத்தின்
இலக்கியச் சிறப்புகள் பலவாம்!

—ந.ரா.முருகவேள்.

# "முருகனும் தமிழும்"

முருகன் தமிழ்க் கடவுள். முருகனே தமிழ் மொழியை முதன் முதலில் அகத்தியருக்கு அறிவுறுத்தினான் என்பது வரலாறு. மேலும், சிவபிரானுக்குப் பிரணவப் பொருளைத் தமிழிலேயே முருகன் உபதேசித்தான்.

''கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழால் பகர்வோனே''

என்பது அருணகிரிநாதர் திருப்புகழ். கூடல் மாநகரில், ஆலவாய் அவிர் சடைக் கடவுளுடன், குன்றம் எறிந்த குமரவேளும், சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தான் என்பர் நக்கீரர். ''சங்கத் தமிழின் தலைமைப்புலவன்'' என்பர் குமரகுருபர அடிகள். தந்தையாகிய சிவபெருமானுக்கு முக்கண்கள் உள்ளமைபோல, முருகனாகிய மைந்தனுக்கும் முக்கண்கள் உண்டு என்றும், ஒரு முகத்திற்கு மூன்றாக முருகனின் ஆறு திருமுகங்களுக்கும் பதினெட்டுக் கண்கள் உண்டு என்றும், பெரியோர்கள் கூறுவர். ஆதலின் தமிழ்மொழியின் மெய்எழுத்துக்கள் பதினெட்டும், தன்னுடைய கண்களாகவும்; தமிழில் வல்லினம் மெல்லினம் இடையினம் என வழங்கும் இனஎழுத்துக்கள் ஆறும் திருமுகங்களாகவும்; தமிழின் அகரம் முதலிய உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் தோள்களாகவும்; தனிநிலை எனப்படும் ஆய்தமே, ஒப்புயர்வற்ற நிலையில் தனிச்சிறப்புற்றுத் திகழும் வேலாகவும் கொண்டு; தமிழ்த்தெய்வமாகிய முருகன் தமிழ் வடிவினனாக விளங்குகின்றான்.

''கண்நிகர் மெய்யும், சென்னிக் கணம்உறழ் இனத்தின் கூறும்,
திண்ணிய புயங்க ளேபோல் திகழ்தரும் உயிரும், வேறொன்று
எண்ணிடற் கரிய தாகும் எஃகமும், இயலிற் காட்டும்
புண்ணிய முருகன் செய்ய பொற்பதம் போற்றி வாழ்வாம்''

என்பது, புலவர் புராணம் பாடிய திருப்புகழ்த் தண்டபாணி சுவாமிகள் அவர்களின் அரிய திருப்பாடல். ''முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன் முருகன்'' என்பர் அருணகிரியார்.

—ஆசிரியர்.

# வள்ளலார் கண்ட பெருநெறி

'முத்தமிழ்க் காவலர்'
டாக்டர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், D.Litt., அவர்கள்,
திருச்சிராப்பள்ளி

## முன்னுரை:

நெறி பலவகை. அதில் பெரு நெறி ஒரு தனி வகை. நெறி என்றாலே நன்னெறியைக் குறிக்கும். தீ நெறியைக் குறிக்காது. இதை 'நெறி நின்றார் நீடு வாழ்வார்' என்னும் திருக்குறளால் அறியலாம். வள்ளற் பெருமான் தமது அருட்பாவில் பல நெறிகளைப் பற்றிக் கூறியிருக்கிறார். அவற்றுள் பெருநெறி என்பதை அடிக்கடி பல்வேறு இடங்களில் கூறியிருப்பதைக் காணலாம்.

பெருநெறி என்பது எது? என்றால், என்ன கூறுவது? அருட்பாவில் தெய்வமணி மாலையில் 'ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்' என்ற பாடலில், உறவு நெறி, வஞ்சநெறி, பக்திநெறி, வாய்மைநெறி, பெருநெறி, சமயநெறி, துறவு நெறி, யோகநெறி, அறிவுநெறி, கருணைநெறி, உடல்நலநெறி முதலிய இத்தனையையும் காணலாம். பெருநெறி என்பது - நான்கு எழுத்துக்களில் உள்ள, இரண்டு சொற்களை யுடைய, ஒரு சிறு சொற்றொடர். வள்ளலாருக்கு முன்பும், பழந்தமிழ் இலக்கியத்திலும் இச் சொற்றொடரை எவரும் பயன்படுத்தியதாக அறிய முடியவில்லை.

வள்ளலாரின் வழிபடு குருவாகிய திருஞானசம்பந்தரின் 'பெருநெறிய பிரமாபுரம் மேவிய பெம்மான்' என்ற சொற்றொடர் இறைவனையும், அவன் கோயில் கொண்ட சீர்காழியையும், அந்நகரத்தின் சான்றோர்களின் நெறியையும் விளக்கிக்காட்டுவதிலிருந்து, பெருநெறி என்பது, எல்லா நெறிகளிலும் உயர்ந்தநெறி என்பதும், அது சான்றோர்களால் கையாளப் பெற்ற - கையாளப்படுகின்ற நெறி என்பதும், அது அன்பு நெறி, அருள்நெறி, கருணைநெறி ஆகிய மூன்று நெறிகளாலும் பிறர் கொடுக்க வேண்டும் என்பதாகவும், இந்தப் பெருநெறி மட்டும் பிறர் கொடுத்துப் பெறுவதல்ல; ''தானே பிடித்து ஒழுகு வேண்டிய ஒன்று'' என்பதும் புலப்படுகின்றன.

## அன்பு நெறி:

1. இதைப் பக்திநெறி எனவும் கூறுவர். இதற்கு வள்ளலார் இலக்கணம் கூறும்போது இறைவனை ஒரு மலை என்கிறார். அதனால் பார்த்து எவரும் பயந்துவிடவேண்டியதில்லை. அம்மலை ''அன்பு'' என்ற கைப்பிடிக்குள் அடங்கும் என்கிறார். அடுத்து இறைவனைக் கடல் என்கிறார். அதைக் கண்டு எவரும் மலைக்க வேண்டியதில்லை. அக்கடல் 'அன்பு என்ற குடத்துக்குள்' அடங்கி விடக்கூடியது என்கிறார். அடுத்து இறைவனை இவ்வுலகம் முழுவதும் நிரம்பியுள்ள ஒருபொருள் என்கிறார். இதைக் கண்டு எவரும் கலக்கமடைய வேண்டியதில்லை. அப்பரம்பொருள் ''அன்பு எனும் வலைக்குள்'' அகப்பட்டு விடும் என்று கூறுகிறார். இதிலிருந்து வெளியைவிட, மலையைவிட, கடலைவிட அன்பு பெரியது என்று தெரிகிறது. இறுதியில் இறைவனே ''அன்பு உருவானவன்'' என்று ''அன்புருவாம் பரசிவமே'' என முடிக்கின்றார்.

2. இதனைத் திருமூலரும் ''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவில்லார், அன்பே சிவமாவது யாரும் அறிகிலார். அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின், அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே'' எனக் கூறியிருப்பதாலும் நன்கறியலாம்.

3. இனி மக்களாய்ப் பிறந்தவர்கள் இறைவனிடத்தில் அன்பு செலுத்தியாகவேண்டும் என்பதற்காக இறைவன் எத்தகையவன் என்பதை நமக்குச் சுட்டிக் காட்டுகிறார். 'கல்லார்க்கும்கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே' என்பது அவரது வாக்கு. இறைவன் கற்றவர்க்கு மட்டும் அல்ல, சிறிதும் கல்லாதவர்க்கும் மகிழ்ச்சியைத் தருபவன். ஏன்? அவன் மகிழ்ச்சியே உருவானவன் என்கிறார்.

4. அடுத்து ''காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்'' என்பதுஅவரது வாக்கு. கண் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல. கண் இல்லாதவர்களுக்கும் கண் அளிப்பவன் இறைவன். காரணம் எல்லா உயிர்களுக்கும் இறைவன் கண்ணாகவே இருப்பவன் என்பது அவர் கருத்து. இதில் ஒன்று கண் இல்லாதவர்களுக்குக் கண் கொடுப்பது புரிகிறது. கண் உள்ளவர்களுக்கும் அவன் கண் கொடுப்பது என்பது எப்படி? அது ஆராய வேண்டிய ஒன்று. ஆராய்ந்தால் அது ஊனக்கண்ணிலும் உயர்ந்த ஞானக்கண் என்பது புலப்படும்.

அருள் நெறி:

1. வள்ளலார் ''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்கிறார். இத னால் உயிர்கள் வாடுவது மட்டுமல்ல, பயிர் வாடுவதைக் கண்டும் அவர் வாடியிருக்கிறார் என்று தெரிகிறது. அது அருள்நெறியில் மிக உயர்ந்த நெறி. இதில் ''கண்டபோதெல்லாம்'' என்ற ஒரு சொற்றொடர் இருக்கிறது. இது வள்ளலார் ஒரு பயிரை வாடியிருக்கும்போது கண்டிருக்கிறார். கண்டு வருந்தியிருக்கிறார். மறுபடியும் உழவன் தண்ணீர் இறைத்து அப் பயிர் செழித்து நிற்பதைக் கண்டு மகிழ்ந்திருக் கிறார். அடுத்து ஒருநாள் அதே பயிர் வாடி யிருப்பதைக் கண்டு வருந்தியிருக்கிறார் என்ற நிகழ்ச்சிகளையெல்லாம் 'கண்ட போதெல் லாம்' என்ற சொற்றொடர் அறிவிக்கிறது.

2. வள்ளலார் உடம்பு ஒரு முறை இளைத்திருந்தது. அன்பர்கள் காரணம்கேட்ட போது ''நான் வருகின்ற வழியில் நடந்து சென்ற மக்களின் பலரின் உடல் இளைத்திருப் பதைக் கண்டேன்; அதனால் என் உடம்பு இளைத்து விட்டது போலும்'' என்றார். இது எவ்வளவு பெரிய அருள்நெறி!

3. மற்றொரு தடவை வள்ளலாருடைய புருவம் துடித்தது. இதைக் கண்டதும் ''யாருக்கோ எவருக்கோ துன்பம் வரப் போகிறது. அதைக் கண்டு நான் துடிக்கப்போகி றேன் என்பதை இத்துடிதுடிப்பு துடித்துக் காட்டுகிறது'' என்று கூறியிருக்கிறார். இந்த உயர்ந்த அருள்நெறியை நம்மால் சிந்தித்துக் கூடப் பார்க்க முடியவில்லை. அவ்வளவு உயர்ந்து நிற்கிறது இந்த அருள்நெறி!

4. வள்ளலார் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். சொத்து ஒன்றும் இல்லாதவர், வருமானமும் இல்லாதவர். இவரின் இந்த நிலை கண்டு தமையன் கடிந்ததால் குடும்பத் தின் ஆதரவையும் இழந்தார். தமையனார் இவருக்கு வீட்டில் சோறு போடக்கூடாது என்று கட்டளையிட்டிருந்ததால், பசிக்கு உணவு கிடைக்காமல் வருந்தியும், அவர் எவரி டத்திலும் சென்று இரந்ததில்லை. எதுவும் ஏற்றதில்லை. அவர் வாழ்க்கையில் பலகாலம் பசித்திருந்து, 'பசி' மக்களை எப்படி வருத்தும் என்பதை நன்கு உணர்ந்திருக்கிறார். அதன் விளைவே, 'சத்திய தருமச்சாலை''யைத் தோற்றியதும், மக்களின் பசிப்பிணியைப் போக்கும் செயற்கருஞ் செயலைச் செய்திருப் பதும், என உணரலாம்.

## கருணை நெறி:

1. உலகில் உள்ள எல்லா நாட்டினரிடத் தும், எல்லா மதத்தினரிடத்தும், எல்லா மொழியினரிடத்தும், மட்டுமல்ல, எல்லா உயிர்களிடத்தும் காட்டுவதே 'கருணை நெறி' ஆகும். இதற்கு 'உயிரிரக்கம்' என்று பெயர். இதையே 'ஜீவகாருண்யம்' என்பர். வள்ளலார் கூறியிருக்கிற கருணை நெறியிலும், ஒருமைப் பாட்டிலும் மக்கள் மட்டுமல்ல, எல்லா உயிர் களும் அடங்கியிருக்கின்றன.

2. ஒரு தவமுனிவன் தவம் செய்ய விரும் பிய தன் மாணாக்கனிடம் உரிய வழியைக் காட்ட வேண்டும் என உணர்ந்து, ''தம்பி! உன்னால் ஒரு பெருந்தவத்தைச் செய்ய முடியுமா? என்று கேட்க அவனும் முடியும் என வாக்களித்தான். அவர் உடனே இவ்வாறு கூறினார். ''அனைத்துயிரும் ஒன்றென்று, எண்ணு; அரும்பசி எவருக்கும் ஆற்று, மனத் துள் பேதாபேதம், வஞ்சம், பொய், களவு, சூது, சினம் இவற்றையும் தவிர்ப்பாயாகில் செய்தவம் வேறொன்றுண்டோ?'' இதுவே பெருந்தவம் எனப் போதித்தார்.

இத்தவத்தில் மூன்று நெறிகளே உள்ளன. அனைத்துயிர்களும் ஒன்று என்று எண்ணுவது; அரும்பசி எவருக்கும் ஆற்றுவது; மனத்தைத் தூய்மைப்படுத்துவது. இம்மூன்றும் 'கருணை நெறி'களாகும்.

3. வள்ளலாருடைய கருணை நெறி களில் ஒன்று, ''எல்லா மக்களும் தங்கள் மனதைத் தூய்மைப்படுத்திக் கொண்டு, பேரா சைகளையும் பேதங்களையும் ஒழித்து'' சன் மார்க்க நெறி நின்று இறைவனை அடைய வேண்டும் என்பது.

அதற்காக வள்ளலார் பேதை மக்களைப் பார்த்து வருந்தி அவர்கள் நிலையைத்தன்மேல் ஏற்றித் தானே பேதையானேன், அதுவும் வெறும் பேதையல்ல, ''பேய்ஏறி நலிகின்ற பேதையானேன்'' என்கிறார். அப்படி ஆனது எதனால் என்பதற்குக் காரணமும் கூறுகின் றார். ''பித்தேறி அலைகின்ற மனத்தினாலே பேயேறி நலிகின்ற பேதையானேன்'' என்று. எந்தெந்த பித்துக்கள் மனத்திலே ஏறின? என்பதை விளக்கியும் காட்டுகிறார். வஞ்சக வாழ்க்கை ஏறி, மயக்கம் ஏறி, பேராசை ஏறி, மதவெறி ஏறி, அதனாலே பித்து ஏறியது என்று.

அந்தப் பித்து மனதை எப்படி அலைக் கழிக்கிறது என்பதற்கு ஒரு உவமையும் காட்டு வதுதான் நமக்குப் பெரும் வியப்பைத் தரு கிறது. நாம் ஏறுகிற, பொருள்கள் எனச் சில உள்ளன. அவை கப்பல், மாடிப்படி முதலியன. அவைகள் நம்மேல் ஏறுவதில்லை.

நம் மேல் ஏறுகின்ற சில பொருட்கள் உள்ளன. இவை ஆடை, அணிகலன்கள் முதலி யன. அவற்றின்மேல் நாம் ஏறுவதில்லை. ஆனால் இரு பொருட்கள் ஒன்றின்மேல் ஒன்று ஏறுகின்றன. அவை மத்தும், தயிரும்.

மத்தின்மேல் தயிர் ஏறி, தயிரின் மேல் மத்து ஏறி ''சர்-சர்'' என்று அலைக்கழிப்பது போல,இந்தப் பித்து என் மனத்தின்மேல் ஏறி, மனம் அதன் மேல் ஏறி, நான் அலைக்கழிக்கப் படுகின்றேன் என வருந்துகின்றார். இது அவர்

ல்லையே? அல்ல, நம் நிலையை எண்ணியே கூறியிருப்பதாகும். பாடலும் இதுதான்.

''மத்தேறி அலை தயிர்போல் வஞ்சவாழ்க்கை
மயலேறி விருப்பேறி மதத்தினோடு
பித்தேறி அலைகின்ற மனத்தினாலே
பேயேறி நலிகின்ற பேதை யானேன்''

## முடிவுரை:

ஆக மூன்று பிரிவுகளைக் கொண்டு முறுக்கப் பெற்ற ஒரு வடக்கயிறு போன்றதுதான் அன்பு நெறி, அருள்நெறி, கருதைத் நெறி ஆகிய மூன்று நெறிகளையும் பின்னிக் கொண்டிருக்கின்ற ஒரு நெறி. அதுவே பெரு நெறி எனக் கொள்ள வேண்டியிருக்கிறது.

மற்றொரு வகையில் நெறி என்றால் வழி. பெருநெறி என்றால் உயர்ந்தவழி, நல்லவழி என்றாகும். இதனுடைய நேரான மொழி பெயர்ப்பே சன்மார்க்கம் (மார்க்கம்-வழி). இதைக்கண்ட பெருமகன் வள்ளலார்.

சன்மார்க்கம் என்பது சத்மார்க்கம் என அமையும். சத் என்றால் உண்மை. மார்க்கம் என்றால் வழி. உண்மைப் பொருளாகிய இதை வனை விடையும் வழியே சன்மார்க்கம் எனப்படும். அதனை விளக்க அவதரித்தவரே இராமலிங்க சுமாமிகள். அவர் அமைத்த நெறிக்கே சமரச சன்மார்க்கம் எனப் பெயர் குறிப்பிட்டுள்ளார்.

---

# அம்மையப்பர்

''அர்த்தநாரீசுவரர்'' என்பதனைத் தமிழில் ''அம்மையப்பர்'' எனவும் வழங்கலாம். இறைவன் பெண் வடிவம் பாதியும், ஆண் வடிவம் பாதியுமாக விளங்குதல், அவனே உலகுயிர்கள் அனைத்திற்கும் தாயும் தந்தையுமாக விளங்குகின்றான் என்னும் தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. எனவே, அப்பெருமானை ''அம்மையப்பர்'' என வழங்குதல் மிகவும் பொருத்தமேயாகும். கடவுள் நம்பிக்கையும் கொள்கையும் இல்லாதவரும்கூட, உலகில் தாய் தந்தையரின் சிறப்பினையும் இன்றியமையாமையினையும் மறுத்தல் இயலாது. எனவே, நம் முன்னைத் தமிழ்ச் சான்றோர்கள், கடவுளை ''அம்மையப்பர்'' எனக்கொண்டு சிறப்புற வழிபட்டுப் போந்தனர்.

ஆணும் பெண்ணும் தம்முள் அயன்மை இன்றி, அன்பினால் ஒருவருக்கொருவர் ஒன்றித் தொடர்பு கொள்ளும் அரிய இனிய நெறியின் சிறப்பினை, இந்திய மக்கள் தெளிவுறத் தெரிந்திருந்த தன்மையினை, அர்த்தநாரீசுவரத் திருவுருவம் புலப்படுத்துகின்றது. ''ஓர் ஆணோ பெண்ணோ தனியே இருக்கும் அளவும் நிறைவு பெறுவதில்லை. இருவரும் ஒன்று சேரும் பொழுதுதான். அவர்கள் முழு நிறைவை அடைகின்றனர். ஒருவருக்கு ஒருவர் இன்றியமையாதவராக, வாழ்க்கையில் உற்றுழியுதவிக் கொள்ளும் உயிர்த் துணைவர்களாக, ஆணும் பெண்ணும் அன்பினாற் பிரிவற ஒற்றுமைப்பட்டு, உலகில் வாழ்தல் வேண்டும். கணவனும் மனைவியும் தம்முள் மிகச் சிறந்த நண்பர்களைப் போன்று திகழத்தக்கவர்கள் ஆவர். 'கணவன் மனைவி' என்னும் தொடர்பினும் சிறந்த புனிதம் மிக்க தொடர்பு பிறிதெதுவும் உலகத்தில் இல்லை. மனித வாழ்வின் விருப்பங்கள் அனைத்தும் அத்தொடர்பாற் புனிதமும் நிறைவும் பெறுகின்றன. உலக வாழ்வு என்பதே அதுதான்! இத்தகைய பற்பல சிறந்த தத்துவங்களையெல்லாம் நம்மனோர்க்கு நன்கினிது உணர்த்துவதே, அர்த்தநாரீசுவரத் திருவுருவமாகும்''*. இவ்வுலகத்திற் சிறந்த கணவன் மனைவியராகத் திகழ்ந்து இல்லறத்தை நல்லறமாக ஆற்றி, வையத்துள் வாழ்வாங்கு வாழ விரும்புவோர் அனைவரும், அர்த்தநாரீசுவரப் பெருமானை வழிபட்டு உய்ய முயலுவார்களாக!

—ஆசிரியர்:

---

* " The image of 'ARTHA NARISWARA' is India's recognition of the mutual relationship of man and women, the idea of the co-operative. interdependent, separately incomplete but mutually masculine and feminine functions.

The husband and the wife are to each other the best of friends, the essence of all relationship, fulfilment of all desires, the very life itself. So is the husband to the wife and the wife to the husband..."

—*Dr. S. Radhakrishnan*

# திருவள்ளுவரும், அருணகிரிநாதரும்!

'' அருள்மொழியரசு ''
திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

மிகுந்த வெய்யிலில் - புழுக்கம் ஏற்படும் போது, இன்று மழைவரும் என்று நாம் கருது கின்றோம். அவ்வண்ணமே மழை பொழியவும் காண்கின்றோம். அதுபோல அநீதியாகிய வெப்பம் மிகுந்த காலத்து ஞானமாகிய வானத் தில் அருளாகிய கொண்டல் தோன்றி நீதி மழை பொழியும்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னே நீதி எது? அநீதி எது? என்ற விளக்கமின்றி, உயிர்களாகிய பயிர்கள் அருங்கோடையால் வாடியபோது, மெய்ஞ்ஞானமாகிய வானத் தில் திருவள்ளுவராகிய அருள் மேகம் தோன்றி, அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் உல கத்தில் தழைக்க ஆயிரத்துமுந்நூற்று முப்பது முறை நீதி மழைகளைப் பொழிந்தது. அந்த நன்னீர் இன்றும் வற்றாமல் பள்ளத்தில் மட்டு மின்றி மேட்டிலேயும் கூடத் தங்கி நிற்கின்றது.

உள்ளுந்தொறும் உள்ளுந்தொறும்-இனிக்கும் தெள்ளமுதத்தை - தெவிட்டாத இன்பத்தை அள்ளித் தரும் வாக்கு; தக்கார் அனைவரும் எக்காலத்தும் போற்ற, என்றும் நின்று இளமை யுடன் விளங்கும் வன்மையுடையது அது.

''அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்''

என்பது பொதுமறையின் புனித வாக்கு.

''அறிவும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அறிவே சிவமாவது ஆரும் அறிகிலார்
அறிவே சிவமாவ தாரும் அறிந்தபின்
அறிவே சிவமா யமர்ந்திருப் பாரே''

—திருமந்திரம்

சிவம் வேறு, அறிவு வேறு அன்று. அறிவே மெய்ப்பொருள், ஏனையவெல்லாம் பொய்ப் பொருள்களாம். பொய் என்பதற்கு நிலை யில்லாதது என்பது பொருள். நிலைபேறானது கடவுள் ஒன்றே. மற்றவையெல்லாம் தோன்றி நின்று ஒருங்கு மாய்வனவாம்.

எனவே, சிவம் என்றும், எப்பொருள்களி லும் ஊடுருவி நிற்கின்றது. அதனை அறி வதுவே அறிவெனத் தெளிக.

''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

என்கின்றார் தெய்வப் புலவராகிய திருவள்ளு வர்.

''அறிவு திருமேனி யென் றுணர்ந்துன்
அருண சரணார விந்தமென்று பெறுவேனோ?''

என்று அருணகிரிநாதர், பலபடக் கூறுகின் றார்.

திருவள்ளுவரை நன்றாக உணர்ந்தவர் அருணகிரிநாதர். ''பாம்பறியும் பாம்பின் கால்'' என்பதுபோல, ஞானிகளை ஞானிகளே அறிவர்.

மக்களிலே மூன்று பிரிவுண்டு. மனித உடம்பெடுத்த விலங்குகள், மனித உடம் பெடுத்த மனிதர்கள், மனித உடம்பெடுத்த தேவர்கள்.

(1) மனிதருள் விலங்கு; செய்வன, தவிர்வன அறியாது, உண்டு உடுத்து உலாவி உவகையுறுவார்கள்.

(2) மனிதருள் மனிதர், நன்மை, தீமை தெரிந்து, மனதைச் சென்றவிடத்துச் செலவிடாமல் தடுத்து, தீது ஓரீஇ, நன்றின் பாலுய்த்து நலமுற வாழ்பவர்.

(3) மனிதருள் தேவர்: மெய்யுணர்வு பெற்று, நான் எனது என்னும் இருவகைப் பற்றுக்களும் அற்று, பற்றற்றானைப் பற்றி, திருவருள் நெறி நின்று கருணை வடிவினராய்த் திகழ்பவர்.

திருவள்ளுவர் மனிதருள் தேவர். அவரை மனிதருள் மனிதராக எண்ணக்கூடாது. அவரைத் தேவர் என்று ஆன்றோர்கள் கூறி மகிழ்ந் தார்கள். ''தேவர் குறளும்'' என்ற வெண்பா வினால் அறிக.

அருணகிரிநாதர், திருவள்ளுவரைத் தேவர் என்கின்றார். அன்றியும் திருக்குறளைப் படிக்கக்கூடாது. படிப்பது சாமானியம், ஓதுதல் உயர்வுடையது. ஓதுவதற்கு மூன்று

இலக்கணங்கள் உண்டு. ஒன்று ஓதுகின்ற நூலின்மீது காதல்; ஓதும்போது உள்ளம் கசிதல்; அதற்கு அடையாளமாகக் கண்ணீர் மல்குதல்.

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்''

என்றார் திருஞானசம்பந்தர்.

திருவள்ளுவர், திருக்குறளை ஓதுதல் வேண்டும். உணர்தல் வேண்டும் என்கின்றார். 'ஓதியுணர்ந்தும்' என்கின்ற குறளின் அருமையை யுணர்க. அருணகிரிநாதர்.

''திருவ(ள்) ளுவ தேவர் வாய்மை என்கிற
பழமொழியை ஓதியே யுணர்ந்து''

—(புடர்புவியின், திருப்புகழ்)

என்று திருப்புகழில் மிக அழகாகக் கூறியருளினார்.

இனி வள்ளுவர் அறம் பொருள் இன்பம் என முப்பாலாகச் செப்பினார். இதனை அருணகிரிநாதர்,

''இரட்டுற முப்பால் செப்பிய''

(அகல்வினை திருப்புகழ்)

என்று கூறுகின்றார்.

இதனால் அநீதியாகிய அருங் கோடையை மாற்ற, ஞானவானத்தில் எழுந்த அருள் மேகம் திருவள்ளுவர் என்பதும், அவர் மொழிந்த பொதுமறையாகிய நீதிமழை மேடு பள்ளங்களிலும் இன்றும் தங்கியுதவுகின்றது என்பதும், அறிவுமயமாகிய மெய்ப் பொருளை, யறிவதுவே அறிவின் பயன் என்பதும், திருவள்ளுவர் மனிதருள் தேவர் என்பதும், அவர் அருளிய குறளை ஓதியுணர்தல் வேண்டுமென்பதும், அது எப்பாலாரும் ஒப்ப முடிந்த முப்பால் என்பதும் விளங்குகின்றன.

ஆதலின் உலகப் பொதுமறையாகிய உயர்ந்த திருக்குறளை, எம்மதத்தினரும், ஏனோரும் ஓதி யுணர்ந்து உயர்வு பெறுவார்களாக!

---

## "தாண்டக வேந்தர்"

'தாண்டகவேந்தர்' என்பது திருநாவுக்கரசர்க்கு வழங்கப்பெறும் சிறப்பியற் பெயர். 'தாண்டகம்' என்பது தொல்காப்பியச் செய்யுளின்படி, எண்சீரான் வந்த கொச்சக ஒரு போகு என்னும் செய்யுள் ஆகும். அடிதோறும் நான்காம் சீரும் எட்டாஞ்சீரும் தேமாவாக நிற்ப, மூன்றாஞ்சீரும் ஏழாஞ்சீரும் பெரும்பான்மை தேமாவாகவும், சிறுபான்மை புளிமாவாகவும் அமைய, ஏனைய ஒன்று இரண்டு ஐந்து ஆறாம் சீர்கள் பெரும்பாலும் காய்ச்சீர்களாகவும், சிறுபான்மை மாச்சீர் விளச்சீர்களாகவும் வருதல், தாண்டகம் என்னும் பாவின் இலக்கணம் ஆகும்.

எண்சீரான் வரும் தாண்டகப் பாக்களில், அடிதோறும் மூன்று நான்கு ஏழு எட்டாம் சீர்களை விலக்கிவிட்டு, ஏனைய நான்கு சீர்களையும் இணைத்து நோக்கினால், அப்பாடல் கொச்சகக் கலிப்பா என்னும் செய்யுள் வடிவில் அமையும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் ஒற்றும் குற்றுகரமும் நீக்கி, 4 எழுத்து முதல் 20 எழுத்து ஈறாக வகுத்துரைத்த 17 நிலத்து 5 வகை அடிகளிலும், கழிநெடில் அடிக்கு உரிய மேல் எல்லையாகிய 20 எழுத்து என்னும் வரையறையைத் தாண்டி, இருபதின் மேற்பட்ட எழுத்தால் மிக்கு வருதலின், இப்பாடல்கள் தாண்டகம் எனக் காரணப் பெயர் பெற்றன.

நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் திருமங்கையாழ்வாரும், திருநெடுந்தாண்டகம், திருக்குறுந்தாண்டகம் என்பனவற்றை அருளிச் செய்துள்ளார்.

'தாண்டகம்' என்னும் வடமொழிச் செய்யுள் வகையினை அடியொற்றிப் பிற்காலத்தவரால் பாடப்பெற்று, 'யாப்பருங்கல விருத்தி'யுரையில் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ள தாண்டகச் செய்யுட்கள், தேவாரத்திலும் திவ்வியப்பிரபந்தத்திலும் அமைந்து விளங்கும் திருத்தாண்டகம், திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் என்னும் பாடல்களுக்கு வேறானவையாகும்..

திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகங்கள், கழிநெடில் அடிக்கு மேல் எல்லையாகிய 20 எழுத்து என்னும் அளவினைத் தாண்டி, 27 எழுத்திற்கு உட்பட்டு வருவன ஆகும். யாப்பருங்கல விருத்தியுரையில், தாண்டகம் என்னும் வடமொழிச் செய்யுள் இலக்கணப்படி வரும் செய்யுட்கள், 27 எழுத்து முதலாக அவற்றின் மிகுந்த பல எழுத்துக்களைக் கொண்டனவாகும். இவை இரண்டு வகைக்கும் உள்ள வேறுபாடு இது. 'தாண்டகம்' என்பது 'தண்டகம்' என்னும் சொல்லின் தத்திதாந்தப் பெயர்.

— ஆசிரியர்.

# தண்டமிழ்ச் சான்றோர் பண்டிதமணியார்!

ந. ரா. முருகவேள், M. A., M. O. L.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற
பெரும்புலவர் எனத் திகழ்ந்தோர்!
மருவும் மகா மகோபாத்தி யாயர் எனும்
மாண்பட்டம் வாய்க்கப் பெற்றோர்!
கருவினிலே திருவுடையார்! கதிரேசர்!
பண்டிதமா மணியாம் சான்றோர்!
பொருவருஞ்சீர்ப் பேரறிஞர்! அவர்புலமை
நலங்கள் தமைப் போற்றி வாழ்வாம்!

—ந.ரா.மு.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பெரும்புலவர்களுள் ஒருவராக விளங்கிய பண்டிதமணி திரு. மு. கதிரேசஞ் செட்டியார் அவர்கள், 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' எனத் தொடங்கும் புகழோங்கிய புறநானூற்றுப் பாடலைப் பாடிய, கணியன்பூங்குன்றனார் என்னும் சங்ககாலக் கவிஞர் பெருமான் தோன்றி வாழ்ந்த ''பூங்குன்ற நாட்டுப் பூங்குன்றம்'' ஆகிய மகிபாலன்பட்டி என்னும் வளம் மிக்க சிற்றூரில், சைவ நலஞ்சான்ற ஒரு தமிழ்ப் பெருங் குடும்பத்தில், தன வணிகர் மரபில், 16-10-1881இல் தோன்றினார்.

இளமைப் பருவத்தில் நோய்வாய்ப்பட்டு நலிய நேர்ந்ததனால், உரிய காலத்தில் கல்விப் பயிற்சி பெற இயலாது போயினும், பிற்றை நாளில் கல்வியின்கண் ஆராப் பெருங்காதல் கொண்டு, அந்நாளில் விளங்கியிருந்த அரசஞ் சண்முகனார் போன்ற அறிஞர் பெருமக்கள் பால் தொடர்பு கொண்டு, தாமே மிகவும் முயன்று பயின்று, ''நாமகள் நலத்தை எல்லாம் நயத்துடன் பருகிப்'' பெரும் புலமை பெற்றுப் பிறங்கினார்.

''இமிழ் கடல் ஞாலம் முழுவதும் விளக்கும்
தமிழ்முழுது அறிந்த தன்மையர்..''

என்று அறிஞர்கள் அனைவரும் போற்றிப் புகழும் வண்ணம் விளங்கிய பண்டிதமணி அவர்கள், தென்சொற் கடல்கடந்து, வட சொற்கு எல்லைதேர்ந்து, இருமொழிகளிலுமே பெரும் புலமைநலம் வாய்ந்தவராகப் பெரிதும் சிறப்புற்று,

''உரவோர் எண்ணினும், மடவோர் எண்ணினும்,
பிறர்க்குநீ வாயின் அல்லது, நினக்குப்
பிறர்உவமம் ஆகா ஒரு பெரு வேந்தே''

என்றாற்போல, இணையற்றுத் திகழ்ந்தார். 'நூலாருள் நூல் வல்லன் ஆதல்' என்று திருவள்ளுவர் குறிப்பிட்டபடி, வெறும் நூலாராகவும், நூல்வல்லாராகவும் இல்லாமல், 'நூலாருள் எல்லாம் நூல்வல்லார்' என்று, யாவரும் இசைந்தேற்று வியந்து புகழ்ந்தேத்தும்படி விளங்கினார்.

''யாவதும் கற்றோர் அறியா அறிவினர்;
கற்றோர்க்குத் தாம்வரம்பு ஆகிய தலைமையர்''

என்று, நல்லிசைப் பெரும்புலவர் நக்கீரனார் பாடிய வரிகளுக்கு ஏற்ற சிறந்த எடுத்துக் காட்டாகப் பண்டிதமணி அவர்கள் இலங்கினார்எனல் பொருந்தும்.

தமிழக மக்களால் பண்டிதமணி என்றும், முதுபெரும் புலவர் என்றும், சைவசித்தாந்த வித்தகர் என்றும், மகாமகோபாத்தியாயர் என்றும் பிறவாறும், போற்றிப் பாராட்டிப் புகழப் பெறுகின்ற, பெருமாட்சிமை வாய்ந்து வைகி வாழ்ந்திருந்த பண்டிதமணி அவர்கள், மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபையையும், அதனைச் சார்ந்த கணேசர் செந்தமிழ்க் கல்லூரியையும் தோற்றுவித்து, வளர்த்து, நிலை பெறுவித்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பல ஆண்டுகள் சிறந்த பணிகள் புரிந்தார். சுக்கிர நீதி, கவுடில்யரின் அர்த்தசாத்திரம், மிருச்ச கடிகம், மாலதிமாதவம், பிரதாப ருத்திரீயம், சுலோசனை, உதயண சரிதம், என்னும் வட மொழி நூல்களைத் தமிழில் அழகுற மொழி பெயர்த்தார். சங்ககாலக் குறுந்தொகை நூலின், கடவுள் வாழ்த்துச் செய்யுளின் நய விளக்கம்போன்று, சுவை நலம் செறிந்த எத்தனையோ பற்பல இனிய சிறந்த இலக்கியக் கட்டுரைகள் எழுதினார்: அன்பின் திருவுருவம், ஞானத்தின் திருவுருவம் போன்று, தம் நுண் மாண் நுழைபுலம் தோன்ற, அரிய பல

ஆராய்ச்சித் திறம் மிக்க சமயக் கட்டுரைகளும், தத்துவக் கட்டுரைகளும் வரைந்தார்.

ஒப்புயர்வற்ற தெய்விகச் செந்தமிழ்மறை யாகிய திருவாசகத்தில், திருச்சதகம்-நீத்தல் விண்ணப்பம் - திருவெம்பாவை என்னும் பகுதி களுக்கு, 'அதன் அளவு உண்டுகோள்மதி வல் லோர்க்கே' என்று கூறத்தக்க நிலையில் 'கதிர் மணி விளக்கம்' என்னும் கலைநலஞ் சான்ற ஞானப் பேருரைநூல் வகுத்தருளினார்.

முதுபெரும் புலவர்! சைவ
சித்தாந்த முனைவர்! நுண்மாண்
மதிநலம் வாய்ந்த சான்றோர்!
மகாமகோ பாத்தி யாயர்!
துதிதகு பலநூல் யாத்தோர்!
பண்டித மணியாம் தூயோர்!
கதிர்மணி விளக்கம் செய்தார்!
அதன்திறம் கணிக்கற் பாற்றோ? (1)

செம்மைமிகு நம்தமிழின் சீர்த்திருவா
சகம்போல் ஓர் சிறந்த நூல்தான்,
எம்மொழியினிலும் இல்லை; இணையில்நம்பண்
டிதமணியார், இனிது அதற்கு,
நம்மருமை மணிமொழியார் நல்லுள்ளம்
ஆழ்ந்தாய்ந்து நனிகண்டு ஓர்ந்து,
மெய்ம்மையிற்செய் கதிர்மணிநல் விளக்நூல்
போல்நூலும், வேறொன் றில்லை! (2)

'சிற்பரர் மேலாம் சின்மயர்' என்னத்
திகழ்மணி வாசகர் பாடற்
சொற்பொருள் நலங்கள் சுவைகளில் திளைத்துத்
தோய்ந்து தோய்ந்து அதன்மயம் ஆகி,
நற்பெருஞ் சிறப்பிற் கதிர்மணி விளக்காம்
நயமிகு ஞானநூல் அளித்தார்!
கற்றுயர் சைவசித் தாந்தச் சான்றோர்,
கதிரேசர்! கலைஞர்மா மணியே! (3)

—ந.ரா.மு.

சைவமும் தமிழும் தம் இரண்டு கண்கள் எனக் கொண்டு, அவைகள் பெரிதும் செழித்துத் தழைத்துச் சிறப்புற்றோங்கும் வண்ணம், பண் டிதமணி அவர்கள் அரும்பெரும் தொண்டுகள் பல ஆற்றினார். சைவசித்தாந்தத் தத்துவச் செந்நெறியில் அழுந்திய பற்றும் ஆர்வமும் கொண்டு, அதன்கண் அளப்பரும் புலமையும் தேர்ச்சியும் அமைந்து, தனிப்பெரும் தலைவ ராகவும், சான்றோராகவும் மிளிர்ந்தார். எண்ணற்ற பல பெரு மாநாடுகளிலும், புலவர் பேரவைகளிலும், சொற்பொழிவுகள் ஆற்றியும் தலைமை தாங்கியும், யாவரும் மகிழ்ந்து மதித்து வணங்கிப் போற்றும் மாட்சிமை பெற்றிருந்தார்.

''நற்றமிழும் சைவமும்தம் கண்கள்என்றே நன்று
கொண்டு,
பொற்பு மிகவளர்த்துப் போற்றினார்! - அற்புத
மாய்
ஓங்குதிரு வாசகத்திற்கு இன்ப உரைவகுத்தார்!
ஈங்குஇவர்க்கு உண்டோ இணை?

—ந.ரா.மு.

இவ்வுலகில் எண்ணிறந்த மலைகள் பல இருந்தாலும், அவற்றுளெல்லாம் பொதிய மலை இமயமலை போன்ற மலைகள் சிலவே சிறந்து விளங்குதல் போல, எத்துணையோ பலப்பல புலவர் பெருமக்கள் தமிழறிஞர்கள் இருப்பினும், நம் பண்டிதமணி அவர்கள், அவர் களுளெல்லாம் குறிப்பிடத்தக்க பெருஞ் சிறப் புடையவராகத் தலைசிறந்து திகழ்கின்றார்.

''மலைகளிலே பலப்பலவாம் மலைகள்தாம்
இருந்தாலும், மற்று அவற்றுள்
உலகினிலே பொதியமலை, உயர் இமய
மலைஎன்ப ஓங்கி நிற்கும்;
புலவர்பலர் இருந்தாலும், பொருவில்பல
மாட்சிமையால் புகழ்மிக் கோங்கிக்,
கலைநலஞ்சால் பெரும்புலவர் கதிரேசர்
சிறந்தவராய்க் கருதத் தக்கார்!

—ந.ரா.மு.

வையமிசைத் தமிழ்வாழும் வரையில் திரு
வாசகமும் வாழ்ந்து நிற்கும்;
செய்யதிரு வாசகம்தான் திகழ்ந்துநிற்கும்
வரை அதற்குச் சிறந்த நல்ல
மெய்யுரைதான் கண்டருள்பண் டிதமணியார்
வியன்புகழும் விளங்கி ஓங்கும்!
ஐயமில்லை; கதிர்மணிநல் விளக்கநூல்
அறிஞர்க்கோர் அரிய செல்வம்!

—ந.ரா.மு.

இங்ஙனமெல்லாம் இணையிலாதுஉயர்ந்த ஒரு மாபெரும் தமிழ்ப் புலவராய், மதிநலஞ் சான்ற வடமொழிப் பேரறிஞராய், தன்னிக ரற்ற சைவசித்தாந்தப் பெருஞ்சான்றோராய், நூலாசிரியர் உரையாசிரியர் போதகாசிரியர் ஞானாசிரியர் எனப் பெறும் பலவகை நலத்தின ராய் வாழ்ந்திருந்து, இன்றும் என்றும் அழியாப் பெரும்புகழ் எய்தி விளங்குகின்ற, பண்டிதமணி கதிரேசனார் அவர்களின் அருமைபெருமைகள் அளவிடற்பாலன அல்ல; அவை விரிப்பிற் பெருகும், தொகுப்பின் எஞ்சும்! 'கடல்கண் டோம் என்பார் யாவரே முடிவுறக் கண்டார்'? 'உரையற்ற தொன்றை உரைசெய்யல் ஆகுமோ?'

யாரே எனினும் ஒருதுறையில்
ஏற்றம் எய்த விழைகுவரேல்,
வீரர் தம்மை வழிபாடு
புரிதல் வேண்டும் எனப்புகல்வர்;
சீரார் தமிழில் சிவநெறியில்
சிறிதே எனினும் யான்சிறக்கப்
பாரிற் பணிந்த பலருள்,நம்பண்
டிதமா மணியார் பதமும்ஒன்றும்!

சைவத் தமிழன்எனும் தன்மதிப்பு நல்லுணர்வில்,
மெய்வைத்த பற்றில்,எனை மிக்குயர்த்தி-உய்வித்த
பல்லோராம் சான்றோருள், பண்டித மாமணியாம்
நல்லோரும் சேர்ந்தொளிர்வர் நன்று.

—ந.ரா.மு.

—:0 0:—

# 'போரேறு' நுண்பொருள்கள்

'மகாவித்துவான்' 'பத்மவிபூஷண்'
திரு. பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்

எம்பெருமானை ஆழ்வார்கள் பலவிடங்களிலும் 'ஆயரேறு' என்றும், 'ஆயர்கள் போரேறு' என்றும் விருஷபமாகப் பேசுகிறார்கள். விருஷபத்திற்கும் எம்பெருமானுக்குமுள்ள சில பொருத்தங்களை ஈண்டுக் காண்போம்.

(1) விருஷபத்திற்குச் சரணங்கள் நான்கு; எம்பெருமானுக்கும்சரணங்கள் நான்கு. சரணம் என்பதற்குக் கால் என்றும் பொருள், செய்கை என்றும் பொருள். விருஷபத்திற்குக் கால்கள் நான்கு என்பது உலகப் பிரசித்தம். எம்பெருமானுக்குச் செய்கைகள் நான்கு என்பது வேதாந்தப் பிரசித்தம். நான்கு செய்கைகளாவன: சிருஷ்டி, சம்ரட்சணம், சங்காரம், மோட்சப்ரதாநம் என்பனவாம். மோட்சப்ரதாநம் என்பதைத் தனிப்பட்ட செயலாகவே கூறவேணும் என்பது நம் ஆழ்வாராசாரியர்களின் திருவுள்ளம். ''வீடாந் தெளிதரு நிலைமையது ஒழிவிலன்'' என்றார் நம்மாழ்வார்.

(2) விருஷ சப்தவாச்யத்வம் விருஷபத்திற்கும் உண்டு; எம்பெருமானுக்கும் உண்டு. ''விருஷோ விருஷப தர்மயோ:'' என்பது நிகண்டு. விருஷம் என்றால் விருஷபத்திற்கும் பெயர். தருமத்திற்கும் பெயர். சாத்திரங்களில் எம்பெருமான் தருமமாகச் சொல்லப்பட்டனன். 'தர்மஸம்ஸ்தாபநம் பண்ணப் பிறந்தவன் தானே ஸர்வதர்மங்களையும்விட்டு என்னைப் பற்றுஎன்கையாலே ஸாட்சாத் தர்மம் தானே யென்கிறது'' என்று முமுட்சுப்படியில் பிள்ளைலோகாசாரியருடைய திவ்வியசூக்தியும் இங்கு அநுசந்தேயம். ஆக, விருஷசப்தவாச்யத்வம் விருஷபத்திற்கும், எம்பெருமானுக்கும் இணங்கியதாயிற்று.

(3) உணவு விஷயத்தில் பிறர் கை பார்த்திருக்குந் தன்மை, விருஷபத்திற்கும் எம்பெருமானுக்கும் ஒக்கும். எம்பெருமான் அர்ச்சாவதாரத்தில் உணவுக்குப் பிறர்கை பார்த்திருக்கின்றான். விபவாவதாரத்திலும் 'வேர்த்துப் பசித்து வயிறசைந்து வேண்டடிசிலுண்ணும் போது ஈதென்று பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும் பத்தவிலோசனம்'' என்கிற நாச்சியார் திருமொழியின்படியே.

(4) விருஷபத்திற்கு மாடு என்று பெயர். உலகில் அறிவிலிகளை மாடே! என்று வசை கூறுதல் வழக்கம். எம்பெருமானும் அறிவிலி யென்றே கூறப்படுகிறான்; சகஸ்ரநாமத்தில் அவிஜ்ஞாதா என்று ஒரு திருநாமம். அறியாதவன் என்றே இதற்குப் பொருள். சர்வஞ்ஞன் ஆன எம்பெருமானை அவிஜ்ஞாதா என்னலாமோ என்று கேள்வி பிறக்கும். அவ்விடத்தில் பட்டருடைய பாஷ்யத்தில் வெகு அழகாகப்பொருள் நிர்வகிக்கப்பட்டுள்ளது. ''அவிஜ்ஞாதா ஹி பக்தாநாம் அகஸ்ஸு கமலேக்ஷண:'' என்பது நிர்வசநம். பக்தர்களின் அபராதங்களில் அறிவு இல்லாதவன் எம்பெருமான். எம்பெருமான் பக்தர்களின் குற்றங்களை அறியாதவனாகவே இருந்திட்டால், அவற்றைப் போக்யமாகக் கொள்ளுகிறான் என்பதற்கு அவகாசமேது? என்கிற சங்கையும் இங்கு உதிக்கும்; இதற்கு சுருதப்ரகாசிகையில் பரிகாரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எம்பெருமான் பக்தர்களின் குற்றங்களில் கண் செலுத்தமாட்டான்; ஒருகால் கண்செலுத்தினாலும் அவற்றை நற்றமாகவே கொள்வன் என்று தெரிவிக்கப்படுகிறது.

(5) விருஷபம், பழகிக்கொண்டே இருக்கிறவர்களிடத்திலும் கறுவுதல் உண்டானால் முட்டித் தள்ளும்; எம்பெருமான்படியும் இப்படியே; ''சீமாலிகன் அவனோடு தோழமை கொள்ளவும் வல்லாய். சாமாறவனை நீ யெண்ணிச் சக்கரத்தால் தலைகொண்டாய்'' என்ற பெரியாழ்வார் திருமொழி இங்குக் கருதுதற்குரியது. மாலிகன் என்பானொருவன் கண்ணபிரானுக்கு உயிர்த்தோழனாய் அப்பிரானிடத்தே பலவகை ஆயுதங்களையும் பயின்று, ஒருவர்க்கும் அஞ்சாமல் அகங்காரியாய் சாதுஜனங்களை இம்சித்துக் கொண்டிருக்க, கண்ணபிரான் 'நண்பனாகிய இவனை நாம் கொல்வது தகாதே! என்ன செய்யலாம்?' என்று வியாகுலப்பட்டு, ஒருநாள் அவனை நோக்கி, 'நீ இப்படிச் செய்வது தகாது' என்று சொல்ல, ஆசுரப்ரக்ருதியான அந்த மாலிகன், தன் வாயில் வந்தபடி பிதற்றி, 'நீ எல்லா ஆயுதங்களையும் எனக்குக் கற்பித்தும் சக்கராயுதப் பயிற்சி மாத்திரம் செய்யவில்லையே என்று கண்ணன்மேற் குறைகூற, 'எனக்கு முடியாததும் ஒன்றுண்டோ! நீ அவசியம் அதைக் கற்பிக்க வேண்ணும்' என்று கூற, கண்ணன் இதுதான் தக்கசமயம் என்று திருவுள்ளத்திற்கொண்டு, சக்ராயுதத்தையெடுத்துத் தன் ஒற்றை விரலால் சுழற்றி மேலெறிந்து கையிலேற்று, 'இது உனக்கு அரிதே' என்று கண்ணன் சொல்லவும், அதனை அவன் கேளாமல், சக்ராயுதத்தை வாங்கிச் சுழற்றி எறிந்து பிடிப்பதாக நினைத்துத் தன் கைவிரலைக் கழுத்துக்கு அடுத்ததாக வைத்து நிற்க, அச்சக்கரம் சுழன்று வருவதற்கு இடம் போதாமையாலே, அதன்வீச்சு இவன் கையிற் பிடிபடாமல்

இவன் தலையை அரிந்து விட்டதென்பது இங்குக் குறித்த வரலாறு.

(6) விருஷபம், காசு கொடுத்து வாங்கி விட்டால் நம் வீட்டையே நாடிவரும்; 'பக்திக் ரீதோ ஜநார்த்தந'' என்கிறபடியே, பக்தியாகிய வலையினால் எம்பெருமானைப் பெற்று விட்டால், அவனும் நம்மையே நாடி நிற்பன். ''எங்கும் பக்கநோக்கறியான் என் பைந் தாமரைக் கண்ணனே'' என்கிறபடியே வேறொரிடம் புரிந்து பாரான். ''கனிவார் வீட்டின்பமாயிருப்பன்''.

(7) விருஷபம் பிறர்க்கு உழைப்பதையே இயற்கையாக உடையது. எம்பெருமான்படியும் இதுவேயாம்; தூது செல்வதும், தேரில் பாகனாய் நிற்பதும், மனிசர்க்காய் நாட்டில் பிறந்து படாதனபடுவதும் காண்க. எம்பெருமானுடைய சகலமும் பிறர்க்கேயாக இருக்கும்.

(8) விருஷபம் பாரத்தை வகிப்பதற்கென்றே பிறக்கும். எம்பெருமானும் பக்தர்களின் யோக க்ஷேமபாரங்களை வகிப்பதிலேயே குதூகலமுடையவன். ''யோக க்ஷேமம் வஹாம்யஹம்'' என்றே கீதையில் அருளிச் செய்கிறான்.

இவ்விடத்தில் ஒரு கதை; சாஸ்திர விச்வாஸமுடைய ஒரு சுவாமி, ''யோக க்ஷேமம் வஹாம்யஹம்'' என்கிற பகவத் சூக்தியில், அசைவில்லாத நம்பிக்கையுடையவராய்த் தேகயாத்திரைக்காகத் தாம் ஒரு முயற்சியும் செய்யாதவராய் இருந்து வந்தார். எம்பெருமானும் அவருடைய நம்பிக்கைக்குப் போரவுகந்தருளிப் பலவகைகளாலே, அவருடைய யோக க்ஷேம பாரங்களைத் தானே நிர்வகித்து வந்தான். இப்படி வருகையில் அவருடைய அத்யவஸாயத்தை இன்னமும் சிறப்பிக்கத் திருவுள்ளம் பற்றிய எம்பெருமான், சில நாள் அவர்பால் புறக்கணிப்பாக இருந்தான். அவரும் பட்டினி கிடக்க நேர்ந்தது. ஆனாலும் பிறரிடம் சென்று யாசிக்க விரும்பவில்லை. பகவத் கீதை ஓலை நூலை எடுத்து, ''யோக க்ஷேமம் வஹாம்யஹம்'' என்றவிடத்துக் கரிபூசினார். மறுநாள் காலையில் அவர் அனுட்டானத்திற்காகத் தடாகம் சென்றிருக்கையில், மாதவன் ஒரு சிறு குமாரனாய் உதட்டில் கரிபூசிக் கொண்டு, பல கூடைகளிலே பலபல ஸம்பாரங்களை வைத்துத், தானே தலையில் சுமந்து கொண்டு வந்து, அவருடைய திருமாளிகையில் முற்றம் நிறைய ஸம்பாரமயமாகவே நிரப்பிக் கொண்டிருந்தான். அவர் அனுட்டானத்தை முடித்துக் கொண்டு திருமாளிகையில் நுழைகையில் முற்றம் முழுவதும் அமுதுபடியும் பலவகை ஸம்பாரங்களுமாய் நிறைந்திருக்கிறபடியைக் கண்டு, தேவிகளை நோக்கி 'இவையெல்லாம் ஏது?' என்று கேட்க, அவளும் யாரோவொரு பையன் கொணர்ந்து கொணர்ந்து வைத்துப் போகின்றான்; நீங்கள் அனுப்பினதாகவன்றோ நான் நினைத்திருக்கின்றேன் என்றாள். அது கேட்ட அவர் 'எனக்கு ஒன்றும் தெரியாதே; நான் குளத்திற்கன்றோ சென்று வருகிறேன்; அந்தப் பையன் யாவன்? எப்படியிருப்பன்?' என்று கேட்டனர். 'இடைப் பிள்ளைபோல் தென்பட்டான். உதடெல்லாம் கரிபூசினபடியாய்க் கிடந்தது' என்றாள். கரியென்கிற பேச்சுக் காதில் விழுந்தவுடனே, தாம் பகவத் கீதை ஏட்டில் கரிபூசினவிடத்தை எடுத்துப் பார்த்தார். அங்குச் சிறிதும் கரியில்லை. 'மாதவனுடைய மாயமே இது' என்று அறுதியிட்டார். அந்தோ! பாவியேனுக்குச் சேவைதந்தருளல் ஆகாதாவென்று, ஆகாசத்தை நோக்கி அழுவதும் தொழுவதுமாய்த் துடித்தார்; உடனே சங்கும் சக்கரமும் சிரித்த முகமும் தொங்கும் பதக்கங்களோடும் எங்கும் கண்டறியாத தோற்றமுடனே, நங்கள் பிரான் தோன்றினன். 'யோக க்ஷேமம் வஹாம்யஹம்' என்றவனன்றோ நான் என்று, சோதி வாய் திறந்து பணித்தனனாம். ஆகவே, மாதவனே நம்முடைய பாரங்களைத் தாங்குகின்றனன்.

(9) விருஷபம் எத்தனை அடிபட்டாலும் லட்சியம் பண்ணாது; எம்பெருமான் அடிபட்டதும் மகாபாரதமிறே. ''ஆங்கொருநாள் ஆய்ப்பாடி, சீரார் கலையல்குல் சீரடிச் செந்துவர்வாய், வாரார் வனமுலையாள் மத்தாரப் பற்றிக்கொண்டு, ஏராரிடை நோவ எத்தனையோர் போதுமாய், சீரார் தயிர் கடைந்து வெண்ணெய், திரண்டதனை, வேரார்நுதல் மடவாள் வேறோர் கலத்திட்டு, நாராருறியேற்றி நன்கமைய வைத்ததனைப் போரார் வேற் கண்மடவாள் போந்தனையும் பொய்யுறக்கம், ஓராதவன்போல் உறங்கியறிவுற்றுத், தாரார் தடந்தோள்கள் உள்ளளவுங் கைநீட்டி, ஆராத வெண்ணெய் விழுங்கி, அருகிருந்த மோரார் குடமுருட்டி முன்கிடந்த தானத்தே, ஓராதவன் போல் கிடந்தானைக் கண்டவளும், வாராத்தான் வைத்தது காணாள், வயிறடித்திங்காரார் புகுதுவார் ஐயரிவரல்லால், நீராமிது செய்தீரென்றார் நெடுங்கயிற்றால், ஊரார்களெல்லாருங் காண வுரலோடே, தீரா வெகுளியளாய்ச் சிக்கன ஆர்த்து அடிப்ப, ஆராவயிற்றினோ டாற்றாதான்'' எனவரும் சிறிய திருமடல் காண்க.

(10) நிலத்தை உழுவதற்கு விருஷபம் முதல் சாதனம்; எம்பெருமான் ''பத்தியுழவன்'' என்று திருமழிசைப்பிரான் பணித்தபடியே, பக்தி யுழவுக்கு முதற்சாதனமாக விளங்குபவன். பக்தியாகிய பயிர்க்கு நெஞ்சு விளைநிலம்; ''பேரமர் காதல் கடல்புரைய விளைவித்த காரமர் மேனி நங்கண்ணன்'' என்கிறபடியே, அதற்குக் கிருஷிபண்ணுகிறவன் மாதவன். ஆசார்ய இருதயத்தில் 'பெரும்பாழில் க்ஷேத்ரஜ்ஞன் பெருஞ்செய்'' இத்யாதி சூர்ணிகையினால், இவ்விஷயம் விசததமமாக அறியத் தக்கது.

(11) விருஷபம் நல்லவழிகளில் நன்றாகவோடும்; சேற்று நிலம் கண்டால் தளரும். எம்பெருமானும் நன்னெறி நின்றவர்கள் பக்கலில், விரைந்து காரியம் செய்வன். ''மாயவன் சேற்றள்ளலில் படிந்தவர்களிடத்தில் தளர்ச்சி தோற்ற இருப்பன்''. இங்ஙனமே மற்றும் பலவகைப் பொருத்தங்களும் உய்த்துணரத் தக்கன.

# திருமந்திர யோகம்

## (முற்றொடர்ச்சி)

'கவியோகி' 'மகரிஷி'
தவத்திரு சுத்தானந்த பாரதியார் அவர்கள்

### 9. சிவகுரு

சாதனம், மிகச் சில பிறவி -யோகிகளுக்கே இயல்பாக நடக்கும்; முன்விட்டகுறை தொட்டுக்கொண்டு, சாதகனை முன்னே நடத்தும். மற்றவர்களுக்குத் தக்க குருவின் துணை அவசியமாகும். குருவின் இலக்கணமும், சீடன் இலக்கணமும் இங்கே விளக்குவோம். எனக்கு நான்கு பிறவிகள் நினைவுண்டு. நான்கு பிறவிகளிலும் யோகி; ஞானசித்தர் என்னை அப்போதும் இப்போதும் எப்போதும் நடத்துகிறார். அப்பிறவியில் எந் தாயின் முதற் பிள்ளையாகி 15 ஆண்டுகள் தவம் புரிந்து உச்சிக்குண்டலி பிரமரந்திரத்தில் தீப்பிழம்பாக வெடித்து உடலை நீத்தேன். அப்போது யோகானுபவங்களை உலகிற்குப் பாட்டாகவும், உரையாகவும் எழுதி வைக்கும் சங்கற்பம் எழுந்தது. அதுவே என் தாயின் கடைசிப் பிள்ளையாகப் பிறந்து இன்றும் எழுதிக்கொண்டிருக்கிறது.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

முற்பிறவிக் குருவே இப்பிறவியிலும் ஞானசித்தராகத் தோன்றி, என்னை நடத்துகிறார். இதுவே என் பிறவியின் உண்மை. எழுத்தோவியங்களின் தன்மை, எழுத்துமுடிந்து தக்காரிடம் அறிவுக் கருவூலங்களை ஒப்படைத்து உயிர் உயர உந்தி அருவாகச் சுழன்று அரனருளிற் கலந்துவிடும். உலகில் மானிடப் பிறவி அரிது. அறிவொளி அதனினும் அரிது. அவ்வொளியைத் தூண்டும் குருவை அடைதல் சாலவும் அரிதாகும்.

குருவே சிவமெனக் கூறினன் நந்தி;
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே

சுத்த சிவஞானியே குருவாக முடியும்; அவனைப் பணிந்து உபதேசம் பெற்றொழுகுவோர் தத்துவம் அறிவார். நல்ல முத்தி தேர்வர். அவர்களுக்குப் பரமார்த்த சித்தியால் உயர்ந்த நிலை எய்தும். பரலோகம் என்பது பலமான மாயத்திற் கடிமையான மனவுலகைத் தாண்டிய சச்சிதானந்த விஞ்ஞானலோகமாகும்.

சிவனே சிவஞானி; ஆதலாற் சுத்த
சிவனே யென அடி சேரவல் லார்க்கு,
நவமான தத்துவ நன்முத்தி நண்ணும்
பவமான தின்றிப் பரலோக மாமே

உண்மையான குருநாதனை அடைதல் மிக அரிது. நான் நூறு குருமாரைப் பார்த்துள்ளேன் நித்திய தேகி, செத்தாரை எழுப்புவார், எல்லாரும் மறைந்தனர். பலர் நோயுற்றழிந்தனர். ஞானசித்தர் ஒருவரே இன்று என்னை நடத்துகிறார். அத்தகைய பரமசிவ குருவைக் காண்பது மிக்க அருமையாகும். அவனை அறிந்தவர் நுட்பமாக உள்ளே காண்பர். அண்ணலான சிவகுரு, அவரவர் உள்ளே அமர்ந்திருக்கிறான். அவனைக் கண்ட அன்பனும் அவன் மயமாவான். ''அதுவானால் அது ஆவார். அதுவே சொல்லும்''. அத்தகைய சிவகுருவை அறிவதும் காண்பதும் மிகமிக அரிதாகும்.

அண்ணல் இருப்பிடம் யாரும் அறிகிலர்,
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்வார்க்கு,
அண்ணல் அறிவினுக்கு உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணின் அவனிவ னாகுமே

அத்தகைய அருட்குருவைக் கண்டாலே, பந்தம் சிந்தும். கருடன் உருவைக் கருதும் அளவில் பாம்பு விஷம் தீர்ந்து பயம் நீங்குவது போல், மும்மலமும் நீங்கும்; சீவன் சிவனாகும். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் குருவின் அருட்பார்வை பெற நீங்கும். ஆசையாணவ மாசுநீங்கினாலே அருட்பார்வை கிடைக்கும். அருளாலே இருள் விலகும்.

கருடன் உருவம் கருதும் அளவிற்
கருவிடத் தீர்ந்து பயங்கெடு மாபோல்,
குருவின் உருவம் குறித்த அப்போதே
திரிமலம் தீர்ந்து சிவனவ னாமே

நந்தியான குருவைக் காணவும், குருபதம் தலைவைத்து வணங்கவும், குழந்தை போன்ற மாசற்ற உள்ளத்தில் நினைக்கவும், அவனுடன் வாழ்வதைப் பெறவும் என்ன பேறு பெற்றேன் என்று நன்மாணாக்கன் மகிழ்கிறான். சிவகுருவை ஒருமுறை மருவினோர்க்குப் பிரிய மனம் வராது; அவன் அவ்வளவு கவர்ச்சியான கருணையாளன். அவனை வழிபடுவோரது பாச வினை நீங்கும். வேறு நினைப்பற அவனையே நினைத்தால் அன்பனுக்கு அருளறந் துலங்கும். குருவினிடம் அன்பு நிலைக்க வேண்டும்.

வேறு நினைப்புகளின்றி உண்மையான குருவையே நினைத்தால் யோக சித்தி படிப்படியாக வரும்.

நிலைப்பெற நாடி நினைப்பற வுள்கில்,
தலைப்பட லாகுந் தருமமுந் தானே

பிளந்த தினைபோன்று, சிறுமையிற் சிறியரேனும், சிவகுருவையே நினைந்து நிற்பவர் மனத்திட்பமுற்று மேலோங்கிப் பெரியராவார். சிவகுருத் தியானிகள் பக்தி நிலை பெறுவார்கள். அவர்கள் சிந்தையில் இறைவன் இருந்து சிவானந்தப் பேறு பெறும் புகழ்வழி காட்டுவான். யோகக் கடவுளான சிவகுருவே உடல், உயிர், கண், வாய் அனைத்துமாயிருந்து நம்மை வாழ வைக்கிறான். அவனே ஐம்பூதமாயிருக்கிறான்; அவன் விண் மட்டுமின்றிப் பரவெளி மேனியாக விரிந்திருக்கிறான். அவன் பரமபதி ; ஆணை முதல்வன், சக்தி பாகன். அவனே அடியார்க்கு உரிய குருநாதனையும் ஆர்வமுள்ள பக்குவிகளுக்கு அளிக்கிறான். பரமன் அருளே இறங்கிக் குருவடிவாக வருகிறது; இப்படி அருள் பெற்ற குருமாரையே உபசாரத்திற்காக அவதாரம் என்பது சிவகுருகோவணங்கட்டிய எளிய தோற்றமுடையவன்; எனினும் அவனைக் கோவும் வணங்குவான்; சிவனுக்கு இணை எவனும் இல்லை. அவன் அவனே. அன்பர் நாவும் வணங்கும்படி அவன் அருள் செய்தான். அவனால் சித்தந் தெளிந்தோம். 'நாமெல்லாம்போய் வணங்கும்புனிதப் பொருளாய் அவன் விளங்குகிறான். எங்கும் சிவமயம், எங்கும் சிவனருள், எங்கும் சிவபரம் ஆனந்தம்.

குருதேவனே 'பக்தி செய்' என்று பணிக்கிறான்; வணங்கத் தன் மலரடியைத் தருகிறான்; பிறவிப் பிணி களைகிறான், தூய சொல்லால் நம்மை மாசறச் செய்கிறான்; சத்து அசத்து, சதசத்து இன்னதெனக் காட்டுகிறான். வண்ணான் மண்ணில் புரட்டி வேட்டி வெளுக்கிறான். பரமகுரு பாசத்தைக் கூட்டிப் பாசமறுக்கிறான்; சித்த மலமறுத்துச் சிவமாக்கும் அத்தன் அவனே; நாம் பற்றுக் கொண்ட உடலபிமானத்திலிருந்து அவன் நம்மை விடுவிக்கிறான். நேருக்கு நேராக நம்மைச் சலனமற்ற முக்தியில் கூட்டுகிறான். மாசறுகாட்சிப் புலவனான சற்குரு, அருளம்பலவன், இறைவன் அருள் விளையாடும் அம்பலத்திற்குச் சமானமாவான். குருநாதன் அருளால் பக்தியும் மந்திர போதமும், சாதனமும், சுத்தியும் சத்தியும் அட்டசித்தியும் எய்தும். எல்லாவுலகிற்கும் அப்பாலான இறைவனே இப்பால் இவ்வுலகில் குருவாய் வந்து எல்லாரும் உய்யும்படி நல்லார் உள்ளத்தில் மிக்க அருள் பொழிகிறான். அவ்வாறு அருள் இறங்கிய தூயரே குருமாராவார். சாதனத்திற்கேற்ற சொல்லைத் தரும் நல்ல குருசுத்த சிவமே.

•

ஆசை யழுக்கில்லா தைம்பொறியைச் செற்றவனார் ஆசான் உலகிற் கவன்.

ஆசான் அளிக்கும் அழியா விளக்கொளியே
. காசினிக் காகுமுறக் காண் (யோகசித்தி)

அவத்தைப் போக்கிச் சிவத்தை விளக்கும் குருபரனை அன்பார்வமுடன் பின்பற்றும் அடியாருக்கே அருள்கூடும், இருள்விலகும். எல்லாரும் இன்புற்று நல்லாறு வாழவே குருமார் சொல்லாலும், தூயநடையாலும் வழிகாட்டி நடத்துவர்.

எல்லாவுலகிற்கும் அப்பாலோன், இப்பாலாய்
நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால்,
எல்லோரும் உய்யக்கொண் டிங்கே அளித்தலாற்
சொல்லார்ந்த நற்குரு சுத்த சிவமே

குருவின் அருள்வழி நின்று சாதகன் சித்தம் உறுதியாக நிலைத்தலால் சிவன் அங்கே வந்தமர்வான். அதாவது சித்தம் வேறொன்றின்பாலும் சலிக்காமல், சிவசிந்தனையிலேயே நிலைத்தால், சிவம் அதில் தீச்சுடர் போல விளங்கும்.

சித்தம் யாவையும் தண்சிவம் ஆனக்கால்,
அத்தனும் அவ்விடத் தேயமர்ந் தானே.

குருநாதன் உருவாய் வந்து காட்டாவிட்டால், வேதாந்த போதமும், அதன் மெய்ப்பொருளும், அதனால் மயக்கமறுதலும், சாதனத்தால் பெறும் அத்யாத்ம சித்தியும், அதனால் வரும் முக்தியும், இயலாவாம். பக்தி, ஞானம், வைராக்கியம் ஆகிய மூன்றும்உயர்ந்த சித்திக்கு வித்தாகும். சிவோகம் பாவனையிற் சேரும்; அதனால் முக்திக்கு உரிய ஞானம் முளைக்கும். அந்த ஞானமுளை தூய குண்டலி சக்தியருளால் எளிதாகச் செழிப்பதாம். ஓம் சிவம் என்று சரண்புகுந்து, சிவோகம் பாவனையிலே தியானம் கூடி, சிவமயவுணர்வில் உலகைக் காண்பதே சுத்த சிவசக்தி சித்தியாகும்.

பத்தியும் ஞானவை ராக்கிய மும்பர
சித்திக்கும் வித்தாம் சிவோகமே சேர்தலான்,
முத்தியின் ஞானம் முளைத்தலால், அம்முளை
சத்தி யருள்தரில் தான்எளி தாமே

இன்பப் பிறவியை முன்னால் எய்தவைத்த முதல்வன் இறைவன்; குருநாதன் பக்குவம் அறிந்து வந்து உதவும்போதே, இறைவனும் விளங்குவான். குருநாதன் அளித்த சுத்தமனதில் இறைவனருள் இயல்பாக விளங்கும். சிவஞானம் தெளியும்; சிவஞானத் தெளிவே சித்தி முத்தி; சிவஞானம் தீவிரமாதலே தவ ஞானமாம். சீவன் தற்போதமின்றிச் சிவபரமான போது சிவானந்தமளிக்கும். குருமொழியை உணர்ந்து, கற்று, சாதனஞ் செய்து, நான் திருவருள் பெற்றேன். பிறவியைப் பிறந்தொழித்து, உலக வாழ்வை மறந்தொழித்து, திருவருளில் உயிர்க்கிறேன். குருவருளால் பதியின்ன்று பசுவைப் பிரிக்கும் பாசப்பிணக்குகளை அறுத்து என்னுள் கருவாக உள்ள ஈசனைக் கண்டு கொண்டேன். அவனே உலகில் வாழும் உயிர்களின் தலைவன்; அவன் உள்ளத்தில் உள்ளவாறு இருக்கும் ஈசனை மனிதர் உணர்வதில்லை. அதனாலேயே வருந்துகிறார்கள்.

## 10. போலிகளை விலக்குக

திருமூலர் போலிக் குருமார்களைப் பலமாகக் கண்டிக்கிறார்; அருளுணர்வில்லான்,

உண்மை யறியாப் பொய்யன், வேதாகம நெறியறியாதான், நன்னெறி நின்று காணாதான். கடவுளை வணங்காமல் தானே கடவுள் என்று அகங்கரிப்பவன், பொறாமை கொண்டு பிறரைத் தூற்றுவோன்; பதித் தன்மை இன்றிப் பசுத்தன்மை மிக்கவன். மந்தரம் தந்திரம் மகா யோக மதிஞானம் உணர்ந்த பெரியாரை மதியாதவன், பந்த மோட்சப் பான்மை காணான், தியானந்தெளியான், வெறும் சாப்பாடே கருதி வேடம் பூண்டவன் -அசத்குரு, போலிக்குரு ஆவான். காமக்குரோ தாதிகள் நீங்காக்கலதிகள், துர்க்குணர் விரும்பும் அசத்தறிவைப் புகட்டுவோர், மொட்டை போட்டு ஊரை ஏமாற்றும் இப்போலிகளால் நாட்டுக்கே கேடாகும். குருடருக்குக் கோல்காட்டிச் செல்லும் குருடர், குருடும் தாமும் படுகுழி வீழ்வர். அதுபோல் இப்போலிகள் அறியாதவர்களைச் சொல்லாலும், பகட்டாலும், ஏமாற்றித் தாமும் வழியறியாமல் மாயக்குழியில் வீழ்ந்து பிறரையும் மதிமயக்கி வீழச் செய்கின்றனர்.

படிப்பும் நடிப்புங் கண்டு மயங்கக்கூடாது. உள்ளார்ந்து பார்த்து, தன்னறிவு தெளிந்து, ஞானசக்தியை அமைதியாகப் பரப்ப வல்லவனே சற்குரு ஆவான். அவன் தனது பெயரையும் தமுக்கடித்துத் திரியான். சிவிகை ஏறிப் பவனி வருவார் - அவன் விளம்பரமேயில்லாமல், இருந்தபடி யிருந்தே உண்மை யன்பருக்கு சக்திக் கதிரைப் பரப்பும் குருமாரே மனத்தைத் தெளிய வைப்பர். சக்தியும் ஞானசித்தியும் இல்லாத படாடோப பயங்கரர், விளம்பரச் சீடரால் சுயபுராணம்பாடி, ஊர் திகைக்கவும், பேர் பரவவும், இடம்பச் செருக்காடித் திரிவார். எனது குருநாதர் ஞானசித்தர் கேதாரத்திலே தனிநிட்டை கூடியவர். உண்மை யன்பர் உள்ளுணர்வை ஒண்மையால் எழுப்பியவர். உள்ளார நினைந்ததும் ஒளிகாட்டி உய்வளிக்கும் கடவுட் பெரியார். இன்றும் அவரே என்னை உள்ளிருந்து நடத்துகிறார். அத்தகைய அருள்பெற்ற குருமார் மிகவும் அரியர். அவர்களை வெளி வேடத்தில் காண முடியாது. தடபுடலாகத் தண்டு கமண்டலந் தாங்கி, 'பொம், பொம் மஹாதேவ' என்று வரும் காவித் துறவிகளில் எத்தனையோ போலிகளும் மோசக்காரரும் உண்டு. தக்க ஞானிகள் காவியும், கமண்டலமும், நீறும், அக்கமும் இல்லாவிட்டாலும் உள்ளறிவு தூண்ட வல்லரே. ஞான சூனியர் எவ்வளவு வேடம் போட்டுப் பகட்டினாலும், பயனற்ற போலிகளே. வேடம் போட்டு ஊரை ஏமாற்றுவோர் நரகினும் கொடியவர். வேடமில்லாவிடினும் மெய்யறிஞர் மேலோர்.

ஞானமில்லார் வேடம் பூண்டும் நரகத்தார்;
ஞானமுள்ளார் வேடம் இன்றெனில் நன்முத்தர்

புன்ஞானத் தோர்வேடம் பூண்டும் பயனில்லை;
நன்ஞானத்தோர் வேடம்பூண்பர் அருள்நண்ணித்
துன்ஞானத் தோர் சமயத் துரி சுள்ளோர்
பின்ஞானத்தோர்; ஒன்றும் பேசகில் லாரே

சிவசாதகர் போலிவேடம் போட்டுத் தீவினை செய்து ஊரை வஞ்சிக்கலாகாது. யோகி, ஞானி என்று பெயர் வைத்துக்கொண்டு கள், ஊன், கஞ்சா, அபின், புகையிலை இவற்றைக் கொள்ளலும், இரகசியமாகப் பிள்ளை வரந் தருவதாகக் கற்பழித்தலும் அயோக்கியத்தனமாகும். குரக்குவலி பிடித்தவன் போலும், கழுமரத்தடியில் இறைச்சியுண்ணக் குரைக்கும் நாய்போலும், போலி ஞானிகள், தமது வாய் வேதாந்தத்தைக் கத்தித் திரிவர். உண்மையான சிவஞானிகள் பொறிபுலன் அடங்கி, உடலின் சேட்டைகளும் அப்படியே அடங்கி, அகம்பாவமின்றி, செத்தார் போலத் திரிவர். உண்மை ஞானிகள் உடலுடனும் புலன்களுடனும் ஒத்திருந்தும், அவற்றின் சேட்டையும் பற்றுமில்லாத சமாதியிலேயே வாழ்வர்.

கத்தித் திரிவர் கழுவடி நாய்போல்;
கொத்தித் திரிவர் குரக்களி ஞானிகள்
ஒத்துப் பொறியும் உடலும் இருக்கவே
செத்துத் திரிவர் சிவஞானி யோர்களே.

''வித்தாரமும் இடும்பும் வேண்டாம்; மட நெஞ்சே செத்தாரைப் போலே திரி, சேய் போல் இருப்பர் உண்மை ஞானம் தெளிந்தவரே'' என்றார் பட்டினத்தார். அவர்கள் அவதாரத் தம்பட்டமில்லாமல், உண்மையடியாராக இறைவனடி பற்றி வாழ்வார்கள். அடியார் என்பவர் சிவஞானம் பெற்றோர். உள்ளே திருவடி நடனம் கண்டு அதே நினைப்பில் வாழ்பவர். அவ்வுணர்வு பெறாதவர், சிவனடி தொழாதவர், அடியாராகார். நற் சிவயோகமும் அருள்ஞான சாதனமுமே ஞானிக்கு அழகான அணியாகும். ஞானத்தினால் சிவநிலை நண்ணும். ஞானி, தன் இருக்குமிடமான இதயாலயத்திலே மோனியாயிருந்தால், முத்தியும் சித்தியும் எய்துவான். பிறர் உணவைப் பறித்துண்ண ஆடம்பரமான வேடம் பூண்டு, ஊரை வெருட்டும் பேதைகளே சும்மா உண்டு உறங்காதீர்கள். ஆடிப்பாடி முறையிட்டு ஞானிகளைத் தேடிச் சாதனம் செய்து சிவபாதத்தைக் காணுங்கள்.

ஆடம் பரங்கொண் டடிசிலுண் பான்பயன்
வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதைகாள்
ஆடியும் பாடியும், அழுதும், அரற்றித்
தேடியுங் காணீர் சிவனவன் தாள்களே!

பகவான் ஆதிசங்கரர் பஜகோவிந்தத்திலே அருளுகிறார்:

ஜடிலீ முண்டீ லுஞ்சித கேச :
காஷாயாம்பர பஹுக்ருத வேஷ :
பஸ்யன் னபி நபிபஸ்யதி மூட :
உதர நிமித்தம் பஹுக்ருத வேஷம்

வயிற்றுப் பிழைப்பிற்காகப் பலவேடம், பூண்டவர், சடை, மொட்டை, நீண்டு பரந்து விரிந்த மயிர்வேடம் காட்டி, காவிகட்டி, பகட்டினாலும், உள்விழி திறவாத அறிவிலிகளே. வயிற்றுப் பிழைப்பிற்காக உலகமேடையில் கவர்ச்சியாட்டம் போட்டுக் காசு பணமடிப்பவர், விளம்பரப் பகட்டரே. அவர்கள் வலையிலே சிக்கி ஆயுளை வீணாக்காதீர். ஊள்ளொடுங்கி, உள்ளத்தானையே பற்றி நின்மினே.

பற்றுக பற்றற்றான்
பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு!

***

# திருக்கடல்மல்லைத் தலசயனம்

## (தலவரலாறு)

[ ந. ரா. முருகவேள், M.A , M.O.L. ]

### (1) மாமல்லபுரம்

திருமால்நெறிச் சான்றோர்கள் ஆகிய ஆழ்வார்கள் தம்முடைய திவ்வியப் பிரபந்தப் பாடல்களால் போற்றித் துதித்து மங்களாசாசனம் செய்தருளிய திருத்தலங்கள் திவ்விய தேசங்கள் என்று சிறப்பித்துக் கூறப்படும். அவைகள் மொத்தம் 108 ஆகும்.

**திவ்விய தேசங்கள்:**

அவைகளுள் சோழநாட்டில் உள்ளவை 40; பாண்டிய நாட்டில் உள்ளவை 18; மலைநாடு என்னும் சேரநாட்டில் உள்ளவை 13; நடுநாட்டில் உள்ளவை 2; தொண்டை நாட்டில் உள்ளவைகள் 22; வடநாட்டில் உள்ளவை 12; திருநாடு என்னும் பரமபதமாகிய வைகுண்டம் 1. மொத்தம் திவ்விய தேசங்கள் 108 ஆதல் காணலாம். இதனைப் பின்வருமாறு, பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், தாம் இயற்றிய நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதிச் செய்யுள் ஒன்றால் அருளிச் செய்திருக்கின்றார்.

ஈரிருப தாம்சோழம்; ஈரொன்ப தாம்பாண்டி;
ஓர்பதின்மூன் றாம்மலைநாடு; ஓரிரண்டாம்-சீர்நடு நாடு;
ஆறோடீ ரெட்டுதொண்டை; அவ்வடநாடு ஆறிரண்டு;
கூறுதிரு நாடு, ஒன்றாக் கொள்

**மாமல்லபுரம்:**

இங்ஙனம் 108 என்று கணக்கிடப்பெற்றுள்ள திவ்விய தேசங்களுள், தொண்டை நாட்டில் உள்ள 22 திவ்வியதேசங்களுள் ஒன்றாகத் திகழ்வது, கடல்மல்லை என்றும், மல்லை என்றும், இலக்கியங்களில் பயின்று வருகின்ற மாமல்லபுரம் என்பதும் ஒன்றாகும். இஃது இக்காலத்து'மகாபலிபுரம்' என்று மருவி வழங்கி வருகின்றது.

**பேருந்துத் தடங்கள்:**

மகாபலிபுரம் என்று இக்காலத்தில் வழங்கிவருகின்ற பண்டைய மாமல்லபுரம், சென்னைக்குத் தெற்கே 59 கி.மீ. தொலைவில் உள்ளது. சென்னையிற் பிராட்வேயில் உள்ள பேருந்து நிலையத்திலிருந்து, மாமல்லபுரத்திற்குப் பின்வரும் தடங்களில் பேருந்துகள் செல்கின்றன.

1. சென்னை-திருவான்மியூர்-கேளம்பாக்கம்-திருப்போரூர் வழியாகச் செல்லும் தடம் (19 எ)
2. சென்னை-கோவளம்-திருவிடந்தை வழியாகச் செல்லும் தடம் (19சி, 568)
3. சென்னை - தாம்பரம் - செங்கற்பட்டு - திருக்கழுக்குன்றம் வழியாகச் செல்லும் தடம் (108 பி)

மாமல்லபுரம், தமிழகத்தில் உள்ள சுற்றுலா நகரங்களுள், மிகவும் சிறப்புடையதாகக் குறிப்பிடத்தக்க ஒன்று. இங்கு அமைந்துள்ள பல்லவர் காலத்துச் சிற்பங்கள், மிக்கபழமையும் பெருமையும் வாய்ந்தவை. விந்தைக்கு, சிந்தனைக்கினிய, அழகிய சிறந்த பல சிற்பங்கள் நிறைந்து, மாமல்லபுரம் மிக்கமாட்சிமையுற்றுத் திகழ்கின்றது. நாள்தோறும் நூற்றுக்கணக்கான எத்தனையோ பலப்பல வெளிநாட்டவர்களும் உள்நாட்டவர்களும், மாமல்லபுரத்திற்குச் சுற்றுலாப் போந்து கண்டு மகிழ்ந்து களிப்புற்றுச் செல்லுகின்றனர்.

### (2) மாமல்லபுரத்தின் மாட்சிமை

**(1) பெரிப்பிளசு:**

மாமல்லபுரம் ஒரு கடற்கரைத் துறைமுக நகரமாகச் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே புகழ்பெற்றிருந்தது. கிரேக்க மாலுமி ஒருவரால், கி.பி. முதல் நூற்றாண்டில் எழுதப்பெற்ற ''பெரிப்பிளசு'' என்னும் நூலில், காவிரியாற்றிற்கு வடக்கேயுள்ள துறைமுகங்களாகப் பாண்டிச்சேரியும் மாமல்லபுரமும் குறிப்பிடப் பெற்றிருக்கின்றன.

**(2) கிரேக்க, உரோம நாணயங்கள்:**

கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த தாலமி என்னும் ஒரு கிரேக்க நிலநூல் ஆசிரியர், மாமல்லபுரத்தினைத் தம்நூலில் குறிப்பிட்டுள்ளார். மாமல்லபுரத்தைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளில் கிடைத்துள்ள கிரேக்க, உரோம நாட்டு நாணயங்கள், கி.பி. 390இல் இருந்த தியோ

டோசியஸ் என்னும் உரோமானிய அரசனின் செப்புக்காசுகள் ஆகியவை மாமல்லபுரத்தில் அகப்பட்டிருக்கின்றன. இவைகள் மாமல்லபுரம் பண்டைக்காலத்தில் கிரேக்கர், உரோமர், சோனகர் முதலிய வெளிநாட்டு மக்கள் பலரும் அவ்வப்போது வந்து செல்லுகின்ற, ஒருபெரும் கடற்கரைத் துறைமுக வாணிபப் பெருநகரம் ஆக விளங்கியிருந்தமைக்குச் சான்று பகர்கின்றன.

''புலங்கொள் நிதிக் குவையோடு
புழைக் கைம்மா களிற்றினமும்,
நலங்கொள் நவமணிக் குவையும்
சுமந்து எங்கும் நான்று ஒசிந்து,
கலங்கள் இயங்கும் மல்லைக்
கடல்மல்லைத் தலசயனம்
வலங்கொள் மனத்தார் அவரை
வலங்கொள் என் மடநெஞ்சே!''''

எனவரும் திருமங்கையாழ்வார் பாசுரமும், மாமல்லபுரம் பண்டைக் காலத்தில் ஒரு பெருங் கடற்கரைத் துறைமுக வாணிப நகரமாக விளங்கியிருந்தமைக்குச் சான்று பகர்கின்றது.

(3) உவான்சுவாங் :

கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் தமிழகத்திற்கு வருகை தந்த சீன யாத்திரிகர் ஆகிய உவான்-சுவாங் என்பவர், பல்லவர்களின் தலைநகரம் ஆகிய காஞ்சிபுரம், கடற்கரைச் துறைமுகமாகிய மாமல்லபுரம் வரையில் விரிந்து பரவியிருந்தது என்று எழுதியுள்ளார்.

(4) பூதத்தாழ்வார்:

வைணவ சமய ஆழ்வார்கள் பன்னிருவரில் முதலாழ்வார்கள் என்னும் மூவருள் ஒருவர் ஆகிய பூதத்தாழ்வார், இந்தத் தலத்திலேயே திருஅவதாரம் செய்தார். அவர் காலம் ஏறத்தாழக் கி.பி. 575-650 எனக் கொள்ளுதல் கூடும். அவர்,

''தமர்உள்ளம், தஞ்சை, தலைஅரங்கம், தண்கால்
தமர்உள்ளும் தண்பொருப்புவேலை-தமர்உள்ளும்
மாமல்லை கோவல் மதிற்குடந்தை என்பரே,
ஏவல்ல எந்தைக்கு இடம்''

என்று, இயற்பா இரண்டாம் திருவந்தாதியில் பாடியிருப்பது, அறிந்து மகிழ்தற்குரியது. பூதத்தாழ்வாரைக் குறித்துக் திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்பவர் பாடிய,

''என்பிறவி தீர இறைஞ்சினேன்; இன்னமுதா
அன்பே தகளி அளித்தானை - நன்புகழ்சேர்
சீதத்தார் முத்துக்கள் சேரும் கடல்மல்லைப்
பூதத்தார் பொன்அம் கழல்''

என்னும் வெண்பாத் தனியனும், கடல்மல்லையைப் பற்றியும்,அதன்கண் பூதத்தாழ்வார் அவதாரம் செய்தமை பற்றியும், சுட்டியிருத்தல் காணலாம்.

(5) திருமங்கையாழ்வார்:

இரண்டாம் நந்திவர்மன் என்னும் பல்லவமல்லன் காலத்தில் (கி.பி. 730-795), உடன் வாழ்ந்திருந்த திருமங்கையாழ்வார், இந்தத் தலத்தினைக் ''கடல்மல்லைத் தலசயனம்'' (பெரிய திருமொழி 1088-1107) என்று குறிப்பிட்டுப் பாடி மங்களாசாசனம் செய்துள்ளார்.

(6) உருத்திரங்கண்ணனார்:

இனி, மாமல்லபுரத்தின் தொன்மையும் சிறப்பும் வேறு பிற நூல்களாலும் புலனாகின்றன. சங்ககாலத் தொகை நூலாகிய பத்துப்பாட்டு என்னும் தொகைநூலில், தொண்டைமான் இளந்திரையன்மீது (கி.பி.50-95), உருத்திரங்கண்ணனார் என்னும் சங்ககாலப் புலவர் பாடிய பெரும்பாணாற்றுப்படை என்னும் நூலில், மாமல்லபுரத்தைப் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது.

''விளையாட்டினை உடைய தோழியர் திரள்களோடு, நீர் உண்ணுகின்ற துறையிலே கூடி, நீராடுகின்ற மகளிர் போகட்டுச் சென்ற, பொன்னாற் செய்த மகரக் குழையினை, இரையைத் தேடுகின்ற நீலமணிபோலும் சிச்சிலிப் பறவை (மீன்கொத்திப் பறவை), தனக்கு இரையாக நினைத்து எடுத்துக் கொண்டு செல்கின்றது. அங்ஙனம் எடுத்துச்செல்லும் சிச்சிலிப் பறவை, மற்றும் பல பறவைகள் கூடி நிறைந்துள்ள பனைமரத்தின் தனித்த ஒரு மடலில் சென்று தங்காமல், அந்தணர்கள் யாகம் செய்து முடித்த வேள்விச் சாலையில் நடப்பெற்றுள்ள 'யூபம்' என்னும் வேள்வித் தூணின் மீது இருந்து, சோனகர்கள் கப்பலின் கூம்பின் மேல் ஏற்றிவைத்துள்ள கரிய அன்னப் பறவைகளின் வடிவிற்செய்த விளக்குப் போல, இரவுக் காலம் விடிவதற்குக் காரணமான வெள்ளி என்னும் சுக்கிர நட்சத்திரம் போல, ஒளி விட்டுக் கொண்டு தோன்றுகின்ற 'நீர்ப் பெயற்று' என்னும் ஊர்'' என்னும் கருத்து அமைய,

''வண்டல் ஆயமொடு உண்துறைத் தலைஇப்,
புனல்ஆடும் மகளிர் இட்ட பொலங்குழை
இரைதேர் மணிச்சிரல் இரைசெத்து எறிந்தென,
புள்ஆர் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது,
கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த
வேள்வித் தூணத்து அசைஇ, யவனர்
ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனின் பையயத் தோன்றும்
நீர்ப்பெயற்று எல்லைப் போகி..''

என்று பாடியுள்ள வரிகளில், பெரிதும் புகழ்ந்து கூறப்பட்டுள்ள ''நீர்ப்பெயற்று'' (நீர்ப் பாயற்று-நீர்ப்பாயலையுடையது; நீர்ப்பாயல்-சலசயனம் என்னும் கோயில்) என்பது, மாமல்லபுர மேயாகும் என்று, ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இதனால் மாமல்லபுரத்தின் பழமையும் பெருமையும் இனிது விளங்கும்.

(7) இராசராச சோழன்:

மாமல்லபுரத்துச் சிற்பங்களை, முதலாம் இராசராச சோழன் (கி.பி. 985-1014), வந்து கண்டு வியந்து மகிழ்ந்திருக்கின்றான். மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலில் சோழர் காலத்துக் கல்வெட்டுக்கள் சில, காணப்படுகின்றமையால், இவ்வுண்மை புலனாகின்றது. மேலும், இராசராச சோழனுக்குரிய 'சனநாதன்' என்னும் பெயரைத் தழுவி, ''சனநாதபுரம்'' என்றும் மாமல்லபுரம் வழங்கப்பெற்று வந்தது.

(8) நந்திக் கலம்பகம்:

தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்தி வர்மன் காலத்தில் (கி.பி.825-850) பாடப்பெற்ற ''நந்திக் கலம்பகம்'' என்னும் நூலில், மாமல்லபுரத்தின் மாட்சிமை பற்றிய குறிப்புக்கள் ஆங்காங்கே பல பாடல்களில் அமைந்து காணப்படுகின்றன.

''மல்லை வேந்தன், மயிலை காவலன்
பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி''

என்பன போன்ற வரிகளில், பல இடங்களில்* மாமல்லபுரம் பற்றிய குறிப்புக்கள் வந்திருத்தல், இற்றைக்கு 1200 ஆண்டுகளுக்கு முன்னரே, மாமல்லபுரம் எத்துணை அளவுக்குச் சிறந்தோங்கிச் செழித்திருந்தது என்பதனைப் புலப்படுத்தும்.

(9) சேக்கிழார்:

நமது தமிழகத்தில் மிகப்பெரிய வரலாற்று ஆசிரியரும், மாபெரும் கவிஞரும், ஒப்புயர்வற்ற தெய்விகப் பெருஞ் சான்றோரும், இரண்டாம் குலோத்துங்கச் சோழனின் காலத்தில் (கி.பி. 1132-1150) வாழ்ந்திருந்தவரும், ஆகிய சேக்கிழார் பெருமான் அவர்களும், இத்தலத்தின் சிறப்பினைப் பலகால் நேரிற் போந்து கண்டு வியந்து மகிழ்ந்திருக்கின்றார். அதனால் அவர் தாம் இயற்றிய பெரிய புராணத்தில், திருக்குறிப்புத் தொண்டநாயனார் வரலாற்றில், தொண்டைநாட்டின் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை முதலிய ஐந்திணை வளங்களைப் பாடிக்கொண்டு செல்லுங்கால், மலைகள் இருத்தலால் குறிஞ்சியும், கடற்கரை ஓரத்தில் இருத்தலால் நெய்தலும், காடுகள் சில சூழ்ந்திருத்தலால் முல்லையும், வயல்கள் பல இருத்தலால் மருதமும் ஆகிய பல்வேறு திணைவளங்களும் கலந்து அமைந்து, மாமல்லபுரம் நலம் சிறந்து திகழ்தலைப் புகழ்ந்து பாடியிருக்கின்றார்.

''கோடு கொண்டு எழும் திரைக்
கடற்பவளமென் கொழுந்து,
மாடு மொய்வரைச் சந்தனச்
சினைமிசை வளரும்;
நீடும் நெய்தலும் குறிஞ்சியும்
புணர்நிலம் பலவால்
ஆடும் நீள்கொடி மாடமா
மல்லையே அனைய''

என்னும் பாடல், சேக்கிழார் பெருமானால் மாமல்லபுரத்தின் மாட்சிமையை வியந்து மகிழ்ந்து புகழ்ந்து பாடப்பெற்றதாகும்.

''மாமல்லபுரத்திலுள்ள கடலானது, தன்னுடைய அலைகளால் சங்குகளைக் கொண்டு வந்து கரையில் எறிகின்றது. அத்தகைய கடலில் வளர்கின்ற பவளக்கொடிகள், அருகேயுள்ள மலைச் சாரல்களில் ஓங்கி வளர்ந்துள்ள, சந்தன மரத்தின் கிளைகளின்மீது படர்ந்து பரவிச் செழித்து வளர்கின்றன; இங்ஙனம் கடல்வளமும் மலைவளமும் ஒன்றோடு ஒன்று கலந்து பொருந்திச் செழித்தோங்குகின்ற சிறப்புமிக்க, மல்லை என்னும் மாமல்லபுரம் போன்ற நகரங்கள், தொண்டைநாட்டில் பலப்பல உள்ளன'' என்பது, மேற்குறித்த பெரிய புராணச் செய்யுளின் கருத்து ஆகும்.

இதன்கண், மாமல்லபுரம் மாடமாளிகைகள் நிறைந்து சிறந்து விளங்கியிருந்ததனாலும், அம் மாடமாளிகைகளின் உச்சியில், அந்நகரத்தின் பல்வேறு வெற்றிகளும் வளங்களும் புலப்படும்வண்ணம் நீளமான கொடிகள் கட்டப்பெற்றுக் காற்றில் அசைந்து அழகுற விளங்கியதனாலும், இந்நகரத்தினை ''ஆடும் நீள்கொடி மாடமாமல்லை'' என்று சேக்கிழார் பெருமான் புகழ்ந்து போற்றியிருக்கும் திறம், நினைந்துணர்ந்து மகிழற்பாலது.

## (3) மாமல்லபுரமும், பல்லவ மன்னர்களும்

மாமல்லபுரத்திற்கும், பல்லவ மன்னர்களுக்கும், மிக மிக நெருங்கிய தொடர்புண்டு. மாமல்லபுரம் பல்லவ மன்னர்களால் சிறப்புற்றது; பல்லவ மன்னர்கள் மாமல்லபுரத்தால் பெரும்புகழ் பெற்றனர். எனவே, பல்லவ மன்னர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களையும், ஓரளவேனும் இங்குநாம் உணர்ந்து கொள்ளுதல் மிகவும் இன்றியமையாததாகும்.

பல்லவர் காலம்:

பல்லவர் காலம், தமிழக வரலாற்றில் மிகவும் சிறப்பு வாய்ந்த நல்ல காலமாகும். தமிழகம் தமிழகமாக ஆக்கம் பெற்றுச் செழிப்புற்றுச் சிறந்த காலம், பல்லவர் காலம் எனலாம். சைவத் திருமுறைகளும், வைணவத் திவ்வியப் பிரபந்தங்களும், தமிழகத்தில் தோன்றிய காலம், பல்லவர் காலமே யாகும். அப்பரும் சம்பந்தரும் சுந்தரரும் அக்காலத்திலேயே வாழ்ந்திருந்து, சைவ சமயத்தினை வளர்த்தனர். நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகிய வைணவப் பெருஞ்சான்றோர்கள் தோன்றி வாழ்ந்து, திருமால் நெறியைச் செழித்தோங்கச் செய்த காலமும் பல்லவர் காலமேயாகும். இசை, நடனம், நாடகம், சிற்பம், ஓவியம், காவியம் முதலிய பல்வேறு கலைகளும் பல்லவர் காலத்தில் வளர்ந்து ஓங்கிச் செழித்துச் சிறப்புற்றன. குகைக்கோயில்களும் மலைக்கோயில்களும், கற்கோயில்களும் மிகுதியான அளவில் பல்லவர்கள் காலத்திலேயே தமிழகத்தின் பல பகுதிகளிலும் தோன்றுவன ஆயின.

இத்தகைய சிறப்புமிக்க பல்லவ மன்னர்கள், தமிழகத்தில் 300 முதல் கி.பி. 900 வரையில், ஏறத்தாழ 600 ஆண்டுகள் ஆண்டுவந்தனர். எனினும் 6-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், மூன்றாம் சிம்மவர்மனின் புதல்வர் ஆகிய சிம்மவிஷ்ணு (கி.பி. 575-600) என்பவர், காஞ்சிமாநகரைத் தலைநகராகக் கொண்டு அரியணை ஏறிய காலம் முதல்தான், பல்லவர்களின் வரலாறு தெளிவாகவும் திட்டவட்டமாகவும் தெரிகின்றது; சிறப்பாக அமைந்தது.

* செய்யுட்கள் 7-13-44-50-58-76-77-79-88-93 ஆகியவற்றைக் காண்க.

**ஐயடிகள் காடவர்கோன்:**

காஞ்சிமாநகரில் அரியணை ஏறிய சிம்ம விஷ்ணு பல்லவ மன்னரின் தந்தை, மூன்றாம் சிம்மவர்மர் (கி.பி.550-575). இவர்தான், பெரியபுராணம் கூறும் ஐயடிகள் காடவர் கோன் என்னும் நாயனார் ஆவர். 11ஆம் திரு முறையில் இவர் பாடிய ''திருத்தலக் கோவை'' வெண்பாக்கள், தொகுக்கப்பட்டுள்ளன. இவர் மிகச் சிறந்த சிவபக்தர்.

**சிம்ம விஷ்ணு:**

இவர்தம் புதல்வர் ஆகிய சிம்மவிஷ்ணு என்னும் பல்லவ மன்னர் (கி.பி.575-600), வீரத்தில் மட்டுமன்றி, தெய்வ பக்தியிலும் சிறந்துவிளங்கினார். "பக்தி ஆராதித விஷ்ணு" என்று உதயேந்திரப் பட்டயம் இவரைக் குறிப் பிடுகின்றது. மாமல்லபுரத்தில், சிம்மவிஷ்ணு வர்மர் தமது பக்தியின் அடையாளமாக, ஆதி வராகர் குகைக்கோயிலை அமைத்தார். அக் கோயிலின் உட்புறத்தில் ''ஸ்ரீசிம்மவிஷ்ணு போத்தாதி ராஜன்'' என்று பல்லவக் கிரந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளது. அக் கல்வெட்டின் நடுவில் சிம்மவிஷ்ணுவின் உருவ மும், அவருடைய இரு மனைவியரின் உருவங் களும் காணப்படுகின்றன.

**மகேந்திரவர்மன்:**

காஞ்சிபுரத்திற் பல்லவப் பேரரசிற்கு அடி கோலியவரும், களப்பிரர், மழவர், சோழர், பாண்டியர் என்னும் அரசர்களை அடக்கி வெற்றிகொண்டவரும் ஆகிய சிம்ம விஷ்ணு வின் புதல்வனே, மகேந்திர வர்ம பல்லவன் (கி.பி.600-635) ஆவான். வடமொழியிற் சிறந்த புலமை உடையவனும், இசைக் கலை யில் வல்லவனும், சிற்பம் ஓவியம் நடனம் முத லிய கலைகளில் பெரிதும் ஈடுபாடு வாய்ந்தவ னும், போர்த்திறன் மிக்கவனுமாக இம்மன்ன வன் விளங்கினான். இவனுக்குப் பகாப்பிடுகு, லளிதாங்குரன், சத்துருமல்லன், சேத்தகாரி; அவனிபாஜனன், குணபரன் முதலிய சிறப்புப் பெயர்கள் வழங்கின. முதலாம் மகேந்திரவர் மன் என்னும் இப்பல்லவ மன்னன், திருநாவுக் கரசரால் சமண சமயத்தினின்று நீங்கிச் சைவ னாக மாறினான். ''இலிங்கத்தை வழிபடும் குணபரன் என்னும் அரசன், புறச்சமயத்தி லிருந்து திரும்பி, அதன் வாயிலாகப் பெற்ற ஞானப் பேரொளியானது, இந்த இலிங்கத் தின் வாயிலாக, இவ்வுலகில் நெடுங்காலமாக நின்று நிலவுவதாக'' என்பது திருச்சிராப்பள் ளிக் கல்வெட்டு. மகேந்திரவர்ம பல்லவ மன்னன், சமணத்தினின்று நீங்கிச் சைவனாக மாறிய நிகழ்ச்சியினை,

''வீடறியாச் சமணர்மொழி
பொய்யென்று மெய்யுணர்ந்த
காடவனும் திருவதிகை
நகரின்கண் கண்ணுதற்குப்
பாடலிபுத் திரத்தில்அமண்
பள்ளியொடு பாழிகளும்
கூடஇடித் துக்கொணர்ந்து
குணபரஈச் சுரம்எடுத்தான்''

என்று பெரியபுராணம் கூறுதல் காணலாம். மகேந்திர வர்ம பல்லவ மன்னன், திருநாவுக் கரசரால் சைவனாக மாறிய நிகழ்ச்சி, நம் தமிழக வரலாற்றில் ஓர் ஒப்புயர்வற்ற பெருஞ் சிறப்புடைய நிகழ்ச்சியாகும். சீயமங்கலம், பல்லாவரம், வல்லம், தளவானூர், திருக்கழுக் குன்றம், திருச்சிராப்பள்ளி, திருமயம் என்னும் இடங்களில் முதலாம் மகேந்திரவர்மன், சிவ பெருமானுக்கு மலைகளை வெட்டிக் குடைந்து கோயில்கள் எடுப்பித்தான்.

மகேந்திர வர்மனுக்கு உரிய பல பட்டப் பெயர்களுள்,'மத்தவிலாசன்' என்பதும் ஒன்று. அவன் சமணனாக இருந்தபொழுது 'மத்த விலாசனப் பிரகசனம்' என்னும் நாடகநூல் ஒன்றினை வடமொழியில் இயற்றியுள்ளான். 'சித்திரகாரப்புலி' என்றும், மகேந்திரவர்ம னுக்கு ஒரு பெயர் உண்டு. இசைக் கலையிலும் நடனக்கலையிலும் மகேந்திரவர்மன் மிகுந்த தேர்ச்சியுற்றிருந்தான். புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள சித்தன்னவாசல் குகைக்கோயில் ஓவியங்களும், குடுமியான்மலை இசைக் கல் வெட்டும், இவனது கலைத் திறனைக் கவினுற விளக்குகின்றன. 'விசித்திரசித்தன்' என்னும் தன் பெயருக்கு ஏற்ப, அவன் பலவேறு கலைத் துறைகளிலும் மிகச் சிறந்த தேர்ச்சி பெற்றிருந் தான் என்பது நினைந்து போற்றுதற்குரியது.

தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள மண்டகப்பட்டு என்னும் இடத்தில், முதன் முதலாக இவன் சிவபிரான், பிரமதேவன், திருமால் என்னும் மும்மூர்த்திகளுக்கும் குகைக் கோயில் அமைத்தான். மாமல்லபுரத்திலுள்ள தருமராசர் மண்டபமும், கொடிக்கால் மண்ட பமும், இவனால் அமைக்கப்பெற்றன.

மகேந்திரவாடி, மாமண்டூர், தளவானூர் முதலிய இடங்களில் மிகப் பெரிய ஏரிகளை அமைத்து வேளாண்மையைப் பெருக்கினான். வடார்க்காடு, தென்னார்க்காடு, செங்கல்பட்டு, தஞ்சை, திருச்சிராப்பள்ளி ஊன்னும் மாவட் டங்கள், இவனது ஆட்சியின்கீழ் இருந்தன. திரு நாவுக்கரசரின் காலத்தில் வாழ்ந்திருந்து அவரால் ஆட்கொள்ளப்பெற்று அருட்டிறம் பெற்றவன்.

ஆதிவராகர் கோயிலில் சிம்மவிஷ்ணுவின் சிற்பத்திற்கு நேர்எதிரே, அவர்தம் மகன் ஆகிய மகேந்திரனின் உருவமும், அவனுடைய அரசி யர்களின் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. ''ஸ்ரீமகேந்திர போத்தாதி ராஜன்'' என்று பல் லவக் கிரந்த எழுத்துக்களில் பொறிக்கப்பட் டுள்ளது. சிம்மவிஷ்ணு பல்லவர், சீயமங்கலத் திலும், குகைக்கோயில் ஒன்றைச் சமைத்துள் ளார். கிராதார்ச்சுனீயம் என்னும் காவியத்தை இயற்றிய மகாகவி யாகிய பாரவி என்பவர், சிறிதுகாலம் சிம்மவிஷ்ணுவின் அவைக்களத்தில் இருந்தார் என்று, அவனிசுந்தரி கதை என்னும் நூல் கூறுகின்றது.

**முதலாம் நரசிம்மவர்மன்:**

முதலாம் மகேந்திர வர்மன்ன் மைந்த னாகிய நரசிம்ம வர்மன், கி.பி. 630ல் காஞ்சி மாநகரில் அரியணை ஏறி, கி.பி. 668 வரையில் அரசாட்சி புரிந்தான். இவனது படைத்தலைவ ராக விளங்கியவரே, பரஞ்சோதியார் என்னும் சிறுத்தொண்ட நாயனார் ஆவர். கி.பி. 642ஆம் ஆண்டில் இவ்வரசனின் சார்பில், படைத்தலை வராகிய பரஞ்சோதியார், மேலைச் சாளுக்கிய

நாட்டின்மீது படையெடுத்துச் சென்று, வாதாபியை வென்று கைப்பற்றினார். அதனால் இவ்வரசனுக்கு ''வாதாபி கொண்ட போத்தரையன்'' என்னும் சிறப்புப் பெயர் ஏற்படுவதாயிற்று. பரஞ்சோதியார் என்னும் சிறுத்தொண்ட நாயனார், நரசிம்மனின் சார்பில் பம்பாய்க்கு அருகில் உள்ள வாதாபி நகரம் சென்று, இரண்டாம் புலிகேசி என்னும்மேலைச் சாளுக்கிய மன்னனைக் கி.பி. 642ஆம் ஆண்டில் வெற்றி பெற்ற செய்தி,

''மன்னவற்குத் தண்டுபோய்
வடபுலத்து வாதாவித்
தொன்னகரம் துகளாகத்
துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும்
பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தே
இகலரசன் முன்கொணர்ந்தார்''

என்று பெரியபுராணத்துள், சேக்கிழார் பெருமானால் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

முதலாம் நரசிம்ம வர்மன், தனக்குரிய பட்டப்பெயர்களில் ஒன்றாகச் சிறந்த போர் வீரன் என்னும் கருத்தில் ''மாமல்லன்'' என்னும் பட்டப்பெயரைச் சூட்டிக் கொண்டான். வாதாபி நகரில் இருந்து கிடைத்துள்ள சிதைந்த கல்வெட்டு ஒன்று, நரசிம்மவர்மனுக்கு ''மாமல்லன்'' என்ற பட்டப்பெயர் இருந்ததனைக் கூறுகின்றது. மாமல்லனாகிய நரசிம்மவர்மனால், பலவகைகளில் சிறப்பும் பொலிவும் திருத்தமும் செய்யப்பெற்று விளங்கியதனால், கடல்மல்லை என்று விளங்கியிருந்த பண்டைய நகரம் ,மாமல்லபுரம் என்னும் புதிய சிறப்புப் பெயரைப் பெறுவதாயிற்று.

மாமல்லபுரத்தில் உள்ள மகிஷாசுர மண்டபமும், வராக மண்டபமும், திரிமூர்த்தி மண்டபமும், மாமல்லன் அமைத்த குகைக்கோயில்களே யாகும். இம்மண்டபத் தூண்களில்காணப்படும் வேலைப்பாடுகள், வாதாபியிலுள்ள தூண்களுள் காணப்படும் வேலைப்பாடுகளை ஒத்திருக்கின்றன. வராக அவதாரம் ,வாமன அவதாரம் ஆகிய இரண்டும், வாதாபிக் குகைக் கோயிற் சுவர்களிலும், மாமல்லபுரம் குகைக் கோயிற் சுவர்களிலும் ஒருங்கொத்துக் காணப்படுகின்றன. கஜலட்சுமி, அனந்தசயனர், மகிஷாசுரவதம் முதலிய சிற்பங்கள் இரண்டிடங்களிலும் திறம்படச் செதுக்கப்பட்டிருக்கின்றன.

மாமல்லன் என்னும் முதலாம் நரசிம்ம வர்மன் (கி.பி.630-668), மாமல்லபுரத்தில் தனிப்பெரும் கற்களை அழகிய கோயில்களாகச் சிறப்புற வடித்து அமைத்தான். இக்கோயில்களை இக்காலத்து மக்கள் ''பாண்டவர்களின் தேர்கள்'' என்று கூறுகின்றனர். இந்த ஐந்து ஒற்றைக்கல் கோவில்களும், ஒரே வரிசையில் இருக்கின்றன. இவ் வைந்து தேர்களில் ஒன்றான தருமராசர் தேர், சிவபிரான் கோயிலாக அமைக்கப்பெற்றது. பீமசேனர்தேர், பௌத்த சைத்தியங்களை ஒத்திருக்கின்றது. அருச்சுனன் தேர், தருமராசர் தேரைப்போலவே சிவன் கோயிலாகும். அதற்கு அருகில் இருக்கும் திரௌபதியின் தேர், கிராம தேவைதகளின் கோயிலை ஒத்துள்ளது. சகாதேவன் தேர், பீமசேனன் தேரைப்போலவே பௌத்த சைத்தியத்தைப் போன்று காணப்படுகின்றது.

முதலாம் நரசிம்மவர்மன் என்னும் இம்மன்னவன், தனிக் கற்களைக் கோயில்களாகச் செதுக்கியது போலவே, பாறைகள்மீது புராண கதைகளை அழகிய புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கி மிகவும் அற்புதமாக அமைத்திருக்கின்றான். கண்ணபிரான் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடிக்கும் சிற்பமும், அர்ச்சுனன் தவம் (பகீரதன் தவம்) என்று அழைக்கப்படும் சிற்பமும் பிறவும் ,பெரிதும் வியந்து பாராட்டுதற் குரியன. மாமல்லபுரம் நிலைபெற்றுள்ள வரையில், நரசிம்மவர்மன் என்னும் மாமல்ல மன்னனின் மாண்பும் புகழும், என்றும் அழியாது நிலைபெற்றிருக்கும் என்பது திண்ணம்.

**முதலாம் பரமேசுவரவர்மன்:**

முதலாம் பரமேசுவரவர்மன் (கி.பி.670-685), இரண்டாம் புலிகேசி என்னும் மேலைச் சாளுக்கிய மன்னனின் மகனான விக்கிரமாதித்தன் என்பவனைப் பெருவளநல்லூர்ப் போரில் வெற்றி வாகைசூடினான். கூன்பாண்டியன் என்னும் நின்றசீர் நெடுமாறர் (அரிகேசரி பராங்குச மாறவர்மன்), நெல்வேலிப்போரில் வெற்றிகொண்டதும், இவ்விக்கிரமாதித்த சாளுக்கிய மன்னனையேயாகும். அதனாலேயே, ''நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறர்'' என்று அவர் பெயர்பெற்றார். நின்றசீர் நெடுமாறர் என்னும் நாயனாரின்சமகாலத்தவனான முதலாம் பரமேசுவர வர்மன், மிகவும் சிறந்த சிவபக்தன். உருத்திராக்கமணி கொண்டு சிவலிங்க வடிவமாகச் செய்யப்பெற்றமுடியினையே இவ்வரசன் அணிந்திருந்தான். காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள கூரம் என்னும் ஊரில், இவன் எடுப்பித்த ''வித்தியா விநீத பல்லவ பரமேசுவரக் கிருகம்'' என்னும் கோயிலே, தமிழகத்தின் முதற்பெரும் கருங்கற் கோயில் ஆகும் எனக் கருதப்படுகின்றது.

மாமல்லபுரத்தில் ஒற்றைக் கல்லில், தற்போது கணேசர் கோயில் என்று கூறப்படும் சிவபிரான் கோயிலை, இப் பரமேசுவரவர்மனே அமைத்தான். தருமராசர் தேரின் மூன்றாவது அடுக்கை முடித்து, அதில் தான் பூண்டுகொண்ட 'இரணசயன்' என்னும் பட்டப்பெயரைப் பொறித்துள்ளான். இக் கணேசர் கோயிலில், வடமொழிப் பாக்கள் பதினொன்று கல்வெட்டாகச் செதுக்கப்பெற்றுள்ளன. அவைகள் பரமேசுவரவர்மனுக்கும் சிவபெருமானுக்கும் ஒருசேரப் பொருந்தும் முறையில், அழகிய சிலேடையாக அமைந்துள்ளது. அதனால், இவ்வரசன் வடமொழியிலும் நல்லபுலமை பெற்றிருந்தான் என்று தெரிகின்றது.

**இராச சிம்மன்:**

இவன் முதலாம் பரமேசுவர வர்மனின் புதல்வன் (கி.பி. 685-705). இவனை இரண்டாம் நரசிம்மவர்மன் என்றும் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுவர். காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலையும், மாமல்லபுரத்திலுள்ள

கடற்கரைக் கோயிலையும் கட்டுவித்தவன் இவ்வரசனே யாவான். இவ்வரசனுடைய காலத்திலேயே பூசலார் என்னும் நாயனார், சென்னைக்கு அருகில் உள்ள திருநின்றவூர் (தின்னனூர்) என்னும் இடத்தில் வாழ்ந்திருந்து மனக்கோயில் கட்டினார் என்று, பெரியபுராணம் கூறுகின்றது. கயிலாசநாதர் கோயில் கல்வெட்டுக்கள், இராசசிம்மனை 'ஆகமப்பிரியன்' 'சங்கரபக்தன்' 'சிவசூடாமணி' 'வாத்ய வித்யாதரன்' 'இரணசயன்' என்று சிறப்பிக்கின்றன. இவனது அவைக்களத்தில் தண்டி என்னும் வடமொழிப் புலவர் விளங்கியிருந்தார். தண்டியலங்காரம் என்னும் தமிழ்நூலுக்கு மூலநூல் ஆன காவியாதர்சம் என்னும் நூலும், அவந்தி சுந்தரி கதை என்னும் நூலும், இவரால் இயற்றப்பெற்றன. வடமொழி நாடக ஆசிரியரான பாசர் என்பவரின் நாடகங்கள், இவ்வரசனது அவையில் நடிப்பதற்கு ஏற்றமுறையில் சுருக்கி வரையப்பட்டன.

இவ்வரசனே காஞ்சியிலுள்ள புகழ்மிக்க கயிலாசநாதர் கோயிலையும், ஐராவதஈசர் கோயிலையும், விழுப்புரத்திற்கு அருகிலுள்ள பனைமலைக் கோயிலையும் கட்டினான். மாமல்லபுரத்தில் கடற்கரையில் உள்ள கோயில் இவன் கட்டியதேயாகும். முதலாம் இராசராச சோழன் இக்கோயிலைப் பார்வையிட்டு வியந்தான். இக்கோயிலில் இராசராச சோழனன் கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் ''மாமல்லபுரத்தில் கடற்கரையோரம் மூன்று கோயில்கள் இருக்கின்றன. அவைகள் முறையே 'க்ஷத்திரிய சிகாமணி பல்லவேச்சுவரம், இராசசிம்ம பல்லவேச்சுரம், பள்ளிகொண்டருளிய தேவர் கோயில்' என்பன'' என்று காணப்படுகின்றது.

அதனால் இராசசிம்மன் மாமல்லபுரம் கடற்கரையில் மூன்று கோயில்கள் கட்டினான் என்று தெரிகின்றது. ஆனால் மற்றைய இரண்டு கோயில்களும் கடல்வெள்ளத்தில் ஆழ்ந்து அழிந்து விட்டிருக்கின்றன. அக்கோயில்களைக் குறிக்க, இரண்டு பலிபீடங்களும், ஒரு கல் கொடிமரமும் இன்றும் இருக்கின்றன. கடலை நோக்கியபடி சிவலிங்கம் ஒன்று இருக்கின்றது. அது க்ஷத்திரிய சிகாமணி பல்லவேச்சுவரத்தில் இருந்ததால், இரண்டாம் கோவிலும் சிவன்கோயிலேயாகும். இப்பொழுது பலிபீடம் மட்டும்தான் காணப்படுகின்றது.

இப்பொழுது எஞ்சி இருப்பது இராசசிம்மன் கட்டிய மூன்றாவது கோயிலேயாகும். அதுவே திருமங்கையாழ்வாரது பாடல்பெற்ற 'சலசயனம்' ஆகும். 'சலசயனப் பெருமாள்' என்பதற்கு 'நீர் அருகில் பள்ளிகொண்டுள்ள பெருமாள்' என்பது பொருள். இதுபோன்று பள்ளிகொண்ட பெருமாள் கோயில் ஒன்று, கடற்கரைக்குச் சிறிது தொலைவில் ஊருக்கு நடுவில் தரையில் அமைந்துள்ளது. அக்கோயில் 'தலசயனம்' எனப்படும். இக்கோயிலையும் திருமங்கையாழ்வார் பாடியுள்ளார். இக்கோயில் பிற்காலத்தில் விசயநகர அரசர்களால் புதுப்பித்துத் திருப்பணி செய்யப்பெற்றுள்ளது. அஃது இப்பொழுது தமிழ்நாடு அறநிலைய ஆட்சித்துறையின் மேற்பார்வையில் இருந்து வருகின்றது.

கடற்கரையில் இப்பொழுதுள்ள கோயில், ஆறு அடுக்குக் கும்ப(விமான)த்தை உடையது. உள்ளறை ஒன்று மட்டுமே கொண்டது. அவ்வுள்ளறையைச் சுற்றி, திருச்சுற்று (பிராகாரம்) அமைந்திருக்கிறது. அதில் ஒன்பது சிறிய கோயில்கள் இருக்கின்றன.

கடற்கரை ஓரமாகவே சென்றால், ஒரு கல் தொலைவில் உள்ள முகுந்த நாயனார் கோயிலும், இராச சிம்மன் கட்டியதேயாகும். இஃது அருச்சுனன் தேரைப் போலச் சிறியதாக அமைக்கப்பட்டுள்ளது.

வராக மண்டபக்குன்றின் மீதுள்ள ''உலகக்கண்ஈசுவரர்'' கோயிலும் இராசசிம்மன் காலத்ததே யாகும்.

மாமல்லபுரத்திற்கு வடக்கே மூன்று கல் தொலைவில், சாளுவன்குப்பம் என்னுமிடத்தில் உள்ள புலிக்குகை, அதிரண சண்டன் மண்டபம், என்னும் இரண்டும்கூட, இராசசிம்மன் காலத்தைச் சேர்ந்தனவேயாகும். புலிக்குகையில் ஒன்பது புலிகள் வாயைத் திறந்த வண்ணம் ,குகையின் முகப்பில் செதுக்கப்பெற்றுள்ளன. இக் குகையில் கொற்றவை (துர்க்கை) யின் சிலை, வைக்கப்பெற்றிருந்திருக்கலாம்.

## (4) மாமல்லபுரச் சிற்பங்கள்

பல்லவர் காலத்தில் கட்டிடக்கலையும், சிற்பக்கலையும் கவினுற ஓங்கிச் செழித்தன. மகேந்திரவர்மபல்லவன்(கி.பி.600-630)காலத்திற்கு முன்னர்த் தமிழகத்தில் கற்கோயில்கள் இருக்கவில்லை. அதற்கு முன்பு இருந்த கோயில்கள், செங்கல் - சுண்ணாம்பு-மரம் -உலோகம் இவற்றாலேயே ஆனவை. மகேந்திர வர்ம பல்லவன் காலத்தில்தான், குடைவரைக் குகைக் கோயில்கள் ஏற்படத் தொடங்கின.

மகேந்திரவாடி, பல்லாவரம், மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம், வல்லம், மாமண்டூர், தளவானூர், மண்டகப்பட்டு, மேலைச் சேரி, திருச்சிராப்பள்ளி, குன்றாண்டார்கோயில், குடுமியான்மலை, நார்த்தாமலை, சித்தன்னவாசல் முதலிய இடங்களில் குடைவரைக் கோயில்கள் ஏற்பட்டன. மாமல்லபுரத்தில் இங்ஙனம் குடைவரைக் கோயில்கள் பல அமைக்கப்பெற்றுள்ளன. மாமல்லபுரம் குகைக் கோயில்களைப் பற்றி இங்கு ஒரு சிறிது காண்போம்.

மும்மூர்த்தி குகை:

மாமல்லபுரம் ஊரின் வடபுறத்தே இருப்பது, மும்மூர்த்தி குகை என்ற குடைவரைக் கோயிலாகும். பாறையின் வெளிப் புறத்திலேயே மூன்று கருவறைகள் குடைந்து அமைக்கப்பட்டிருக்கின்றன. மூன்று கருவறைகளும் வரிசையாக உள்ளன. வடபுறத்து முதலில் உள்ள அறையில் முருகனும், நடுவறையில் சிவபிரானும்,மூன்றாவது அறையில் திருமாலும் எழுந்தருளியுள்ளனர். இவைகளைத் தவிரத் தென்புறத்தே பாறையின் வெளிப்பக்கத்திலேயே கொற்றவை (துர்க்கை), கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்ற தேவியாக,

நான்கு கைகளுடன் காட்சியளிக்கின்றாள். இரண்டு கைகளில் சக்கரமும் சங்கும் ஏந்தியிருக்கின்றாள். ஒரு கை அபயமுத்திரையில் உள்ளது. மற்றொரு கை தொடையின்மீது படிந்திருக்கின்றது. இக் குகையின் வெளியே ஒவ்வோர் அறையின்மேலும், விமானம் போன்ற அமைப்பு அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றது. முருகன் அறையின் முன்படிக் கட்டில், ''மல்லன்'' என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. முருகன் சிவன் திருமால் என்னும் மூன்று மூர்த்திகளுக்கு அமைக்கப்பட்டிருப்பதனால், இது ''மும்மூர்த்தி குகை'' என்று வழங்கி வருகின்றது.

**2. கோடிக்கல் மண்டபம்:**

மும்மூர்த்தி குகையிலிருந்து, பாறைகளின் இடையே கிழக்கு நோக்கிச் செல்லும் வழியில் உள்ள பாறையின் பகுதியில், ஒரு யானைச் சிற்பத்தைக் காணலாம். அதன் அடியில் குட்டி யானை ஒன்று, துதிக்கையை நீட்டிக் கொண்டு படுத்திருக்கும் காட்சி, மிகவும் அழகானது. அதன்மேல் ஒரு குரங்கு அமர்ந்துள்ளது. அதன் அருகில் ஒரு மயில், நீண்ட தோகையுடன் அழகாகச் செதுக்கப்பட்டிருக்கின்றது.

மும்மூர்த்தி குகையிலிருந்து மேற்கு நோக்கிச் சிறிதுதூரம் சென்றால், தென்புறத்தில் உள்ள பாறையில், ஒரு குகைக் கோயில் குடைந்து அமைக்கப்பட்டிருக்கின்றது. இதைக் கோடிக்கல் அல்லது கொடிக்கால் மண்டபம் என்று அழைப்பர். நீண்ட சதுரமான அமைப்புடைய இக்கோயில், கொற்றவைக்கு உரியது. கருவறை வாயிலின் இரு மருங்கிலும் ,காவற்பெண்கள் நிற்கின்றனர். மண்டபத்தின் முன்புறத்தைச் சதுர அமைப்புள்ள தூண்கள் தாங்குகின்றன. இதில் இராசசிம்மனுக்குரிய ''வாமாங்குசன்'' என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

**3. தருமராசர் மண்டபம் :**

அர்ச்சுனன் தவச்சிற்பத்திலிருந்து தெற்கு நோக்கிச் சிறிது தொலைவில் சென்றால், கிழக்கு நோக்கிய குகை ஒன்று உள்ளது. இது தருமராசர் மண்டபம் என்று வழங்குகின்றது. இதனை ''அத்யந்த காம பல்லவேச்சுர கிருகம்'' என்று கல்வெட்டு அறிவிக்கின்றது. இக்கோயிலின் பின்புறச் சுவரில், மூன்று கருவறைகள் வரிசையாக உள்ளன. இதன் வெளி அங்கணத்தில் தென்புறச் சுவரில், ''இதனை இரண ஜெயன் என்னும் அத்யந்த காமன் அமைத்தான்'' என்ற கல்வெட்டு உள்ளது. இம் மூன்று கருவறைகளிலும், தெய்வத் திருவுருவங்கள் எதுவும் இப்போது இல்லை. இக்கோயிலைப் பிற்காலத்தில் வைணவர்கள் பயன்படுத்தினர் என்பதற்கு அடையாளமாக, சங்கு சக்கரங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

**4. இராமாநுச மண்டபம்:**

மகிஷாசுரமர்த்தினி குகையிலிருந்து, கலங்கரை விளக்கு இருக்கும் திசைநோக்கி, ஒரு சிறிய வழி செல்கிறது. அதில் சென்றால் இராமாநுச மண்டபத்தை அடையலாம். இங்குள்ள கருவறைகளும், சிற்பங்களும் அறவே சிதைக்கப்பட்டிருக்கின்றன. இம்மண்டபத்தைப் பிற்காலத்தில் வழிபாட்டுக்கு எடுத்துக்கொண்டவர்கள், இம் மண்டபத்தைப் பெரிதாக்க முனைந்திருக்கின்றனர். ஆனால் இம்மண்டபத்தின் கருவறைகளும், சிற்பங்களும் அவர்களால் சிதைத்து அழிக்கப்பட்டுவிட்டிருக்கின்றன.

**5. வராக மண்டபம்:**

அர்ச்சுனன் தவக்காட்சி நிலைச் சிற்பத்திலிருந்து, கணேச இரதத்திற்குச் செல்லும் வழியில் சென்றால், வராக மண்டபத்தை அடையலாம். இங்கு வராகப் பெருமாளின் சிற்பம் அழகுற அமைந்துள்ளது. கருவறையில் நான்கு சுவர்ப்பகுதிகள் உள்ளன. வடபுறச் சுவரில் வராக மூர்த்தி, கீழ்ச்சுவரில் திருமகள், கொற்றவை, திரிவிக்கிரமர் ஆகியோரின் திருவுருவங்கள் உள்ளன. இம்மண்டபத்தின் வாயிலைத் துவார பாலகர்கள் இருவர் அணிசெய்கின்றனர். தூண்களின் அடிப்பகுதியில், அமர்ந்த நிலையல் சிங்கங்கள் உள்ளன.

**6. ஆதிவராக மண்டபம்:**

மகிஷாசுரமர்த்தினி குகையில் இருந்து தென்மேற்கில், ஆதிவராகர் குகைக்கோயில் உள்ளது. இக்கோயிலில் இப்போது வழிபாடு நடைபெற்று வருகின்றது. இதன் முன்புறத்தில் பிற்காலத்தில் மண்டபங்கள் எழுப்பப்பட்டுள்ளன. குகை மேற்குப்புறம் பார்த்தது. நடுவில் உள்ள கருவறையில் ஆதிவராகமூர்த்தி உள்ளார். கல்வெட்டுக்களில் இக்கோயில் ''பரமேச்சுர மகாவராக விஷ்ணு கிருகம்'' என்ற பெயர் குறிக்கப்பெற்றுள்ளது. திருமாலின் பத்து அவதாரங்களைக் குறிக்கும் கல்வெட்டு ஒன்று, இங்கு உள்ளது. அதில் புத்தர்பிரானும் திருமாலின் பத்து அவதாரங்களில் ஒருவராகக் குறிக்கப்பட்டுள்ளார். இதனால் கி. பி. 8-ஆம் நூற்றாண்டிலேயே புத்தர், திருமாலின் அவதாரமாகக் கருதப்பெற்றமை தெரிகின்றது.

இக்கோயிலின் வடபுறச் சுவரில் சிவபெருமான், கங்காதர மூர்த்தியாகக் காட்சியளிக்கின்றார். இதனையடுத்து மகேந்திரவர்ம பல்லவனின் தந்தையாகிய சிம்மவிஷ்ணுவின் திருவுருவச்சிலை உள்ளது. அவர் உயர்ந்த அரியணையில் அமர்ந்துள்ளார். இடது கை தொடைமீது உள்ளது. வலக்கரம் சிம்மகர்ணமுத்திரையில் விளங்குகின்றது. பொன்முடி தரித்துப் பெருங்காதணிகளுடன் விளங்குகின்றார். இவர்தம் இருமருங்கிலும் மனைவியர் இருவர்நிற்கின்றனர். முகப்பின் மேலே 'சிம்மவிஷ்ணு போத்தராதி ராஜன்' என்று, பல்லவ கிரந்த எழுத்துக்களில் காணப்படுகின்றது.

இங்குள்ள கஜலட்சுமியின் சிற்பமும், ஐந்துதலை நாகராசர் திருவுருவமும், சங்கு சக்கரம் ஏந்திய திருமாலின் சிற்பமும், ஆதிவராகமூர்த்தி நிலமகளைத் தாங்கி நிற்கும் சிற்பமும், அழகுறத் திகழ்கின்றன. மற்றும் வாயில்காவலன் சிலை, சங்கரநாராயணர் சிற்பம் ஆகியவையும், அழகுற அமைந்துள்ளன. அடுத்துள்ள கீழைச் சுவரில் கொற்றவையின் உருவம் எட்டுக் கரங்களுடன் திகழ்கின்றது. இவ் எட்டுக் கைகளிலும் முறையே, சக்கரம்

கத்தி மணி கபாலம் சங்கு கேடயம் வில் கிளி ஆகியவை காணப்படுகின்றன. கொற்றவை, எருமைத் தலையின்மீது நிற்கின்றாள். காலடியின் இருபுறமும் வீரர் இருவர் வழிபட்டு நிற்கின்றனர். அப்பால் காவற் பெண்கள் காணப்படுகின்றனர்.

அடுத்துள்ள தென்புறச் சுவரில் மகேந்திர வர்மனின் சிற்பம் காணப்படுகின்றது. அவனது இடப்புறத்தில் தேவியர் இருவர் உள்ளனர். மகேந்திரவர்ம பல்லவன், மிகவும் கம்பீரமாகவும், அழகாகவும் காட்சி தருகின்றான். ''மகேந்திர போத்தராதிராஜன்'' என்று இங்குக் கல்லில் வெட்டப்பெற்றுள்ளது.

**7. மகிஷாசுரமர்த்தினி குகை:**

இக்குகைக் கோயில், கலங்கரை விளக்கத்திற்குப் போகும் வழியில் இருக்கின்றது. மண்டபம் போன்ற அமைப்புடைய இக்குகையின் இருபக்கச் சுவர்களிலும், தமிழகத்தின் சிறந்த கலைப் படைப்புகளாகிய சிற்பங்கள் அழகுற அமைந்து திகழ்கின்றன. பின்புறச் சுவரில் மூன்று கருவறைகள் குடையப்பட்டுள்ளன. நடுவில் உள்ள கருவறையின் முன்னர், மண்டபம் போன்ற ஓர் அமைப்பு குடையப்பட்டுள்ளது. இரண்டு சிங்கத் தூண்கள் தாங்குகின்ற மேடை போல இப்பகுதி அமைந்துள்ளது. நடுவிலுள்ள கருவறையின் பின்புறச் சுவரில் 'சோமாஸ்கந்தர்' திருவுருவம் அணிசெய்கின்றது. அதன் இருமருங்கிலும் திருமாலும் திசைமுகனும், சிவபிரானைப் போற்றி வழிபடும் நிலையில் உள்ளனர். சிவபிரான் முன்னிலையில் இடபவாகனம் படுத்த நிலையில் உள்ளது. அம்மையும் அப்பனும், தங்களுடைய இடக் கால்களை, அதன் மீது ஊன்றியிருக்கின்றனர்.

இங்கு அமைந்துள்ள மகிஷாசுரமர்த்தினியின் திருவுருவம், மிகவும் அழகாக விளங்குகின்றது. அம்பிகை மகிஷன் என்னும் அசுரனை எதிர்த்துப் போர்புரிகின்றாள். மாமல்லையில் உள்ள சிற்பங்களில், இதுவே தலைசிறந்தது; பேரழகு வாய்ந்தது. தமிழகத்துச் சிற்பிகள் தோற்றுவித்துள்ள சிற்பங்களில் இஃது ஒப்புயர் வற்றது என்று, அருங்கலையறிஞர்கள் ஒருங்கே வியந்து கூறுகின்றனர்.

இங்குள்ள அரங்கநாதர் திருவுருவச் சிற்பம், மிகவும் வியந்து போற்றுதற்கு உரியது. அவர் மது, கைடபன் என்னும் அசுரர்கள் இருவரை அடக்கி வென்ற நிகழ்ச்சி, இச்சிற்பத்தால் விளக்கப்படுகின்றது. மார்க்கண்டேயரும், நிலமகளும், அரங்க நாதனைப் பணிந்து நிற்கின்றனர். சக்கரத்தாழ்வார் மனித உருவில் திகழ்கின்றார்.

இக் குகையையும் பிற்காலத்தில் வைணவர்கள் பயன்படுத்தினர். இதற்கு அறிகுறியாக இங்கும் சங்கு சக்கரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

**8. பஞ்சபாண்டவர் மண்டபம்:**

அர்ச்சுனன் தவக்காட்சி என்ற புகழ் வாய்ந்த பாறைச் சிற்பத்தை அடுத்துள்ள, குடைவரைக் கோயிலைப் பஞ்சபாண்டவர் மண்டபம் என்று வழங்குகின்றனர். என்னும், பஞ்சபாண்டவர்க்கும், இதற்கும் யாதொரு தொடர்பும் இல்லை. மாமல்லபுரத்தில் உள்ள குகைக்கோயில்களில், மிகப்பெரிய அமைப்பை உடையது இதுவே. இதன் நடுவில் கருவறை அமைந்துள்ளது. கருவறையைச் சுற்றிவர இரண்டு அங்கணங்களை உடைய திருச்சுற்று ஒன்றை, மிகவும் விசாலமாக அமைக்கத் திட்டமிட்டுள்ளனர். ஆனால் பாதி அளவிலேயே பணி நின்று போயிருக்கின்றது.

**9. கோனேரி மண்டபம்:**

மாமல்லபுரத்துப் பாறைகளின் மேற்குப் புறத்தில் கோனேரிப் பள்ளம் என்ற சிறு ஏரி உள்ளது. இதனைக் கல்வெட்டு,கோனேரிஎன்று குறிப்பிடுகின்றது. இதற்கு எதிரில் குன்றின் மேற்புறத்தில், இரண்டு குகைகள் அடுத்தடுத்துக் குடைவிக்கப்பட்டுள்ளன. ஒன்று தொடக்கத்திலேயே நின்றுவிட்டது. மற்றையது பெரும்பாலும் முடிவடைந்துள்ளது. இவற்றில் தென்புறம் உள்ள முடிவடைந்த குகையையே, ''கோனேரி மண்டபம்'' என்று கூறுகின்றனர். இதன் பின்புறத்தில் ஐந்து கருவறைகள் உள்ளன. ஒவ்வொன்றின் வாயிலையும், இரண்டு வாயிற் காவலர்கள் அணிசெய்கின்றனர். எனினும் இவற்றில் சில சிதைக்கப்பட்டுள்ளன. இக்கருவறைகளில் திருவுருவங்கள் எதுவும் நிறுவப்பட்டிருக்கவில்லை.

**10. புலிப்புதர் மண்டபம்:**

கோனேரி மண்டபத்திற்கு அருகில், முற்றுப்பெறாமல் நிற்கும் குகை 'புலிப்புதர் மண்டபம்' எனப்படுகின்றது. நான்கு கருவறைகள் உள்ளன. ஐந்தாம் கருவறை பாதியளவில் நின்றுள்ளது.

**11. மகிஷாசுரன் குகை:**

மாமல்லபுரத்தில் சில குகைக்கோயில்களும், மண்டபங்களும் முற்றுப்பெறாமல், தொடக்க நிலையிலேயே விடப்பெற்றிருக்கின்றன. கடற்கரைக் கோயிலின் வடக்குப் புறத்தில், அலைவாயில் ஒரு பாறை இருக்கின்றது. இதன்மீது கடல் அலைகள் எப்பொழுதும் மோதிக்கொண்டே இருக்கும். இப்பாறையின் கிழக்குப்புறத்தில் சிறிது உயரத்தில் ஒரு குகை குடைவிக்கப்பட்டுள்ளது. அதன் உள்ளே கொற்றவையின் சிற்பம் காணப்படுகின்றது. இப்பாறையின் வடபுறத்தில், மகிஷாசுரனின் உருவம் பெரியதாக அமைக்கப்பட்டிருக்கின்றது. பெரிய கதாயுதம் ஒன்றை ஏந்திக்கொண்டு மகிஷாசுரன் ஓடுகின்றான். கொற்றவையின் ஊர்தியாகிய சிங்கம், அவன்மீது பாய்ந்து தாக்குகின்றது. அதனைப் பொறுக்கமுடியாமல் மகிஷாசுரன் அலறுகின்றான். இச்சிற்ப அமைப்புக் காட்சி, கடலில் இருந்து குளித்துக் கரை நோக்கி வரும்போது தெரிகின்றது. இச் சிற்பத்தின் அழகிய காட்சி கண்டு களிக்கத் தக்கதாக உள்ளது.

**பஞ்சபாண்டவர் தேர்கள்:**

*(1)* **தருமராசர் தேர்:** இது சிவன் கோயில். மூன்று நிலைகளைக் கொண்ட விமானத்தை

உடையது. இரண்டாம் நிலையின் நடுவில், ஒரு மாடப்புரை போல உள்ளிடம் சிறியதாக வெட்டப்பட்டுள்ளது. அதன் அடியில் சோமாஸ்கந்தர்சிலை செதுக்கப்பட்டிருக்கின்றது. இதன் கண் உள்ள விமான அமைப்பின் வளர்ச்சியே, காஞ்சியிலுள்ள கயிலாசநாதர் கோயில், தஞ்சைப் பெரிய கோயில் ஆகியவற்றின் விமானங்களாக அமைந்துள்ளன என்று, அறிஞர்கள் கருதுகின்றனர்.

(2) பீமசேனன் தேர்: இதன் மேற்கூரை அமைப்பும், சாளர அமைப்பும், காஞ்சிபுரம் கயிலாசநாதர் கோயிலில் உள்ள அமைப்பைப் போன்று காணப்படுகின்றன. விமானத்தைச் சுற்றிலும் வழி விடப்பட்டுள்ளது. மேலிடம் நாற்பத்தைந்து அடி நீளம், இருபத்தைந்து அடி அகலம், இருபத்தாறு அடி உயரம் உள்ளது. அதன் தூண்களின் அடியில் சிங்கங்கள் அமைந்துள்ளன. இதன் அமைப்பு, இதற்குப் பின்னர்த் தோன்றிய சிதம்பரம் ஆயிரக்கால் மண்டபத்தின் அமைப்பைத் தழுவியதாக இருக்கிறது.

(3) அருச்சுனன் தேர்: இது தருமராசர் தேரைப் போன்றது. இதுவும் சிவன்கோயிலாகும். இது புத்தப்பள்ளியின் அமைப்பை ஒத்துள்ளது. இதன் விமானம் நான்கு நிலைகளை உடையது.

(4) திரௌபதி தேர் : இது தமிழ்நாட்டில் கிராம தேவதைகளுக்கு இருக்கும் சிறுகோயில் போல அமைந்துள்ளது. இதிலுள்ள துர்க்கையின் சிற்பம், மிகுந்த வேலைப்பாடு உடையது. இங்குள்ள கல்யானை, கற்சிங்கம், நந்தி என்பன கண்டு வியக்கத் தக்க அழகு மிக்கவை.

(5) சகாதேவன் தேர்: இது பண்டைப் பௌத்தர்களுடைய பௌத்தப் பள்ளிகளின் அமைப்பைப் போலக் காணப்படுகின்றது. இது போன்ற பெரிய துர்க்கையின் கோயில் ஒன்று, அய்ஹொளே என்னும் இடத்தில் இருக்கின்றது. சாளுக்கியரும் பல்லவரும், அரசியலில் பகைவராயினும், கலைத்துறையில் ஒருவருடைய கலையை, மற்றொருவர் ஏற்றுத் தழுவி வளர்த்துக் கொண்டனர். சகாதேவன்தேர் போன்ற அமைப்புடைய விமானங்கள் பல, தமிழகத்தில் பிற்காலத்தில் கட்டப்பெற்றன. அவற்றுள் ஒன்று திருத்தணிகையில் உள்ளது.

பஞ்சபாண்டவர் தேர்கள் எனப்படும் இக்கோயில்களின் முன்புறம், இவற்றில் உறைந்த தெய்வங்கட்கு உரிய ஊர்திகள் கல்லில் அமைக்கப்பெற்றுள்ளன. அவைகள் நந்தி, சிங்கம், யானை என்பன. இவைகள் முறையே சிவபெருமான், துர்க்கை, இந்திரன் ஆகிய தெய்வங்களின் ஊர்தியாகும்.

பஞ்சபாண்டவர் தேர்கள் எனப்படும் இவைகள், உண்மையில் தேர்கள் அல்ல; தேர் போன்ற அமைப்பையுடைய கோயில்களாகும். மலைப் பாறைகளைச் செதுக்கி இவைகள் அமைக்கப் பெற்றன. இவைகள் 'ஒற்றைக் கற்கோயில்கள்' எனப்படும். மலைப்பாறைகளைப் பலவகைகளில் செதுக்கி, ஒன்றுபோல் ஒன்று இல்லாமல், புதிய புதிய நிலைகளில் இவைகள் அமைக்கப்பெற்றுள்ளன. பார்ப்பதற்குத் தேர்களை நினைவூட்டுவதனால், இவற்றைப் பொது மக்கள், ரதங்கள் அல்லது தேர்கள் என வழங்கலாயினர்.

இவற்றில் நான்கு, ஒரே வரிசையில் வடக்கிலிருந்து தெற்காக உள்ளன. இந்நான்கும் ஒரே குன்றிலிருந்து செதுக்கப்பட்டவை. வடக்கிலிருந்து படிப்படியாக உயர்ந்துவரும் இவைகள், குன்றின் சரிந்த பகுதியை நினைவூட்டுகின்றன. வடக்குப்புறத்தின் முதலில் குடிசை வடிவில் உள்ளது, திரௌபதி தேர். அடுத்து இருப்பது, அர்ச்சுனன் தேர். அதனையடுத்துச் சாலை வடிவில் உள்ளது, பீமசேனன் தேர். தென்புறத்தில் மிகவும் உயரமாகப் பெருமிதத்துடன் காணப்படுவது, தருமராசர் தேர். இவற்றின் வரிசையில் இல்லாமல், சற்றுத் தனித்து எதிரே நிற்பது சகாதேவன் தேர். அதன் அருகில் ஒரு யானை நிற்கும். திரௌபதியின் தேர் முன்னர் ஒரு சிங்கமும், அர்ச்சுனன் தேரின் பின்புறத்தில், படுத்திருக்கின்ற ஓர் எருதும் இருக்கும்.

தருமராசரின் தேர், ''அத்யந்த காம பல்லவேச்சுரக் கிருகம்'' என்ற பெயரை உடையது. இதில் மூன்று தளங்கள் உள்ளன. மூன்று மாடிகளிலும் சிவபிரான், திருமால் முதலிய தெய்வங்களின் அழகிய உருவங்கள் காணப்படுகின்றன. இரண்டாம் தளத்திலிருந்து மூன்றாம் தளத்திற்குச் செல்லக் கிழக்குத் திசையில் படி அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் படிகளின் புறச்சுவரில், ''மாமல்லன்'' என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

பீமசேனன் தேர்க் கோயிலில், சிற்பங்கள் எதுவும் இல்லை. இது பள்ளிகொண்ட பெருமாளுக்கு உரியதாக இருந்திருத்தல் வேண்டும். இதன் கட்டிட அமைப்பைச் 'சோலை வடிவம்' என்பர்.

அர்ச்சுனன் தேரில், எட்டுப் பட்டைச் சிகரமும், இரண்டு தளங்களும் உள்ளன. கருவறை மேற்கு நோக்கியிருக்கின்றது. கருவறையில் சிற்பம் எதுவும் இல்லை. ஆயினும் சிவலிங்கம் ஒன்று முன்பு இருந்திருக்கின்றது. வெளிப்புறச் சுவர்களில், எழில் வாய்ந்த சிற்பங்கள் விளங்குகின்றன. இரண்டாம் நந்திவர்மன் என்னும் இராசசிம்மனும்(கி.பி.710-775), அவனது பட்டத்தரசியும் ஆகிய இருவரின் சிற்பங்கள், அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன.

திரௌபதி தேர், சிறிய குடிசை வடிவில் செதுக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்பீடம் இரண்டரை அடி உயரம் உள்ளது. அடிப்பீடத்தின் பக்கங்கள், யானைகளும் சிங்கங்களும் தாங்கி நிற்பதுபோல், செதுக்கப்பட்டுள்ளன. திரௌபதி தேர் என வழங்கப்படினும், உண்மையில் இது கொற்றவையின் கோயிலேயாகும்.

தனித்து உள்ள சகாதேவர் தேர், இந்திரனுக்காக எடுக்கப்பட்டிருக்கலாம் என்பர். அதனாலேயே அவனுக்குரிய ஐராவதம் என்னும் யானை, அருகில் நிற்பதாக அமைக்கப்பெற்றுள்ளது. இக்கோயில், தூங்கானை வடிவில்

உள்ளது. இதன் விமானமும் தூங்கனை வடிவிலேயே அமைந்திருக்கின்றது. இக்கோயிற் கருவறையின் முன்னர், ஒரு சிறு மண்டபம் போன்ற அமைப்பு உள்ளது. அதன் தூண்களை யானைகள் தாங்கி நிற்கின்றன.

## (5) கடல்மல்லைத் தலசயனக் கோயில்

மாமல்லபுரத்தின் சிறப்புக்குரிய காரணங்கள் பலவற்றுள், அங்கு இன்றும் வழிபாட்டில் இருந்து வருகின்ற தலசயனம் என்னும் பழமையும் பெருமையும் மிக்க கோயிலும் ஒன்றாகும். இக் கோயில் மாமல்லபுர நகரின் நடுவில் அமைந்து திகழ்கின்றது. இக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமாளுக்குத் தலசயனப் பெருமாள் என்றும், உலகுய்ய நின்ற நாயனார் என்றும், பெயர்கள் வழங்குகின்றன. இங்குள்ள தாயார் நிலமங்கை நாச்சியார். பெருமாள், கிழக்கு நோக்கிய திருமுகமண்டலம் உடைய வராக, புஜங்க சயனத்தில் எழுந்தருளியுள்ளார். இக்கோயிலின் விமானம், அனந்த ( ககன கிருதி) விமானம். புண்டரீகர் என்னும் முனிவர், இத்தலத்துப் பெருமாளை வழிபட்டு அருள் பெற்றார். ஆதலின் இங்குள்ள தீர்த்தம், புண்டரீக புஷ்கரிணி என வழங்கப்படுகின்றது.

முன்னொரு காலத்தில் புண்டரீகர் என்ற ஒரு பெரும் முனிவர், மாமல்லபுரத்தின் கடற்கரையில் ஒரு பெரிய நந்தவனம் அமைத்து, அதன்கண் பற்பல சிறந்த மலர்ச்செடிகளை வைத்து வளர்த்து வந்தார். அவற்றின் நறுமணம் மிக்க அழகிய பலவேறு மலர்களையும், இண்டை கண்ணி தார் முதலிய பலவகை மாலைகளாகத் தொடுத்து எடுத்துக் கொண்டு சென்று, பெருமாளுக்குச் சாத்தி வழிபாடு செய்து மகிழவேண்டும் என்று அவர் பெரிதும் விரும்பினார். அங்ஙனம், பரமபதத்தில் உள்ள பெருமாளுக்கு மலர் மாலைகளைச் சாத்தி மகிழவிரும்பிய அம்முனிவர், பரமபதமாகிய வைகுந்தத்தை அடைய, இக் கடல் நீரைக் கைகளால் இறைத்து, வெறும் தரையாக்கி விட்டு, அதன்பின்னர் அத்தரையில் நடந்தே பரமபதம் செல்லுவோம் என்று துணிந்தார். அதன்படி கடல்நீரைத் தம் கைகளினாலேயே தீவிரமாக முயன்று இறைக்கத் தொடங்கினார். அடியவர்க்கு எளியவன் ஆகிய பெருமாள், அவருடைய அளவற்ற பெரும்பக்தியையும், தீவிரம் மிக்க முயற்சியையும் கண்டு வியந்து மகிழ்ந்தார்; அவர்பொருட்டுத் தானே மல்லைக் கடற்கரைக்கு ஓடிவந்தார். அவரது நந்தவனத்திலேயே தரையில்நெடுங்கிடையாகப் பள்ளிகொண்டு கிடந்தார்; அம்முனிவருடைய மலர்மாலைகளையும் மகிழ்ந்து ஏற்றருளினார். அதனால் இங்குள்ள பெருமாளுக்குத் ''தலசயனப் பெருமாள்'' என்ற பெயர் ஏற்பட்டது என்று தல்புராணம் கூறும்.

நந்திவர்ம பல்லவ மன்னரின் (கி.பி.730-795) சமகாலத்தவராக விளங்கியிருந்த திருமங்கையாழ்வார், இந்தத் தலத்தைக் குறித்து, இரண்டு திருப்பதிகங்கள் அருளிச் செய்துள்ளார். அத் திருப்பதிகங்களில் முதற்பதிகத்தின் பாடல்களில் ''கடல்மல்லைத் தலசயனம்'' என்னும் தொடர், ஒவ்வொரு பாடலின் ஈற்றடியிலும், ஈற்றுச் சொல்லாக அமைந்திருக்கின்றது. இரண்டாவது பதிகத்தின் முதற்பாடலில் ''தலசயனத்துறைவார்'' என்னும் தொடர் அமைந்திருக்கின்றது. தலசயனப் பெருமாளுக்கு ''ஞானப்பிரான்'' என்றும் ஒரு சிறப்புப்பெயர் உண்டு. அப்பெயரும், தாயாரின் பெயராகிய நிலமங்கைநாச்சியார் என்னும் பெயரும், திருமங்கையாழ்வார் அருளியுள்ள பாசுரத்தில் இடம்பெற்றிருக்கின்றன.

''ஏனத்தின் உருவாகி
 நிலமங்கை எழில்கொண்டான்,
வானத்திலவர் முறையால்
 மகிழ்ந்தேத்தி வலங்கொள்ளக்
கானத்தின் கடல்மல்லைத்
 தலசயனத் துறைகின்ற,
ஞானத்தின் ஒளிஉருவை,
 நினைவார்என் நாயகரே''

இத்திருப்பாடலில் ''ஞானத்தின் ஒளியுரு'' என்றும், ''நிலமங்கை எழில்கொண்டான்'' என்றும், பெருமாளின் பெயரும், தாயாரின் பெயரும் குறிக்கப்பட்டிருத்தல் காணலாம்.

மாமல்லபுர நகரின் நடுவேயுள்ள இந்தத் தலசயனப் பெருமாள் கோயில், இதனை மங்களாசாசனம் செய்தருளிய திருமங்கையாழ்வார் காலத்திற்கும் முன்பிருந்தே, அதாவது 1300 ஆண்டுகளுக்கும் முன்னர்த் தொட்டே தலைசிறந்ததொரு வைணவத் தலமாக விளங்கியிருந்ததாதல் வேண்டும். ஆதலின் சற்றேறத்தாழ 1300 ஆண்டுகளாக, இந்தத் தலசயனப் பெருமாள்கோயில் தொடர்ந்து வழிபாட்டில் இருந்து வருவதுடன், அவ்வப்போது பல அரசர்களால் திருப்பணிகள் செய்யப்பெற்று, தன்னுடைய அமைப்புகளில் பலவகை மாறுதல்களை அடைந்து வளர்ந்து வந்திருக்கின்றது.

பல்லவர்களுக்குப் பின்னர் ஏற்பட்ட சோழப் பேரரசின் காலத்தில், இராசராச சோழன் (கி.பி.985-1014) பெயரால், சனநாதபுரம் என்று வழங்கிய மாமல்லபுரத்திலுள்ள தலசயனப் பெருமாளுக்கு, வழிபாடும் பூசனைகளும் நடைபெற்று வந்தன என்று தெரிகின்றது.

அவ்வாறே சடாவர்ம சுந்தரபாண்டியனுடைய கல்வெட்டு ஒன்று (கி.பி.1325) மாமல்லபுரத்தில் காணப்படுகிறது. அதில் சுந்தரபாண்டியனுடைய திருமேனி நலம் பெறற் பொருட்டுச் சிறப்புவழி பாடு ஒன்று இராசகேசரி சதுர்வேதி மங்கலத்து மகா சபையாரால் நிகழ்த்தப்பெற்ற செய்தி குறிக்கப்பெற்றுள்ளது. இராசநாராயண சம்புவராயர் (கி.பி.1340) காலத்தில், தலசயனப் பெருமாள் கோயிலின் திருப்பணிகளுக்கும், திருவாராதனைகளுக்கும் மானியங்கள் வழங்கப்பெற்ற செய்தியைப் பல கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

விசயநகர அரசர்களில் அச்சுதராயர், விருபாட்சராயர், திருவரங்கதேவர், வேங்கட பதிராயர் ஆகிய அரசர்களின் காலத்தில், கடல்மல்லைத் தலசயனப்பெருமாளுக்குத் திருவிழாக்களுக்காகவும், திருவாராதனைகளுக்காகவும் மானியங்கள் பல வழங்கப்பட்டன.

## (1) திருக்கடல் மல்லைத் தலசயனம்

**(திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமொழித் திருப்பாசுரங்கள் மூலமும் உரையும்)**

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

பாராயது உண்டு உமிழ்ந்த பவளத் தூணைப்,
படுகடலில் அமுதத்தைப் பரிவாய் கீண்ட
சீரானை எம்மானைத் தொண்டர் தங்கள்
சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும்பினைப்
போர் ஆனைக் கொம்புஒசித்த போர் ஏற்றினைப்,
புணர்மருதம் இறநடந்த பொற்குன்றினைக்,
கார்ஆனை இடர்கடிந்த கற்பகத்தைக்
கண்டதுநான் கடல்மல்லைத் தலசயனத்தே

உலகங்களையெல்லாம் பிரளயவெள்ளம் அழிக்காதபடி, திருவயிற்றிலே வைத்து, பிரளயம் கழிந்தபிறகு வெளிப்படுத்தியவனும்; பவளத் தூண் போன்ற அழகும் திண்மையும் உடையவனும்; ஆழ்ந்த கடலில் தோன்றிய அமிழ்தம் போன்று இனிமை தருபவனும்; குதிரை வடிவம்கொண்டு வந்த கேசி என்னும் அசுரனின் வாயைக் கிழித்தெறிந்து கொன்ற வீரம் மிக்கவனும்; எனக்குத் தலைவனும், அடியவர்களின் நெஞ்சத்தினுள்ளே தோன்றி வளர்கின்ற இனிய கரும்பைப் போன்றவனும்; போர் புரிய வந்த குவலயாபீடம் என்னும் யானையின் தந்தங்களை முறித்து எறிந்த பேராற்றல் மிக்க சிங்கம் போன்றவனும்; இரட்டை மருதமரங்கள் முறியும்படி தவழ்ந்தவனும்; பொன்மலை போல அழகுமிக்கவனும்; கருநிறம் வாய்ந்த கஜேந்திரன் என்னும் யானையின் துன்பத்தைப் போக்கியவனும்; கற்பக மரம்போல நினைத்தவற்றையெல்லாம் தரக் கூடியவனும் ஆகிய இறைவனை, யான் எங்கே கண்டு வணங்கப் பெற்றேன் என்றால், தலசயனப் பெருமாள் எழுந்தருளியுள்ள திருக் கடல்மல்லை என்னும் தலத்திலேயே யாகும்(1)

பூண்டுஅவத்தம் பிறர்க்குஅடைந்து தொண்டு
பட்டுப்,
பொய்ந்நூலை மெய்ந்நூல் என்று என்றும்ஓதி,
மாண்டுஅவத்தம் போகாதே வம்மின் எந்தை
என்வணங்கப் படுவானைக், கணங்கள் ஏத்தும்
நீண்டஅத்தக் கருமுகிலை, எம்மான் தன்னை
நின்றஊர் நித்திலத்தைத் தொத்துஆர்
சோலைக்,
காண்டவத்தைக் கனலில் எரிவாய்ப் பெய்வித்
தானைக்
கண்டது, நான் கடல்மல்லைத் தலசயனத்தே

தீய செயல்களையே மேற்கொண்டு, தீயவர்களையே சென்று சேர்ந்து, அவர்களுக்கு அடிமை செய்தும், பொய்யான இழிந்த நூல்களை உண்மையான சிறந்த நூல்கள் என்று கருதிக் கொண்டு, அவற்றையே எப்போதும் பயின்று கொண்டிருந்து, காலத்தை வீணே கழித்து, இறந்து பாழாகப் போகாமல் உய்தி அடைவதற்கு அனைவரும் வாருங்கள்! எனக்குத் தந்தை யானவனும், என்போல்வார் எல்லாரும் வணங்குவதற்கு உரியவனும், ஞானிகளின் கூட்டங்களாலே துதிக்கப்படுவோனும், அளவிட்டு உணரவொண்ணாத அரும்பெரும் பொருளாக விளங்குபவனும்; காளமேகம் போன்றவனும்; என்னுடைய தலைவனும்; முத்துக்களின் கோவை போலக் குளிர்ந்த வடிவை உடையவனாய்த் திருநின்றவூரில் எழுந்தருளியிருப்பவனும்; பூங்கொத்துக்கள் நிறைந்த சோலைகளை உடைய காண்டவ வனத்தை அக்கினித் தேவனுடைய வாயில் புகுவித்து எரியும்படிச் செய்தவனும் ஆகிய இறைவனை யான் காணப் பெற்றது, கடல்மல்லையிலுள்ள தலசயனம் என்னும் கோயிலிலாகும். *(2)*

உடம்புஉருவில் மூன்றுஒன்றாய் மூர்த்தி வேறாய்
உலகுஉய்ய நின்றானை, அன்று பேய்ச்சி
விடம்பருகு வித்தகனைக், கன்றுமேய்த்து
விளையாட வல்லானை, வரைமீ கானில்,
தடம்பருகு கருமுகிலைத், தஞ்சைக்கோயில்
தவநெறிக்குஓர் பெருநெறியை, வையம்காக்கும்,
கடும்பரிமேல் கற்கியைநான் கண்டுகொண்டேன்;
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே

படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூன்று தொழில்களால் உலகங்கள் வாழ்வதற்காக, தான் ஒருவனே மூன்று வடிவங்கொண்டு செயலாற்றுதலால், சரீர சரீரி பாவத்தை மேற்கொண்டு நோக்குமளவில், பிரமன் திருமால் உருத்திரன் என்னும் மூன்று பொருள்களும் ஒரு பொருளேயாய், உண்மையில் வடிவம் மட்டும் வேறுபட்டு நிற்பவனும்; கண்ணனாகப் பிறந்த அந்தக் காலத்தில் பூதனை என்னும் அரக்கியினுடைய மார்பில் தடவியிருந்த நஞ்சினைக் குடித்து, அவளை மாய்த்துத் தான் வாழ்ந்திருந்த வியக்கத் தக்கவனும்; பசுவின் கன்றுகளை மேய்த்து விளையாடுவதற்காக வேண்டி ஆயர்பாடியில் பிறந்தவனும், மலைமேல் உள்ள காடுகளிலும், நீர்நிலைகளிலும், கன்றுகளுக்கு நீர்குடிக்கும் முறையைக் கற்றுத் தருவதற்காக, தானே இறங்கிக் கையை முதுகிலே கட்டிக் கொண்டு தண்ணீர் குடித்தவனும்; காளமேகம் போன்றவனும்; தஞ்சை மாமணிக் கோயிலிலே தன்னை அடைவதற்கான நெறிகளிலே சிறந்த நெறி தானேயாக விளங்கி நிற்பவனும்; உலகத்தைக் காப்பதற்காக வேகமான நடையை உடைய குதிரையின்மீது கற்கி அவதாரம் செய்ய இருப்பவனும் ஆகிய இறைவனை, மணம் மிகுந்த சோலைகள் சூழ்ந்த திருக்கடல் மல்லையிலேயுள்ள தலசயனம் என்னும் திருக் கோயிலில் நான் கண்டு கொண்டேன். *(3)*

பேய்த்தாயை முலையுண்ட பிள்ளைதன்னைப்,
பிணைமருப்பில் கருங்களிற்றைப், பிணைமான்
நோக்கின்
ஆய்த்தாயர் தயிர் வெண்ணெய் அமர்ந்தகோவை,
அந்தணர்தம் அமுதத்தைக், குரவை முன்னே
கோத்தானை, குடமாடு கூத்தன் தன்னைக்,
கோக்குலங்கள் தளராமல் குன்றம் ஏந்திக்
காத்தானை, எம்மானைக் கண்டுகொண்டேன்;
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே

தாயின் வடிவை எடுத்துக் கொண்டு, வஞ்சகமாகக்கொல்லவந்த பூதனை என்னும் அரக்கியினுடைய மார்பகத்தை உறிஞ்சிப் பால்குடித்த குழந்தையும், இரண்டு தந்தங்கள் முளைத்த கருமையான யானையின் கன்றுபோல இனியவனும், பெண்மானின் பார்வை போன்ற கண்களை உடைய இடைத்தாயாராகிய யசோதையினுடைய தயிரிலும் வெண்ணெயிலும் விருப்பம் கொண்டிருந்த தலைவனும்; அந்தணர்களுக்கு அமுதம் போன்றவனும்; முன்னொரு காலத்தில்இடைப்பெண்களுடன் குரவைக்கூத்து ஆடியவனும்; குடக்கூத்து ஆடினவனும்; இந்திரன் பெய்வித்த பெருமழையினால் பசுநிரைகள் வருந்தாதபடி, கோவர்த்தன மலையைக் குடையாக ஏந்திப் பாதுகாத்தவனும் ஆகிய எம்பெருமானை, மணம் நிறைந்த சோலைகள் சூழ்ந்த கடல் மல்லையில், தலசயனம் என்னும் கோயிலில் நான் கண்டு கொண்டேன். *(4)*

பாய்ந்தானைத் திரிசகடம் பாறி வீழப்
பாலகனாய் ஆல் இலையில் பள்ளி இன்பம்
ஏய்ந்தானை, இலங்குஒளிசேர் மணிக்குன்று அன்ன
ஈரிரண்டு மால்வரைத்தோள் எம்மான் தன்னை,
தோய்ந்தானை நிலமகள்தோள், தூதிற் சென்றுஅப்
பொய்யறைவாய் புகப்பெய்த மல்லர் மங்கக்
காய்ந்தானை, எம்மானைக் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே

உருளுகின்ற சகடம் என்னும் வண்டியானது சின்னபின்னமாகச் சிதறி விழும்படி, தன் திருவடியால் உதைத்தவனும்; சிறுபிள்ளையாக ஆலந் தளிர்மேல் திருக்கண் வளர்கின்ற இன்பத்தைப் பொருந்தியவனும், மிகுந்த ஒளி சேர்ந்த மாணிக்கங்களின்குன்றுபோன்றவனும்; பெரியமலைபோன்ற நான்கு திருத்தோள்களை உடைய தலைவனும், நிலமகளின் தோள்களை அணைந்தவனும்; பாண்டவர்களுக்குத்தூதுசெல்லும் தொழிலுடன், துரியோதனனிடம் சென்று அத் துரியோதனன் வஞ்சகமாகச் செய்து வைத்த நிலவறையின் உள்ளே அமர்த்தப்பெற்றிருந்த மல்லர்கள் அழியும்படி சீற்றம் கொண்டவனும் ஆகிய எம்பெருமானை, கடல்மல்லையில், தலசயனம் என்னும் கோயிலில் நான் கண்டு கொண்டேன் *(5)*

கிடந்தானைத் தடங்கடலுள் பணங்கள் மேவிக்
கிளர்பொறிய மறிதிரிய அதனின் பின்னே
படர்ந்தானைப், படுமதத்த களிற்றின் கொம்பு
பறித்தானைப் பாரிடத்தை எயிறு கீற
இடந்தானை, வளைமருப்பின் ஏனம் ஆகி
இருநிலனும் பெருவிசும்பும் எய்தா வண்ணம்
கடந்தானை, எம்மானைக் கண்டு கொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே

விரிந்து பரந்த திருப்பாற்கடலில் ஆதிசேடனின் படங்களின் கீழே பொருந்திப் பள்ளி கொள்பவனும்; கிடந்த பலவகைப் புள்ளிகளை உடைய மாரீசன் என்னும் மாயமான் எதிரே வந்து உலவ, அதன்பின்னால் தொடர்ந்து சென்றவனும்; ஒழுகுகின்ற மதநீர் பெருகும் குவலயாபீடம் என்னும் யானையினுடைய தந்தங்களை முறித்து, அதனைக் கொன்றவனும்; வளைந்த கோரைப் பற்களை உடைய பன்றியின் வடிவம் கொண்டு உலகத்தைப் பற்களாலே கொத்தி விடுவித்தவனும்; விசாலமான இவ்வுலகமும், பெரிய மேலுலகங்களும் திருவடிகளுக்குப் போதாது என்னும்படி மிக வளர்ந்து உலகளந்தவனுமான எம்பெருமானை, கடல்மல்லையிலே தலசயனம் என்னும் கோயிலில் நான் கண்டுகொண்டேன். *(6)*

பேணாத வலியரக்கன் மெலிய அன்று
பெருவரைத்தோள் இறநெரித்தன்று அவுணர் கோனைப்
பூண்ஆகம் பிளவுஎடுத்த போர்வல் லோனைப்,
பொருகடலுள் துயில்அமர்ந்த புள்ளூர்தியை,
ஊணாகப் பேய்முலை நஞ்சு உண்டான் தன்னை,
உள்ளுவார் உள்ளத்தே உறைகின்றானை,
காணாது திரிதருவேன் கண்டுகொண்டேன்
கடிபொழில் சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே

முன்னொரு காலத்தில் தன்னை இறைவன் என்று மதியாத, வலிமை மிகுந்த அரக்கர்கள் ஒழியும்படி, அவ் அரக்கர்களின் பெரிய மலைபோன்ற தோள்கள்முறியும்படி, மிதித்து நெறித்தவனும், பிரகலாதன் இடர்ப்பட்ட காலத்தில், அசுரர் தலைவனான இரணியனின் மார்பைப் பிளந்து அழித்தவனும்; போரில் பேராற்றல் வாய்ந்தவனும்; அலைகள் வீசுகின்ற திருப்பாற்கடலிலே பள்ளிகொண்டிருப்பவனும்; கருடப் பறவையை வாகனமாக உடையவனும்; பூதனையின் மார்பில் தடவியிருந்த நஞ்சை உணவாகக் கொண்டு அமுது செய்தவனும்; தன்னைச் சிந்தித்துத்தியானிப்பவர்களின் நெஞ்சத்தில் என்றும் எழுந்தருளி வாழ்பவனும் ஆகிய எம்பெருமானை, நெடுங்காலமாகக் கண்டு வணங்காமல் அலைந்து திரிந்து கொண்டிருந்த யான், இன்று கடல்மல்லையில் தலசயனம் என்னும் கோயிலில் கண்டு கொண்டேன். *(7)*

பெண்ணாகி இன்அமுதம் வஞ்சித் தானைப்
பிறைஎயிற்றன் றடல்அரியாய்ப் பெருகினானை,
தண்ணார்ந்த வார்புனல்சூழ் மெய்யம் என்னும்
தடவரைமேல் கிடந்தானைப் பணங்கள்மேவி,
எண்ணானை எண்ணிறந்த புகழினானை,
இலங்குஒளிசேர் அரவிந்தம் போன்று நீண்ட
கண்ணானை, கண்ணாரக் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே

மோகினி என்னும் பெண்ணின் வடிவம் எடுத்து, இனிய அமிர்தத்தை அசுரர்கள் அருந்தாதபடி செய்து வஞ்சித்தவனும்; முன்பொரு காலத்தில் சந்திரனைப்போன்று வளைந்த அழகிய பற்களை உடைய, வலிமை மிக்க நரசிங்கமூர்த்தியாகி விசுவரூபம் எடுத்தவனும்; குளிர்ச்சிபொருந்தி வெள்ளமாகப் பெருகுகின்ற நீரால் சூழப்பெற்ற திருமெய்யம் என்கின்ற பெரிய மலையின்மீது, ஆதிசேடனின் படங்களின்கீழே பொருந்திப் பள்ளிகொண்டிருப்பவனும்; யோகிகளால் சிந்திக்கப்படுபவனும், கணக்கில்லாத அளவற்ற புகழ்களை உடையவனும்; மிகுந்த ஒளியை உடைய தாமரை இதழ் போன்ற நீண்ட அழகிய கண்களை உடையவனும் ஆன எம்பெருமானை, கடல் மல்லயையில் தலசயனம் என்னும் கோயிலில் நான் கண்டுகொண்டேன். *(8)*

தொண்டாயார் தாம்பரவும் அடியினானைப்
படிகடந்த தாளாளற்கு ஆளாய் உய்தல்
விண்டானை, தென்இலங்கை அரக்கர்வேந்தை,
விலங்குண்ண வலங்கைவாய்ச் சரங்கள்ஆண்டு,
பண்டாய வேதங்கள் நான்கும் ஐந்து
வேள்விகளும் கேள்வியோடு அங்கம் ஆறும்
கண்டானை, தொண்டனேன் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே

தொண்டர்களான அடியவர்களால் துதிக்கப்பெறுகின்ற திருவடிகளை உடையவனும்; உலகத்தை அளந்த திருவடிகளை உடையவனான தனக்கு ஆட்பட்டு உய்வதனை விலக்கிய இலங்கை அரக்கர்களின் தலைவனான இராவணனை, விலங்குகள் உண்ணும்படி வலத் திருக்கையாலே அம்புகளைச் சொரிந்தவனும்; நித்திய மான நான்கு வேதங்களையும், ஐம்பெரு வேள்விகளையும், மிருதி நூல்களையும், ஆறு அங்கங்களையும் தோற்றுவித்து, உலகில் பரப்பியருளியவனும், ஆகிய எம்பெருமானைக் கடல் மல்லையில் தலசயனம் என்னும் கோயிலில் நான் கண்டு கொண்டேன்.

[நான்கு வேதங்கள்- இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்பன. தைத்திரியம், பவுடியம், தலவகாரம், சாமம் என்ற நான்கும் ஆம்.

ஐம்பெரு வேள்விகளாவன: பிரமவேள்வி- வேதத்தில் நாள்தோறும் ஒரு பகுதியை ஓதுதல்; 2. தேவவேள்வி- நாள்தோறும் முத்தீ வளர்த்தல்; 3. பூதவேள்வி- சிற்றுயிர்களுக்கு உணவளித்தல்; 4 பிதிர்வேள்வி-மறைந்துபோன முன்னோர்களை நினைந்து வழிபட்டுச் சிறப்புச் செய்தல், 5. மனிதவேள்வி- விருந்தினர்களுக்கு உணவு முதலியன அளித்துச் சிறப்புச் செய்தல்.

மிருதிகளாவன: மனுஸ்மிருதி, பராசரஸ்மிருதி, போன்ற நூல்கள்.

ஆறு அங்கங்களாவன: வேதங்களைப் பயில்வதற்கு உறுப்பாக உள்ள சிட்சை, வியாகரணம், சந்தஸ், நிருத்தம், சோதிடம், கற்பம் என்னும் ஆறு வகை நூல்களாகும்.] (9)

படநாகத்து அணைக்கிடந்தன்று அவுணர்கோனைப்
படவெகுண்டு மருதிடை போய்ப் பழனவேலித்,
தடமார்ந்த கடல்மல்லைத் தலசயனத்துத்
தாமரைக்கண் துயில்அமர்ந்ததலைவன் தன்னை,
கடமாரும் கருங்களிறு வல்லான் வெல்போர்க்
கலிகன்றி ஒலிசெய்த இன்பப்பாடல்,
திடமாக இவை ஐந்தும் ஐந்தும்வல்லார்
தீவினையை முதல் அரிய வல்லார்தாமே.

படங்களை உடைய ஆதிசேடனாகிய படுக்கையிலே பள்ளி கொள்பவனும்; முன்னொரு காலத்தில் அசுரர் தலைவனான இரணியன் அழியும்படி சீறியவனும்; இரட்டை மருத மரங்களின் நடுவே தவழ்ந்து சென்றவனும்; நீர்நிறைந்த வயல்கள் சூழப்பெற்று, ஏரி குளம் முதலியன நிறையப்பெற்ற கடல் மல்லையில், தாமரை மலர் போன்ற திருக்கண்கள் அறிதுயில் கொள்கின்ற தலைவனும் ஆன, தலசயனப் பெருமாளைப்பற்றி, மதம் மிகுந்த பெரிய யானையைச் செலுத்த வல்லவனும், போரிலே வெற்றியே பெறுபவனும் ஆகிய திருமங்கையாழ்வார் அருளிச் செய்த, இன்பம் விளைக்க வல்ல இந்தப் பத்துப் பாடல்களையும் உறுதியான அன்புடன், ஓதவல்லவர்கள், கொடிய பாவங்களை வேரறுக்க வல்லவர்கள் ஆவார்கள். (10)

## திருமங்கையாழ்வார் அருளிய 2-வது திருப்பாசுரத்தின் பொழிப்புரை

நண்ணாத வாள்அவுணர் இடைப்புக்கு,
வானவரைப்
பெண்ணாகி அமுதூட்டும் பெருமானார், மருவினிய
தண்ணார்ந்த கடல்மல்லைத் தலசயனத்து
உறைவாரை,
எண்ணாதே இருப்பாரை இறைப்பொழுதும்
எண்ணோமே.

மோகினி என்னும் பெண்ணின் வடிவம் எடுத்துக் கொடியவர்களாகிய அசுரர்களின் நடுவே புகுந்து, அவர்களை வஞ்சித்துவிட்டு, தேவர்களுக்கு மட்டும் அமுதம் அளித்து உண்ணச் செய்த பெருமானும், பொருந்தி வாழ்வதற்கு இனிமையான குளிர்ச்சி நிரம்பிய கடல் மல்லை என்னும் தலத்தில் என்றும் எழுந்தருளி இருப்பவனும் ஆகிய தலசயனப் பெருமாளைச் சிந்தியாமல் இருப்பவர்களை, யாம் ஒருசிறிதும் ஒரு பொருளாக நினைத்து மதிக்கமாட்டோம். (1)

பார்வண்ண மடமங்கை பனிநன்மா மலர்க்கிழத்தி,
நீர்வண்ணன் மார்வத்தில் இருக்கையைமுன்
நினைந்தவனூர்,
கார்வண்ண அமுதுமுந்நீர்க் கடல்மல்லைத்
தலசயனம்,
ஆரெண்ணும் நெஞ்சுடையார் அவர் எம்மை
ஆள்வாரே

சிறந்த குணங்கள் நிறைந்த நிலமகளும், குளிர்ந்த நல்ல தாமரை மலரில் தோன்றிய திருமகளும், கடல்வண்ணனான பெருமாளின் திருமார்பிலும் இடப்பக்கத்திலும் எழுந்தருளியிருக்கும் தன்மையை, முதலிலே நினைந்து, அதற்குப் பிறகு அப்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடமாகிய கரிய கடலின் கரையிலே உள்ள கடல்மல்லைத் தலசயனம் என்னும் கோயிலை, சிந்திக்க வல்ல மனம் உடையவர்கள் எவரோ, அத்தகைய அடியவர்களே, எங்களை அடிமைகொள்ளத்தக்கவர்கள் ஆவர்! (2)

ஏனத்தின் உருவாகி நிலமங்கை எழில்கொண்டான்,
வானத்தில் அவர்முறையால் மகிழ்ந்து ஏத்தி
வலங்கொள்ள,
கானத்தின் கடல்மல்லைத் தலசயனத்து உறைகின்ற
ஞானத்தின் ஒளிஉருவை நினைவார்என் நாயகரே

வராகம் என்னும் பன்றியின் வடிவத்தை மேற்கொண்டு, நிலமகளை முன்பு இருந்த அழகு சிறிதும் குறையாமல் அவ்வழகுடனே, அண்டத்தின் மேலிருந்து மீட்டுக் கொணர்ந்தவனும்; தேவர்கள் மகிழ்ச்சியுடனே தங்கள் தங்கள் நிலைக்கு ஏற்ற தகுதியில் துதித்து வலம் செய்வதற்குப் பொருத்தமான, காட்டின் இடையில் இருக்கின்ற கடல்மல்லை என்னும் தலத்தில் எழுந்தருளியிருப்பவனும்; ஞானஒளி பொருந்திய திருமேனியை உடையவனும், ஆகிய எம்பெருமானை நினைந்து தியானிப்பவர்கள் என்னுடைய தலைவர்கள் ஆவர். (3)

விண்டாரை வென்றாவி விலங்குண்ண, மெல்லிய
லார்
கொண்டாடும் மல்லகலம் அழலேற வெஞ்சமத்துக்
கண்டாரை, கடல்மல்லைத் தலசயனத்து உறை
வாரை,

கொண்டாடும் நெஞ்சுடையார் அவர் எங்கள்
குலதெய்வமே

பகைவர்கள் ஆகிய இராவணன் முதலிய அரக்கர்களை வெற்றி கொண்டு, அவர்களுடைய உயிரை நாய் நரி முதலிய விலங்குகள் தின்னும்படியாகவும், மென்மையான இயல்பு உடைய பெண்களால் புகழ்ந்து கொண்டாடப் பெற்றதும், வலிமை மிக்கதுமான அவ்வரக்கர்களின் மார்பை நெருப்பானது பற்றி உண்ணும் படியாகவும், கொடுமைவாய்ந்த போர்க்களத்தில் பார்த்துக் கொண்டிருந்த வரும்; கடல் மல்லையில் தலசயனம் என்னும் கோயிலில் எழுந்தருளி வாழ்பவரும் ஆகிய பெருமாளை அன்புடன் புகழ்ந்து பேசும்படியான பக்தி உடைய அடியவர்களே, எங்கள் குலத்துக்குத் தெய்வங்கள் ஆவர். (4)

பிச்சச் சிறுபீலிச் சமண்குண்டர் முதலாயோர்
விச்சைக்கு இறையென்னும் அவ்விறையைப் பணியாதே,
கச்சிக் கிடந்தவனூர் கடல்மல்லைத் தலசயனம்,
நச்சித் தொழுவாரை நச்சுஎன்றன் நன்நெஞ்சே!

மயிலிறகுகளினால் செய்யப்பட்ட குடையையும், சிறிய விசிறியையும் உடைய, அற்பர்களாகிய சமணர் புத்தர் முதலியவர்கள், கல்விக்குத் தலைவன் என்று சொல்லிப் புகழ்ந்து கொண்டாடுகின்றபுறச்சமயகளின் தெய்வத்தை வணங்காமல், காஞ்சிபுரத்தில் திருவெஃகா என்னும் தலத்தில் பள்ளிகொள்ளும் பெருமாளின் திவ்விய தேசம் ஆகிய கடல்மல்லையை விரும்பித் தொழுகின்ற அடியவர்களை, எனது நல்ல நெஞ்சமே, நீ விரும்பித் தொழுக. (5)

புலன்கொள் நிதிக்குவையோடு புழைக்கை
மாகளிற்று இனமும்
நலங்கொள் நவமணிக் குவையும் சுமந்தெங்கும்
நான்றொசிந்து,
கலங்களியங் கும்மல்லைக் கடல்மல்லைத்
தலசயனம்,
வலங்கொள் மனத்தார் அவரை வலங்கொள்
என்மடநெஞ்சே!

புலன்களைக் கவருகின்ற மனத்துக்கு இனிமையான செல்வக் குவியல்களையும், துதிக்கையை உடைய பெரிய யானைக் கூட்டங்களையும், நல்ல அழகுமிகுந்த நவமணிக் குவியல்களையும் தாங்கிக் கொண்டு, தம்மிடத்தில் ஏற்றப்பட்ட அளவற்றசரக்குகளாகிய பொருள்களின் சுமையினால் மிகவும் உள்ளே இழிந்து அழுந்தி ,கப்பல்களானவை காணும் இடமெல்லாம் பரவி நிற்கின்ற வளம்நிறைந்த, கடல்மல்லைத்தலசயனம் என்னும் கோயிலை, வலம் செய்தல் வேண்டும் என்று நினைந்து விரும்புகின்ற அடியவர்களையே, என்னுடைய நெஞ்சமே, நீ வலம்புரிந்து வணங்கிக் கொள்வாயாக. (6)

பஞ்சிச் சிறுகூழை உருவாகி, மருவாத
வஞ்சப்பெண் நஞ்சுண்ட அண்ணல்முன் நண்ணாத
கஞ்சைக் கடந்தவனூர் கடல்மல்லைத்தலசயனம்
நெஞ்சில் தொழுவாரைத் தொழுவாய் என்தூய்
நெஞ்சே!

பஞ்சுபோன்ற மென்மையுடையதாய், சிறியதான கூந்தலின் முடியை உடையவளாகிய யசோதைப் பிராட்டியின் வடிவத்தை எடுத்துக் கொண்டு வஞ்சகமாக வந்தவளும், நெஞ்சில் இரக்கமற்றவளும் ஆகிய பூதனை என்னும் பேய்மகளின் மார்பில் தடவியிருந்த நஞ்சினை அமுதம் போல உண்ட இறைவனும்; முன்னொரு காலத்தில், தன்னிடத்து அன்புகொள்ளாமலிருந்த கொடியவனாகிய கம்சனை வென்று கொன்றவனும் ஆகிய எம்பெருமானுடைய திவ்வியதேசமாகிய கடல்மல்லையில் உள்ள தலசயனம் என்னும் கோயிலை நெஞ்சார நினைத்துத் தொழுகின்ற அடியவர்களைத் தூய்மைமிக்க என்னுடைய மனமே நீ தொழுது வணங்குவாயாக! (7)

செழுநீர் மலர்க்கமலம் திரையுந்த வன்பகட்டால்,
உழுநீர் வயல்உழவர் உழப்பின்முன் பிழைத்
தெழுந்த,
கழுநீர் கடிகமழும் கடல்மல்லைத் தலசயனம்,
தொழுநீர் மனத்தவரைத் தொழுவாய்என்
தூய்நெஞ்சே!

எப்போதும் உழுதுகொண்டே இருக்கத் தகுந்த, இயற்கை வளம் நிறைந்த வயல்களில், உழவர்கள், அழகிய நீரின் அலைகளையும், தாமரை மலர்களையும் தள்ளுகின்ற வலிய எருதுகளைக் கொண்டு உழுதலைச் செய்ய, பின்னும் முன்னும் உழவுக்குத் தப்பி எழுந்த செங்கழுநீர் மலர்களினுடைய மணங்கமழ்கின்ற கடல்மல்லையில் உள்ள தலசயனம் என்னும் கோயிலை வணங்குதலையே, இயற்கையாக உடைய நெஞ்சத்தைப் படைத்த அன்பு உடையவர்களை, என்னுடைய தூய மனமே, நீ தொழுது வணங்குவாயாக! (8)

பிணங்கள்இடு காடு அதனுள் நடமாடு பிஞ்ஞகனோடு,
இணங்கு திருச்சக்கரத்து எம்பெருமானார்க்கு
இடம்,விசும்பில்
கணங்களியங் கும்மல்லைக் கடல்மல்லைத்
தலசயனம்,
வணங்கும் மனத்தார் அவரைவணங்கு என்றன் மட
நெஞ்சே!

பிணங்களைச் சுடுகின்ற சுடுகாட்டில் நடமாடுகின்ற உருத்திரனோடு கூட, இணைந்திருக்கின்ற அழகிய சக்கரத்தை ஏந்திய எம்பெருமானாகிய திருமாலுக்கு இடமானதும்; தேவர் கூட்டங்கள் வந்து உலவுகின்ற பெருமையை, உடையதுமான கடல்மல்லையில் தலசயனம் என்னும் கோயிலை வாழ்த்தி வணங்குவதற்குரிய மனம் படைத்த அடியவர்களை,என்னுடைய நெஞ்சமே,நீ வணங்கிஉய்வாயாக! (9)

கடிகமழு நெடுமறுகில் கடல்மல்லைத் தலசயனத்து,
அடிகள் அடியேநினையும் அடியவர்கள் தம்மடியான்,
வடிகொள் நெடுவேல் வலவன் கலிகன்றி ஒலி
வல்லார்,
முடிகொள் நெடுமன்னவர்தம் முதல்வர் முதலாவாரே.

மணம் கமழ்கின்ற நீண்ட வீதிகளை உடைய கடல்மல்லைத் தலசயனத்தில் எழுந்தருளியிருக்கின்ற, எம்பெருமானுடைய திருவடிகளையே தியானிக்கின்ற அடியவர்களுக்கு அடியவரும் ;கூர்மை பொருந்திய பெரிய வேலைக் கொண்டு போர்புரிவதில் வல்லவரும் ஆகிய, திருமங்கையாழ்வாருடைய இத் திருப்பாடல்களை அன்புடன் ஓதவல்லவர்கள், முடிசூடிய அரசர்களுக்கும் பேரரசர்களாய், தலைவர்கள் ஆகப்பெற்று விளங்குவார்கள். (10)

# ஆலவாய் நகரில் அருள் வள்ளல்

'அறநெறி அண்ணல்' – 'சைவ சேவாமணி'
திரு. கி. பழநியப்பனார், மதுரை

கதிரவன் தோன்ற இன்னும் சில நாழிகைகள் உள்ளன. எங்கும் ஒரே இருள் மயம். தெருக்களில் வெகு தூரத்திற்கு ஒன்றாகக் கம்பங்களில் மண்ணெண்ணெய் விளக்குகள் மினுக்கு மினுக்கு என்று எரிந்து அணையும் தருவாயில் இருந்தன. தாம் இருப்பதை அவை காட்டிக் கொண்டனவே தவிர, வழிப்போக்கர் மேடுபள்ளம் பார்த்து நடக்கச் சிறிதும் உதவி புரியவில்லை. குண்டும் குழியுமாக உள்ள தெருக்களின் நடுவில் மேலும் ஆங்காங்கு சில நாய்களும் படுத்திருந்தன.

சுமார் நூறாண்டுகளுக்கு முன்னர், இந் நிலையில் இருந்த மதுரைநகர் வீதி ஒன்றில், அமைதியும் இருளும் சூழ்ந்த அந்நேரத்தில், ஓர் உருவம் மெதுவாக நடந்து சென்று கொண்டு இருந்தது. புற இருளை அகற்றும் விளக்கொளி இல்லையாயினும், அக ஒளியின் துணை கொண்டு நடப்பதாகத் தோன்றியது. வயது சுமார் இருபத்தைந்து இருக்கும். ஆடையாக ஒரு வெள்ளை வேட்டியும் துண்டுமே இருந்தன. கையில் மாற்று ஆடையைச்சுருட்டி வைத்திருந்தது; மடியில் விபூதிப்பை, நெற்றியிலும் திருநீற்று ஒளி வீசிக்கொண்டிருந்தது. இளைஞராகத் தோன்றினும் தெய்வ பக்தியில் முதிர்ந்தவர்போல், ஏதோ துதிப்பாடலைமுணுமுணுத்துக் கொண்டே சென்றார். அவர் மெதுவாகச் சென்றாலும், செல்லும் வழியும் சேரும் இடமும் நன்றாகத் தெரிந்து செல்வது போன்றே தோன்றியது. நடுத்தெருவில் படுத்திருந்த நாய்கள் தலையைத் தூக்கிப் பார்த்து விட்டு மறுபடியும் துயில் கொள்ளும். தினந் தினம் அதே நேரத்தில் வருபவர்தானே என்பதை அவை நன்றாய் அறியும்போலும்! கிருஷ்ணராயர் தெப்பக்குளத்தின் மேலக்கரை வழியாகச் சென்று, மேற்கே திரும்பி இரயில் பாலத்தை அடைந்து, அதனை யொட்டிவடக்கு நோக்கிச் சென்றார் அவ் இளைஞர்; வைகையாற்றின் தென் கரையை அடைந்தார். நதியில் நீரோட்டம் இல்லை; ஒரே மணற்பரப்பு.

முன்பு ஒரு காலத்தில் இதே இடத்தில் தான், வைகையின் வெள்ளப் பெருக்கிலிருந்து மதுரையைக் காக்க, சோமசுந்தரப் பெருமான் ஒரு கூலியாளாக வந்து, திருமுடியில் மண்சுமந்து அதற்குக் கூலியாக உதிர்ந்த பிட்டும் பிரம்படியும் பெற்றார். மாணிக்கவாசகருக்காக இப் பாடுபட்ட பெருமானின் திருவிளையாடலை நினைத்துக் கொண்டே மணற்பரப்பில் நடந்து சென்றார் அம்மனிதர்; ஓர் ஒடுகாலை அணுகினார்.

ஒடுகாலில் தண்புனல் ஊற்றெடுத்து மேற்கிலிருந்து கிழக்குநோக்கிஓடிக்கொண்டிருந்தது. குளிப்பதற்குத் தக்கவாறு ஒடுகாலில் நடுப்பகுதி அகன்று ஆழமாக அமைந்திருந்தது. உட்கார்ந்தால் கழுத்தளவு தண்ணீர் ஆழம்; நன்றாகக் கால் நீட்டிப்படுத்து முங்கி முழுகுவதற்குப் போதுமான அளவு நீளம்; தெள்ளிய அவ்வூற்று நீரை அறிவிலிகளோ ஆடுமாடுகளோ அசுத்தப்படுத்தாமல் பார்த்துக்கொள்ள ஒரு காவலர். அவர் அமர்வதற்கு ஒடுகாலின் கரையில் ஒரு சிறு தட்டிப்பந்தல்.

ஒடுகாலை நோக்கி வந்த மனிதரைக் கண்டதும்; ''வாருங்கள் சாமி! வணக்கம். இப்பொழுதுதான் துப்பரவு செய்து முடித்தேன்'' என்று ஒடுகாலின் உரிமையாளர் வரவேற்றார். 'நல்லபணி செய்தாய்! சேர்வை! உமக்கு விநாயகப்பெருமான் அருள் கிட்டும்' என்று வாழ்த்தினார் சுவாமிகள்.

'ஒவ்வொரு நாளும் முதலில் சாமிதான் என் ஒடுகாலில் குளிக்கவேண்டுமென்றே நான் விநாயகரை வேண்டிக் கொள்வேன். அவனருளால் அவ்வாறே தினம் நடைபெறுகின்றது. முதலில் சாமி ஒடுகாலில் காலெடுத்து வைத்தால், அன்று நாள் முழுதும் எனக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்று அன்புகனியக் கூறினார் சேர்வை.

சேர்வை, மணப்பாறையிலிருந்து வந்தவர் போலும். அதனால் அவரை மணப்பாறைச் சேர்வை என்றே பலரும் அழைத்தனர். தன் உடல் உழைப்பைக்கொண்டு வாழ்பவர். சுவாமிகளிடம் மிக்க அன்புடையவர், அவர்களுக்குச் செய்யும் தொண்டைப் பெரும் பேறாகக் கருதியவர்.

சுவாமிகள் நீராடித் திருநீறு அணிந்து இறைவனை வழிபட்டுப் புறப்படும் சமயம், பலர் வந்து சுவாமீ, வணக்கம் என்று கூறிக் குளிக்கச் செல்வர். சிலர் அவசர அவசரமாகக் குளித்து விட்டுப் பின் தொடர்ந்து சுவாமிகளின் அருளுரையைச் செவிமடுத்தவாறே வருவர்.

இவ்வாறு 'சாமி, சாமி' என்று அன்புடன் அழைக்கப்படுபவர் நாகலாபுரம்-இரெட்டியப்பட்டி எனும் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியப் பிள்ளை என்பவரே யாவர். இவர் இரண்டாண்டுகளுக்கு முன் வீட்டை விட்டு வெளியேறி மதுரைக்கு வந்தவர்; ஒழுக்க சீலர்; தூய உள்ளம் படைத்தவர். இவர் மதுரை

வந்தது முதல் விடியல் நேரத்தில் வைகையூற்று நீராடலை எக்காரணம் பற்றியும் ஒருநாளும் கைவிட்டதில்லை.

அதிகாலை நீராடலை ஒழுக்கமாகக் கொண்டது போல், அன்னை மீனாட்சி ஆலய வழிபாட்டையும் முடித்தே பிற அலுவல்களில் நாட்டம் செலுத்துவார். ஆற்றிலிருந்து நேராகத் திருக்கோவிலுக்குச் செல்வார். சித்தி விநாயகர் சந்நிதி தொடங்கி ஒவ்வொரு சந்நிதியிலும் முறையாக வழிபட்டு அன்னையின் திரு முன் வருவார்.

ஐயறிவும் உள்ளொடுங்க, விழிகளிலே ஆனந்த அருவி பொங்க, மதுரமிகு வண்தமிழால் துதித்துப் பாடுவார். பின்னர் சொக்கநாதப் பெருமானை வழிபட்டு, ஒரு தனி இடத்தில் தியானத்தில் அமர்வார். பிள்ளை அவர்கள் இறைவனை வேண்டிக் கொள்வது தனக்குப் பொன்னும் பொருளும் வேண்டும் என்பதல்ல. உலக மக்கள் உய்யும் வழியைக் காட்டுக என்பதேயாகும்.

இவ்வுலகில் வாழுயிர்கள் எல்லாமும்
எவ்விதத்தும் இடருறாமல்
செவ்விய நல்லருள் வாழ்க்கை எளிதாற்றித்
திருவருளாம் செல்வம் பேணித்
திவ்விய மாய்ப் பேரின்ப முத்திபெற
வழியொன்று செய்வாய் என்று
செவ்வியகைம் மலர் கூப்பித் தொழுதுநல்
நீராடிச் செம்மை பூண்டார்''

நதி நீராடித் தம் அருட் குருவாகிய விநாயகப் பெருமானிடம் கோரிய இவ்வரத்தையே திருக்கோயிலிலும் கேட்பார். திருக்கோயிலில் திருக்காப்பு நீக்கித் திருவனந்தல் வழிபாடு தொடங்கும்போது வழிபாட்டில் கலந்து கொள்வார்; வழிபாடு முடிந்து பிள்ளை அவர்கள் வெளியில் வர மணி ஏழாகிவிடும். நேராகத் தாம் பணிபுரியும் கடையை நோக்கிச் செல்வார்.

சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் கணக்கப்பிள்ளையாகப் பணியாற்றியது, ஓர் இசுலாமியர் கடை. அது அன்னை மீனாட்சியின் சந்நிதிக்கு அண்மையில் இருந்த புகழ்பெற்ற பல்பொருள் அங்காடி. பிள்ளையவர்கள் குறித்த நேரம் தவறாது கடையைத் திறக்க வந்து விடுவார்கள். பழுத்த சிவனடியாராகக் காட்சிதரும் பிள்ளை அவர்கள், ஓர் இசுலாமியர் கடையில் கணக்கப் பிள்ளையாய் இருந்தது திருவருட் செயலேயாகும்.

*1879*-ல் தம் *23*வது வயதில் வீட்டை விட்டு ஒருவரும் அறியாது வெளியேறிய சுப்பிரமணியப் பிள்ளை, இரெட்டியப்பட்டியிலிருந்து திருச்செந்தூர் சென்றார். செந்திலாண்டவன் வழிகாட்ட அங்கிருந்து நேராக மதுரைக்குக் கால்நடையாக வந்தார். அறிமுகமானவர்கள் ஒருவரும் இல்லை. அப்பெருநகரில் எங்கு தங்குவது, என்ன செய்வது என்பன புலப்படவில்லை. பிள்ளை அதை எண்ணிக் கவலைப் படவில்லை. அன்னை இருக்கின்றாள்; அவள் வழிகாட்டுவாள் என்று திடமாக நம்பினார். திருக்கோயிலுக்குச் சென்றார். ''என் உள்ளொளியைப் போற்றித்தான் நான் மக்களுக்குப் பணி செய்ய முடியும், அவ்வொளியைப்போற்ற நான் என் உடலைப் போற்ற வேண்டும், அதற்கு வழிகாட்டு அன்னையே!'' என்று மீனாட்சியம்மையை வேண்டி நின்றார்.

''உள்ளம் உயரற்கு ஆறும் கோயிலுமே
உதவுமெனக் கொண்ட அண்ணல்
உள்ளொளிரும் ஆன்மாவைப் போற்றுவது
தூய உடம்பென நினைந்தார்
தெள்ளிய மெய்ஞ்ஞான மிந்த உடம்பின்றி
எய்தவொணா தென்ன உள்கி
எள்ளலிலாதிவ் வுடம்பைப் பேணுமிடம்
யாதென்ன எண்ண லானார்''

அன்னை வழிகாட்டினாள். அந்நகரில் நேர்மையான வாணிபத்தால் புகழ் பெற்றது உருண்மைமீரா முஹைதீன் இராவுத்தர் கடை என்பதைக் கேள்வியுற்று அங்கு சென்றார் சுப்பிரமணியப் பிள்ளை.

பிள்ளை அவர்களின் தோற்றத்தையும் முகப்பொலிவையும் அருள்நோக்கையும்பார்த்த கடை முதலாளி, அவர் வாய்திறந்து வேலை கேட்டதும், தமக்கு ஒரு பெரும் புதையல் கிடைத்ததாகவே மகிழ்ச்சியுடன் கணக்கு எழுதும் பணியை மேற்கொள்ளச் செய்தார். பல அடியவர்களின் வாழ்க்கைக் கணக்குகளை நேர் செய்யத் தோன்றிய ஒருவர் அவ்வாறு கடைக்கணக்கில் பணப்பற்று வரவை நேர் செய்ய அமர்ந்தது விநோதமே!

எண்ணற்ற பலவித வெளிநாட்டு உள்நாட்டுச் சாமான்கள் கொள்முதல் செய்தல்; அவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் கடனுக்கும் ரொக்கத்திற்கும் விற்றல்; நெல்லையிலுள்ள கடையின் கிளைக்குச் சரக்குகளை அனுப்புதல் - பெறுதல்; குறிப்பிட்ட நபர்களுக்குக் குறிப்பிட்ட தொகைக்கு மேல் போகாது, குறிப்பிட்ட காலத்திற்கு மேலும் நிலுவை நிற்காது பார்த்துக் கொள்ளுதல்; ஒவ்வொரு பொருளின் கொள்முதல் அடக்கவிலை என்ன என்பதை உடனுக்குடன் கண்டறிந்து குறித்தல் ஆகிய அனைத்திற்கும் கணக்கு வைத்துக் கொள்வது மிகச் சிரமமான வேலையாகும். அவ்வப்பொழுது பல சிக்கல்கள் தோன்றுவது இயல்பு. அவற்றைத் திறமையுடன் கவனித்துக் கணக்குகளை எழுதுவது அநுபவம் பெற்றவர்களுக்கும் எளிதானதல்ல. பிள்ளை அவர்கள் மனம் தளராது அப்பணியை ஏற்று முதலாளிகள் வியக்கும்படி துல்லியமாகக் கணக்குகளை எழுதி வந்தார். பிள்ளையவர்கள் கடைப்பணியை ஏற்ற நாள்முதல் கடையில் நாளும் வியாபாரம் பெருகிச் செல்வம் குவிந்தது.

இரெட்டியப்பட்டியில் மகனைக் காணாது பெற்றோர்களும் உறவினர்களும் கவலையுற்றிருந்தனர். வெகுநாட்களுக்குப் பின் யாரோ ஒருவர், பையனை மதுரையில் பார்த்தேன் என்று கூறக் கேட்டுத் தந்தையாரும் மற்றும் சிலரும் மதுரைக்கு வந்தனர். எங்கெங்கோ தேடிக் காணாது ஒருநாட் காலையில்

திருக்கோயில் அருகில் உள்ள கடையில் தம் அருமை மகனைக் கண்டு, தந்தை ஆனந்தக் கண்ணீர் வழிய, கட்டி அணைத்துக் கொண்டார். மகனை ஊருக்கு வருமாறும், அவன் விருப்பம்போல் இருப்பதற்கு இனி யாரும் தடை செய்ய மாட்டார்கள் என்றும் கூறி, மன்றாடி அழைத்தார். அழுதார் தந்தை.

பெற்ற தந்தையின் பாசத்தைப் புரிந்து கொண்ட பிள்ளை, தன் நிலையை அவர்கள் உணரவில்லையே என்று கவலையுற்றார். தாம் செய்ய வேண்டிய அருட்பணி தடை பெறுமே என்று எண்ணினார். தம்மால் வேறெங்கும் வர முடியாது என்று திட்டவட்டமாகக் கூறி விட்டார். வேறு வழியின்றித் தந்தையார் தன் பேரன் பிச்சாண்டி பிள்ளை என்பவரை, மகனுக்குத் துணையாக இருக்கும்படி விட்டுவிட்டு ஊர் திரும்பினார். மகனுக்குத் திருமணம் செய்துவிட்டால் அவனைப் பிடித்த தெய்வப் பித்து நீங்குமென்று பலர் கூற அதற்கு ஏற்பாடு செய்ய முனைந்தார். நல்ல இடத்தில் ஒரு பெண்ணரசியைத் தேர்ந்து மதுரையிலேயே திருமணத்தை நடத்தி வைத்தார்.

சுப்பிரமணியப் பிள்ளைக்குத் திருமணத்தில் விருப்பமில்லையாயினும் அதற்கு உடன்பட்டார். இல்லறத்திலிருந்து துறவு மேற்கொள்ள வேண்டும் என்பதும், இல்லறத்தாரும் முத்தி பெறலாமென்பதும் தமிழ்ச் சான்றோர்களின் முடிவு என்பதை அவர் நன்கு அறிவார்.

உள்ளமதில் துறவுமனப் பான்மைமக
  உடையவராய் இருந்திட் டாலும்,
வள்ளலார் இல்லறத்தார்க் குணர்வூட்டி
  உய்விக்க வந்த தாலே
எள்ளலிலா இல்லறத்தை இவர்க்கருள
  இறைவர் திருவுளத்திற் கொண்டார்.
கள்ளமிலா இவருளத்திற கேற்ற நல்ல
  சுறபரசி மணப்பெண் ணானார்.

வீட்டிற்கு மனையரசி வந்ததால், பிள்ளை அவர்களின் வாழ்க்கை முறையில் ஏதும் மாற்றம் ஏற்படவில்லை. வழக்கம்போல் அதிகாலை வைகை நீராடல், அடுத்துத் திருக்கோயில் வழிபாடு, கடைப்பணி அனைத்தும் முறையாக நடைபெற்றன. சோற்றுக்கடை உணவிற்குப் பதில் அன்பு மனையாள் ஆக்கிய உணவை உண்பதுதான் ஒரே மாற்றம்.

இல்லற வாழ்வும் கடைப்பணியும் தற்காலிகமானதாகவே பிள்ளையவர்கள் செய்து வந்தனர். தாம் செய்ய வேண்டிய பெரும் பணிக்குக் காலத்தை எதிர்நோக்கி இருந்தார்.

ஞாலமிசை தாமினிதே செய்யவந்த
  அரும் பணியை நன்று செய்யக்
காலம்வரும் வரையினிலங் காடியில்நற்
  கணக்கெழுதும் தொழில் மேற்கொண்டு
சிலமிகும் தமைக்காட்டிக் கொள்ளா மல்
  அடக்கமுடன் திகழ்ந்தார் அண்ணல்
ஏலஅவர் உள்ளிருந்தூக்குஅருள் அவர்கண்
  முகப்பொலிவால் இலங்கிற் றன்றே

அமைதியாக, உறுதியாக, தெளிவாகத் தாம் எதற்காக வந்தோம், செய்ய வேண்டிய பணி யாது என்பதை உணர்ந்தார். அவற்றை நிறைவேற்ற மனமுருகி இறையருளை வேண்டி வந்தார். திருமுகத்தில் அருள் ஒளி நாளும் வளர்ந்தது. பார்த்தோர் பயபக்தியுடன் நடந்து கொண்டனர். பெயரைச் சொல்லிக் குறிப்பதை விட்டனர். 'சுவாமிகள்' அல்லது 'இரெட்டியப்பட்டிசுவாமிகள்' என்றே கூறத் தொடங்கினர். கடைமுதலாளியாகிய இசுலாமியரும் அவரைச் 'சாமி' என்றே அழைத்தனர்.

இரெட்டியப்பட்டி சுவாமிகளின் தூய உள்ளத்தையும் தெய்வ பக்தியையும் அருள் மொழிகளையும் கேள்வியுற்று மக்கள் பலர் அவரைக் கண்டு வணங்கி ஆசி பெறுவதைப் பெரும் பேறாகக் கருதினர். ஆற்றங்கரைக்கும், திருக்கோயிலுக்கும், இராவுத்தர் கடைக்கும் தேடி வந்து ஆசிபெறுவோர் கூட்டம் பெருகிற்று.

மானாமதுரைச் சுவாமிகள் என்ற ஒரு தூய துறவி, அப்பகுதி மக்களால் மிகவும் பக்தியுடன் போற்றப்படுபவராவர். இரெட்டியப்பட்டி சுவாமிகள் என்ற இல்லறத்துறவி ஒருவர் மதுரையில் ஓர் இசுலாமியர் கடையில் பணிபுரிகிறார் என்பதைக் கேள்வியுற்றார். மதுரைக்குச் சென்று அவரைப் பார்க்க வேண்டுமென்ற அவாமேலீட்டால் புறப்பட்டு வந்தார். இருவரும் சந்தித்தனர். ஒருவரையொருவர் புரிந்து கொண்டனர். உள்ளத்தால் ஒன்றுபட்டனர். இல்லறத்தானும் ஞானியாகலாம் என்பதை உணர்ந்தார். மானாமதுரைச்சுவாமிகள் வாழ்த்தி விடை பெற்றார். இந்நிகழ்ச்சி ஊர் முழுதும் பரவிற்று. அன்பர் கூட்டம் பெருகிற்று. அவர்கள்பால் சுவாமிகள் இதுவரை காட்டி வந்த அன்பு அருளாக மாறியது. கருணை வள்ளல் ஆயினர் இரெட்டியப்பட்டி சுவாமிகள்.

ஒருநாள் வழக்கமாகச் செல்லும் நேரத்திற்கு வெகு முன்பே, புறப்பட்டு வைகைக் கரைக்குச் சென்றார்கள். அவர்கள் உள்ளத்தில் தோன்றிய ஏதோ ஓர் உணர்வு இழுத்துச் சென்றது என்றே கூற வேண்டும். ஓடுகாலில் அந்நேரத்தில் சேர்வையும் வரவில்லை. நம் சுவாமிகள் நீராடினார்கள். திருநீறு அணிந்தார்கள். தாம் வழிபடும் விநாயகப் பெருமானை நினைந்து கைகூப்பித் தேம்பித் தேம்பி அழுதார்கள். உன் திருவுருவை எனக்குக் காட்ட மாட்டாயா என்று ஏங்கினார்கள்.

எவ்வுயிரும் உயும் வழியை எளிதுணர்த்தல்
  வேண்டுமென ஏங்குகின்றேன்
திவ்வியநின் திருக்காட்சி கண்டின்பம்
  திளைக்கவுன்னி உருகுகின்றேன்
ஒவ்வொரணுவுளும் நிறைந்த ஒருவ! என்
  விழைவினை நீ உணர்ந்தி லாயோ?
செவ்வையுற நின்னுருவைக் காட்டிவழி
  செப்புகெனத் தேம்பி நின்றார்.

அப்பொழுது திடீரென்று நினைத்தற்கும் அரிய ஓர் அற்புதம் நிகழ்ந்தது. வைகையின் மணற்பரப்பில் எத்திசையும் இருள் சூழ்ந்து அமைதி நிலவியது. சுவாமிகள் தன்னந்தனி

யாகக் கைகூப்பிக் கிழக்கு நோக்கி நிற்கின்றார்கள். கோடி சூரியன் ஒன்று கூடினாற் போல் ஒரு பேரொளி; அருட்பெருஞ் சோதி; மண்ணையும் விண்ணையும் அளாவி சுவாமிகளின் முன் நின்றது. பார்ப்பதற்குக் கண் கூசும் அவ்வொளிப் பிழம்பின் நடுவிலே தன் ஞான குருவாகிய விநாயகப் பெருமானின் திருவுருவைக் கண்ணுற்றார் சுவாமிகள், திகைத்தார்; மருண்டார்; தெளிந்தார்; உளம் உருகினார். ஆடினார், பாடினார்; செய்வதறியாது மயங்கினார். இரு கரங்களையும் நீட்டி ஓடித் தழுவினார்; எம்பெருமானை அணைத்தார்; பாய்ந்தது அவர் உடலில் மின்சக்தி போன்று ஓர் அருட்சக்தி; உணர்வு இழந்தார்; தெளிந்த பின் தம் அணைப்பிலே விநாயகப் பெருமானின் சிலா உருவம் ஒன்று இருப்பதைக் கண்டார். என்னே! தம் கழுத்தில் ஒரு மலர் மாலை இருப்பதையும் கண்டார். அன்று சண்டிகேசுவரருக்குச் சிவபெருமான் மாலை அணிந்து அருளியது போன்று, இன்று இரெட்டியப்பட்டி சுவாமிகளுக்கு விநாயகப் பெருமான் மாலை அணிந்து அருளினார். சோதி மறைந்தது. விநாயகர் திருவுருவைச் சுற்றிச் சுற்றி ஆனந்தக் கூத்தாடினார் சுவாமிகள்.

அவ்வமயம் அங்கு வழக்கமாக நீராட வரும் அன்பர்கள் பலர் வந்தனர். இறைவன் நிகழ்த்திய திருவிளையாடலை அறிந்து அதிசயித்தனர். அருகில் இருந்த ஓர் அரச மரத்தடியில் விநாயகரை எழுந்தருளச் செய்து, கும்பிட்டுக் கூத்தாடி வழிபட்டனர். ''ஸ்ரீ பரிபூர்ண விநாயகர்'' என்று சுவாமிகள் வாழ்த்த எல்லோரும் சரணம் சரணம் என்று வாழ்த்தினர். இச்செய்தி நகரில் பரவியதும் மக்கள் திரள் திரளாக வந்து பரிபூர்ண விநாயகருக்குக் குடம் குடமாகப் பாலபிடேகம் செய்து வழிபட்டனர்.

இதனைக் கேள்வியுற்றதும் இராவுத்தர் கடை ஊழியர்களும் முதலாளியும் வந்துகண்டு தங்கள் கடையின் கணக்குப் பிள்ளையைப் புகழ்ந்து போற்றினர். சுவாமி அவர்கள் பரிபூர்ண விநாயகரை எழுந்தருளுவித்த இடம் இதுதான் என்பதை அவர்களே ஒரு வெண்பாவாக அருளியுள்ளார்கள்.

மதுராபுரி வடக்காய்
வைகைநதித் தென்பால்
சதுரார் ரயில்பாலம்
தன்மேற்காய் - எங்கும்
கதித்தோங்கும் செந்நெல்சூழ்
கட்டிடத்தின் கீழ்பால்
உதித்தாய் என்
உள்ளத் துறை.

பரிபூர்ண விநாயகரை வழிபட்டு, நாடியன பெற்ற நன்மக்கள் நாளுக்கு நாள் பெருகினர். இரெட்டியப்பட்டி சுவாமிகள் துணை என்று திருநீறு பூசி நலம் பெற்றோர் பலர். மதுரை நகரெங்கும் இறைவன் இன்னருள் ஊற்றெடுத்துப் பெருகிற்று. இறைவனின் 65-ஆவது திருவிளையாடல் நமது காலத்தில் நடந்ததே என்று பெருமிதம் கொண்டனர் மதுரை வாழ் மக்கள்.

இந்நிலையில் சுவாமிகள் பம்பாய் சென்று கடை அலுவலாகச் சில காலம் அங்குத் தங்க வேண்டியதாயிற்று. அந்நாட்களில் சுவாமிகளின் அடியார்கள் பரிபூர்ண விநாயகரை நாள்தோறும் பக்தியுடன் வழிபட்டு வந்தனர். சுவாமிகள் மதுரைக்குத் திரும்பியது கண்டு அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை.

விநாயகப் பெருமானுக்குக் கோயில் எழுப்ப வேண்டுமென்று முடிவு செய்தனர். அவர்கள் விருப்பப்படியே சுவாமிகள் முன்னின்று கோயில் திருப்பணியைச் செய்து தம் திருக்கரங்களாலேயே குடமுழுக்கும் செய்து வைத்தார்கள். மேலும் அவ்வன்பர்கள் பரிபூர்ண விநாயகர் கோயிலுக்குத் தென்புறம் கடம்பவனநாதர் கோயில் ஒன்றும் சுவாமிகளின் ஆசியுடன் எழுப்பி முடித்தனர்.

மக்களின் மனம் செம்மையுற வேண்டுமென்று தம் மனத்திற்கு உபதேசம் செய்யும் முறையில், பல பக்தி ததும்பும் இசைப்பாடல்களைச் சுவாமிகள் பாடத் தொடங்கினர். பாடல்கள் ஊற்றெடுத்தாற்போல் வந்து கொண்டிருப்பதை அடியார்கள் கண்டு வியந்தனர்.

சுவாமிகளிடம் திருநீறு பெற்றுத் தீராத நோயும் தீர்ந்தது. பலருக்கு நினைத்த காரியம் நிறைவேறியது. மக்கட்பேறு பெற்றனர். இவ்வாறு எதை எதையோ வேண்டி சுவாமிகளைப் பார்க்க வருவோர் கூட்டம் பெருகிற்று.

உயிர்த்தொகை அனைத்தும் அல்லல் அகற்றி, அருளின்ப வாழ்வாற்றத்தக்க அருள் நெறியை உலகுக்கு அருளவேண்டும்; அதற்கேற்ற அருந்தவம் ஆற்றவேண்டும் என உன்னிய அண்ணலார்க்கு அகநாட்டம் மிகுவதாயிற்று. உணவைச் சுருக்கிப் பேச்சைச் சுருக்கி முடிவில் பேசாவிரதமே மேற்கொண்டு விட்டார்கள். அன்பர், நண்பர், உறவினர், கடைமுதலாளி, யார் பேசினும் வாய் திறந்தார் இல்லை. ஒரு சில எழுதிக் காட்டினார்கள். பின்பு அதனையும் கைவிட்டு எதற்கும் புன்சிரிப்பே பதிலாக முடிந்தது. ''உணவில்லாது, பேசாது இராவுத்தர் கடைத்திண்ணையிலேயே இருக்கின்றார் இரெட்டியப்பட்டி சுவாமிகள் என்பதைக் கேள்வியுற்று, கூட்டங் கூட்டமாக வந்து காணத் தொடங்கினர் மதுரை மக்கள். கடை உரிமையாளர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை மக்களுடன் சேர்ந்து அவர்களும் கவலையுற்றனர்.

ஒருநாள் திடீரென்று சுவாமிகளைக் காணவில்லை. ஊரெங்கும் தேடினர். பயனில்லை. கருணை வள்ளல் பொதிகை மலையில் தவம் மேற்கொள்ளச் சென்றுவிட்டார் என்பதை ஒருவரும் அறியார். இவ்வாறு சுவாமிகளின் தவ வாழ்விற்கு வழிவகுத்த மதுரைப்பதி என்ன மாதவம் செய்ததோ!

இரெட்டியப்பட்டி சுவாமிகளின் திருவடி வாழ்க!

புகழ் வளர்க! திருவருள் பெருக! ***

# நம்மாழ்வாரின் பரதத்துவ நிர்ணயம்

திரு எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், M.A.,B.L.,

புத்தூர், திருச்சிராப்பள்ளி.

ஆழ்வார்கள் அனைவருமே, 'திருமகள் கேள்வன் ஆகிய நாராயணனே, பிரமன், சிவன் முதலான எல்லாத் தெய்வங்களையும் படைத்தளித்தழிக்கும் முழு முதற்கடவுள்' என நிர்ணயம் செய்தவர்களே ஆயினும், இப்படி நிர்ணயம் செய்வதில் இரு முறைகள் உண்டு. மற்ற தெய்வங்களின் தாழ்ச்சியைப் பிறர்மனம் புண்படும்படி, உள்ளது உள்ளபடியே பேசி, உறையிடாத வாளையுடைய போர் வீரனைப்போலப் போரிட்டுப் பிற மதத்தினரை வெற்றிகொண்டு, பரதத்துவ நிர்ணயம் செய்தவர்கள் சில ஆழ்வார்கள். திருமழிசையாழ்வார் இவர்களுக்குத் தலைவர்; அதனாலேயே 'உறையில் இடாதவர்' என்றே அழைக்கப்பட்டவர்.

மற்ற தெய்வங்களின் தாழ்ச்சியைச் சொல்லும்போதும், வாழைப் பழத்தில் ஊசியேற்றுவது போலக் கடுமை தெரியாதபடியும், பிறர் மனம் புண்படாதபடியும், நண்பனைப் போல உபதேசித்துப், பிற மதத்தினரையும் இசைய வைக்கும் வார்த்தை சொல்லிப், பரதத்துவ நிர்ணயம் செய்தவர்கள், மற்றும் சில ஆழ்வார்கள். நம்மாழ்வார் இவர்களுக்குத் தலைவர். இத் தன்மையை நம்மாழ்வாரின் சில பாசுரங்களைக் கொண்டு நிரூபிப்போம்.

''வணங்கும் துறைகள் பலபல
  ஆக்கி, மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல ஆக்கி,
  அவையவை தோ(று)
அணங்கும் பலபல ஆக்கி, நின்
  மூர்த்தி பரப்பி வைத்தாய்!
இணங்கு நின்னோரை இல்லாய்!
  நின்கண்வேட்கை எழுவிப்பனே''

—திருவிருத்தம், 96.

என்பது திருவிருத்தத்தில் ஓர் பாசுரம். இதில் ஆழ்வார் எம்பெருமானைக் குற்றம் சாட்டுகிறார். இராஜச தாமச தெய்வங்களை வணங்கச் சொல்லி உபதேசிக்கும் மதத் தலைவர்கள் பற்பலரை அவன் உண்டாக்கி விட்டானாம்; புத்தி பேதத்தால் விவாதம் செய்யும் மதங்கள் பலவற்றையும் ஏற்படுத்தி விட்டானாம்; அவ்வச் சமயங்கள் தோறும் தன் சரீரமாய்ப் பல சீவர்களைத் தெய்வங்களாக அமைத்துவிட்டானாம். ஆக சம்சாரிகள் சம்சாரத்தில் அழுந்துவது எம்பெருமான் செய்த இக்காரியங்களாலேயே யொழிய, சம்சாரிகளின் குற்றமன்று என்று முதல் மூன்று அடிகளாலே எம்பெருமானைக் குற்றஞ்சாட்டிக் கடைசி அடியாலே, நீ ஒப்பற்றவனாயினும், உன்னால் வந்த இச் சிக்கல்களையெல்லாம் போக்கி, சம்சாரிகளைத் திருத்தி, உன்னிடம் பக்தி உண்டாகும்படி செய்து விடுகிறேன் நான், என்கிறார் ஆழ்வார். இனி, பரதத்துவ நிர்ணயம் செய்யவே அவதரித்த திருவாசிரியத்தைப் பார்த்தால்,

''சிவன்அயன் இந்திரன் இவர்முதல் அனைத்
  தோர்
தெய்வக் குழாங்கள் கைதொழக் கிடந்த
தாமரை யுந்தித் தனிப்பெரு நாயக!
மூவுல களந்த சேவடி யோயே!''

என்று முதற்பாசுரத்திலேயே, உலகனைத்தையும் படைத்த தாமரையுந்தியை உடையவனாகையாலும், மூவுலகளந்த சேவடியோனாகையாலும், இவனே தனிப் பெரு நாயகனாவான்; சிவன் அயன் முதலான தெய்வங்களால் தொழத்தக்கவன் என்று காரணங்காட்டிப் பரதத்துவ நிர்ணயத்தைச் செய்திருக்கிறார். நாலாம் பாசுரத்தில்,

''யாவகை உலகமும் யாவரும் இல்லா
மேல்வரும் பெரும்பாழ்க் காலத்து, இரும்
  பொருட்(கு)
எல்லாம் அரும்பெறல் தனிவித்து, ஒருதான்
ஆகித் தெய்வ நான்முகக் கொழுமுளை
ஈன்று, முக்கண் ஈசனொடு தேவு பல
நுதலி, மூவுலகம் விளைத்த உந்தி
மாயக் கடவுள் மாமுதல் அடியே'',

என்று, ஒன்றுமில்லாமல் இருந்த பிரளய காலத்தில், சர்வவித காரணமும் தானேயாகி நின்று, பிரமன் முதலான தெய்வங்களையும், உலகங்களையும் படைத்த உந்தியை உடைய மாயக் கடவுளே பரம்பொருளாயிருக்கத் தக்கவன் என்று காட்டுகிறார். ஐந்தாம் பாசுரத்தில் உலகனைத்தையும் அளந்த திருவிக்கிரமனின் அருஞ்செயலைச் சொல்லி,

''முடிதோள் ஆயிரம் தழைத்த
நெடியோய்க் கல்லதும் அடியதோ உலகே?''

என்று எவரும் மறுக்கவொண்ணாத கேள்வியைக் கேட்கிறார். உண்மை இப்படி யிருக்க, உலகினர் கண்டகண்ட தெய்வத்தையெல்லாம் கால் கட்டித் திரிந்து சம்சாரத்தில் அழுந்துவதைக் கண்டு ''ஓ!ஓ! உலகினது இயல்பே!'' என்று, அவர்கள் படவேண்டிய துன்பத்தைத் தாம் பட்டுக் கதறுகிறார். ஆறாம் பாசுரத்தில் ''நளிர் மதிச் சடையனும்'' என்று தொடங்கும் கடைசிப் பாசுரத்தில்,

''ஒருபொருள் புறப்பாடின்றி முழுவதும்
அகப்படக் கரந்து ஓர் ஆலிலைச் சேர்ந்தஎம்
பெருமா மாயனை அல்லது
ஒருமா தெய்வம்மற்று உடையமோ யாமே?''

என்று 'சிவன் முதலான எல்லாத் தெய்வங்களையும், மற்ற சீவர்களையும், அசேதனங்களையும் ஒன்றொழியாமல் தன் வயிற்றில் வைத்து ரட்சித்துக் கொண்டு, ஓர் ஆலிலையில் சேர்ந்த பெருமாயனை அல்லது வேறொருவனைப் பரம்பொருளாகக் கொள்ளமாட்டேன் யான்' என்று பிரமாண யுக்திகளுக்குப் பொருந்திய தம் அநுட்டானத்தைக் காட்டிப் பிறரை இசைய வைக்கிறார். திருவாய்மொழியில் ''ஒன்றும் தேவும்'' (திருவாய்மொழி 4-10) என்னும் பதிகத்திலும், திருவாசிரியத்தில் கையாண்ட இதே முறைகளைக் கையாண்டிருப்பது காணத்தக்கது. இனி, பெரிய திருவந்தாதியைக் காண்போம்.

''இனி நின்று நின்பெருமை யான் உரைப்ப தென்னே!
தனி நின்ற சார்விலா மூர்த்தி,-பனிநீர்
அகத்துலவு செஞ்சடையான் ஆகத்தான், நான்கு
முகத்தான்நின் உந்தி முதல்'' (71)

என்ற பாசுரத்தில் பேசநின்ற சிவன் திருமாலின் திருமேனியில் ஒரு பாகத்திலே ஒடுங்கியவனாகவும், படைப்புக் கடவுளான நான்முகன் திருமாலின் உந்தியிலிருந்து தோன்றியவனாகையாலே, திருமாலே தனிநின்ற சார்விலா மூர்த்தியாயிருப்பவன் என்பதைப் பிறரும் மறுக்கவொண்ணாதபடி நிலைநாட்டி,

''முதலாம் திருவுருவம் மூன்றென்பர், ஒன்றே
முதலாகும் மூன்றுக்கும் என்பர்,-முதல்வா
நிகரிலகு காருருவா! நின்பதத்த தன்றே
புகரிலகு தாமரையின் பூ'' (72)

என்னும் அடுத்த பாசுரத்தில், மும்மூர்த்திகளும் சமமானவர் என்றும், ஒன்று என்றும், மும்மூர்த்திகளுக்கும் மேலான ஏதோவொன்று பரம்பொருள் என்றும் கூறும் மதங்கள் அனைத்தும் தவறு என்பதை, உலகனைத்தையும் படைத்த பிரமனைப் படைத்த உன் உந்தித் தாமரையே நடு நிலையாளர்களுக்குக் காட்டித் தருகிறது என்று, மனச்சாட்சியுள்ளவர்கள் எவரும் மறுக்க வொண்ணாதபடி, கடுமை சிறிதுமில்லாமல் பரதத்துவ நிர்ணயம் செய்கிறார். இன், திருவாய்மொழியின் முதற் பாகத்திலே, பரதத்துவ நிர்ணயம் செய்ய வேண்டிய முறையைக் காட்டியிருக்கும் அழகை அனைவரும் காணவேண்டும். முதற்பத்து மூன்றாம் திருவாய்மொழியில்,

''உணர்ந்து உணர்ந்து இழிந்து அகன்று
உயர்ந்து உருவியந்த இந்நிலைமை
உணர்ந்து உணர்ந்து உணரிலும் இறைநிலை
உணர்வரிது உயிர்காள்!
உணர்ந்து உணர்ந்து உரைத்து உரைத்து
அரி அயன் அரன் என்னும் இவரை
உணர்ந்து உணர்ந்து உரைத்து உரைத்து
இறைஞ்சு மின் மனப்பட்டது ஒன்றே!''
(1-3-6)

என்னும் பாசுரத்தில், சீவாத்மாவின் அறிவரிய சொரூபத்தை அறிவதைக் காட்டிலும், பரமனின் சொரூபத்தை அறிவது கடினம் என்று காட்டி, இதை அறிவதற்கு ,அரி அயன் அரன் என்னும் மூவருடைய சொரூப சுபாவங்களையும் பலகால் சொல்லிச் சொல்லி ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்றும், அப்படி ஆராய்ந்து பார்த்தால் மூன்றில் ஒன்றுதான் பரம்பொருளான உங்கள் மனத்தில் படும் என்றும், அதை நான் சொன்னால் பட்சபாதத்தால் சொல்லுகிறேன் என்று கூறுவீர்களாகையாலே, நீங்களே முடிவு கட்டிக் கொள்ளுங்கள் என்றும், நடுநிலை நின்று கூறும் அழகு காணத்தக்கது.

''ஒன்று எனப் பல என அறிவரும்
வடிவினுள் நின்ற
நன்று எழில நாரணன் நான்முகன்
அரன் என்னும் இவரை
ஒன்ற நும் மனத்து வைத்து உள்ளி
நும் இரு பசை அறுத்து
நன்று என நலம் செய்வது அவனிடை
நம்முடை நாளே''

என்ற அடுத்த பாசுரத்திலும், மும்மூர்த்திகளும் ஒருவரா, பலரா? என்று அறிவது மிகவும் கடினம் என்றுகூறி, இவர்களைப் பட்சபாதம் சிறிதும் இல்லாமல் ஒருபடியாக உங்கள் மனத்தில் வைத்து ஆராயுங்கள் என்றும், நடுநிலை நின்று அப்படி ஆராய்ந்தால் மூவரில் ஒருவன்தான் பரம்பொருள் என்றும், மற்ற இருவர் பரம்பொருள் அல்லர் என்றும் தேறும் என்றும், அப்படிப் பரம்பொருள் அல்லாதவராகத் தேறிய இருவரிடமும் உமக்கு உள்ள பற்றை விட்டு, பரம்பொருளாகத் தேறியவர்களிடம் பக்தி செலுத்துங்கள் என்றும், ஆழ்வார் உபதேசிக்கிறார்.

பரம்பொருள் அல்லாதவராகத் தேறும் இருவர் யார் என்றும், பரம்பொருளாகத் தேறுகிறவன் யார் என்றும், வெளிப்படையாக இப்பாசுரத்தில் சொல்லாமலிருப்பது, ஆழ்வாருடைய நடுநிலைமையையும், நடுநிலை நின்று ஆராய்ந்தால் எவன் பரம்பொருளாகத் தேறுவான் என்பதில் ஆழ்வாருக்குள்ள உறுதியையும் காட்டுகின்றன. நடுநிலை நின்று ஆராயும் வழியாதென்பதை ''திண்ணன் வீடு'' (திருவாய் 2-2) ''ஒன்றும் தேவும்'' (திருவாய் 4-10) முதலான பதிகங்களிலும், மற்றும் பற்பல பாசுரங்களிலும் திருவாய்மொழியிலேயே ஆழ்வார் தாமே காட்டியிருக்கிறார்.

பிறரும் மறுக்கவொண்ணாதபடி, அவர்களையும் இசைய வைக்கும் வார்த்தை சொல்லிப் பரதத்துவ நிர்ணயம் செய்யும் ஆழ்வாருடைய திறமையை, இக்கட்டுரையில் ஓரளவு அநுபவித்தோம்.

***

# உபதேச இரத்தினமாலை

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னம் திருவாய் மொழிப்பிள்ளை
தாம் உபதேசித்தநேர்
தன்னின் படியைத் தணவாத சொல்
மணவாள முனி,
தன் அன்புடன்செய் உபதேச
ரத்தின மாலைதன்னைத்
தன்நெஞ்சு தன்னில் தரிப்பவர்
தாள்கள் சரண் நமக்கே
—தனியன்

## முன்னுரை:

திருமால்நெறிப் பெருஞ்சான்றோராகிய மணவாளமாமுனிகள் அருளிச் செய்த நூல்களுள், உபதேசரத்தினமாலை என்பதும் ஒன்றாகும். தொன்மைமிக்க வைணவ சமயத்தின் அருட்பெருஞ் சான்றோர்களானஆழ்வார்களின் திருப்பெயர்கள், அவர்கள் அவதரித்த மாதங்கள், நட்சத்திரங்கள், தலங்கள், அவ் ஆழ்வார்கள் அருளிய திவ்வியப்பிரபந்தங்களுக்கு வியாக்கியானங்கள் முதலியவற்றை அருளிச் செய்த ஆசாரியர்களின் பெருமைகள், அவ்வாசாரியர்களுள் தலைவரான பிள்ளைலோகாசாரியரின் பெருமை, அவர் அருளிச் செய்த நூல்களுள் தலைசிறந்த சீர் வசனபூடண நூலின் பெருமை, அந்நூலின் சாரமான நுண்பொருள்கள் ஆகிய பலப்பல செய்திகள், உபதேச ரத்தின மாலை என்னும் இந்நூலின்கண், அழகிய இனிய வெண்பாக்களில் சிறப்புற எடுத்து விளக்கப் பெறுகின்றன. அந்நூற் பொருளைச் சுருக்கமாக ஈண்டுத் தொகுத்துக் காண்போம்.

## ஆழ்வார்கள்:

பொய்கையார் பூதத்தார் பேயார் திருமழிசையாழ்வார் நம்மாழ்வார் குலசேகரப் பெருமாள் பெரியாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் திருப்பாணாழ்வார் திருமங்கையாழ்வார் ஆகிய இவர்கள் பதின்மரும், முறையே அவதரித்தவர்களாவர், இவர்களுடன் ஆண்டாள்நாச்சியார், மதுரகவியாழ்வார் என்னும் இருவரையும் சேர்த்து, ஆழ்வார்கள் பன்னிருவர் என்று கூறுவதும் உண்டு. ஆழ்வார்களின் அவதாரக் கிரமத்தை ஒருசிலர் மாற்றிக் சொல்லுவராயினும், அது பொருந்தாது. ஆழ்வார்களின் அவதாரக் கிரமம் இதுதான் என்று, மணவாள மாமுனிகள், இந்நூலில் அறுதியிட்டு வரையறை செய்து கூறியுள்ளமை, சிறப்பாகப் போற்றற் பாலது.

பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை
அய்யன் அருள்மாறன் சேரலர்கோன் - துய்யபட்ட
நாதன் அன்பர் தாள்தூளி நற்பாணன் நற்கலியன்
ஈதிவர்தோற் றத்தடைவாம் இங்கு

## தோற்றத்தின் மாதமும் நாளும்:

இங்ஙனம் ஆழ்வார்களின் தோற்றத்தின் அடைவினை வரையறை செய்தருளிய மணவாள மாமுனிகள், அவர்கள் தோன்றிய மாதங்களையும் நட்சத்திரங்களையும்கூட அழகுறத் தொகுத்துக் கூறுகின்றார். பொய்கையார், பூதத்தார், பேயாழ்வார் என்னும் மூவரும், ஐப்பசி மாதத்தில் தோன்றியவராவர். பொய்கையார் திருவோணத்திலும், பூதத்தார் அவிட்டத்திலும், பேயாழ்வார் சதயத்திலும் தோன்றியருளினர். பொய்கையார் பேயார் பூதத்தார் என்னும் இம் மூவரும் மற்றைய ஆழ்வார்களுக்கு முன்னே முதலில் தோன்றி, நற்றமிழால் நூல் செய்து நாட்டை உய்வித்த பெருமையுடையவர்கள் ஆதலின், இவர்களுக்கு முதலாழ்வார்கள் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

முதலாழ்வார்கள் தவிர்ந்த மற்றைய ஆழ்வார்களில் திருமங்கையாழ்வார் கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் தோன்றியருளினார். திருப்பாணாழ்வார் கார்த்திகை மாதத்தில் உரோகிணி நட்சத்திரத்திலும், தொண்டரடிப்பொடியாழ்வார் மார்கழிக் கேட்டையிலும், திருமழிசையாழ்வார் தைமாதமகத்திலும், குலசேகர ஆழ்வார் மாசிப் புனர்பூசத்திலும், நம்மாழ்வார் வைகாசி விசாகத்திலும், பெரியாழ்வார் ஆனிச் சுவாதியிலும் தோன்றியருளினர்.

## பெரியாழ்வாரும், திருப்பல்லாண்டும்:

ஆழ்வார்களில் திருப்பல்லாண்டு பாடிய பட்டர்பிரான் என்பவருக்குப் பெரியாழ்வார் என்னும் சிறப்புப்பெயர் உண்டு. எம்பெருமானுக்கு மங்களாசாசனம் செய்வதில் மற்றுள்ள ஆழ்வார்களுக்கு இருந்த ஆர்வத்தைக் காட்டிலும், மிகுதியான பரிவு மிகப்பெரிய அளவில் இருந்ததினால், இவருக்குப் பெரியாழ்வார் என்னும் காரணச் சிறப்புப்பெயர் ஏற்பட்டது.

மங்களா சாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள்
தங்கள்ஆர் வத்தளவு தான்அன்றிப் - பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான்
பெரியாழ்வார் என்னும் பெயர்

வேதத்துக்குப் பிரணவமாகிய ஓங்காரம் எங்ஙனம் முதன்மையாகவும் சுருக்கமாகவும் மங்களமாகவும் அமைந்துள்ளதோ, அதுபோல ஆழ்வார்கள் அருளிய திவ்வியப் பிரபந்தங்களுக் கெல்லாம், பெரியாழ்வார் பாடியருளிய திருப் பல்லாண்டு முதன்மையும் சுருக்கமும் மங்கள மும் அமைந்து, அவற்றிற்கெல்லாம் முதன்மை யானதாகத் திவ்வியப்பிரபந்தத்தின் தொடக் கத்திலேயே சிறப்பாக அமைந்து திகழ்கின்றது. ஆழ்வார்களில் பெரியாழ்வாருக்கு ஒப்பாக ஒரு வரும் இல்லை. அதுபோல் திருப்பல்லாண்டுக்கு ஒப்பான நூலும் வேறொன்றும் இல்லை.

## ஆண்டாளும், மதுரகவியும், இராமாநுசரும்:

இத்தகைய சிறப்புமிக்க பெரியாழ்வாரின் திருமகளார் ஆகிய ஆண்டாள் திருவாடிப்பூரத் திலும், நம்மாழ்வாருடைய குணப்பெருங் கட லில் ஆழ்ந்து திளைத்து இன்புற்ற மதுரகவி யாழ்வார் சித்திரைமாதத்துச் சித்திரையிலும், அனைவரும் உய்ய உதித்த எதிராசர் ஆகிய இராமாநுசர் சித்திரைத் திருவாதிரையிலும் தோன்றியருளினர். ஆண்டாளுக்கு ஒப்பில் லாமைபோல, அவர் அவதரித்த திருவாடிப் பூரத்திற்கும் ஒப்பில்லை. ஆண்டாள், 'அஞ்சு குடிக்கு ஒரு சந்ததியாய்த் தோன்றியவர்'. ஆழ்வார்கள் தம் செயலை விஞ்சிநிற்கும் தன் மையள். இளமையிலேயே முதிர்ந்த பக்தி ஞானங்கள் கைவரப்பெற்று, பிஞ்சாய்ப் பழுத்த வள். அவளைப் பக்தியுடன் நாளும் வழுத்துவது நமது கடமையாகும்.

''அஞ்சு குடிக்கொரு சந்ததியாய், ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையளாய்ப்-
பிஞ்சாய்ப்
பழுத்தாளை, ஆண்டாளைப், பக்தியுடன்
நாளும்
வழுத்தாய் மனமே! மகிழ்ந்து''*

திருவெட்டெழுத்தாகிய திருமந்திரத்தின் இடையில் உள்ள நம என்னும் பதம்போல, மதுரகவியாழ்வார் செய்தருளிய ''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' என்னும் திவ்வியப்பிரபந்தம், நாலாயிரத் திவ்வியப்பிரபந்தங்களின் நடுவே முன்னோர்களால் அதன் சிறப்புக் கருதிச் சேர்க்கப்பட்டுத் திகழ்கின்றது.

---

*எம்பெருமானுக்கு என்ன தீங்கு நேருகிறதோ என்று, அன்பினால் அஞ்சுகின்ற குடிகளாகிய ஆழ்வார்கள் பதின்மருக்கும் உரிய ஒரே புதல்வி யாகக் தோன்றியதனால், ஆண்டாள் ''அஞ்சு குடிக்கு ஒரு சந்ததி'' என்று சிறப்பித்துக் குறிக்கப் பெற்றார். இனி ''அஞ்சுகுடி'' என்பது பெரியாழ் வாருக்குரிய சிறப்புப் பெயரும் ஆகும். இங்ஙன மின்றித் திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார் என்னும் நான்கு குடிகளுடன் முதலாழ்வார்கள் ஆகிய ஒரு குடியும் சேர்ந்து ''அஞ்சுகுடி'' (ஐந்து குடி) எனப் பொருள் கொள்ளுதலும் பொருந்தும்.

வாய்த்ததிரு மந்திரத்தின் மத்திமம் ஆம்பதம்போல்
சீர்த்த மதுரகவி செய்செயலை-ஆர்த்தபுகழ்
ஆரியர்கள் தாங்கள், அருளிச் செயல்நடுவே
சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து

## எம்பெருமானார்:

ஆழ்வார்களின் பெருமையையும், அவர்கள் அருளிச் செய்த திவ்வியப் பிரபந்தங்களின் சிறப்பினையும், நாதமுனிகள் முதலாகிய நம் முடைய ஆசாரியர்களைத் தவிர, அறியவல்ல வர்கள் யாரும் இல்லை.

தெருளுற்ற ஆழ்வார்கள் சீர்மை அறிவார்ஆர்?
அருளிச் செயலை அறிவார்ஆர்?-அருள்பெற்ற
நாத முனிமுதலாம் நம்தே சிகரை அல்லால்,
பேதைமன மே! உண்டோ? பேசு

நம்முடைய ஆசாரிய பரம்பரையில், நாத முனிகள் முதலாக இருந்த ஆசாரியர்கள் எல் லோரும், திவ்வியப் பிரபந்தங்களின் அரிய பெரிய பொருள்நலங்களை ஓராண் வழியா கவே உபதேசித்து வந்தனர். ஆனால் அவர் களுக்குப் பிறகு சிறப்பு வாய்ந்த எதிராசராகிய எம்பெருமானார் (இராமாநுசர்), தம் பேரரு ளின் திறத்தால், அடியார்களையெல்லாம் விளித்து அறைகூவி, இப்பொருள் நலங்களைக் கேட்க ஆசையுடையவர்கள் எல்லோருக்கும் இவற்றை உபதேசியுங்கள் என்று கட்டளை யிட்டு, முன்னோர்கள் வைத்துக் கொண்டிருந்த ஒரு வரையறையினை நீக்கி அறுத்துப் போக்கி விட்டார்.

ஓர்ஆண் வழியாய் உபதேசித் தார்முன்னோர்!
ஏரார் எதிராசர் இன்னருளால்-பாருலகில்
ஆசையுடை யோர்க்கெல்லாம் ஆரியர்காள்
கூறும்என்று,
பேசி வரம்பறுத்தார் பின்.

இங்ஙனம் இந்த வைணவமாகிய தரி சனத்தை இராமாநுசராகிய எம்பெருமானார், வளர்த்துப் பரப்பிய செயலின் மாட்சிமையை யாவரும் அறிந்து வியந்து போற்றுவதற்கா கவே, இத்தரிசனத்திற்கு ''எம்பெருமானார் தரிசனம்'' என்று நம்பெருமாள் (திருவரங்க நாதர்), இந்தக் கொள்கைக்குப் பெயரிட்டு வழங்கும்படி நிலைபெறுவித்தார்.

எம்பெரு மானார் தரிசனம் என்றே இதற்கு
நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார்;-
அம்புவியோர்
இந்தத் தரிசனத்தை எம்பெருமா னார்வளர்த்த
அந்தச் செயல்அறிகைக் கா!

## திருவாய்மொழி உரையாசிரியர்கள்

திருக்குருகைப்பிரான்பிள்ளான், நஞ்சீயர், பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப் பிள்ளை, வாதிகேசரி அழகிய மணவாளச்சீயர் ஆகிய ஐந்து பெருஞ்சான்றோர்களும், நம்மாழ் வார் அருளிய திருவாய்மொழி என்னும் தமிழ் வேதத்தினைத் தம்முடைய விரிவுரைகளினாலே காத்தருளிய பெரியோர்கள் ஆவார்கள். இவ் வைந்து பெருமக்களும் திருவாய்மொழிக்கு

வியாக்கியானங்கள் இயற்றியருளி யிருக்காமற் போனால், அந்தோ! திருவாய் மொழியின் பொருளைத் தேர்ந்து உரைக்கவல்லவர்களாக, இக்காலத்தில் ஒருவரும் இருக்கமாட்டார்.

பிள்ளான், நஞ்சீயர், பெரியவாச் சான்பிள்ளை,
தெள்ளார் வடக்குத் திருவீதிப்-பிள்ளை,
மணவாள யோகி, திரு வாய்மொழியைக் காத்த
குணவாளர் என்றுநெஞ்சே கூறு

தெளிந்த ஞானத்தை உடையவராகிய திருக்குருகைப்பிரான் பிள்ளான் என்பவர், தம் ஆசிரியராகிய இராமாநுசரின் திருவருளால் திருவாய்மொழிப் பொருளை விளக்கி அருளிச் செய்த வியாக்கியானம், ஆறாயிரப்படி என்பதாகும். ஒற்றுநீக்கி 32 எழுத்துக்கள் கொண்டது கிரந்தம் எனப்பெறும். இங்ஙனம் ஆறாயிரம் கிரந்தம் கொண்ட நூலுக்கு ஆறாயிரப்படி என்பது பெயர். இவ்வாறே, நஞ்சீயர் ஒன்பதினாயிரப்படியும்; வாதிகேசரி அழகிய மணவாளச் சீயர், பன்னீராயிரப்படியும்; நம்பிள்ளையின் ஆணைப்படி, பெரியவாச்சான் பிள்ளை இருபத்துநாலாயிரப்படியும்; வடக்குத் திருவீதிப்பிள்ளை முப்பத்தாறாயிரப்படியும், முறையே இயற்றியருளினர்.

இவர்களில் ''வியாக்கியானச் சக்கரவர்த்தி'' என்னும் விழுப்புகழ்பெற்ற பெரியவாச்சான் பிள்ளை என்பவர், திருவாய்மொழிக்கு மட்டுமின்றி, மற்றுமுள்ள திவ்வியப்பிரபந்தங்களுக்கும்கூட, விரிவான வியாக்கியானங்கள் அருளிச்செய்துள்ளார். அதனாலேயே திவ்வியப் பிரபந்தப்பொருள்களை, இக்காலத்தில் யாவரும் அறிந்து கற்று மகிழும் வாய்ப்பு ஏற்படுவதாயிற்று.

## நஞ்சீயர்:

வேதாந்த முனவர் என விளங்கியிருந்த நஞ்சீயர், திருப்பாவைக்கும், கண்ணிநுண் சிறுத்தாம்புக்கும் மட்டுமே, வியாக்கியானங்கள் செய்தருளினார். பிள்ளைலோகாசாரியருடைய தம்பியராகிய அழகியமணவாளப் பெருமாள் நாயனார் திருப்பாவைக்கும், அமலனாதிபிரானுக்கும், கண்ணிநுண் சிறுத்தாம்புக்கும் வியாக்கியானம் செய்து அருளினார். வாதிகேசரி அழகிய மணவாளச்சீயர் மூவாயிரத்தில் திருவிருத்தம் ஒன்றுக்கே உரையிட்டருளினார்.

திருவாய்மொழிக்கு ஐந்து பெருஞ்சான்றோர்கள், வியாக்கியானங்கள் இயற்றினர். ஆயினும் ஈடுமுப்பத்தாறாயிரப்படி என்னும் வியாக்கியானமே, இப்பொழுது பரவலாகப் போற்றிப் பயின்று வரப்பெறுகின்றது. நம்பிள்ளையின் உபந்நியாசங்களைக் கேட்டு, அவற்றை வடக்குத்திருவீதிப்பிள்ளை பட்டோலை கொண்டு, ஈடுமுப்பத்தாறாயிரப்படி என்னும் நூலாக்கி முடித்து, நம்பிள்ளையின் திருமுன்பு கொண்டு போய் வைத்தருளினார். அதனைத் திருவரங்கர் மூலமாக நம்பிள்ளையிடமிருந்து, சிறியாழ்வார் அப்பிள்ளை என்னும் ஈயுண்ணி மாதவப் பெருமாள் என்பவர், கிடைக்கப்பெற்றார்.

## பிள்ளை லோகாசார்யர்

பெரியவாச்சான் பிள்ளை இயற்றிய இருபத்து நாலாயிரப்படி வியாக்கியானத்திற்கும், வடக்குத் திருவீதிப்பிள்ளை இயற்றிய ஈடு முப்பத்தாறாயிரப்படி வியாக்கியானத்திற்கும், மூலகாரணமாக இருந்தவர், லோகாசாரியர் என்பவர். நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் என்றாற்போல, லோகாசாரியருக்கு அவர்தம் அளப்பரும் பெருமை பற்றி, நம்பிள்ளை என்னும் சிறப்புப் பெயர் ஏற்பட்டது.

நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
என்பர் அவரவர்தம் ஏற்றத்தால்;-அன்புடையோர்
ஏத்துதிரு நாமங்கள் தாம்என்று நன்னெஞ்சே
ஏத்ததனைச் சொல்லிநீ இன்று.

கந்தாடைத் தோழப்பர், தம் அன்பின்மிகுதியால், நம்பிள்ளையினை ''இவர் என்ன லோகாசாரியரோ?'' என்று வியந்து வினவி மகிழ்ந்தார். அதனால் நம்பிள்ளைக்கு லோகாசாரியர் என்னும் சிறப்புப்பெயர் வழங்குவதாயிற்று.

தமது குருவாகிய நம்பிள்ளையின் லோகாசாரியர் என்னும் பெயரையே, வடக்குத் திருவீதிப்பிள்ளை தம்முடைய புதல்வருக்கு வைத்து மகிழ்ந்தார். அதனால் முடும்பைக்குல திலகரான வடக்குத் திருவீதிப்பிள்ளையின் புதல்வருக்கு, பிள்ளை லோகாசாரியர் என்னும் திருப்பெயர் அமைந்தது. இப்பிள்ளை லோகாசாரியர் இயற்றிய நூல்களுள் ''சீர்வசனபூடணம்'' என்னும்நூல், மிகவும் சிறப்பு வாய்ந்தது. அந்நூலின் சிறப்புக்கு இணையான மற்றொரு நூல் எதுவும் இல்லை.

## சீர்வசன பூடணம்

தொல்லாசிரியர்கள் அருளிச் செய்த திருமொழிகளையே பெரும்பாலும் சேர்த்து, கல்வியிற் சிறந்த அறிஞர்களின் ஆன்மாவுக்கு அழகிய அணிகலனாகச் 'சீர்வசனபூடணம்' என்னும் நூலைப் பிள்ளைலோகாசாரியர் அருளிச் செய்தார். அவர் அருளிச் செய்த சீர்வசன பூடணம் என்னும் நூலின் ஆழ்ந்த பொருள்கள் எல்லாவற்றையும், அறிய வல்லவர்கள் இல்லை. அதன்கண் பணிக்கப்பட்டவற்றைக் கடைப்பிடிக்க வல்லவர்களும் இல்லை. யாரோ ஓரிருவர்தாம் அந்நூலின் நுண்பொருள்களை அறியவும், அறிந்தனவற்றைக் கடைப்பிடிக்கவும் இருத்தல் கூடும், அஃது எல்லோராலுமே அறியவும், கடைப்பிடிக்கவும் இயலாத ஓர் அரும்பெரும் நூல் ஆகும்.

ஆர்வசன பூடணத்தின் ஆழ்பொருளெல் லாம்
அறிவார்?
ஆர்அதுசொல் நேரில் அநுட்டிப்பார்?- ஓர் ஒருவர்
உண்டாகில் அத்தனைகாண் உள்ளமே!
எல்லார்க்கும்
அண்டாத தன்றோ அது?

ஆயினும், உய்ந்து ஈடேற வேண்டும் என்னும் விருப்பம் உடையவர்கள், அந்நூலின் ஆழ்ந்த பொருள்களைக் குருமுகமாகப் பயின்று

உணர்ந்து, அந்நூற் பொருளைக் கடைப்பிடித்து ஒழுகுதல் கடமையாகும். ஆசிரியர்பால் கேட்ட சிறந்த பொருள்களை மறவாமல் ஊன்றி மனத்தில் பதித்துக் கடைப்பிடிக்க வல்லவர்கள் இந் நூலைக் கற்றுணரப் பெரிதும் முயலுதல் வேண்டும். சீர்வசனபூடண நூலுக்கு, நல்ல மரபு நெறியில், பற்பல விரிவுரைகளும் விளக்க வுரைகளும் ஏற்படுதல் கூடும். அவற்றையும் அறிவுடையார் அனைவரும் பயின்றுணரக் கடமைப்பட்டவர் ஆவர். சீர்வசனபூடணத்தின் செம்பொருளைச்சிந்தையினாற் சிந்தித்தாலும், வாயினால் எடுத்துப் பிறர்க்கு விளக்கிக் கூறினாலும், அஃது அப்பொழுதைக்கப்பொழுது ஆரா அமுதம் என மிகப் பெரிய ஆனந்தத்தை விளைவிக்கும். ஏனெனில், அதன்கண் அரிய பல அற்புதமான பொருள்கள் அழகுற விளக்கப்பெற்றுள்ளன. அவற்றுள் சில வருமாறு:

## அரிய அறவுரைகள்:

(1) தன்னுடைய குருவின் திருவடிகளில் அன்பில்லாதவர்கள், திருமகளின் கேள்வனான திருமாலின்பால் அன்பு செலுத்தினாலும், அவர்களுக்குத் திருமால் பரமபதம் கொடுக்க விரும்பமாட்டான். ஆசாரிய பக்தியற்றவர்கள் ஒருபோதும் வைகுந்தம் போகமாட்டார்கள்.

தன்குருவின் தாளிணைகள் தன்னில்அன் பொன்றில்லாதார்,
அன்புதன்பால் செய்தாலும் அம்புயைகோன்,- இன்பமிகு
விண்ணாடு தான்அளிக்க வேண்டியிரான்; ஆதலால்
நண்ணார் அவர்கள்திரு நாடு

(2) ஞானம் அநுட்டானம் என்னும் இரண்டையும், குறையற நிரம்பப்பெற்ற குருவை அடைந்து பணிந்தால், திருமகள் கேள்வனாகிய திருமால் அவர்களுக்குத் தானாகவே வைகுந்த நாட்டை, வலிந்து வந்து கொடுப்பான்.

ஞானம் அநுட் டானமிவை நன்றாக வேயுடையன்
ஆன குருவை அடைந்தக்கால்-மாநிலத்தீர்
தேனார் கமலத் திருமாமகள் கொழுநன்
தானே வைகுந்தம் தரும்.

(3) உலகமக்களே! நீங்கள் உய்தி பெற வேண்டும் என்ற விருப்பம் உங்களுக்கு இருக்குமாயின், நீங்கள் உங்கள் ஆசாரியர்களின் திருவடிகளிலேயே அன்பு செலுத்துங்கள். அங்ஙனம் செலுத்தினால், பையரவில் பள்ளிகொள்ளும் பெருமாளின் பரமபதம், உங்களுக்கு உள்ளங்கையிலுள்ள நெல்லிக்கனிபோல, மிகவும் எளிதாகக் கிடைக்கும்.

உய்யநினை வுண்டாகில் உம்குருக்கள் தம்பதத்தே
வையும்அன்பு தன்னைஇந்த மாநிலத்தீர்!-மெய்யுரைக்கேன்
பையரவில் மாயன் பரமபதம் உங்களுக்காம்
கைஇலங்கு நெல்லிக் கனி

(4) ஆசாரியன் செய்தருளுகின்ற பேருதவியை நாம் உள்ளவாறு ஊன்றித் தெளிந்து கொள்வோமாயின், அவ்வாசாரியனைப் பிரிந்து வேறு ஓர் இடத்தில் உறைவதற்கு நம் மனம் விரும்பாது.

(5) தன் ஆசாரியனுக்குச் சீடனாகிய தான் தொண்டுபுரியும் செயல், அவ்வாசாரியன் இவ்வுலகில் எழுந்தருளியிருக்கும் வரையிலேயே இயலும். அதனை அறிந்துவைத்தும், ஆசாரியனுக்குப் பணிவிடை செய்வதன் இன்சுவையும் நற்பேறும் உணராதவர்களே, ஆசாரியனைப் பிரிந்து வேறெங்கேனும் இருப்பார்கள். அறிந்தவர்களோ, ஆசாரியனை ஒரு கணமும் பிரியாமல், அடிதாறும் நிழலும் போல, ஆசாரியனைச் சிறிதும் பிரிவின்றி ஒன்றி உடனாகவே இருந்து, பணிபுரிந்து இன்புறுவார்கள்.

(6) ஆசாரியன் சீடனின் ஆருயிரைப் பேணிக் காப்பாற்றக் கடமைப் பட்டவன்; சீடனோ ஆசாரியனின் திவ்விய மங்களத் திருமேனியைப் போற்றிப் பாதுகாக்கும் கடமையுள்ளவன். இதனைச் சீர்வசனபூடணம் முதலிய நூல்களின்மூலம் கேட்டறிந்து வைத்திருந்தும், அவ்வழியில் ஒழுகுதல் பெரும்பாலோர்க்கு அரியதாகவே இருக்கும்.

(7) பின்பழகிய பெருமாள் சீயர் என்பவர், பரமபத வாழ்க்கையிலும் விருப்பம் இன்றி, மிக்க பரம பக்தியோடு, தம்முடைய ஆசாரியரான நம்பிள்ளைக்கு அடிமைப் பணிவிடைகள் செய்து மகிழ்ந்திருந்தார். அவரைப்போல நாம் ஒவ்வொருவரும் நம் ஆசாரியருக்குப் பணிவிடைகள் செய்தொழுகக் கடமைப்பட்டுள்ளோம். பின்பழகிய பெருமாள் சீயரைப்போல, அவ்வளவு பெரிய நிலையில் ஆசாரியருக்குப் பணிவிடைகள் செய்ய நம்மால் இயலாமற் போயினும், அவரது ஆசாரிய பக்தியையும், பணிவிடைத் திறங்களையும், நாம் பல்கால் சிந்தித்துப் போற்றிப் பாராட்டி மகிழ்தலாவது செய்தல் வேண்டும். அதுவே நாம் உய்ந்து ஈடேறுவதற்கு உற்ற துணையாக அமையும்.

(8) முற்காலத்தில் வாழ்ந்த ஆசாரியர்கள், அனைவரும் கடைப்பிடித்து ஒழுகிய ஆசார சீல அருமைப்பாடுகளை அறியாதவர்கள், அவைகளைத் தம் மனம் போனபடி பலவகையாகப் பேசிப் பிதற்றுவர். அவைகளைக் கேட்டு மனம் திரிந்து, நாம் வீணே கெட்டழியாமல், நம்முடைய முன்னோர்களாகிய ஆசாரியர்களின் நல்லொழுக்கங்களையே கடைப்பிடித்து ஒழுக, நாம் பெரிதும் முயலுதல் வேண்டும்.

(9) உலகத்திலுள்ள மக்கள், நாத்திகர், ஆத்திகர், ஆத்திகநாத்திகர் என மூவகைப்படுவர். சாத்திரங்களைக் கல்லாமல், தான் தோன்றியாக மனம் போன போக்கெல்லாம் திரிகின்றவன், நாத்திகன் எனப்படுவான். உயர்ந்த சாத்திரங்களை உள்ளவாறு கற்றுணர்ந்து, நன்னெறியில் நின்று ஒழுகும் நல்லவர்கள், ஆத்திகர்கள் எனப்படுவர். சாத்திரங்களை இசைந்து கற்றுத் தேர்ந்திருந்தும், அவற்றின்படி ஒழுகாமல் தன்னிச்சைப்படி தீநெறியில் செல்பவன் ஆத்திகநாத்திகன் எனப்படுவான். இம்மூவரில் முன்னவனையும் பின்னவனையும் புறக்கணித்து விட்டு, இடைநிற்கும் நல்லவனாகிய ஆத்திக

னையே, நாம் எப்போதும் பின்பற்றி நடத்தல் வேண்டும்.

(10) நல்ல மணமுள்ள ஒரு பொருளைச் சேர்ந்திருக்கும் பொருளுக்கும்கூட, அந்த நல்ல மணம் சேர்க்கையினால் ஏற்படும். அதுபோல நல்ல குணமுடையவர்களைச் சேர்ந்தால், நமக்கு அவர்களின் நல்ல குணங்கள் ஏற்பட்டு, அதனால் நாம் பல நன்மைகளை அடையலாம்.

(11) நாம் நல்ல குணமுள்ளவர்களே யாயினும், தீயகுணமுள்ளவர்களின்பால் சேர்ந்து ஒழுகினால், நம்மிடமுள்ள நல்ல குணங்கள் அழிந்து, தீயவர்களின் தீய குணமே நமக்கும் ஏற்பட்டு, அதனால் பல தீங்குகளை அடைந்து வருந்த நேரும்.

(12) ஒரு நூலின் பொருளை நம்மினும் சிறந்த கல்வி கேள்வி அறிவுள்ள முன்னோர்கள் பால், முறைதப்பாமல் கேட்டுணர்ந்து, அதனை மேலும் சிந்தித்து ஆராய்ந்து தெளிந்து, அப் பொருளை உள்ளது உள்ளவாறே, நாம் பிறருக்கு எடுத்துக் கூற வேண்டுவது நம்து கடமை. இங்ஙனமின்றித் தமக்குத் தமக்குத் தோன்றியவாறெல்லாம், அந்நூற் பொருள்களைக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் மனம் போனவாறு பிறருக்குச் சொல்லி, இதுதான் முன்னோர்கள் கூறிவைத்த பொருள் என்று பொய்கூறி ஒழுகுபவர்கள், மிகவும் இழிந்த தீயமூர்க்கர்கள் ஆவார்கள். அத்தகைய மூர்க்கர்கள்பால் நாம் நெருங்குதலும் கூடாது.

(13) தொல்லாசிரியர்களுடைய ஞானம் நல்லொழுக்கம் முதலியவற்றை, எடுத்துரைத்துப் புகழ்ந்து விளக்குகின்ற அறிஞர் பெருமக்ளின் திருமொழிகளால், தெளிவு பெற்று, நமக்கு நல்லறிவை நல்கக் கூடிய சிறந்த ஆசாரியனை அடைந்து, அவர்தம் அடிபணிந்து, அவர் திருவுள்ளம் உவக்கும்படி பணிவிடைகள்செய்து ஒழுகினால், இவ்வுலகில் இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்னும் நிலையில், நாம் பெரிதும் இன்பமுற்று மகிழ்ந்து வாழலாம்.

## முடிவுரை:

இத்தகைய சிறந்த பல பொருள்கள் செறிந்த, உபதேச ரத்தினமாலை என்னும் இந் நூலை, நாள்தோறும் ஓதிச் சிந்தையிற் சிந்தித்து ஆழ்ந்து தெளிபவர்கள், நமக்கெல்லாம் எந்தையாகிய எதிராசர் என்னும் எம்பெருமானார் (இராமாநுசர்) திருவருளை நிறைவுறப் பெற்று, இவ்வுலகில் ஒரு குறைவுமின்றி இகபர சௌபாக்கியங்களை அடைந்து, சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வில் வாழ்வார்கள்.

ஆழ்வார்கள் வாழி! அருளிச் செயல்வாழி!
தாழ்வாதும் இல்குரவர் தாம்வாழி!-ஏழ்பாரும்
உய்ய அவர்கள் உரைத்தவைகள் தாம் வாழி!
செய்யமறை தன்னுடனே சேர்ந்து

—மணவாளமாமுனிகள்,
உபதேசரத்தினமாலை.

# சமயம் இல்லையேல், எதுவுமே இல்லை!

சமயம் என்பது, நம்முடைய மனித குல வாழ்க்கையில், நாம் எளிதாக இகழ்ந்து புறக்கணித்துவிடக்கூடிய, ஏதோ, ஒரு சிறு பகுதியோ அல்லது ஓர் அற்பமான கூறோ அன்று, சமய உணர்வின் ஆற்றல் மனித வாழ்க்கையின் தொடக்கம் முதல் இறுதிவரையில் முழுவதுமே ஊடுருவிப் பரவி விரவிப் பிரிவறக் கலந்து இயைந்து நிற்கின்றது. சமய உணர்வை மறுப்பவர்களின் வாழ்க்கையிலும் கூட, அஃது எவ்வகையாலேனும் தவிர்க்க முடியாதபடி முனைப்புற்று அமைந்து நின்றே, செயற்பட்டு வருகின்றது. ஆத்திகம் என்பது சமய உணர்வின் உடன்பாட்டுமுறை நிகழ்ச்சி என்றால், நாத்திகம் என்பதும் அதன் எதிர்மறைமுறைச் செயற்பாடே யாகும். நாத்திகர்கள் என்போர் கடவுளை மறுக்கவில்லை; கடவுளைப் பற்றிய பொருத்தமற்ற, இழிவான கருத்துக்களையே மறுக்கின்றனர் (''Atheists do not deny god. They deny only the grotesque and quixotic ideas about god'') எத்துணை மருத்துவம் செய்தும் அறவே தீர்த்து நீக்க முடியாத நிலையின் அளவுக்கு, மனிதர்கள் சமய உணர்வில் தம்மையும் அறியாமல் அழுந்தித் தோய்ந்தே கிடக்கின்றனர் (''Man is incurably and intensively religious''). எவ்வகையாலேனும் சமய உணர்வு கலக்கப்பெறாத, மனித வாழ்வு என்பது அமைதல், அறவே அரிது.

''எவர் ஒருவரும், உதாரணமாக, கலைப் பொருள்கள் பற்றியோ அல்லது கட்டிடக் கலையின் வடிவங்கள் பற்றியோ, சமய உணர்வினால் வழங்கப்படுகின்ற உள்ளுணர்வுத் தூண்டுதற் குறிப்பு எதுவும் இல்லாமல், ஒரு சிறிதும் ஆராய்ந்துணர்தல் இயலாது. அவ்வாறே இசையைப் பற்றியும், கவிதையைப் பற்றியும், சமய உள்ளுணர்வினால் நிகழ்ந்த விளைவின் தொடர்பு இல்லாமலோ, அல்லது எவ்வாற்றாலேனும் சமய உணர்வின் குறிப்பு எதுவும் இல்லாமலோ, கற்றுணர்ந்து தெளிதல் இயலாது. வரலாற்றியல், சமூகஇயல், மனிதஇயல் போன்றவைகளும்கூட, சமயச் சார்பான பழக்க வழக்கங்களும் மரபுநெறிகளும் பற்றி ஆராயாமல், நன்கு கற்பிக்கப்படவோ அல்லது திருத்தமான முறையில் பிழையின்றி விளக்கப்படவோ, இயலாது. எத்தனையோ பல மனிதர்களின் வாழ்க்கையினையும் நடத்தையினையும், ஒரு பெரும் ஆற்றலாக இருந்து சமயமானது இயக்குகின்றது—ஒழுங்குபடுத்துகின்றது—மாற்றங்கள் விளைவிக்கின்றது—நெறிப்படுத்திச் செல்லுகின்றது என்னும் உண்மையைக் குறிப்பிடாமல், மன இயலைப் பற்றி ஆராய்ந்து விளங்கிக் கொள்ளவோ, விளக்கிச் சொல்லவோ, பெரும்பாலும் முடியாது. இந்த ஒரு சில கலைத்துறைகளுக்குப் பொருந்துகின்ற இந்த உண்மையானது, ஏதேனும் ஒரு பெரும் அளவிலோ அல்லது ஒரு சிறிய அளவிலோ, அரசியல்—பொருளியல்—தத்துவம்—மருத்துவம் முதலிய பல்வேறு பிற கலைகளுக்கும்கூடப் பொருந்துகின்ற உண்மையேயாகும்'' ஆதலின் சமயம் என்பது மனித குல வாழ்க்கையின் அடிப்படையான பெரும் தேவையும், மிகவும் இன்றியமையாத அரும்பெரும் சாதனமும் ஆகும் என நாம் நன்கு உணரலாம்.

# இறைவனின் திருநடனம்

திரு. அ. இராஜராஜன், M.A. M.Phil

மனித வாழ்க்கையில், கடப்புத் தன்மையிலும் ( Transcendence ) கலப்புத் தன்மையிலும் ( Immanence ) நீக்கமற நிறைந்து இறைவன் வழி நடத்துகின்றான். உலகத்தின் ஒவ்வொரு இயக்கத்திலும் அவன் இயங்கி உயிர்களின் வாழ்க்கையில் வேறாயும், ஒன்றாயும், உடனாயும் இருந்து இயக்குவிக்கின்றான். அவனின் உயிர்மூச்சு, அவனது அன்பின்பாற்பட்ட அருள்நெறி, மனிதனின் உயிர்மூச்சு. அந்த அருளினை நுகர்ந்து, நிறைவெய்தும் பரிபூரண வாழ்க்கையின் பேரின்ப நெறி.

இறைவன் அருள்கொழிக்க ஐந்து தொழில்களைச் செய்கிறான்என்பதைச் சுட்டுவதே சிவபெருமானின் நடராசத் தோற்றம். அவன் தன்னுடைய நடராசத் தோற்றத்தை முழுவதுமாய் அடியார்களுக்குக் காட்டி ஆட்கொள்வது திருச்சிற்றம்பலமான தில்லைநகரில். அவன் அச்சிற்றம்பலத்தில் ஆடும் நடனம்,அண்டங்கள், பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றிலும் அருள் நடமாக அமைகின்றது. அஃது அடியார்களின் அகச் சிற்றம்பலத்தே ஆடுகின்ற அன்பு நடனம்.

''அவனன்றி ஓரணுவும் அசையாது'' என்பதே திருச்சிற்றம்பலத்தில் இறைவன் கொண்டிருக்கின்ற திருநடனம். அண்டத்தில் ஆடுவோன், பிண்டத்திலும் ஆடுகின்றான். ''உலகில் ஆட்டமும் அசைவும் இயக்கமும் எழுச்சியும் எங்கெங்கே உள்ளனவோ, அங்கங்கு எல்லாம் இறைவன்ன் அருள் நடம் நிகழ்கின்றது'' என்பதை எடுத்துக்காட்டவே, சிவபெருமான் தனது நடராசத் தோற்றமாக அருள்மழை பொழிகின்றான். அவனுடைய தோற்றம் உலகெங்கும் சிவசக்தியாய், எங்கும் சிதம்பரமாய் எங்கும் அருள்திரு நடனமாய், எங்கும் சிவனருளாய் நிறைந்திருக்கிறது என்பதைஎடுத்துக் காட்டுகிறது. இதனைத் திருமூலர்

> ''எங்குந் திருமேனி எங்குஞ் சிவசக்தி
> எங்கும் சிதம்பரம், எங்குந் திருநட்டம்,
> எங்குஞ் சிவமாய் இருத்தலால் எங்கெங்கும்
> தங்குஞ் சிவனருள் தன்விளை யாட்டதே;'

என்று கூறிக் காட்டுவது, அவன் மங்கள அருள் நெறியைப் பரப்புவதாக அமைகிறது.

இறைவன் அம்பலவாணனாய், கூத்தப் பிரானாய், தாண்டவராயனாய் ஆனந்த நடமாடும் காட்சி, அண்டங்கள் யாவினையும் அவன் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளும் வெற்றிப் பெருமிதத்தைக் காட்டுகிறது. அவனுடைய நடராசத் தோற்றத்தில் காணப்படும் ஒரு வலக்கை, உடுக்கையினை ஏந்திக் கொண்டிருக்கிறது. இது உயிர்களில் மறைந்திருக்கும் மாயையை நீக்கி அருளொளி பரப்புவதையும், உடுக்கையில் இருந்து எழும் 'ஓம்' எனும் நாத ஒலியிலிருந்து படைத்தல் தொழிலைக் காட்டுவதையும் உணர்த்துகிறது. மற்றொரு வலக்கை அபயகரமாக அமைந்து, எல்லாவற்றையும் தானே காத்துக் கொள்வதை உணர்த்துகிறது. இடக்கை ஒன்றில் தீ காட்சியளிக்கிறது. இது வல்வினையைச் சுட்டெரிப்பதையும், அழித்தல் தொழிலையும் உணர்த்துகிறது. மற்றொரு இடக்கை உயிர்களுக்கு முத்திப் பேற்றை அருளும் திருவடியைக் காட்டுகிறது. வலதுகால்''அபஸ்மாரம்'' என்னும் முயலகனை மிதித்துக் கொண்டு நிற்கின்றது. அது உயிர்கள் செய்த நல்வினை ,தீவினைகளுக்குத் தக்கவாறு இறைவன் ஊட்டும் மறைத்தல் தொழிலை அறிவுறுத்துகின்றது. இடதுகால் தூக்கிய திருவடி ஆன்மாக்களுக்கு இறைவன்முத்தியை அளிக்கும் அருளல் தொழிலைக் காட்டி நிற்கின்றது. இதனை,

> ''தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
> சாற்றிடும் அங்கியிலே சங்காரம் -ஊற்றமாய்
> ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோதம்
> நான்ற மலர்ப்பதத்தே நாடு'' [முத்தி

என்ற உண்மை விளக்கப்பாட்டால், திருவதிகை மனவாசகங்கடந்தார் விளக்குவதனால், நன்கு அறியலாம் கூத்தப்பிரானது துடிசேர் கரம் படைத்தலையும், அபயகரம் காத்தலையும், தீயேந்திய கரம் அழித்தலையும், சுட்டுகின்றன. அங்ஙனமே ஊன்றிய திருவடி மறைத்தலையும், தூக்கிய திருவடி அருளலையும் சுட்டும். இதனை,

> ''அரன் துடிதோற்றம் அமைத்தல் திதியாம்,
> அரன் அங்கிதன்னில் அறையிற் சங்காரம்
> அரனுற் றணைப்பில் அமருந் திரோதாயி
> அரனடி யென்றும் அனுக்கிரகம் என்னே!''

என்று, திருமூலரும் தமது திருமந்திர நூலில் அருளிச் செய்திருக்கின்றார்.

நடராசப்பெருமான் பஞ்சாட்சரத்தில் அருள் நடனஞ் செய்கிறார். அவரது திருவடியில் 'ந' கரமும், உதரத்தில் 'ம' கரமும், தோளில் 'சி' கரமும், திருமுகத்தில் 'வ' கரமும், திரு வடியில் 'ய' கரமும் விளங்குகின்றன. இதனை,

''ஆடும் படிகேளநல் லம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியிலே நகரம்; கூடும்
மகரம், உதரம்; வளர்தோள் சிகரம்;
பகரு முகம் வா, முடியப் பார்''

என்ற பாடலால் நன்கு உணரலாம்.

தில்லைப் பொன்னம்பலத்தில் அவன் ஆடு கின்ற திருநடனம், ஓய்வின்றி எப்போதும் புரி கின்ற மங்கள நடனம். சிதம்பரம் ஆகாயத்தைக் குறிக்கும். இதனை சித் - அம்பரம் எனக் கொண்டு நமது சித்தத்திலே புரிகின்ற ''சிதா காசம்'' என உணரலாம். அவனது அருள்நட னம் நின்று விட்டால், உயிரியக்கமும் நின்று விடும். அவனது ஆட்டத்தால் அண்டங்கள் அனைத்தும் ஆடுகின்றன. இதனைத் திருமூலர்,

''தத்துவம் ஆடச் சதாசிவம் தானாட
சித்தமும் ஆடச் சிவசக்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் அம்பலக் கூத்தே''

''மாயா மலத்தை ஓட்டி, கன்ம மலத்தை சுட்டு, ஆணவ மலத்தை வலியடங்க அமுக்கி, அருளால் ஆன்மாவை மேலே எடுத்து, ஆனந்தக் கடலில் உயிர்களை மூழ்கி இருக்கச் செய்வதே'' இறைவனின் திருநடனத்தின் நோக்கம். இதனை,

''மாயை தனையுதறி, வல்வினையைச் சுட்டு, மலம்
சாய அமுக்கி, அருள் தானெடுத்து-நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தான், எந்தை யார்பரதம் தான்''

என்று, திருவதிகை மனவாசகம் கடந்தார். தாம் அருளிய உண்மைவிளக்கம் என்னும் சைவ சித்தாந்த சாத்திர நூலில் அழகுற விளக்கியிருப் பது, அறிந்து இன்புறத்தக்கது.

## இந்து சமயத்தின் எழிற்கூறு

அன்னைத் தெய்வ வழிபாடு, நம் இந்து மதத்திற்கே யுரிய ஒரு பெரும் சிறப்புக் கூறும் இயல்பும் ஆகும். இந்து மதத்திற் பெரிதும் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பெறும் இவ் அன்னைத் தெய்வ வழிபாடு, அயற் சமயத்தவர்களாகிய கிறித்துவர் முதலியவர்களையும் பெரிதும் கவர்ந்துள்ளது. மேரியம்மையின் சிறப்பைப் புகழ்ந்து கொண்டாடுவதன்மூலம் கிறித்துவ சமயமும், தாராதேவியின் புகழைப் போற்று வதன் மூலம் பௌத்த சமயமும் கூட, ஒரு வகையில், தாய்மைத் தெய்வத்தின் தன்னிகரற்ற மாட்சிமை யினை உடன்பட்டுத் தழுவிக் கொண்டுள்ளன. ''இந்து மதத்தின் சிறப்புக் கூறாகத் திகழும் தாய்மைத் தெய்வ வழிபாட்டைக் கிறித்துவர்களாகிய நாமும் தழுவிக் கொண்டு போற்றலாம்''* என அயல்நாட்டு அறிஞர் ஒருவர் ஆர்வம் பெருகக் கூறுகின்றார். இதனால் தாய்மைத் தெய்வ வணக்கம் ஆகிய அன்னைத் தெய்வ வழிபாட்டின் சிறப்பினை யாவரும் தெளிந்து இனிதுணரலாம்.

—ஆசிரியர்.

*''Another feature of Hinduism may be helpful to Christianity. Hindus have given much attention to the female aspect of God. From the Rigveda to Ramakrishna the idea of God as Mother as well as Father has been expressed in Hinudism. Gods are aften worshipped together with their consorts....Occasionally, the goddess is even given greater honour. From the Christian side, Roman Catholics have seen the necessity to fulfil this need. They have given ex-aggerated importance to the virgin Mary... Hinduism has an insight for Christianity. Probably as Christianity becomes naturalized in India the idea of God as Mother will find a rapid entrance into Christian thought, as it is so deeply rooted in the soil of India. There is no reason why we should not think of God as Mother?''

—*Frank Whaling*,
An Approach to Dialogue with Hinduism
and Christianity, p.82.

# அவனது இன்னருள்

திரு உ. வே. ஆர். கண்ணன், சென்னை

உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் இரண்டுவித சுகங்கள் உண்டு. இகம், பரம் என்பவை அவை. இகம் என்பது இந்த நில வுலகில் இருக்கும் வரைக்கும் அறத்துக்குக் கட்டுப்பட்ட எல்லாச்சுகங்களையும் அனுபவிப்பது. பரம் என்பது இந்த உலகைவிட்டுத் திரும்பி வராத மேல்உலகத்துக்குச் சென்று இறைவனை அனுபவிப்பது. இதனை முக்தி என்றும், வீடு பேறு என்றும் சொல்வார்கள். வைணவர்கள் இதை வைகுண்டப்பிராப்தி என்று சொல்வார்கள். அங்குச் சென்று திருமாலைச் சேவித்து, அவனுடைய உகப்புக்காக எல்லாவித ஊழியங்களையும் இடைவிடாது செய்வதே அங்கு அனுபவிக்கப்படும் ஆனந்தம் என்பது, வைணவர்களின் கொள்கை.

இப்படி முக்தியடைய விரும்பும் எல்லோரும் எம்பெருமானைப் பக்தி செய்ய வேண்டும். பக்தி செய்வது என்பது சரணாகதி வரைக்கும் செல்லும். இது சாதாரணமாக அமையாது. இடைவிடாது இறைவனைத் தியானம் செய்தால்தான் பக்தி நிலைபெறும். தியானம் என்னும்போது, எல்லா அணிகலன்களுடனும், ஆயுதங்களுடனும் கூடிய திவ்வியத் திருமேனி முழுதுமாகத் தியானம் செய்யவேண்டும். இப்படி முழு உருவத்துடன் தியானம் செய்வது தேவை என்றாலுங்கூட, அவனுடைய திருவடிகளைத் தியானம் செய்வது மிகச் சிறந்ததாகும். பசுவின் உடலில் பால் இருந்தாலும், மடிக் காம்புகளைக் கொண்டுதான் நாம் பால் பெற வேண்டியதாக இருப்பதுபோல, எம்பெருமான் திருமேனி முழுவதும் அருள்மயமானதாக இருந்தாலும் ,அந்த அருளை நாம் பெறுவது அவனது திருவடிகள் மூலமாகவே அமையும். ஆறு முழுவதும்நீர் ஓடிக்கொண்டிருக்கும்போது எங்கு வேண்டுமானாலும் இறங்கி நீராடலாம் என்றிருந்தாலும், முன்னவர்கள் இறங்கிப் பழகிப் போன துறையில் இறங்கி நீராடினால் ஆபத்து இல்லாமலும், சிறந்த பயன்களை அளிக்கவல்லதுமாக இருப்பதுபோல, எம்பெருமானை அனுபவிப்பதற்கு அவனது திருவடிகளே பெரியோர்கள் இழியும் துறையாக அமையும்.

திருவேங்கடவன் பேரில் சுப்பிரபாதம் (திருப்பள்ளியெழுச்சி) இயற்றிய பெரியோரும், அவனுடைய திருவடிகளைப் பற்றிக் கூறும் போது ''பிறந்த குழந்தைக்குத் தாயின் முலைத் தடங்களே அதற்குத் தேவையான அமுதம் போன்ற பாலைக் கொடுப்பதில் சிறந்ததாக இருப்பதுபோல, எம்பெருமானை அடைய நினைப்பவர்களுக்கு அவனுடைய திருவடிகளே முதலில் அனுபவிப்பதாக இருக்கின்றன'' என்பதாகக் கொண்டாடியிருக்கிறார். முதலில் திருவடியைப் பற்றியே அடைய வேண்டியிருக்கிறது என்ற காரணத்தால், யானையையும் எம்பெருமானையும் ஒப்பிட்டுப் பேசுவதும் உண்டு.

எம்பெருமானைத் தியானம் செய்வது என்பது, நமக்கு நினைத்தவுடன் முடியக் கூடிய காரியமா? அதுதான் இல்லை. பழையகாலத்து முனிவர்கள்கூட, தியானம் கைவராமல் துன்பப் பட்டிருக்கிறார்கள் என்பதைப் பல கதைகள் மூலம் கேள்விப் பட்டிருக்கிறோம். இந்தக் காலத்திலும் நமக்கு அதுபற்றி நல்ல அநுபவங்கள் உண்டு. இறைவழிபாட்டுக்காக நாம் ஒதுக்கும் நேரமே மிகக் குறைவு. அந்த நேரத்திலும் இடையூறின்றி நாம் நினைத்ததை நிறைவேற்றுவது என்பது மிகக் கடினம். அந்த நேரத்துக்குத்தான் வீட்டில் எதிர்பாராத நிகழ்ச்சிகள் எல்லாம் நடக்கும். நீண்டகாலமாக வராத நண்பர்களும், சுற்றத்தாரும் அந்தநேரத்துக்கே வருவார்கள். அல்லது வீட்டில் குழந்தைகள் அந்த நேரத்தில்தான் தங்களுக்குள் ஏதாவது சச்சரவு செய்துகொண்டு, அதை நம் வரைக்கும் கொண்டுவருவார்கள். நமக்கே, உடல் நிலை சரியில்லாமல் தியானத்துக்கு ஒதுக்கிய நேரத்தைக் குறைத்துக் கொள்ளவோ அல்லது அதை ஒத்திப்போடவோ நேரலாம். இவையெல்லாம் ஒத்துக்கொண்டு அமைதியான சூழ்நிலை கிட்டியிருந்தாலும், எல்லாவற்றுக்கும் மேலாக நம்முடைய மனமானது ஒருநிலைப்படாமல் போனாலும் போகலாம். இவைகளுக்கு எல்லாம் என்ன காரணம்? நம்முடைய தியானத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று இறைவன் நினைக்காதது தான். அவன் அப்படி நினைத்திருந்தானானால், தியானம் இடையூறின்றிக் கைகூடிவிடும்.

வெண்ணெய் திருடியது பற்றிக் கோபம் கொண்ட தாய் யசோதை, கண்ணனை உரலுடன் சேர்த்துக் கட்ட நினைத்தாள். கையில் இருந்த கயிற்றால் கட்டினாள். முடிச்சுப்போட இன்னும் கொஞ்சம் கயிறு தேவைப்பட்டது. மறுபடி வீட்டிற்குள்ளிருந்து கயிறுகளைக் கொண்டுவந்து முன்னைய கயிற்றுடன்சேர்த்துக் கட்டும்போது, எவ்வளவு நீளமான கயிறு சேர்த்தாலும், கடைசியில் முடிச்சுப்போடக் கொஞ்சம் கயிறு தேவைப்படுவதாக இருந்தது. இப்படி வீட்டில் உள்ள எல்லாக் கயிற்றையும் கொண்டுவந்து சேர்த்துக் கட்டியும் முடிச்சுப் போட முடியாமல் போகவே, அவள்கைசோர்ந்து போனாள். அப்போது அவளுடைய நிலைக்கு இரங்கிய கண்ணன் ,தானாகவே கட்டுக்கு

வயப்பட்டு முடிச்சுவிழ அனுமதித்தானாம். இதைக்கொண்டே ''கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன்'' என்று அனுபவித்தார் மதுரகவியாழ்வார். இப்படிக் குழந்தையாக இருந்தபோதே, அவனைக் கயிற்றால் கட்டுவதற்குக்கூட, அவன் இசைந்தால்தான், முடியும் என்று அனுபவம் கூறும் போது, மனத்தால் கட்டுப்படுவதான தியானத்தை, அவனது இசைவு இன்றி எப்படிச் செய்யமுடியும்.?

அவனைத் தியானம் செய்யும்போது, அப்படிப்பட்ட ஒரு இசைவைத் தனக்குக் கொடுத்தருள வேண்டும் என்று திருமாலை வேண்டுகிறார் திருமழிசையாழ்வார், தன்னுடைய திருச்சந்தவிருத்தம் என்னும் பிரபந்தத்தின், 101 ஆவது பாசுரத்தில்.

இரந்துரைப்ப துண்டுவாழி! ஏமநீர் நிறத்தமா,
வரந்தரும் திருக்குறிப்பில் வைத்ததாகில், மன்னுசீர்
பரந்த சிந்தை ஒன்றிநின்று, நின்னபாத பங்கயம்
நிரந்தரம் நினைப்பதாக, நீ நினைக்க வேண்டுமே

இதில் திருமாலை முதலில், 'ஏமநீர் நிறத்தமா'! என்று கூப்பிடுகிறார். அதாவது பொன், நீர் இவைபோன்ற நிறத்தவனே என்று. நீர் என்பதால், கடல், மேகம் இவைகளைக் குறிக்கும். கடல்நிறக் கடவுள் எந்தை, கார்கலந்த மேனியான் என்பவை, இங்கே நினைக்கத் தக்கன. எம்பெருமானைப் பெரும்பாலும் எல்லாரும் நீலநிறத்தவன் என்னும்போது, இவர் பொன்நிறத்தவன் என்று எப்படிச் சொல்லுவார் என்று தோன்றலாம். திருமாலுக்குப் பொன்நிறமும் உண்டு. இந்த ஆழ்வாரே இதற்குமுன் ஒரு பாசுரத்தல் ''பொன் நிறத்த வண்ணனாய புண்டரீக னல்லையே'' என்று அநுபவித்தருக்கிறார். பொன் நிறமானவன் என்று வேதமும் கூ",ம். முதல் ஆழ்வார்களில், மூன்றாவது ஆழ்வாரான பேயாழ்வாரும்''திருக் கண்டேன் பொன்மேனி கண்டேன்'' என்று அனுபவித்தார். ஆகத் திருமாலுக்குப் பொன் நிறம் உண்டென்பதும் உறுதியாகிறது.

மேலும் திருமால் நான்கு யுகங்களில், ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு நிறத் திருமேனியுடன் காட்சியளிக்கிறான் என்பதும் ஒரு கொள்கை. கிருதயுகத்தில் வெண்மை நிறமாகவும், திரேதாயுகத்தில் பொன்நிறமாகவும், துவாபர யுகத்தில் பசுமை நிறமாகவும், கலியுகத்தில் நீலநிறமாகவும் காட்சியளிக்கிறான். இப்படிப் பார்த்தால். முன் ஒரு யுகத்தில் பொன் நிறமாகக் காட்சியளித்தான் என்பதை, ஆழ்வார் இங்கு நினைவுகூர்ந்ததாகக் கொள்ளலாம்

எந்தக் காரியத்தை ஆரம்பிக்கும்போதும் ''சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்'' என்று நாம் பிரார்த்தனை செய்யும் பகுதியில் உள்ள சசிவர்ணம் என்ற வார்த்தையால், விஷ்ணுவை வெண்மைநிறம் உடையவனாகத்தான் தியானம் செய்கிறோம். விஷ்ணு வெண்மை நிறமாக இருந்தது முதல் யுகத்தில். அப்போது இருந்த வெண்மை நிறத்தையே நாம் இன்னும் சொல்லிக் கொண்டிருப்பது போல, ஆழ்வாருடைய திருமாலின் பொன்னிற அனுபவமும் அமையும்.

திருமாலை இப்படிக் கூப்பிட்டு வாழி என்று பல்லாண்டு பாடியபிறகு, தன்னுடைய விண்ணப்பத்தை முன்வைக்கிறார், திருமழிசையாழ்வார். ''இரந்து உரைப்பது உண்டு'' என்றது, உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன் என்றபடி. அடியார்களிடத்தில் ஆண்டவனுக்கு மகிழ்ச்சி ஏற்படும் போது, அந்த மகிழ்ச்சியின் காரணமாக அடியவருக்கு ஏதாவது வரங்கள் கொடுப்பது உண்டு. அப்படி ஒரு மகிழ்ச்சி அடியேன் திறத்தில் உமக்கு உண்டாயிருக்குமானால், அடியேனுக்கு ஒரு வரம் தரவேணும். "வரந்தரும் திருக்குறிப்பில் வைத்ததாகில்"என்னும் பகுதி இதைக் குறிக்கும். ''பரந்த சிந்தை ஒன்றி நின்று'' - என்னுடைய சிந்தையானது ஒரு நிலைப்படாமல் எங்கும் சுற்றியலைந்து கொண்டு, உன்னை நினைக்கவிடாமல் செய்கிறது. அப்படிப்பட்ட சிந்தையானது மற்ற விஷயங்களில் பற்றற்று, உன்னுடைய திருவடிகளை இடைவிடாது நினைத்து இன்புற வேண்டும் என்ற அவா அடியேனுக்கு உள்ளது.''நின்ன பாத பங்கயம் நிரந்தரம் நினைப்பதாக'' என்ற பகுதியால் இது விளங்குகிறது. சரி, உன் சிந்தையை நீயே நிலை நிறுத்திக் கொள்ளவேண்டியது தானே என்று, நீர் சொல்லக்கூடாது. அதுதான் அடியேனால் முடியாதது. நினைக்கக் கூடிய சிந்தை என்னுடையது ஆனாலும், நீர் நினைக்காவிடில் அது எனக்குக் கட்டுப்படாது. என்னுடைய சிந்தனையும் கைகூடாது. ஆகையால், அதாவது உம்முடைய அருள் இருந்தால் ஒழிய என்னுடைய சிந்தனை கைகூடாது என்பதாக,

பரந்த சிந்தை ஒன்றிநின்று நின்னபாதபங்கயம்
நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டுமே

என்ற பிரார்த்தனையோடு பாசுரத்தை முடிக்கிறார் ஆழ்வார்.

இதே கருத்தினை, நம்மாழ்வாரும் கீழ்க் கண்ட பாசுரப் பகுதியால் உறுதி செய்கிறார்.

உணர்வில் உம்பர் உருவனை
அவனது அருளால் உறல்பொருட்டு, என்
உணர்வினுள்ளே இருத்தினேன்,
அதுவும் அவனது இன்னருளே

இதில், ''அவனது அருளால் உறல் பொருபொருட்டு'' - ''அதுவும் அவனது இன்னருளே'' என்ற இரண்டு சொற்றொடர்களும், மிகவும் அருமையானவை. இறைவனை நாம் நம் நினைவில் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுதற்குக்கூட, அவனது திருவருள் இருந்தால்தான் முடியும் என்பதை முன்னம் கூறிவிட்டு, அவனை நினைவில் கொண்டு வருவது நிறைவேறியதும், அவனது அருளால்தான் என்பதை ''அதுவும் அவனது இன்னருளே'' என்று முடிக்கிறார் ஆழ்வார். நாம் அவனை நினைக்க நினைப்பது, அது சாத்தியமாவது, ஆகிய இரண்டு காரியங்களும், அவனது இன்னருள் இல்லாவிடில் முடியாது என்பதை, இதனால் நாம் தெரிந்து கொள்கிறோம்.

ஆக, அவனே அடையப்படுபவனாகவும், அவனை அடைவதற்கு அவனே வழியாகவும் ஆகிறான் என்பதால், அவனே ப்ராப்யம், ப்ராபகம்- உபேயம், உபாயம் என்ற இரண்டு நிலைகளிலும் நின்று, நம்மைக் காக்கிறான் என்ற வைணவ சித்தாந்தக் கொள்கை, இங்கு விளக்கம் பெற்றதாக ஆகிறது.

***

# கூடலூர் அழகர் கோயில்

திரு. இராஜ். பவுன்துரை, M.A., M.Phil.,

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,

சென்னை-113

## கூடலூர்

கூடலூர் மிகப் பழமையான ஊராகும். இவ்வூர் 'கூடலூர் நாடு' என்றும் அழைக்கப்படும். இதனருகில் 'அளநாடு' என்னும் வளமுடைய பகுதியும் உண்டு. இப்பகுதி 'சின்னமனூர்', 'தேவாரம்' என்றும் அழைக்கப்படுகின்றது. கூடலூரின் மேற்குப் பகுதி சேர நாட்டின் எல்லையையும், வடக்குப் பகுதி கொங்கு நாட்டின் எல்லையையும், கிழக்கே சுருளி மலையையும் கொண்ட இடமாகும். மங்கலதேவி கோட்டம் இவ்வூரைச் சார்ந்தது. இதனைக் 'கண்ணகி கோட்டம்' என்பர். சேரன் செங்குட்டுவன் முதல் பிற்காலப் பாண்டியர் நாயக்கர் வரை, இவ்விடத்தில் தங்களுடைய ஆதிக்கத்தைச் செலுத்தியுள்ளனர். எனவே, கூடலூர் வரலாற்று முக்கியமான ஓர் இடமாகக் காட்சியளிக்கின்றது.

## கூடல்

ஆறுகள் கூடுந் துறைகளைப் புனிதமான இடங்களாகக் கருதிப் பண்டைத் தமிழர் கொண்டாடினர். அவற்றைக் 'கூடல்' என்று அழைத்தனர். மூன்று நதிகள் சேருமிடம் 'முக்கூடல்' என்றும், இரு நதிகள் சேரும் இடம் 'கூடல்' என்றும் அழைக்கப்பட்டன. தொண்டை நாட்டில் பாலாறும், சேயாறும், கம்பையாறும் சேருகின்ற இடத்தில் அமைந்த ஊர் திருமுக்கூடல் என்று அழைக்கப்படுகின்றது. நெல்லையில் தாமிரவருணியும், சித்திராநதியும், கோதண்டராமநதி என்ற கயத்தாறும் ஒன்று சேர்கின்ற இடம் முக்கூடல் என்று அழைக்கப்பட்டது. 'முக்கூடற்பள்ளு' எனும் சிறந்த நாடகம் இவ்வூரைப் பற்றி எழுந்ததேயாகும்.

## திருமாலிருஞ்சோலை

சோழநாட்டில் கெடில நதியும், உப்பனாறும் கலக்கின்ற இடத்திற்கு அருகேயமைந்த ஊர், கூடலூர் என்று அழைக்கப்பெற்றது. துங்கையும் பத்திரையும் சேர்ந்து துங்கபத்திரை என்று பெயர்பெறும் இடத்தில் அமைந்த ஊருக்குக் 'கூடலி' என்று பெயர். எனவே, சுருளியாறும் பெரியாறும் சேரும் இடமாய் அமைந்துள்ளதால், இது 'கூடல்' என்று அழைக்கப்பட்டது என்பது தெளிவு. 'கூடல்' என்பதற்கு அடர்த்தியான தோப்பு நிறைந்த பகுதி அல்லது சோலை என்பதும் பொருளாகும். இது திருமாலுடைய கோவிலாக உள்ளதால், இது 'திருமாலிருஞ்சோலை' என்றும் கூறுவர். நாயக்கர்களுடைய காலத்தில் இத்தகைய திருமாலிருஞ்சோலைகளை அமைத்தனர்.

## கல்வெட்டு

இக்கோயிலின் மேற்குப் பகுதியில் ஒரு கல்வெட்டுத் தூண் நிறுத்தப்பட்டுள்ளது.

> ''.....நயினார் குலசேகரப் பெருமாள் கூடலூரில் நான்கெல்கைக்கு உட்பட்ட நிலத்தில் முடுக்கு வயல் தீர்த்தியாவது வரட்டாத்துக்கு மேற்கு, சுருளியாத்துக்குப் போகிறவாய்க் காலுக்குக் கிழக்கு, முடுக்குவயல் எல்லைக் கல்லுக்கும் மேற்படி கிழக் கோடிய வாய்க் காலுக்கும் தெற்கு, இந்நான்கு சதுரத்திற்குள் பட்ட நிலத்தில் நெடுமாக்கல் பணிக்கர்க்கு விட்டநிலம் 36 குழிக்கு வயல் 46-ம் போக, நீக்கி உண்டான நிலத்தில் மங்கலாதேவியம் மன் பூசைக்கு விட்டநிலம் 15 குழியும், அழகர் கோவிலுக்கு விட்டநிலம் 60 குழியும், வன்மீக நாத சாமிக்கு விட்டநிலம் 10 குழியும், பெரியாற்றுச் சாத்தாவின் பூசைக்கு விட்டநிலம் 15 குழியும், மேற்படி கோவில் பிராமண போசனத்திற்கு விட்ட நிலம் 20 குழியும், பூனையாற்றுச் சாத்தாவின் கோவிலுக்கு விட்ட நிலம் 25 குழியும், நடைக்கல் பகவதிக்கு விட்ட நிலம் 5 குழியும்...''

என எழுதப்பட்டுள்ளது. இதில் 'மங்கலதேவி' கோட்டம் கூறப்பட்டுள்ளது. இது மிகப்பழமையான கண்ணகி கோயிலைக் குறிக்கின்றது. இக் கல்வெட்டு கூறுகின்ற 'நெடுமாக்கல்' 'மங்கல தேவி' ஆகிய சொற்றொடர்கள் சிலப்பதிகாரத்தை நினைவுறுத்துகின்றன.

## காலம்

இக்கோயில் கல்வெட்டு ஒன்று 'குலசேகரப் பெருமாள்' என்று குறிக்கின்றது. 'குலசேகரன்' எனும் பிற்காலப் பாண்டிய மன்னருடைய கல்வெட்டு இது எனலாம். வல்லபன்

என்ற குலசேகர மன்னனுடைய காலத்தில் தான், பாண்டியநாடு ஒன்று சேர்க்கப்பட்ட தாகக் கூறப்படுகின்றது. எனவே, இவன் 'இருண்டகாலம் மீட்ட சீர் வல்லபன்' எனப் பட்டான். இம்மன்னனே, தென்காசிக் கோயி லின் கோபுரத்தைக் கட்டி முடித்தவன். இம் மன்னனுடைய காலம் கி. பி. 1534 என்பதால், இக்கோயில் பிற்காலப் பாண்டியரால் கட்டப் பட்டது எனலாம்.

இக்கோயிலின் அருகே ஒரு சிவன் கோவில் உள்ளது. அதில் 'வாணாதி ராயன் சேவை' எனும் கல்வெட்டு ஒன்று உள்ளது. நாயக்க வம்சத்தைச் சார்ந்த இம்மன்னனுடைய காலம் கி. பி. 1410 ஆகும். இவன் வைணவத்தில் அதிக ஈடுபாடு செலுத்தினாலும், பல சிவன் கோயில்களையும் அமைத்தான் என்று கூறப் படுவதிலிருந்து, இக்கோயில் கி. பி. 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனலாம்.

## கோயில் அமைப்பு

கூடலூர் அழகர்கோயில், தோப்புகள் நிறைந்த இயற்கை அழகு சூழ்ந்த இடத்தில், கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இங்கு எழுந்த ருளியுள்ள பெருமாளுக்குக் கூடலழகர் எனப் பெயரும் உண்டு. மகாமண்டபம், அர்த்த மண்டபம், அகநாழிகை முதலியன அமைந்த, அழகிய வேலைப்பாடுகள் கொண்ட கோவி லாக அமைக்கப்பட்டுள்ளது. உயரமான கொடிக்கம்பமும், அதனை அடுத்தாற்போல் பலிபீடமும், கருடவாகனமும் அமைக்கப்பட் டுள்ளன. இக்கோவிலின் வெளிப்பிராகாரத் தைச் சுற்றிப்பெரிய சுவர் எழுப்பப்பட்டுள்ளது.

## மகாமண்டபம்

மகாமண்டபத்திற்கு உள்ளே செல்வதற்குத் தென்புறத்திலும், வடபுறத்திலும் இரண்டு பாதைகள் உள்ளன. அவற்றில், யானை முகங் கொண்ட அழகிய சிற்பங்களை உடைய பக்கச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. இம் மண்டபத் தில் 12 தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. மகாமண்டபத்தில் அழகிய வேலைப்பாடு கொண்ட வியாளவரிசை அமைக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டு துதியாளி வகையைச் சார்ந்தது எனலாம். பாம்பின் முகம், சிங்கத்தின் உடல் அமைப்பும் சேர்ந்த கற்பனை வடிவே யாளி என அழைக்கப்படும். துதியாளி எனப்படுவது வியாள முகத்தில் யானையின் துதிக்கையினை யும், தந்தத்தினையும் இணைத்து வடிக்கப் பட்ட வடிவமே. மேலும், இவ்வுருவத்தில் சிம்மத்தின் பற்களையும், புலியின் நகங்களை யும் கொண்டதாக அமைக்கப்பட்டு இருக்கும். யாளிகளில் துதியாளியே மிகச் சிறந்த வடி வழகு கொண்டதாகும். இக்கலையானது நாயக் கர்களுடைய" கலைப்படைப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இன்றும் நிலைத்து நிற் கின்றது. பிற தூண்களில் அணிகளால் அலங் காரமும், சிற்ப வேலைப்பாடுகளுடனும் அமைக்கப்பட்டுள்ளன.

தூணும், அதனுடைய போதிகையின் அமைப்பும், மரமும் அதன் கிளைகளுடன் கூடிய கனியும்போல் அமைக்கப்பட்டுள்ளன என்பர். இங்கு அமைக்கப்பட்டுள்ள போதிகையில் ஒரு கிளியானது கனியைக் கொத்துவது போன்று அமைக்கப்பட்டுள்ளது. கிளியினைத் தலை கீழாய் அமைத்து வடிக்கப்பட்டிருக்கும் பாங்கு போற்றக் கூடிய ஒன்றாகும். மகாமண்டபத்தில் நீண்ட கற்களால் வேய்ந்த கூரை அமைக்கப் பட்டுள்ளது. அப்பகுதியின் நடுவில் 12 ராசி களின் உருவங்களையும் சிற்பங்களாய் வடித் துள்ளனர். இது விசயநகர நாயக்கர்களுடைய மிகச் சிறந்த கலைப்படைப்பாகும். இக்கலைப் படைப்பானது கி. பி. 12ஆம் நூற்றாண்டி லிருந்து அமைக்கப்பட்டு வந்துள்ளது. மேல் பகுதியின் சுற்றுப்புறத்தில் பல அழகிய சிற் பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. சிவன், முருகன், தேவதைகள், மன்மதன், இரதி, குறவன், குறத்தி, நடனமகளிர், வேடன், இந்திரன் போன்ற சிற்பங்கள் கலை அழகுடையன.

குறவன், குறத்தி சிற்பங்கள் இல்லாத நாயக்கர் காலத்துக் கோயில்களே இல்லை எனலாம். அவ்வாறே மன்மதன், இரதி ஆகி யோரின் சிற்பங்களும் அமைத்தனர். மன்மதன் இரதியின் சிற்பங்கள் நாயக்கர் காலத்தில் அதிக மாகக் காணக்கிடக்கின்றன. தென்காசி நாயக் கர்கள் இந்திரனுக்கு முக்கியத்துவம் கொடுத்த னர். அன்னவாகனத்தில் கரும்பு வில் ஏந்தி அமர்ந்த நிலையில் இரதி, மன்மதன் ஆகியோர் தம்முடைய கரும்பு வில்லை வைத்துக்கொண்டு இருப்பது போன்ற சிற்பங்கள் அழகுடையன. இம்மண்டபத்தின் மேற்பகுதியின் வெளிப் பகுதியில், அழகிய வேலைப்பாடு கொண்ட கொடுங்கை அமைக்கப்பட்டுள்ளது. இது போன்ற சிறந்த கொடுங்கைகளைச் சோழர் காலக் கட்டிடங்களில் காணலாம்.

## அர்த்தமண்டபமும், அகநாழிகையும்

மகாமண்டபத்தை அடுத்தாற்போல் அமைந்துள்ள அர்த்த மண்டபம், 6 தூண்களு டன் கூடியது. பொதுவாக அதிக வேலைப் பாடு கொண்ட அமைப்பு இல்லை. இம்மண்ட பத்தின் இரண்டு சன்னல்கள் சிறப்புடையன. கல்லால் மிக நுணுக்கமாக வடிக்கப்பட்டுள்ளன. அர்த்தமண்டபத்தினை அடுத்து அமைந்துள் ளது அகநாழிகை. திருச்சுற்றுக்களுடன் கூடிய அமைப்பைக் கொண்டது. திருச்சுற்றைக் கடந்து அமைக்கப்பட்டுள்ள அகநாழிகையில் கூடலழகரின் அழகிய திருமேனி அமைக்கப்பட் டுள்ளது. அருகில் மிக நேர்த்தியான தேவி யரின் படிமங்கள் உள்ளன. அவை மிகச் சிறப்புடைய செப்புப் படிமங்கள் எனலாம். குலசேகர ஆழ்வாருடைய செப்புத் திருமேனி ஒன்றும் இங்கு உள்ளது. அகநாழிகையின் கட்டிட அமைப்பானது, உபானம், பத்மம், குமுதம், வேதிகை, உதிரம், இராடகம், கபோதம், யாளம் அல்லது யாளிவரி என்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுப்புறப் பகுதியில் அழகிய மாடங்கள் அமைக்கப்பட்

டுள்ளன. இது அரைத் தூண்களால் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது.

## விமானம்

கூடல் அழகர் கோயிலின் அழகிற்குப் புகழ் சேர்ப்பது விமானமாகும். இது மூன்று அடுக்குத் தொடரைக் கொண்ட விமானமாகும். இதில் அழகிய சுதைச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இராமாயணக் கதையைச் சித்தரிக்கும் சிற்பங்களாய் உள்ளன. கோயிலின் மேற்பகுதியின் ஓரங்களில் இவ்வழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. இந்த விமானத்தின் நிழல் அதனுடைய விமானத்திலேயே விழும்படியாக அமைக்கப்பட்டுள்ளமை போற்றக்கூடியது. இத்தகைய அமைப்பினை நாயக்கர்களுடைய படைப்பில் காணலாம்.

கட்டிடக்கலை, சிற்பங்கள் போன்ற அமைப்பைக் காணும்பொழுது, நாயக்கர் கட்டிடக் கலையின் பாங்கு அதிகம் காணப்படுகின்றது. திருமாலிருஞ் சோலைதனை அரணாக அமைத்து நாயக்கர் காலத்தில் ஆட்சி செய்து வந்தனர். அதுபோன்றே இங்கும் காண முடிகின்றது. கூடல் அழகர் கோயிலைச் சுற்றிக் 'கோட்டைமேடு' எனும் பகுதியை அமைத்துள்ளனர். இன்னும் இவ்வூரில் 'கோட்டை மேட்டுத் தெரு' என்றே அழைக்கின்றனர். இன்று அப்பகுதி சிதைந்து காணப்படுகிறது. சில இடங்களில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு கலையிலும், கட்டிடக்கலை அமைப்பிலும், வரலாற்று முக்கியத்துவத்திலும், கூடலூர் அழகர்கோயில் சிறப்புடைய ஒன்றாக அமைந்துள்ளது.

---

# காம தகனமும், குமார சம்பவமும்*

காம தகனம் நிகழ்த்திய பின்னரே, சிவபெருமான் பார்வதி தேவியைத் திருமணம் புணர்ந்தார். அதன் பின்னரே குமாரசம்பவம் (முருகனின் தோற்றம்) நிகழ்ந்தது என்பது கந்தபுராணம். இதன்கண் ஆழ்ந்த தத்துவ நுண்பொருள்கள் பல பொதிந்து உள்ளன. கருத்தை விளக்கவே கதை வந்தது. கதை, உடல், கருத்து உயிர். இறைவனும் இறைவியும் பிரிந்திருந்த நிலையில் உலகுயிர்கள் செயலிழந்து கிடந்தன என்பது, 'அவன்றி ஓர் அணுவும் அசையாது' என்னும் உண்மையைத் தெளிவிக்கின்றது. இறைவி மலைமகளாகத் தவம் புரிந்தாள். இறைவன் தட்சிணாமூர்த்தியாய் யோகநிலை மேற்கொண்டான். ஒரு சிறந்த கணவனை அடையப் பெண்மகளும், ஒரு சிறந்த மனைவியை அடைய ஆண் மகனும், முறைப்படி அருந்தவம் புரிதல் வேண்டும். கணவனுக்குத் தகுந்த மனைவி வாய்ப்பதும், மனைவிக்குத் தகுந்த கணவன் வாய்ப்பதும், தவத்தினாலேயே அமையும் என்பது இதன் பொருள். தத்தம் தவத்தின் பயனாகக் கணவனும் மனைவியுமாகிய இருவர் கூடிநின்ற வழியும், அவர்கள் காம வயப்பட்டு வெறும் விலங்குணர்ச்சிகளினால் தம்மிற்கூடி மக்களைப் பெற்றெடுத்தல் ஆகாது. புலன்களை அடக்கி வெற்றிகொண்டு, கீழ்த்தரமான காம உணர்ச்சிகளைச் சுட்டெரித்து, ஆன்மீக வாழ்வில் தம்மை மேன்மேல் உயர்த்திக் கொள்ளும் சிறந்த தவவொழுக்கத்தின் பயனாகவே, மக்கட்பேறு எய்துதல் வேண்டும். அந்நிலையில் பெறும் மக்களே, தந்தையினும் சிறந்த மைந்தராய், உலகுக்கு நலம் விளைவிக்கும் தன்மையில் சிறந்து விளங்குவர்.

காம தகனம் நிகழ்த்திய பின்னரே, குமாரசம்பவம் நிகழ்ந்த திறம், எண்ணியெண்ணி நுண்ணிதின் உணர்தற்பாலதாகும். ''உள்ளதன் தன்மை, சத்தி. நல்லதன் தன்மை, சிவம், இவை இரண்டும் பிரிந்திருந்த நிலையில் தீமைகள் குதூகலித்துக் குதித்தன; சுவர்க்கம் இழக்கப் பெற்றது. உண்மையும் நன்மையும் (சத்தியும் சிவமும்) மணந்து, ஒன்றுபடுதல் வேண்டும். அப்போதுதான் உலகை உய்விக்கும் தனிப்பெருந் தலைமகன் (முருகன்) தோன்றுவான். உண்மையையும் நன்மையையும் ஒன்று சேர்ப்பதற்குக் காம உணர்ச்சியின் மூலம் முயற்சி நிகழ்ந்தது. அது கண்டு இறைவனுக்குச் சீற்றம் எழுந்தது. அதன் விளைவு ஏமாற்றமாய்ப் பெரும் துன்பத்தில் முடிந்தது. இறுதியில் தவத்தினால் பெற்ற தூய்மையின் வாயிலாக, உண்மையும் நன்மையும் இணைந்து மணந்தன. தனிப்பெரும் தலைமகன் தோன்றியருளினான். தீமைகளை எதிர்த்து அழித்தான். சுவர்க்கம் மீண்டும் கிடைக்கப் பெற்றது'' என்று இரவீந்திரநாத தாகூர் அவர்கள், தாம் எழுதிய 'மனிதனின்-சமயம்' என்னும் நூலிற் குறிப்பிடுவது, இங்கு நாம் அனைவரும் குறிக்கொண்டு, நம் வாழ்க்கையிற் போற்றத்தக்கதாகும்.

—ஆசிரியர்

---

* ''This is the eternal problem of man. The evil spirit is exultant and paradise is lost, when Sati, the spirit of Sat (Reality) is disunited from Siva, the spirit of Goodness. The Real and the Good must meet in wedlock if the hero is to take his birth in order to save all that is true and beautiful. When the union was attempted through the agency of passion, the anger of God was aroused and the result was tragedy of disappointment. At last, by purification through penance, the wedding was effected, hero was born, who fought against the forces of evil and paradise was regained''.

**—Rabindranath Tagore.**
The Religion of Man.

# இன்றைய உலகுக்கு இராமலிங்கர் நெறி

தவத்திரு ஊரன் அடிகள், வடலூர்.

வள்ளலார் தமது நெறியை, பொதுநெறி, பெருநெறி, ஒளிநெறி, சன்மார்க்கம் என்றெல்லாம் கூறினார். ஒரு நாட்டவர்க்கு, ஒரு சமயத்தவருக்கு, ஒரு சாதியாருக்கு; ஒரு இனத்தவருக்கு என்றில்லாமல், உலகமக்கள் அனைவருக்குமே பொதுவாகப் பொருந்தக் கூடியது. ஆதலால் பொதுநெறி என்றார். சிலருக்கே உரிய குறுகிய சிறு நெறியாக இல்லாமல், அனைவருக்குமே உரிய அகன்ற பெரிய நெறியாக இருப்பதால் பெருநெறி என்றார். அந்த நெறியில் செல்வோரது வாழ்க்கையிலே ஒளிவீசச் செய்வதாக இருப்பதால் ஒளிநெறி என்றார். நல்லநெறி, நன்னெறி என்று பொருள்பட, சத்-மார்க்கம், சன்மார்க்கம் என்றார்.

தமிழ்ப் பெரியோர்கள் நான்கு மார்க்கங்களை நமக்குக் காட்டியிருக்கிறார்கள். தாசமார்க்கம்-அடிமைநெறி, இறைவனை ஆண்டானாகக் கொண்டு நாம் அவனுக்கு அடிமையாக இருந்து வழிபடுவது, சற்புத்திர மார்க்கம்-மகன்மை நெறி. இறைவனை அப்பனாகக் கொண்டு நாம் அவனுக்கு மகனாக இருந்து வழிபடுவது. சகமார்க்கம்-தோழமை நெறி. இறைவனுக்கு நாம் தோழனாக இருந்து வழிபடுவது. சன்மார்க்கம்-தலைவன் தலைவி நெறி. நாயக நாயகி பாவம். இறைவனும் நாமும் இருவேறாக இல்லாமல் ஒன்றாகவே இருப்பது, ஒன்றாகவே ஆகிவிடுவது.

ஆண்டான் - அடிமை, அப்பன்-மகன், ஒத்த இரு நண்பர்கள், தலைவன்-தலைவி இந் நான்கும், நான்கு மார்க்கங்களிலும் நமக்கும் இறைவனுக்குமுள்ள சம்பந்தம். இதை நமது பழைய சாத்திர நூல்களும், தோத்திர நூல்களும் சொல்லுகின்றன.

இந்த நான்கு மார்க்கங்களிலும் மனிதனுக்கு மனிதனின் சம்பந்தமென்ன? வள்ளலார் அதைப் புதிதாகச் சொல்லுகிறார்.

(1) எல்லோரையும் தன் அடிமையாகப் பாவிப்பது தாசமார்க்கம்.

(2) எல்லோரையும் தன் மகனாகப் பாவிப்பது சற்புத்திரமார்க்கம்.

(3) எல்லோரையும் தன் நண்பர்களாகப் பாவிப்பது சகமார்க்கம்.

(4) எல்லோரையும் தன்னைப்போல் பாவிப்பது சன்மார்க்கம்.

ஆண்டவனுக்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தை மட்டும் காட்டின முன்னைய நூல்கள். அத்தோடு மனிதனுக்கு மனிதன் உள்ள சம்பந்தத்தையும் காட்டுகிறார் வள்ளலார். இது வள்ளலார் செய்த புதுமை.

மனிதன் கடவுளோடு ஒன்றுபடுதல் பழைய சன்மார்க்கம். மனிதன் மனிதனோடு ஒன்றுபடுவது, மனிதனோடு மட்டுமின்றி எல்லா உயிர்களோடும்ஒன்றுபடுவது, அதன் மூலம் ஆண்டவனோடு ஒன்றுபடுவது புதிய சன்மார்க்கம். இப் புதிய சன்மார்க்கத்திற்கு வள்ளலார் இட்ட பெயர் சமரச சன்மார்க்கம், சமரச சுத்த சன்மார்க்கம். இந்த சமரச சுத்த சன்மார்க்கத்திலே ஒரே கடவுள், ஒரே சமயம், ஒரே சாதி, ஒரே இனம், சமய ஒருமைப்பாடு, சாதிஒருமைப்பாடு, நல்ல அரசு, நல்ல ஆட்சி, நல்ல அதிகாரிகள், நல்ல குடிமக்கள், வேற்றுமையுள் ஒற்றுமை காணல், இருப்போர் இல்லாதார்க்கு உதவுதல் ஆகிய பலவற்றையும் அழுத்தந்திருத்தமாக ஆணித்தரமாக வள்ளலார் பாட்டாலும் உரையாலும் பறைசாற்றுகின்றார்.

''எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர், அவர்உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம்எனநான் தெரிந்தேன்; அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ''

என்பது வள்ளலார் வாக்கு.

மனித சமுதாயத்தை மதங்களும் சமயங்களும் வேறு பிரிக்கின்றன. சைவம் என்றும், வைணவம் என்றும், கிறித்துவம் என்றும், இஸ்லாம் என்றும், சமணம் என்றும், பௌத்தம் என்றும் பல சமயங்கள். எல்லாச் சமயங்களுமே கடவுளை அடைவதற்கான பேரின்பம் பெறுவதற்கான வழிகள்தான். ஓர் ஊருக்குப் போவதற்குப் பல வழிகள். ஒரே கடவுளை அடைவதற்குப் பல மார்க்கங்கள், பல மதங்கள், பல சமயங்கள்.

''ஒன்றது பேரூர் வழி ஆறு அதற்குள'' என்று ஆறு சமயங்களையும் பற்றித் திருமூலர் பாடுகிறார். ஆறுகளெல்லாம் முடிவிலே கடலில்

சென்று கலப்பது போல, சமயங்களெல்லாம் முடிவிலே ஒரே கடவுளிடத்திலே சென்று கலக்கின்றன.

''பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்
புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி
கங்குக்ரை காணாத கடலே'' [ஓங்கும்

என்று வள்ளலார் இறைவனைப் பாடுகின்றார். தலைவியும் தோழியும் தம்முள் பேசிக் கொள்வதாக வள்ளலார் பாடிய பாடல்கள் பல. அவற்றுள் ஒன்று: தோழி தலைவியைப் பார்த்துக் கேட்கிறாள்: அம்பலத்தில் நடம்புரிகிறானே உன் நாயகன், அவன் பேர் என்ன? என்று. அதற்குத் தலைவி சொல்கிறாள்:

'பெருகியபேர் அருளுடையார் அம்பலத்தே
நடிக்கும் பெருந்தகை, என்
கணவர் திருப்பேர்புகல் என்கின்றாய், அருகர்
புத்தர்
ஆதிஎன்பேன், அயன்
என்பேன், நாராயணன் என்பேன், அரன்
என்பேன்,
ஆதிசிவன் என்பேன்,
பருகுசதா சிவன் என்பேன், சத்திசிவம்
என்பேன்,
பரமம் என்பேன்,
பிரமம் என்பேன், பரப்பிரமம் என்பேன்,
துரியசுத்த
பிரமம் என்பேன்,
துரியநிறை வென்பேன் சுத்தசிவம் என்பேன்
இவை
சித்துவிளையாட்டே;'

அயன், நாராயணன் என்பதெல்லாம் தோழிக்குப் புரிந்தது. அருகர், புத்தர், என்றது அவளுக்குப் புரியவில்லை. அருகர் என்பதும் புத்தர் என்பதும் புறச்சமயப் பேர் ஆயிற்றே? நம் நாயகனார்க்கு அப்பெயர்கள் பொருந்துமோ? என்று கேட்கிறாள். அதற்குத் தலைவி சொல்லுகிறாள்:

''சிற்சபையில் நடிக்கின்ற நாயகனார்,
தமக்குச் சேர்ந்த புறச்
சமயப்பேர் பொருந்துவதோ என்றாய்?
பிற்சமயத்தார் பெயரும்
அவர் பெயரே கண்டாய்! பித்தர் என்றே
பெயர் படைத்தார்க்கு,
எப்பெயர்தான் ஒவ்வாதோ? அச்சமயத்
தேவர் மட்டோ?நின்
பெயர்என் பெயரும் அவர்பெயரே,
எவ்வுயிரின் பெயரும் அவர் பெயரே;'

என்று பாடுகின்றார்.

இறைவன் பித்தனென்று பெயர் படைத்தவன் அல்லவா? பித்தன் என்று பெயர் படைத்தவனுக்கு வேறு எப்பெயர் ஒவ்வாது? அது மட்டுமா? உன் பெயர், என்பெயர், எல்லா உயிர்களின் பெயர், எல்லாம் அவன் பெயரே என்று தலைவி தோழிக்குக் கூறும் கூற்றாகக் கூறி விளக்குகிறார் வள்ளலார்.

ஈசுவரன் என்பதும், அல்லா என்பதும், தேவரீரின் திருநாமங்கள். ''ஈஸ்வர அல்லா தேரே நாம்'' என்றார் காந்தியடிகள். அருகர் என்பேன், புத்தர் என்பேன் என்று, அன்று பாடிய வள்ளலார் இன்று பாடுவாரேயானால், ''பரமண்டலத்திலுள்ள பிதா என்பேன், அல்லா என்பேன், கிறிஸ்து என்பேன்'' என்று அல்லவா பாடுவார்.

இன்று துறைதோறும் சாதி முன்னிற்கிறது. சாதிகளைப் பற்றி வள்ளலார் என்ன கூறினார்.

''சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்
சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே

என்று அறை கூவினார்! ''சாதி சமயங்களிலே வீதிபல வகுத்த சாத்திரக் குப்பைகளெல்லாம் பாத்திரமன்று'' என்று பறையறைந்தார். பாட்டாக மட்டுமா பாடினார். வசனமாகவும் எழுதினார். இதோ வள்ளலார் இறைவனடம் செய்து கொண்ட உரையாடல் விண்ணப்பம்.

''இது தொடங்கி எக்காலத்திலும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய, சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்தில் பற்றாவண்ணம் அருள்செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்துவிளங்கச்செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்சோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட்பெருங்கருணைக்குவந்தனம்! வந்தனம்!

சாதி சமயங்களை, சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகள் என்றார். ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை, சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியம் என்றார். இது தொடங்கி இன்று 100 ஆண்டுகளுக்கு முன் அன்று வள்ளலார் வேண்டினார். நம்மைப் பொறுத்தவரை இந்த வேண்டுகோள் அன்றுமுதல் இன்றுவரை வேண்டுகோளாகவே இருக்கிறது. செயல்படுத்தப் பெறக்காணோம். தடைகள் தவிரக் காணோம். லட்சியம் பரவக்காணோம். சமுதாய நல்வாழ்வுக்குச் சாதி மதங்கள் தடையாக இருப்பதை - சாதாரணத் தடையாக அல்ல - மலைபோன்ற தடையாக இருப்பதை வள்ளலார் கண்டார். மலைபோன்ற தடைகளை வள்ளலார் உளிகொண்டு பிளக்கவில்லை. வெடி வைத்தே தகர்த்தார். தூள் தூளாக்கினார். ஆனால் நாமோ இன்று 100 ஆண்டுகளுக்குப் பின்னுங்கூட சாதிவேருக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருக்கிறோம்.

உடையவர்கள் உண்டு கொழுத்திருப்பதையும், அதாவது இல்லாதவர்களுக்குக் கொடுக்காமல் தாமே தமியராக உண்டுகொழுத்திருப்பதையும், இல்லாதவர்கள் பசியால் வாடி வதங்குவதையும் பார்த்து வள்ளலாரால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. இந்தக் கொடுமையைப் பார்க்கும் போது என்ன,

நினைக்கும் போது கூட என் உள்ளம் மட்டுமா எரிகின்றது? உடம்பெல்லாம் எரிகின்றதே என்று பாடினார்.

உள்ளலேன் உடையார் உண்ணவும், வறியார்
உறுபசி உழந்து வெந்துயரால்
வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ?
மற்றிதை நினைக்குந் தோறும்
எள்ளலேன் உள்ளம் எரிகின்றது; உடம்பும்
எரிகின்ற தென்செய்வேன்! அந்தோ
கொள்ளலேன் உணவும் தரிக்கிலேன் இந்தக்
குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய்

தேவைக்கு மேலே வைத்திருப்பவன் திருடன் என்றார் காந்தியடிகள். அத்தகைய திருடர்களை நினைக்கும்போது உள்ளம் மட்டும் அல்ல, உடம்பும் எரிகிறது. உணவும் செல்லவில்லை. (அந்தோ! கொள்ளலேன் உணவும்) என்றார் வள்ளலார். உடையவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுப்பதனால் பற்றாக்குறையினை ஒருவாறு நிவர்த்தி செய்யலாமன்றோ? தேவைகளும் பற்றாக்குறையும் மிகுந்துள்ள இக்காலத்தில் வள்ளலார் காட்டும் நெறியை-இருப்போர் இல்லாதவர்க்கு இட்டுண்ணும் நெறியை-கடைப்பிடித்தால் எப்படியிருக்கும்.

வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர்
வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை அறியீர்
பெட்டிமேல் பெட்டிவைத் தாள்கின்றீர் வயிற்றுப்
பெட்டியை நிரப்பிக்கொண்டு ஒட்டிஉள்ளிருந்
பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர் [தீர்
பழங்கஞ்சி ஆயினும் வழங்கவும் நினையீர்
எட்டிபோல் வாழ்கின்றீர் கொட்டிபோல் கிளைத்
எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே! [தீர்

எங்கு பார்த்தாலும் வட்டிக் கடைகளும், அடகுக் கடைகளும் பெருகியுள்ளன. ''வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர், வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தைஅறியீர்'' என்ற வள்ளலார் பாடலை, அநியாய வட்டி, வட்டிடிக்கு வட்டி வாங்குபவர்கள் படிக்கவேண்டும்.

திருவாரூரில்முன்னொருகாலத்தில் ஆண்ட மனுநீதிச் சோழன் நீதிவழங்கிய வரலாற்றை எழுதுகிறார்.

மனுச்சோழன் மகன் வீதிவிடங்கன்ன் தேரில் பசுங்கன்று ஒன்று அடிபட்டு இறந்து விட்டது. இதனையறிந்த மனுச்சோழன் என் ஆட்சியில் இவ்வாறு நேரிட்டதே, என் மகனே இவ்வாறு செய்து விட்டானே, இவ்வாறு நேருவதற்கு நான் செய்த பாவம் என்னவோ என்று பலவாறு புலம்புகிறான். அவன் புலம்பல் இது தான்!

''நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ!
குடிவரி உயர்த்திக் கொள்ளை கொண்டேனோ!
ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ!
தருமம் பாராது தண்டஞ் செய்தேனோ!
மன்றோரம் பேசி வாழ்வழித்தேனோ!
வேலையிட்டுக் கூலி குறைத் தேனோ!
பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ!
குருவை வணங்கக் கூசி நின்றேனோ!
கன்றுக்குப் பாலூட்டாது கட்டி வைத்தேனோ
கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ?
வெய்யிலுக் கொதுங்கும் விருட்சம் அழித்தேனோ!
பொது மண்டபத்தைப் போயிடித்தேனோ!

என்று 43 பாவங்களைச் சொல்லிப் புலம்புகின்றான். புலம்புவதாக வள்ளலார் எழுதுகின்றார். பாவங்கள் இவ்வளவுதான் என்பதில்லை. ஏதோ அப்போதைக்குத் தோன்றியவற்றை வள்ளலார் தொகுத்தெழுதினார். சொல்லிய பாவங்களுள் சில பெரியன, சில சிறியன. சில பாவங்கள் மட்டுமன்றி, அரசாங்கச் சட்டப்படிக் குற்றங்களும் ஆகும்.

எது எதில் எது எதைக் கலந்து விற்கலாம் என்பதையே ஒரு கலையாக வளர்ந்திருக்கும் இன்றைய சமுதாயத்திற்கு அன்றே அறிவுரை கூறினார். ''கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ'' என்று. ''பொது மண்டபத்தைப் போய் இடித்தேனோ'' என்று அன்று வள்ளலார் கூறியதை, ''பொதுச் சொத்துக்கு நாசம்விளைவித்தேனோ'' என்று இன்று நாம் கொள்ள வேண்டும்.

சமுதாயத்தில் இன்று காணப்படுகிற பல பிரச்சினைகளுக்கும் சுமுகமான தீர்வு வள்ளலாரின் நெறியிலே உண்டு. அன்றாட வாழ்வின் உயர்ந்த அனுபவ நிலைவரை எதற்கும் எல்லாவற்றிற்குமே வள்ளலார் வழிகாட்டியாக விளங்குகிறார். இன்றைய தேவைகளுக்கு வள்ளலார் நெறி மிகவும் தேவை. அதுவே நமது சேவை.

---

## தொண்டாற்றி உய்வோம்!

வள்ளல்உயர் இராமலிங்கர் மாட்சிமிக வகுத்தருளும்
தள்ளருஞ்சீர்ச் சமரசநற் சன்மார்க்கப் பெருநெறியின்
கொள்கைகள்தாம் **கடைப்பிடித்துக்**, குவலயத்தில் அவைபரப்பி,
எள்ளல்அறத் தொண்டாற்றி, இறையருளில் திளைத்துய்வோம்!

—ஆசிரியர்

# நாவலர் நாட்டார் ஐயாவின் நல்ல பெருவிளக்கம்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**முன்னுரை:**

நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் ஐயா அவர்கள் (1884-1944), அண்மைக் காலத்தில் இருந்த தமிழ்ப்பெரும் சான்றோர்களில், தலைசிறந்த பெரும் புலவர் ஆவார். அவர்களைச் சைவத் தமிழுலகம் நன்கு அறியும். அகநானூறு - சிலப்பதிகாரம் - மணிமேகலை - திருவிளையாடற்புராணம் முதலிய, பல பெருநூல்களுக்கு அரும்பெறல் உரைகள் வகுத்த அறிஞர் பெருந்தகை, திரு. நாட்டார் ஐயா அவர்கள்! திருச்சி பிஷப்ஈபர் கல்லூரியிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய திரு. நாட்டார் ஐயா அவர்கள், தஞ்சாவூர்க் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்த, கரந்தைப் புலவர் கல் ரரிக்கு, மதிப்பியல் முதல்வராக (1941-1944) விளங்கியிருந்தார்.

**கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோ மன்றம்:**

கரந்தைப் புலவர் கல்லூரியில், ''இளங்கோவடிகள் இலக்கிய மன்றம்'' என்னும் அமைப்பு ஒன்று, புலவர் வகுப்பு மாணவர்களின் பொருட்டு நடைபெற்று வந்தது. அதன் ஆண்டுவிழா ஒன்றிற்கு நாவலர் நாட்டார் ஐயா அவர்கள், தலைமை தாங்கினார்கள். வித்துவான் திரு. சி. இலக்குவனார், அவ்ஆண்டு விழாவில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். அதுபோது திரு. சி. இலக்குவனார், திருவையாற்று அரசர் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். ஆதலின் அவர் தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கும், கரந்தைப் புலவர் கல்லூரிக்கும், அவ்வப் போது வருவது உண்டு. அதனால் இளங்கோவடிகள் இலக்கிய மன்றத்தின் ஆண்டு விழாவில், நாவலர் திரு. நாட்டார் ஐயா அவர்கள் தலைமையில், ''சங்க இலக்கியச் சிறப்பு'' என்னும் பொருள் பற்றி, ஒரு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

**அறிஞர் இலக்குவனார்:**

திரு. சி. இலக்குவனார் அவர்கள், நுண்மாண் நுழைபுலம் வாய்ந்தவர்; சீரிய கூரிய ஆராய்ச்சித் திறன் மிக்கவர்; சங்க இலக்கியங்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர்; இலக்கண இலக்கியப்புலமைகள் அனைத்தும் நிரம்பியவர்; தொல்காப்பியக் கடலில் தோய்ந்து திளைத்து நீந்தி மகிழ்ந்தவர். பிறகு சில ஆண்டுகள் கழித்து, தொல்காப்பியம் பற்றி ஆங்கிலத்தில் ஆராய்ச்சி நூல் எழுதி 'டாக்டர்' பட்டம் பெற்றவர். மதுரைத் தியாகராசர் கல்லூரியிலும், ஆந்திரநாட்டு உசுமானியப் பல்கலைக் கழகத்திலும், தமிழ்ப் பேராசிரியராக விளங்கியவர்.

இலக்கண இலக்கிய ஆராய்ச்சிகளில் புலமை பெற்றுத் திகழ்ந்த அறிஞர் திரு. சி. இலக்குவனார் அவர்கள், திரு. நாட்டார் ஐயா அவர்கள்பால், அளவற்ற அன்பும் மதிப்பும் ஈடுபாடும் கொண்டவர். அவ்வாறே திரு. நாட்டார் ஐயா அவர்களும், இளைஞராக இருந்த இலக்குவனார் அவர்கள்பால், மிகுந்த அன்பும் பரிவும் நன்மதிப்பும் கொண்டவர். இளங்கோவடிகள் இலக்கிய மன்றத்தின் ஆண்டு விழாவில், இவ்விரு பெருமக்களும் கலந்து கொண்டது, மிக்க சிறப்பும் பொருத்தமும் பெற்று விளங்கியது. விழாவிற்கு ஏராளமான தமிழ்ப் பெருமக்களும், பொதுமக்களும் கூட, வந்திருந்து சிறப்பித்தனர்.

**சங்க இலக்கியச் சிறப்பு:**

அறிஞர் திரு. இலக்குவனார், சங்க இலக்கியங்களின் சிறப்புக்களை விரிவாக விளக்கிச் சிறப்பாகப் பேசினார். அதுபோது, ''இயற்கைப் பொருள்களை உற்றுநோக்கி ஆழ்ந்துணர்ந்து, அவற்றின் இயல்புகளை உள்ளவாறு எடுத்துப் பாடுதலில், சங்ககாலப் புலவர்கள் ஒப்புயர்வற்று விளங்கினர்'' என்னும் கருத்து, அவரால் பெரிதும் வலியுறுத்தப் பெற்றது. அதன் தொடர்பாகப் பேசிக்கொண்டு வந்தபோது, ''பிற்காலப் புலவர்கள் சங்ககாலப் புலவர்களைப் போல, இயற்கைப் பொருள்களை ஊன்றி நோக்கி உணர்ந்து, உள்ளவாறுளடுத்து விளக்கிப்பாடும் திறம் பெற்றிலர்'' என்று குறிப்பிட்டு, அப்போது புலவர் வகுப்பு மாணவர்களுக்குப் பாடமாக இருந்த, 'காஞ்சிப்புராணத்தில் ஒரு பாடலை எடுத்துச் சொல்லி, ''இந்தப் பாடலில் வரும் மரங்களுள் ஒன்றற்குக் கொடுக்கப் பெற்றிருக்கும் அடைமொழிஅறவே

பொருந்தாதது: கவிஞர் கொடுத்துள்ள அடைமொழி அம்மரத்தின் இயற்கைத் தன்மைக்கு முற்றிலும் முரணானது''* என்று கூறி, அப் பாடலைப் பாடிய கவிஞரை, ஒரு சிறிது எள்ளற் குறிப்பு அமையச் சுட்டிக்காட்டி, தமது உரையினை நிகழ்த்தி முடித்தார்.

**தலைமை நிறைவுரை :**

அறிஞர் திரு. இலக்குவனார் அவர்கள், தமது சொற்பொழிவை நிறைவு செய்த பின்னர், திரு. நாட்டார் ஐயா அவர்கள், தமது தலைமை முடிவுரையைச் சுருக்கமாகவும், பொருத்தமாகவும் நிகழ்த்தினார். தமது முடிவுரையில், நாட்டார் ஐயா அவர்கள், திரு. இலக்குவனார் அவர்களின் ஆராய்ச்சித் திறன் மிக்க சொற்பொழிவைப் பெரிதும் புகழ்ந்து போற்றி மகிழ்ந்தார். எனினும், இடையில் ஒரு சிறு விளக்கத்தினையும் செய்தருளினார்:

''நமது சிறப்புச் சொற்பொழிவாளர், தம்முடைய கருத்தினை விளக்குவதற்குக் காஞ்சிப் புராணச் செய்யுள் ஒன்றனைத் திறம்பட எடுத்து, மேற்கோள் காட்டினார். தமது கருத்தை வலியுறுத்துவதற்காகத் தகுந்த மேற்கோளை எடுத்துக் காட்டிய முறை, சொற்பொழிவாளரின் அரும்பெரும் புலமைத் திறனையும், சொல்வன்மையினையும் செவ்விதின் உணர்த்துகின்றது. எனினும், காஞ்சிப் புராணம் பயிலும் புலவர் வகுப்பு மாணவர்களாகிய நீங்கள், அவர் மேற்கோள் காட்டிய அருமைப் பாட்டினை ஓர்ந்து உணராமல், காஞ்சிப்புராண ஆசிரியரையே ஏதேனும் எளிதாகத் தவறாக எண்ணிவிடக் கூடாதே என்று கவன்று அஞ்சி, யான் ஒரு சில சொற்களைச் சொல்லலாம் என்று விரும்புகின்றேன்:

**சிவஞான சுவாமிகள் :**

''நமது தமிழ்கூறும் நல்லுலகத்தில், சைவ சமயப் பெருவானத்தில், அண்மைக் காலத்தில் விளங்கியிருந்த மாபெரும் கவிஞர்களில், சிவப்பிரகாசர்-குமரகுருபரர் - சிவஞானசுவாமிகள் என்னும் மூவரும், ஒப்புயர்வற்றஞானப்பெருஞ் சுடர்மணிகள் ஆவர். சிவஞானசுவாமிகள் பல துறைகளில் வல்லவர். இலக்கணம்-இலக்கியம்-தருக்கம் - கவிதை புனைதல் - மறுப்புரை வரைதல் - காவியங்கள் இயற்றுதல் - பேருரைகள் வகுத்தல் ஆகிய பல துறைகளிலும், தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றித் திகழ்ந்து தலைமைநிலை பெற்று விளங்கியவர்.

''தலபுராணங்கள் எத்துணையோ பலப் பல இருப்பினும், அவைகளுள் காஞ்சிப்புராணம் தணிகைப் புராணம் முதலியன ஈடும் எடுப்பும் அற்றவை. தணிகைப்புராணம்பாடியகச்சியப்ப முனிவர், சிவஞான சுவாமிகளின் மாணவர்கள் பன்னிருவரில் ஒருவரே எனின், சுவாமிகளின் பெருமையினை யாவரும் இனிது எண்ணியுணரலாம். சங்கரர் இராமாநுசர் மத்துவர் முதலிய சமய தத்துவச் சான்றோர்கள், வடமொழியிற் பிரம்ம சூத்திரத்திற்குப் பேருரைகள் விரித்துள்ளனர். அவற்றைப் போல, அவற்றுக்குச் சமானமாக, நம் தமிழிலுள்ள சிவஞான போதம் என்னும் சைவசித்தாந்தத் தத்துவ நூலுக்குப் பேருரை வகுத்தருளியவர், சிவஞானசுவாமிகள். அவர்தம் அருமை பெருமைகள் அளப்பரியன.''

**காஞ்சிப் புராணம்:**

''காஞ்சிப்புராணத்தில், பிற புராணநூல்களில் காணப்படாத, பல புதிய புதிய நல்ல அமைப்புக்களை வகுத்து, சிவஞான சுவாமிகள் முதன் முதலாகவும், சிறப்பாகவும், அதனை இயற்றியருளி யிருக்கின்றார். பெரியபுராணம் பாடிய சேக்கிழார் பெருமானைப் பின்பற்றி, ஐந்திணை நில வளங்களையும், ஐந்திணை நில மயக்கங்களையும் பற்றி, நமது மாதவச் சிவஞான சுவாமிகள் பாடியிருக்கும் திறம், புலவர் பெருமக்களுக்கெல்லாம் மிகப்பெரிய அறிவு விருந்தாகும். ஐந்திணைகளை முறையே வரிசையாகப் பாடி வருங்கால், பாலைத்திணையின் இயல்பு குறித்துச் சுவாமிகள் பாடிய பாடல்களில் ஒன்றினையே, இங்கு நம் சொற்பொழிவாளர் எடுத்துக் காட்டினார். பாலைத்திணையைச் சுவாமிகள் எவ்வளவு அழகாக, எத்தகைய கற்பனை நலம் பொருந்துமாறு, பாடியிருக்கின்றார் என்று பாருங்கள் :

**பாலைத் திணை :**

''பாலைத் திணைக்கு உரிய மரங்களுள், குராமரம் - கோங்கமரம் - பாடலமரம் - மராமரம் - முருங்கைமரம் என்பன, சிறப்பாக உரியன. இவ்வுண்மையை உணர்ந்து கொள்ளுதலே, இந்நாளிற் பெரும் புலமையாகும். இம் மரங்கள் பாலைத் திணையில் இருக்கின்றன என்று, பொதுவாகக் குறிப்பிட்டாலேபோதும். ஆனால் அது கவிதையாகாது. ஆதலின், அவற்றையெல்லாம் இயைபுற இணைத்து, கற்பனை புனைந்து, அழகுபடுத்தி, உயிர்கொடுத்து, நாம் என்றும் மறவாவகையில், நம் உள்ளத்திற் பதிந்து மகிழ்ச்சி விளைவிக்கும் வண்ணம், நம்முடைய மனக்கண்ணின் முன்னர் அவற்றை உலவ விடுகின்றார் சுவாமிகள் (Imagery).

**1. குரவம்பாவை :**

''குரவம் (குரா) என்னும் மரத்தின் காய், ஒரு சிறு பொம்மை (பாவை) போலக் காய்த்துத் தொங்கும். ஆதலின் குரவமரத்தின் காயினைக் ''குரவம் பாவை'' என்று வழங்குவர். பாவை என்றால், பெண் என்றும் ஒரு பொருள் உண்டு. ஆதலால், குரவ மரத்தின் பாவையாகிய பெண்ணை, அடுத்துள்ள கோங்க மரம் திருமணம் செய்து கொள்ள விரும்பு

---

* ஒரு கவிஞன், பொருத்தமும் திருத்தமும் வாய்ந்த அடைமொழிகளைத் திறன் தெரிந்து தேர்ந்தெடுத்து வழங்குதலைக் கொண்டே, அக் கவிஞனின் திறமை அளந்தறியப்படும் (The choice use of adjectives is a fine test of a poet's talents) என்பர், மேலைநாட்டுத் திறனாய்வாளரும்.

—ஆசிரியர்.

கின்றதாம். அழகிய பெண்ணை மணக்க யார் தான் விரும்பி முன்வர மாட்டார்கள்? ஆனால், அழகிய பெண்ணை எளிதில் அடைந்துமணந்து விட முடியுமா? அப்பெண்ணின் தாய்தந்தையர்க்கு உரிய அளவு, முறைப்படி பொருள் கொடுத்து இசைவு பெற்றபின் அன்றோ, அழகிய அப்பெண்ணை அடைந்து மணத்தல் இயலும்?''

**2. கோங்கம் பொன் :**

''கோங்கமரத்தின் பூக்கள், பொன்னிறம் வாய்ந்து பொலிவுற்றுத் திகழும், ஆகவே அப் பூக்களைப் 'பொன்' என்று புலவர்கள் புகழ்ந்து கூறுவதுண்டு. ஆதலால், கோங்கமரம் தன் பூக்களாகிய பொன்னைக் குரவமரத்திற்கு ஏராளமாகக் கொடுத்து, அதனது பாவையைத் தனக்கு மணம் செய்து கொடுக்க வேண்டிற்று, பொன் கொடுத்தால், யார்தான் நன்று என்று இசைய மாட்டார்கள்? ஏராளமான கோங்கம் பூக்களாகிய பொன்னைப் பெற்ற குரவமரம், தன் பாவையாகிய பெண்ணைக் கோங்கமரத்திற்குக் கொடுக்க இசைந்தது!''

**3. பாடலம் பூந்தழல் :**

''திருமணத்தை அங்கியங் கடவுள் சான்றாக (அக்கினி சாட்சியாக) அன்றோ, செய்து கொள்ளுதல் வேண்டும்? அங்கிக்கு (நெருப்புக்கு) எங்கே போவது? எங்கும் செல்ல வேண்டுவதில்லை. அந்தப் பாலைவனத்திலேயே, பாடலம் (பாதிரி) என்னும் மரங்கள் உள்ளன. அவற்றின் மலர்கள் சிவந்த நிறம் பெற்று நெருப்புப்போலத் திகழும். எனவே பாதிரி மரங்களின் மலர்க்குவியல் ஆகிய நெருப்பின் முன்னர், கோங்கமரம் குரவம்பாவையை மணந்து கொள்ளுகின்றது''.

**4. வண்டுகள் பாடல் :**

''திருமண வேளையில் வேத மந்திரங்கள் ஓதப்பெறுதல் வேண்டும்; சுற்றமும் நட்பும் சூழ்ந்திருந்து வாழ்த்துதல் வேண்டும். இத் திருமணத்தில் அது நிகழ்ந்ததா? எனின், ஆம் நிகழ்ந்தது. எவ்வாறு நிகழ்ந்தது? பாலை நிலத்தில் மரவம் (மரா) என்னும் மரங்கள் உண்டு. அவற்றை வெண்கடம்பு என்றும் கூறுவர். அம்மரத்தின் மலர்கள் அழகும் மணமும் அமைந்து, தேன் நிறைந்து திகழும். அத்தேனை உண்ண வண்டுகள் இடையறாது மொய்த்துக் கொண்டிருக்கும். தேனைஉண்ணும் அவ்வண்டின் கூட்டங்கள், இடையறாது, மென்மையாகவும் இனிமையாகவும் ரீங்கார ஓசையை மிழற்றும். அவ்வினிய ஓசை, வேத இசைபோலவும், சான்றோர்களின் ஆசி போலவும் அமைகின்றது.''

**5. வெண்பொரி தூவுதல்:**

''திருமண நிகழ்ச்சியில் மணமகன், மணமகளுக்கு மங்கலநாண் அணிவிக்கும்போதும், அதற்குச் சிறிது பின்னரும், மணமக்களை வாழ்த்தி வந்திருந்தோர் அனைவரும் வெண் பொரி தூவுவர் 'புன்கு மலர்ப்பொரி அட்ட மணம்செய்ய மிழலை ஆமே' என்பது சம்பந்தர் தேவாரம். அம்முறையில் பாலைநிலத்தில் இருக்கின்ற முருங்கை மரங்கள், வெண்ணிறம் வாய்ந்த தமது மலர்களைச் சொரியும் காட்சி, மணமக்களை உற்றார் உறவினர் வெண்பொரி தூவி வாழ்த்துவதுபோல விளங்கியது. இந் நிகழ்ச்சியும், காட்சியும் எத்துணைச் சிறப்பு அமைந்து, மிகவும் வியக்கத்தக்கனவாக விளங்குகின்றன! இவ்வழகிய இனிய காட்சியையே, நமது சொற்பொழிவாளர் குறிப்பிட்ட பாடலில், சுவாமிகள் பாடியருளியிருக்கின்றார்:

''குரா அளித்திடு பாவையைக்
கோங்குபொன் கொடுத்துப்,
பராரைப் பாடலம் பூந்தழற்
பாங்கரின் மணப்ப,
மராமரத்து உளர்வண்டு பண்பாட,
வ(ன்)முருங்கை
விராவி வெண்பொரி இறைத்திடும்
வியப்பினது ஒருபால்''

—காஞ்சிப்புராணம்

**6. அடைமொழிப் பிழை :**

இவ்வழகிய இனிய அரும்பெறற் பாடலில் முருங்கை மரம் 'வன் முருங்கை' என்று குறிப்பிடப் பெற்றிருக்கின்றது. ''முருங்கை மரம் மிகவும் மென்மை வாய்ந்த மரம். அதனை 'வன்முருங்கை' என்று குறிப்பிட்டது பொருத்தமன்று. இப்பாடலைப் பாடிய கவிஞர் இயற்கைப் பொருள்களை உண்மையிலேயே உற்று நோக்கி நுனித்து உணராமல் இருந்ததனால்தான், இத்தகைய பிழையான அடைமொழியை வழங்கினராதல்வேண்டும். இதனால் பிற்காலப் புலவர்களின் குறையும் பிழையும் தெற்றென விளங்குகின்றன'' என்று, நம் சொற்பொழிவாளர் சுட்டினார். சொற்பொழிவாளர் சுட்டிய குறைபாடும் பிழைபாடும், ஏதோ ஒரோவொருகால் யாரோ பிற சில பிற்காலப் புலவர்களுக்குப் பொருந்தக் கூடுமாயினும், உண்மையிலேயே சிறந்த சிவானுபூதிச் செல்வர் ஆகிய சிவஞான சுவாமிகள்பால், இத்தகைய குற்றமும் குறைபாடும் உண்டு என்று கருத, யான் சிறிதும் துணிகிலேன்.''

**வண்முருங்கை :**

''முருங்கை மரத்தின் பட்டை - இலை - சாறு- பூ - காய்-விதை முதலியன அனைத்துமே, மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படும் வளப்பம் (வண்மை) உடையன. முருங்கை மரம் மருத்துவ நலங்கள் செறிந்த ஒரு சிறந்த மூலிகை மரம். ஏழைகளின் கற்பக மரம். அச்சிறப்பியல்புகள் கருதி, ஆசிரியர் சிவஞானசுவாமிகள் ''வண்முருங்கை'' என்றே பாடியிருந்திருப்பர். ஆனால் நூலை அச்சிட்டவர்களின் கவனக்குறைவால், அது ''வன் முருங்கை'' என்று, நமது சொற்பொழிவாளர் குறிப்பிட்டதுபோல, எல்லாப் பதிப்புக்களிலும் பிழையாக அமைந்துவிட்டது. இப் பிழையும் குறையும் அச்சிற் பதிப்பிட்டவர்களைச் சாருமேயன்றி, நமது மாதவச் சிவ

ஞான சுவாமிகளை, ஒரு சிறிதும் சாராது என்று உறுதியாகக் கருதுகின்றேன்.

''புலவர் வகுப்பு மாணவர்களாகிய நீங்கள் சங்கத் தமிழ் இலக்கியங்களையும், காஞ்சிப் புராணம் போன்ற கலைநலஞ் சான்ற அரும் பெரும் தமிழ் இலக்கியங்களையும் எல்லாம், நன்றாக அழுந்திக் கற்றுத் தேர்ந்து, மிகவும் சிறந்த நிறைந்த செந்தமிழ்ப் புலமை பெறுதல் வேண்டும் என்று, இறையருளை வேண்டி வாழ்த்தி, நமது சிறப்புச் சொற்பொழிவாளர் அவர்களை மனமாரப் பெரிதும் போற்றிப் பாராட்டி அமைகின்றேன்''—என்று கூறி, நாட்டார் ஐயா அவர்கள், தம்முடைய தலைமையுரையை நிறைவு செய்தருளினார்கள்.

**வெண்பாக்கள்:**

திரு. நாட்டார் ஐயா அவர்கள் வழங்கிய தலைமை நிறைவுரை, என் உள்ளத்தில் மிக்க மகிழ்ச்சியையும், உணர்வு எழுச்சியையும் விளைவித்தன. அதனால், அப்போது பின்வரும் வெண்பாக்களை யாத்து, அகம் மிக மகிழ்ந்தேன்.

*ஆய கலையனைத்தும் ஆய்ந்துணர்ந்து, கற்றுவல்ல,*
*தூயசிவ ஞான சுவாமிகள்தாம்,-நேயமிகக்*
*காஞ்சிப் புராணம் கவின்பெருகச் செய்தளித்தார்,*
*தீஞ்சுவைகள் எல்லாம் செறித்து (1)*

*தலச்சிறப்பைச் சாற்றும் புராணங்கள் தம்முள்,*
*கலைச்சிறப்பார் காஞ்சிப் புராணம்,-நலச்சிறப்புப்*
*பற்பலவும் வாய்ந்து, பயில்வார்க்கு அறிவூற்றாம்;*
*பொற்புமிக ஓங்கிப் பொலிந்து. (2)*

*தொட்ட இடம்தோறும் தூயசைவ சித்தாந்த*
*நுட்பங்கள் தோற்றி, உயர் நோக்கமைந்து,-*
*மட்டில்லா*
*இன்பம் விளைக்கும்; இறையுணர்வில் தோய்விக்கும்;*
*நன்றுயர்காஞ் சிப்புரா ணம்! (3)*

—ந. ரா. முருகவேள்

**பசுமை நிறைந்த நினைவு:**

கரந்தைப் புலவர் கல்லூரியில் மாணவனாக, யான் பயின்று கொண்டிருந்தபோது, 'இளங்கோவடிகள் இலக்கிய மன்றத்தில்' இந்த விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இது நிகழ்ந்தது 1943 ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன். ஏறத்தாழ 40 ஆண்டுகள் கழிந்து விட்டன வாயினும், இவ்வரிய உரைகளும், இனிய நிகழ்ச்சிகளும் சிதைந்து அழிந்து படாமல், மறக்க இயலாதபடி என்னுடைய உள்ளத்திற் பசுமை நிறைந்து பதிந்திருக்கின்றன. நாவலர் நாட்டார் ஐயா அவர்கள் அளித்த இந்த நல்ல பெருவிளக்கம், இன்றளவும் எல்லையில்லாத இன்ப உணர்வினை, எண்ணுந்தோறும் எனக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றது!

**தமிழ்ப் பொழில்:**

அத்தகைய பெருவித்தகராகிய, நாவலர் நாட்டார் ஐயா அவர்கள் போன்ற, தமிழ்ப் பெரும்புலவர் ஒருவரை, இனி நம் தமிழுலகம் என்றேனும் மீண்டும் பெறக்கூடுமா? என்று எண்ணி, என் உள்ளம் ஏங்கிக் கலங்குகின்றது. ஐயா அவர்கள் மறைந்தபொழுது (28-3-44), இருபதுக்கு மேற்பட்ட இரங்கற் பாடல்கள் எழுதியிருந்தேன். கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடாகிய ''தமிழ்ப்பொழில்'' என்னும் இதழில், இடமின்மை கருதி, அவற்றுள் ஒருசில பாடல்களை மட்டும் எடுத்து வெளியிட்டிருந்தனர். அவைகளுள் பின்வரும் பாடலும் ஒன்று:

*''தீஞ்சுவைகள் மிகச்சொட்டச் சிவஞான*
*மாதவன்செய், சிறந்த நூலாம்*
***காஞ்சிப்புராணத்தின்** கவிகள்பல*
*வற்றினுக்குக், கனிவு மிக்க*
*வாஞ்சிப்பாற் சைவநலம் வளங்கொழிக்கும்*
*பொருள்விரித்தாய்; மகிழ்ந்து கேட்டே*
*யாஞ்சுவைத்தேம்; அதுநினைத்தால் யாவர்இனி*
*உரைப்பர்? என்றே, அழுங்கு கின்றேன்!''*

—ந. ரா. முருகவேள்

**இலக்கணத்திற் கற்பனைகள்:**

தாம்பரம் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில், தமிழ்த்துறையில் யான் பணியாற்றிக் கொண்டிருந்தபோது (1957-1962), பி.ஏ., பி.எஸ். சி. மாணவர்களுக்கு இலக்கண பாடம் கற்பிக்கும் பேறு, எனக்குக் கிடைத்தது. அதன் பயனாக ''இலக்கணத்திற் கற்பனைகள்'' என்னும் ஓர் அரிய ஆய்வுநூலை, 1961-ஆம் ஆண்டில் வெளியிட்டேன். அதனை நமது நாவலர் நாட்டார் ஐயா அவர்களின் திருவடிகளுக்கே உரிமையாக்கிப், பின்வரும் பாடலை இயற்றிச் சேர்த்துப் பணிந்து மகிழ்ந்தேன்.

*''**இலக்கணத்திற் கற்பனைகள்** என்னும்இந்தச்*
*சிறுநூலை, எந்தை போல்வார்,*
***சிலப்பதிகாரம்**முதலாம் செந்தமிழ்நூற்கு*
*உரைவகுத்த சிறப்பின் மிக்கார்,*
*நலத்தகைய பெரும்புலவர் **நாவலர் வேங்***
***கடசாமி நாட்டார்** தாம், எற்கு*
*உலப்பில்தமிழ்ச் சைவநலம் உதவுதிறம்*
*நினைந்து, அவர்தாட்கு உரிமை செய்கேன்!''*

—ந. ரா. முருகவேள்

*''மறைமலை யடிகள், **நாவலர் நாட்டார்**,*
*வண்புகழ்ப் பண்டித மணியார்,*
*துறைகலை போய சுப்பிர மணியத்*
*தோன்றலார், ஞானியார் அடிகள்,*
*முறைதிகழ் சான்றோர் சச்சிதா னந்தர்,*
*மூதறிஞர்திரு. வி.க.,*
*பிறபிற பெரியோர் புலமையும் தொண்டும்*
*பெரிதுணர்ந்து, அவர்அடி பணிவாம்!''*

—ந. ரா. முருகவேள்

—oOo—

# உறையூர்த் தான்தோன்றீசுவரர் திருக்கோயில் கல்வெட்டுக்கள்

டாக்டர் இரா. கலைக்கோவன், திருச்சி.

திருச்சி நகரில் உறையூர்ப் பகுதியில் சாலை வீதியில் அமைந்திருக்கும் அருள்மிகு தான்தோன்றீசுவரர் திருக்கோயில் புகழ்பெற்ற பழங்கோயில்களுள் ஒன்றாகும். பல்வேறு திருப்பணிகளால் கட்டிட அமைப்பில் மாறியிருந்தாலும், இக்கோயில் உள்ள மிகப் பழமையான சிற்பங்களும், கல்வெட்டுக்களும் இதன் பழமையை அறிய உதவுகின்றன. மிக அண்மைக் காலம் வரையில் இக்கோயில் முற்காலச் சோழர்களின், குறிப்பாக முதலாம் ஆதித்தன் காலத்ததாகக் கருதப்பட்டு வந்தது. முற்காலச் சோழர்களின் கோயில்கள் என்ற நூலில் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களும், இக்கோயிலை ஆதித்தன் காலத்துக் கோயிலாகவே வரையறுத்துள்ளார். அண்மையில் இரண்டு புதிய கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை இரண்டும் பாண்டிய மன்னனான இரண்டாம் வரகுணன் காலத்தவை. இக் கல்வெட்டுக்களின் கண்டுபிடிப்பினால் இக்கோயிலின் காலம் கி.பி. 875க்கும் முற்பட்டதாக அமைகிறது. இக்கோயிலில் உள்ள அனைத்துக் கல்வெட்டுக்களும் படிக்கப்பட்ட நிலையில், பல புதிய சுவையான தகவல்கள் கிடைத்துள்ளன.

சின்னஞ்சிறிய இக்கோயிலில் ஏறத்தாழப் பதினைந்து கல்வெட்டுக்கள் உள்ளன. அவை உள்மண்டபம், கருவறை இவற்றின் உட்சுவர்களிலும் புறச்சுவர் ஆளிலும் காணப்படுகின்றன. இரண்டு கல்வெட்டுக்கள் இ உள்மண்டபத்து நுழைவாயிற்படியின் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் அமைந்த கருங்கல் நிலைகளில் செதுக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு கல்வெட்டுகளே அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாம் வரகுண பாண்டியனின் பதின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்களாகும். இவையிரண்டு தவிர ஏனைய கல்வெட்டுக்கள் சோழர்களுடையன.

முதலாம் ஆதித்தன், முதலாம் பராந்தகன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன், இரண்டாம் குலோத்துங்கன் முதலிய சோழ மன்னர்களின் கல்வெட்டுக்கள் இங்குள்ளன. இவற்றுள் சில கல்வெட்டுக்கள் சிதைந்துள்ளன. சில கல்வெட்டுக்கள், சிதைந்த கோயிலைச் சீரமைத்த காலத்தில் திருப்பணி செய்தவர்களால் முன்பின்னாக, உட்புறமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

உள்மண்டபத்தின் தென்புறச் சுவரில் காணப்படும் இரண்டு கல்வெட்டுக்களுள் ஒன்று கோப்பரகேசரியின் இருபத்துநான்காம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டாகும். நீண்ட ஆட்சியாண்டுகளைக் கொண்டும், இக்கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டும், இதை முதலாம் பராந்தகனின் கல்வெட்டாகக் கருதவேண்டியுள்ளது. வெகுவாகச் சிதைந்துள்ள இக்கல்வெட்டின் மூலம், பூதியர் தேவியார் என்பவர் முப்பது மாநிலத்தை இக்கோயில் இறைவனுக்குக் கொடையாக அளித்தமையும், இக்கோயிலின் இறைவனான திருத்தான்தோன்றிப் பெருமானடிகளின் திருமஞ்சனத்துக்குப் பத்துப் பொன்கொண்டு, பத்துக் கலம் நெல் பெற்று ஆண்டுதோறும் திருமஞ்சனம் நடைபெற்று வந்தமையும் தெளிவாகின்றது.

அதே தென்புறச் சுவரில் காணப்படும் இன்னொரு கல்வெட்டு சிதைந்து முழுமையாக இல்லாமல் இருப்பதால் மன்னர் பெயரும் ஆட்சியாண்டும் அறியக்கூடவில்லை. இக்கல்வெட்டின் எழுத்தமைதியாலும் 'ஸ்வஸ்திஸ்ரீ கோவிரா' என்ற தொடக்கம் புலப்படுவதாலும் இது முதலாம் ஆதித்த சோழனுடையதாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. இக்கோயில் இறைவனுக்குப் பத்து மாநிலம் கொடையாக அளிக்கப்பட்டமையும், இறைவனுக்காக எடுக்கப்பட்ட திருவிழா ஒன்றினைப் பற்றிய குறிப்பும் இக்கல்வெட்டால் உணரக் கிடக்கின்றன.

முதலாம் இராசராச சோழனின் கல்வெட்டு இரண்டு பகுதிகளாக உள்ளது. முதல் பகுதியில் இம்மன்னனின் புகழ்வாய்ந்த மெய்க்கீர்த்தியான 'திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்' என்ற தொடக்க வரிகள் உள்ளன. இன்னொருபகுதி பலசுவையான செய்திகளைத் தருகிறது. இக்கோயில் அமைந்திருக்கும் ஊரின் பெயர் உறையூர்க் கூற்றத்து இராசாதித்திய சதுர்வேதி மங்கலம் என்றுகுறிக்கப்பட்டுள்ளது.

இறைவனின் பெயர் திருத்தான்தோன்றி மகா தேவர் என்பதாகும். தைத் திங்கள் தோறும் இராசராசன் பிறந்த சதய நட்சத்திரத்தில் இராசராசவிடங்கன் தைத் திருவிழா இறைவ னுக்காக எடுப்பிக்கப் பெற்றது. இத்திருவிழா வின்போது அவலுக்காக ஒரு கலம் அரிசி அளிக் கப்பட்டது. இத்திருவிழாவில் எவ்விதக் குறை யும் ஏற்படாது பார்த்துக்கொள்ளும்படி ஆணை யிடப்பெற்று, அந்த ஆணையை நிறைவேற்றும் படி வரிவசூல் செய்யும் அதிகாரி, கண்காணி செய்வார், ஸ்ரீகாரியம் செய்வார் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இவ்வூரில் இருபத்துநான்கு சேரிகள், அதாவது இருபத்து நான்கு குடியிருப்புக்கள் இருந்தன.

கருவறையின் மேற்குப்புறச் சுவரில் முத லாம் இராசேந்திரனின் இரண்டு கல்வெட்டுக் கள் காணப்படுகின்றன. ஒன்றில் அம் மன்ன னின் மெய்க்கீர்த்தியும், மற்றொன்றில் விஷு திருவிழா நடைபெற்றதும், அதற்குத் தேவ நக்கன் என்பார் நிலமளித்த செய்தியும் உள் ளன. இதே சுவரில் இரண்டாம் குலோத் துங்கனின், 'பூமன்னு பதுமம் பூத்தவேழுலகும்' என்ற மெய்க்கீர்த்தியின் சில பகுதிகள் காணப் படுகின்றன. கருவறையின் வடக்குப்புறச் சுவற் றிலுள்ள கல்வெட்டு முழுமையாக இல்லாமை யினால் மன்னன் பெயரும் காலமும் அறியக் கூடவில்லை. நான்காம் சேரியைச் சேர்ந்த வாச்சியன் சாத்தன் புருடோத்தமன் என்பான் ஆதித்தன் நக்கன் என்பானிடமிருந்து ஒரு மா அரைக்காணி நிலம் இருபது கழஞ்சு பொன் னிற்கு வாங்கிய செய்தியை இக்கல்வெட்டு உணர்த்துகின்றது.

கருவறையின் உட்புறச் சுவரில் காணப் படும் கல்வெட்டுக்களில் ஒன்று, இரண்டாம் குலோத்துங்கனின் மெய்க்கீர்த்தியின் ஒரு பகுதி யைக் கொண்டுள்ளது. இன்னொன்றில் முத லாம் இராசேந்திரசோழனின் மெய்க்கீர்த்தியின் சிலவரிகள் பொறிக்கப்பட்டுள்ளன. சிதைந் திருக்கும் ஏனைய கல்வெட்டுக்களிலிருந்து நில மொன்றிற்கு விலையாவணம் செய்து கொடுத் தமையும், விலைப்பிரமாணம் செய்தளித்த மையும் தெரியவருகிறது.

இக்கோயிலின் உள்மண்டபத்து வாயில் நிலையில் காணப்படும் கோமாறன் சடைய னான இரண்டாம் வரகுணபாண்டியனின் இரண்டு கல்வெட்டுக்களும், இங்குள்ள கல் வெட்டுக்களில் மிகப் பழமையானவையும், முக் கியமானவையும் ஆகும். இவ்விரண்டு கல்வெட் டுக்களின் கண்டுபிடிப்பினால் இக்கோயிலின் கலை வரலாறே மாறியுள்ளது. இதுகாறும் ஆதித்த சோழனால் எழுப்பப்பட்டதாகக் கருதப்பட்டுவந்த நிலைமாறி, பாண்டியப் பெரு வேந்தன் வரகுணன் காலத்தில் அல்லது அவ னுக்கு முற்பட்ட காலத்தில் இக்கோயில் எழுப் பப்பட்டிருக்கலாமென்ற உண்மை வெளியாகி யுள்ளது.

இக்கல்வெட்டுக்களில் இடப்புற நிலையி லுள்ள கல்வெட்டில் இம் மன்னனின் பெயர் 'கோமாறன் சடையனான ஸ்ரீபதி வரகுண மகாராசன்' என்றும், கொடையளிக்கப்பட்ட போது, மன்னனின் ஆட்சியாண்டு பதின்மூன்று என்றும், இக்கோயில் இறைவனின் பெயர் நந்திவர்ம மங்கலத்துத் திருத்தான்தோன்றி பெருமான் அடிகள் என்றும் கூறப்பட்டுள்ளது. இம்மன்னன் ஆண்டநாட்டு வேளான் என்பான் கையில் நூற்றிருபது நல் பழங்காசுகளைக் கொடுத்து, அதனால் வரும் வட்டியைக் கொண்டு சில அறங்களைச் செய்யுமாறு சொன்ன செய்தியும், சோமயாசிநம்பி, நக்கன் என்ற பெயர்களும் காணப்படுகின்றன. இக்கல் வெட்டின் இறுதியில், 'ஆக இப்பொன் ஐம்ப தும் இக்காசும் இப்பலிசையும் ஏற்றி மூன்று கூறிட்டு', இரண்டு கூறு இறைவழிபாட்டிற்கும் ஒரு கூறு இறைகாவலுக்கும் அளிக்க வேண்டு மென நந்திவர்ம மங்கலத்துப் பெருங்குறி சபையினர் எடுத்த முடிவு காணப்படுகின்றது.

உள்மண்டப வாயிலில் வலப்புற நிலையி லிருக்கும் கல்வெட்டு மிகவும் அழிந்த நிலையில் உள்ளது. நந்தா விளக்கெரிக்க நிலம் விற் பனை செய்யப்பட்ட செய்தியும், அந்நிலத் துக்கான எல்லைகளும் இக்கல்வெட்டில் கூறப் பட்டுள்ளன.

இரண்டாம் வரகுண பாண்டியனின் இதே பதின்மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்கள் திருவெள்ளறையிலுள்ள வடதிருவானைக்கா பெருமானடிகள் கோயிலிலும், இலால்குடி சப்த ரிஷீஸ்வரர் கோயிலிலும் காணப்படுகின்றன. அவற்றிலும் அண்டநாட்டு வேளான் என்பா னிடமே இம்மன்னன் நூற்றிருபது கழஞ்சுப் பொன்னைக் கொடையாகத் தந்து இறைவ னுக்கு நந்தா விளக்கெரிக்க ஆணையிட்டான். மலைக்கோட்டையிலுள்ள மேல் குகைக் கோயிலிலும் இதே பொருளமைந்த இம்மன்ன னின் கல்வெட்டொன்று காணப்படுவது குறிப் பிடத்தகுந்தது. இவற்றினால் அண்டநாட்டு வேளான் என்னும் ஒருவன் மூலம் இம்மன்னன் திருச்சிமாவட்டத்திலுள்ள பலகோயில்களுக்குக் கொடையளித்திருக்கும் உண்மை புலப்படுகின் றது.

இக்கோயிலில் இதுகாறும் கிடைத்துள்ள இக்கல்வெட்டுச் செய்திகளால் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இருந்த உறையூர் நகரின் அமைப்புமுறை பற்றியும், இறைவழிபாட்டு முறைகள் பற்றியும், கொடைகளைப் பற்றியும் அறிய முடிகிறது. சதயத் திருவிழாவும், விஷுத் திருவிழாவும் மற்றும் பல சிறப்பான திருவிழாக் களும் இங்கு நடந்திருப்பதை அறியும்போது இக்கோயில் இரண்டாம் குலோத்துங்கன்காலம் வரையில் மக்களால் மிக உயர்ந்த நிலையில் போற்றி வழிபடப்பட்டு வந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகும். பிற்காலத்தில் பல கார ணங்களால் தன் பெருமைகளை இழந்துவிட்டு நின்று, தனித்து, சிதைந்து நிற்கும் இத்திருக் கோயிலை, இங்குள்ள சிற்பங்கள், கல்வெட் டுக்கள் முதலியவற்றின் சிறப்பைக்கருதியேனும் போற்றிப் பாதுகாக்க வேண்டியது அவசிய மாகும்.

# திருக்கச்சூர்த் திருக்கோயில்

திரு. வி. சிவபாதசேகரன், B.Sc., சென்னை-34

தேவாரத் திருப்பாடல்பெற்ற தொண்டை நாட்டுச் சிவத்தலங்களுள், திருக்கச்சூர் கோயில் ஒன்று. இது 'கச்சூர் ஆலக் கோயில்' எனத் தேவாரப் பாடல்களில் குறிக்கப்பெற்றுள்ளது. இந்தத் தலம் செங்கற்பட்டுக்கு அருகேயுள்ள சிங்கப்பெருமாள் கோயில் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து, வடமேற்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. செங்கற்பட்டில் இருந்து திருவள்ளூருக்குச் செல்லும் உந்தூர்திகள், திருக்கச்சூர் வழியாகச் செல்கின்றன.

இங்கு மலைமேல் ஒரு கோயிலும், ஊரின் நடுவே ஒரு கோயிலும் ஆக, இரண்டு கோயில்கள் அமைந்துள்ளன. மலைமேல் உள்ள கோயிலில் எழுந்தருளியிருக்கும் சுவாமிக்கு மருந்தீசுவரர் என்றும், அம்பிகைக்கு இருள்நீக்கித் தாயார் அஞ்சனாட்சி என்றும் பெயர்கள் வழங்குகின்றன. தேவ மருத்துவர்கள் ஆகிய அசுவினி தேவர்கள் ஒரு சமயம் தேவேந்திரனுக்கு உற்ற ஒரு பிணியைத் தீர்ப்பதற்காக, இங்கு வந்து இறைவனை வழிபட்டு, இங்குள்ள மலையில் இருந்த மூலிகை மருந்துகளை இறைவன் அருளால் கிடைக்கப் பெற்றனர். அதனாலேயே சுவாமிக்கு மலை மருந்தீசுவரர் என்று பெயர் ஏற்பட்டது என்பது தலவரலாறு.

''மேலை விதியே! வினையின் பயனே!
விரவார்புரம் மூன்று எரிசெய்தாய்!
காலை எழுந்து தொழுவார் தங்கள்
கவலை களைவாய் கறைக்கண்டா!
மாலை மதியே! மலைமேல் மருந்தே!
மறவேன் அடியேன்: வயல்சூழ்ந்த
ஆலைக் கழனிப் பழனக் கச்சூர்
ஆலக் கோயில் அம்மானே''

எனவரும் சுந்தரர் தேவாரப் பாடலில், ''மலைமேல் மருந்து'' என்னும் பெயர், இத்தல வரலாற்றையுணர்த்தும் குறிப்பாக அமைந்திருத்தல் காணலாம். இம் மலைக்கோயில் சிறியதாக இருந்தாலும், அழகும் சிறப்பும் உடையதாகத் திகழ்கிறது.

ஊர் நடுவேயுள்ள கோயில் தியாகராச சுவாமி கோயில் என வழங்குகின்றது. தியாகராசசுவாமி என்பது, இக்கோயிலின் உற்சவ மூர்த்திக்குப் பெயர். சுந்தரரின் தேவாரப் பாடல்பெற்ற தலமாதல் பற்றி, அவருக்கு மிகவும் விருப்பமான திருவாரூர்த் தலத்தில், சோமாஸ்கந்த வடிவத்தில் விளங்குகின்ற தியாகராசசுவாமியே, இங்கும் உற்சவமூர்த்தியாக வைத்து வழிபடப்பெற்று வருகின்றார் எனத் தெரிகின்றது. இக்கோயிலில் மூலத்தானத்தில் உள்ள பெருமான் கச்சபேசுவரர் என வழங்கப் படுகின்றார். தேவர்களும் அசுரர்களும் அமிழ்தம் பெறுவதற்கு விரும்பித் திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது, மந்தர மலையாகிய மத்து அசையாமல் நிற்கும்பொருட்டுத் திருமால் ஆமையாக வடிவம் எடுத்து, அதனைத் தாங்கினார் என்பது வரலாறு. அங்ஙனம் கச்சபம் என்னும் ஆமை வடிவம் எடுத்த திருமால், இங்கு வழிபட்ட காரணத்தினால், இங்குள்ள பெருமானுக்குக் கச்சபேசுவரர் எனப் பெயர் அமைந்தது. இங்குள்ள அம்பிகை அஞ்சனாட்சி எனப் போற்றப்பெறுகின்றாள். இக்கோயிலும் பல சந்நிதிகளுடன் நல்ல அமைதியான சூழ்நிலையில் அழகுறத் திகழ்கின்றது. மலைமேல் மருந்தீசுவரர் விளங்குவது போல, இங்கு இரந்தீசுவரர் என்றும், விருந்தீசுவரர் என்றும் இரு பெயர்கொண்டு சிவபிரான் விளங்குகின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்திற்கு வந்து தரிசனம் செய்த பொழுது, நண்பகல் நேரமாக இருந்தது. வழிநடந்து வந்ததனால், அவர் பசியாலும் களைப்பாலும் சோர்வுற்று வருந்தினார். அதுகண்ட சிவபெருமான், மனித வடிவம் கொண்டு, இவ்வூரில் உள்ள வீடுகள் தோறும் சென்று இரந்து பிச்சை ஏற்று உணவெடுத்துவந்து, சுந்தரருக்கு உணவு கொடுத்து விருந்தளித்தார். அவ்வரலாற்றை யுணர்த்தும் முறையிலேயே, இரந்தீசுவரர், விருந்தீசுவரர் எனச் சிவபெருமான் இங்கு இருவடிவங்கள் கொண்டு திகழ்கின்றார். இவ்வரலாற்றுக் குறிப்பும்,

''கச்சேர் அரவொன் றரையில் அசைத்துக்
கழலும் சிலம்பும் கலிக்கப் பலிக்கென்று
உச்சம் போதா ஊர்ஊர் திரியக்
கண்டால் அடியார் உருகாரோ?''

எனவரும் சுந்தரர் தேவாரத் திருப்பாடலில் அமைந்திருத்தல், அறிந்து இன்புறுதற்குரியது.

---

## 'சமயம்' எனும் தெய்விகச் சொல்

இலகுறு சமயம் என்னும் எழில்இயல் இறைமைச் சொல்லில்,
நிலைபெறு நிதிய வைப்பின் நிறைவெலாம் நிகழ்த்தற் காமோ?
உலகினில் உள்பொன் வெள்ளி ஒளிமணித் திரள்கள் எல்லாம்,
விலைமதித் திடற்கீ டாகா, வியன்பெரும் மாட்சித் தாமே!

— தமிழாக்கம் : ந. ரா. முருகவேள்!

# திருவிருத்தமும், குறுந்தொகையும்

ந.ரா. முருகவேள், M.A., M.O.L.,

## முன்னுரை:

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களுள் தலைவராகத் திகழ்பவர், நம்மாழ்வார்! நம்மாழ்வார் அருளிச் செய்த பிரபந்தங்கள் நான்கு. அவைகள் முறையே திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என்பனவாகும். இவற்றுள் 'திருவிருத்தம்' என்னும் பிரபந்தத்தின் பெயர் குறித்துப் பெரியோர்கள் பலவகை விளக்கங்களைக் கூறுவர்.

## திருவிருத்தம் :

(1) 'விருத்தம்' என்னும் சொல், தமிழில் 'கட்டளைக் கலித்துறை' என்னும் ஒருவகைச் செய்யுளைக் குறிக்கும். 'குறள்' என்னும் செய்யுள் வகையினால் அமைந்த நூல், 'திருக்குறள்' எனப் பெயர் பெற்றாற்போல, விருத்தம் என்னும் செய்யுள் வகையால் இயன்ற இந்நூலும், திருவிருத்தம் எனப் பெயர் பெறுவதாயிற்று.

(2) இனி, வடமொழியில் விருத்தம் என்னும் சொல் 'செய்தி' எனப் பொருள்தரும். ''இந்நின்ற நீர்மை இனி யாம் உறாமை அடியேன் செய்யும் விண்ணப்பம் மெய்ந்நின்று கேட்டருளாய்'' என்று, ஆழ்வார் எம்பெருமான்பால் இவ்வுலக வாழ்வில் தமக்குள்ள வெறுப்பை விரித்துரைத்து, எம்பெருமானைக் கலந்து அனுபவித்தலிலேயே, தமக்குக் காதல் பெருகிக் கிளர்ந்தோங்கும் செய்திகளை வெளியிட்டு, விண்ணப்பித்துக் கொள்ளுகின்ற விதத்தில் அமைந்திருக்கும் காரணம்பற்றி, இதனைப் பெரியோர்கள் 'திருவிருத்தம்' எனப் பெயரிட்டுச் சிறப்பித்து வழங்குவராயினர்.

(3), வேறொரு வகையாகவும், பெரியோர்கள் இதற்கு விளக்கம் கூறுவது உண்டு. இந்நூலின்கண் நம்மாழ்வார் ''ஞானத்தில் தம் பேச்சு, பிரேமத்திற் பெண் பேச்சு'' எனப்படும் முறையில், பெரும்பாலும் தம்மைப் பிராட்டியாகவே வைத்துத் தமது உள்ளத்திற் பொங்கிப் பெருகிஎழும் காதற் கனிவுணர்ச்சிகள் பற்றிய செய்திகளை வெளியிடுகின்றார். ஆதலின், திருவிருத்தம் என்பதற்குத் திருமகளின் செய்திகளைக் கூறும் நூல் (திரு-திருமகள். விருத்தம்-செய்தி, காதற் செய்தி) என்றும் சிலர் பொருள்கூறுவர்.

(4) திருவிருத்தம் என்னும் இந்நூலின் சிறப்பு எல்லையற்றது. தமிழுக்குப் பெரிதும் சிறப்பாக உரிய அகப்பொருள் இலக்கணத் தினைத் தழுவி, அதன் துறைவகைகள் பல அமையப் பெற்றிருப்பது. சொற்றிட்பம், பொருள்நுட்பம், ஆழ்ந்துசெல்லும் கருத்தமைதி, குறிப்புப் பொருள் நுணுக்கங்கள், கற்பனை நலங்கள் முதலிய கவிதைத் திறன்கள் பலவற்றாலும் ஒப்புயர்வற்றுச் சிறந்து திகழ்வது, இந்நூல்.

கசப்பு மருந்தை உண்ண மறுப்பவர்க்கு, அவர் உவக்குமாறு அதன்மேல் இன்சுவை தீற்றி வைத்து உண்பிக்குமாறு போலப் பாமர மக்கள் எளிதில் உணர்ந்து நுகர முற்படாத பக்திச் சுவையினை, அவர்கள் உவந்து நுகரும்வண்ணம், பண்புயர்ந்த காதற்சுவையாகப் பாங்குற அமைத்து, எளிய சிற்றின்பம் பற்றிக் கூறுவது போல, அரிய இனிய பேரின்பம்பற்றி அழகுற விளக்குவது, திருவிருத்தம் என்னும் இந்நூலின் சிறப்பியல்பாகும்.

மேலோடு காண்பவர் அறியும் வெளிப்படைப் பொருள் (அந்நியாபதேசம்), ஆழ்ந்து நுணுகி ஆராய்ந்து கற்பவர் உணரும் உள்ளுறை பொருள் (சுவாபதேசம்) என்னும் இருவகைப் பொருள்களும் எழிலுறக் கொண்டு, இந்நூல் இலங்குகின்றது.

## திருவிருத்தத்தின் சிறப்பு :

இத்தகைய இந்நூலின் ஏற்றமிக்க பெருஞ் சிறப்பினை, மிகவும் வியந்து, கிடாம்பியாச்சான் என்னும் வைணவப் பெருஞ்சான்றோர் ஒருவர், ''கருப்பப்பை ஆகிய வட்டமான குழியிற் பத்துத்திங்கள்காறும் கிடந்து, அதனின்று வெளிப்பட்டு உலகிற் பிறந்து, பின்பு இழிந்த காமம் ஆகிய கொடிய குழியிலே விழுந்து, நரை திரை மூப்புப் பிணி என்னும் பலவகைத் துயரங்களை விளைவிப்பதில் ஒப்பற்ற கிழட்டுத் தன்மையை அடைந்து, மிகவும் வருந்திப் பிறந்தும் இறந்தும் அலைந்து கொண்டிருக்கின்ற உலக மக்களே! உங்களுடைய உயிரானது அடைதற்குரிய நன்மையாகிய பயன்களுக்கு, ஓர் இடையூறுகூட அணுக வொட்டாதபடி, திருக்குருகூர் என்னும் திவ்விய தலத்தில் தோன்றிய தலைவரான நம்மாழ்வார் அருளிச் செய்த திருவிருத்தம் என்னும் இந்நூலில் உள்ள நூறு பாடல்களில், ஒரு பாடலின் ஓர் அடியையாவது

கற்று உணர்ந்துகொள்ளுங்கள்; உணர்ந்து கொண்டால் ,நீங்கள். எம்பெருமான் எழுந்தருளி வீற்றிருக்கின்ற வைகுந்தம் என்னும் திருநாட்டில் மிகமேலான பேரின்பத்தை நுகர்ந்துகொண்டு வாழ்ந்திருப்பீர்கள்!'' என்னும் கருத்தமைய,

''கருவிருத்தக் குழி நீத்தபின்,
காமக் கடுங் குழிவீழ்ந்து,
ஒருவிருத்தம் புக்கு உழலுறுவீர்!
உயிரின் பொருள்கட்கு
ஒருவிருத்தம் புகுதாமல்
குருகையர்கோன் உரைத்த
திருவிருத்தத்து ஓர்அடி கற்று
இரீர், திருநாட்டு அகத்தே''

[விருத்தம்-வட்டம்; கிழட்டுத்தன்மை; இடையூறு; செய்யுள்வகை. பொருள்கட்கு-நன்மை ஆகிய பயன்களுக்கு. குருகை-திருக்குருகூர்; ஆழ்வார் திருநகரி. இரீர்-இருப்பீர்களாக. திருநாடு-வைகுந்தம்]

என்னும் இனிய தனியன் ஒன்றினால், கிடாம்பி யாச்சான் என்னும் வைணவப் பெருந்தகையார் திருவிருத்தத்தின் சிறப்பை விளக்கியிருத்தல் காணலாம்.

## குறுந்தொகை :

நம்மாழ்வார் அருளிய இத்துணைச் சிறப்புமிக்க திருவிருத்தம் ,பண்டைச் சங்ககால இலக்கியங்களின் பண்புநலங்களையும், சாயல்களையும் பெற்று விளங்குதல், கற்றுணர்ந்து மகிழத்தக்கது. சங்ககால நூற்றொகுதி யாகிய எட்டுத்தொகையுள், ஒன்றாக விளங்குவது குறுந்தொகை.அதனை 'நல்லகுறுந்தொகை' என்று, நம் பண்டைப் பெரியவர்கள் பாராட்டிப் போற்றியுள்ளனர். அதன்கண் வருகின்ற,

''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி,
காமம் செப்பாது கண்டது மொழிமோ!
பயிலியது கெழீஇய நட்பின், மயில்இயற்
செறிஎயிற்று அரிவை கூந்தலின்,
நறியவும் உளவோ நீ அறியும் பூவே''

என்னும் பாடல், மிகவும் புகழ்பெற்றது. இதனைப் பாடியவர், கூடல் என்னும் மதுரையின் கண் இருந்து தமிழ் ஆராய்ந்த 'திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுள்' ஆகிய இறையனார் என்பர். இப்பாடலின் கருத்துப் பற்றியே, நக்கீரர் என்னும் சங்ககாலப் புலவர்க்கும், ''இறையனார்'' எனப் பெயர்கொண்ட சிவ பெருமானுக்கும், ஒரு பெரும் சொற்போர் நிகழ்ந்தது என்பது. இதனைப் பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணத்துள் 'தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம்' என்பதனால் அறியலாம்.

''நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி,
நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்'

என்று, கி.பி. 7ஆம் நூற்றாண்டில்,இற்றைக்குச் சற்றேறத்தாழ, 1300 ஆண்டுகளுக்கு முன்னர் விளங்கியிருந்த திருநாவுக்கரசர் பாடியருளிய திருத்தாண்டகமும், இவ்வரலாற்றினை வலியுறுத்தும்.

## பாடலின் பொருள் :

''மலர்களின் மணத்தினை ஆராய்ந்து அவற்றின் மகரந்தத் துகள்களை உண்ணுகின்ற வாழ்க்கையினையும், அழகிய சிறகுகளையும் உடைய வண்டே! என்பொருட்டு முகமனாகப் பொய்கூறாமல், உண்மையாகக் கண்டு உணர்ந்ததனையே கூறுக! நீ ஆராய்ந்து அறிந்து உணர்ந்த எத்தனையோ பலவேறு வகையான மலர்களில்,எழுமையும் என்னுடன் தொடர்ந்து பழகுதல் பொருந்திய நட்பினையும், மயில் போன்ற சாயலையும், நெருங்கிய வரிசையான பற்களையும் உடைய, இந்தப் பெண்ணின் கூந்தலைப் போல நறுமணம் உடைய பூக்களும் உள்ளனவோ?'' என்பது, இக் குறுந்தொகைப் பாடலின் பொருள். எந்த மலரிலும் இந்த மணம் இல்லை; இத் தலைவியின் கூந்தல் கற்பு நலத்தால் இயற்கையாகவே நறுமணம் உடையது என்பது கருத்து.

## நலம் பாராட்டல் :

இப்பாடலை நினைப்பூட்டி மகிழ்விக்கும் வகையில், சொற்பொருட் சுவைநலங்கள் துளும்ப, மிகவும் அற்புதமாக நம்மாழ்வார் அருளிய பின்வரும் திருவிருத்தப் பாடல் அமைந்திருத்தல், அறிந்து இன்புறற்பாலது.

''வண்டுகளோ! வம்மின்! நீர்ப்பூ,
நிலப்பூ, மரத்தில் ஒண்பூ,
உண்டு களித்து உழலவீர்க்கு,
ஒன்று உரைக்கியம்; ஏனம்ஒன்றாய்
மண்துகள் ஆடி வைகுந்தம்
அன்னாள், குழல்வாய் விரைபோல்,
விண்டு கள்வாரும் மலர்உளவோ?
நும் வியல் இடத்தே''

இவ்வினிய சிறந்த திருவிருத்தப்பாடல், 'நலம் பாராட்டல்' என்னும் அகப் பொருள் இலக்கணத் துறை அமைந்தது. ''வண்டுகளே! வாருங்கள். நீர்ப்பூ, நிலப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ, புதற்பூ என்னும் பல்வகைப் பூக்களின் நறுமணமும் இனிய தேனும் ஆகியவற்றின் இயல்புகளைத் தரமறிந்து துய்த்து, எங்கும் உழன்று திரிகின்ற உங்களுக்கு, யாம் ஒரு புதுமையைச் சொல்லுகின்றோம். ஒப்பற்ற வராகமூர்த்தியாய் நிலத்தின் புழுதியினை அளைந்த எம்பெருமானின் பரமபதத்தைப் போன்ற, இத் தலைவியின் கூந்தலிலே இயற்கையாக அமைந்துள்ள நறுமணம்போல, மலர்ந்து மணம்வீசித் தேன் பெருக்குகின்ற பூக்கள், நீங்கள் எங்கும் பறந்து திரிகின்ற, மிக விரிந்து பரந்துள்ள இவ்வுலகத்தின்கண், எங்கேனும் இருக்கின்றனவா?'' என்பது, இதன் பொருள்.

இதன்கண் 'வண்டுகள்' என்றது, பரம் பொருளை நாடித் திரிகின்ற பக்தர்களாகிய சான்றோர்களை. 'வைகுந்தம் அன்னாள்' என்றது நம்மாழ்வார் ஆகிய பராங்குச நாயகியை. 'நீர்ப்பூ' என்பது பாற்கடலிற் பள்ளிகொண்ட பரமனை. 'நிலப்பூ' என்றது, இராமபிரான் கண்ணபிரான் போன்ற விபவ அவதார மூர்த்திகளை. 'மரப்பூ' என்றது, வேத சாகைகளின் முடியிற் காண்கின்ற பேரொளி வடிவினனான

பரமபத நாதனை. கூந்தலின் நறுமணம் வேறு எங்கும் இல்லாததுபோல, நம்மாழ்வாரின் நலமிகு பக்தியின் பெருக்கச் சிறப்பையும், வேறு எவரிடத்தும் எங்கும் காண்டல் இயலாது என்பது,இப்பாடலின் உள்ளுறை நுண்பொருள்.

## காண்பான் அவாவினன் நான்:

இனி, நம்மாழ்வார் அருளிய திருவிருத்தத்தின்கண் வரும் பிறிதொரு செய்யுளும், இங்கு நாம் கருதியுணர்தற்கு உரியது.

''தையல் நல்லார்கள் குழாங்கள்
குழிய குழுவின் உள்ளும்,
ஐய நல்லார்கள் குழிய
விழவினும், அங்கங்கெல்லாம்,
கையபொன் ஆழி வெண்சங்கொடும்
காண்பான், அவாவுவன் நான்;
மைய வண்ணா! மணியே முத்தமே!
என்றன் மாணிக்கமே''

''மையைப் போன்ற கரிய நிறம் உடையவனே! நீலமணியும் முத்தும் மாணிக்கமும் போன்ற நிறமும் அழகும் ஒளியும் உடைய பெருமானே! அழகிய பெண்கள் திரளாகக் கூடிய கூட்டங்களிலேயாயினும், நல்லவர்களான சிறந்த ஆண்மக்கள் திரண்டுள்ள திருவிழாக் களிலாயினும், இன்னும் இவைபோன்ற திரள் கள் எல்லாவற்றிலுமாயினும், கைகளிலே பொன்னிறமான திருவாழியையும், வெண்சங் கத்தையும் உடைய நின்னை, அவற்றோடு காண நான் ஆசைப்படுகின்றேன்'' என்பது, இப் பாடலின் திரண்ட பொருள்.

## தலைவியின் கூற்று :

இப்பாடலின்கண், காதல் வயப்பட்ட தலைவியானவள், தான் தலைவனை யாரும் இல்லாத தனிமையான இடத்தில் சந்தித்துக் கண்டு, ஏகாந்தமாகக் கூடிக் கலந்து குலாவி மகிழும் வாய்ப்பு நேராமற் போயினும், திரு வாய்ப்பாடியிலுள்ள ஆயர் மங்கையர் கூடி யாடும் குரவைக் கூத்துப் போன்ற மகளிர் குழாத்திலேனும், அல்லது தருமபுத்திரர் செய்த இராசசூய வேள்விகள் போன்ற இடங்களில் திரண்டுள்ள பெருமக்களின் குழாத்திலேனும், எங்கேனும் தேடிக் கண்டு, தொலைவில் இருந் தாவது கண்டு மகிழ்வேன், என்று தலைவி கூறு வதாக, அவளுடைய அளவுகடந்த காதல் மிகுதியின் ஆற்றாமையை, வெளியிட்டு விளக் கும்நிலையில், இத்திருவிருத்தச் செய்யுள் அழகுற அமைந்திருக்கின்றது.

## பராங்குச நாயகி :

இப்பாடலில் தலைவி நிலையில் விளங்கு பவர், நம்மாழ்வார் ஆகிய பராங்குச நாயகியே யாவர். நெஞ்சு என்னும் அகக்கண்ணால் பெருமாளைச் சேவிக்கப்பெற்ற நம்மாழ்வார், மீண்டும் அவரை எங்கேனும் கண்டு மகிழ வேண்டும் என்னும் காதல் உணர்வு மீதூர்ந்து, அவரை நினைந்து நினைந்து நெகிழ்ந்து உருகித் தம்முள்ளே கூறிக்கொண்ட கூற்றாதல், இச் செய்யுளின் உள்ளுறை நுண்பொருளாகும். இதன்கண் 'தையல் நல்லார்கள் குழாங்கள் குழீஇய குழு' என்றது பரதந்திரராய் இருக்கும் தன்மையையே முதன்மையாகக் கொண்ட பிர பந்நர்களின் கூட்டம் எனவும், 'ஐய நல்லார்கள் குழு' என்றது வேள்வி முதலிய தொழில்களைப் புரியும் திருத்தொண்டர்களின் திரள்எனவும், உள்ளுறை பொருள் கொள்ளுதல் வேண்டும்.

## ஆதி மருதியார் :

இந்தத் திருவிருத்தப்பாடல் சங்ககாலக் குறுந்தொகை நூலின்கண்,

''மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்தக் கோனை;
யானுமோர் ஆடுகள மகளே! என்கைக்
கோடுசர் இலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோர் ஆடுகள மகனே''

எனவரும் ஆதிமருதியார் என்னும் பெண்பாற் புலவர் பாடிய பாடலை, நினைவூட்டும் திறத்த தாய் அமைந்திருக்கின்றது.

## அழகிய மணவாள சீயர் :

இவ்வுண்மையை, நம்மாழ்வார் அருளிய திருவிருத்தத்திற்கு அழகிய மணவாளசீயர் வரைந்தருளிய சுவாபதேச உரையின்கண், ''நாயகியானவள் நாயகன் ஆன சர்வேசுவர னைப் பறம்பே திரளிடையாயினும் காண ஆசைப்பட்டுப் புலம்பிய பாசுரம் இது...... இந்தக் கிளவி, 'மள்ளர் குழீஇய குழுவினானும்; மகளிர் தழீஇய துணங்கையானும் யாண்டும் காணேன் மாண்தக்கோனை...' என்று அகத் தமிழிலும் சொல்லப்பட்டது'' என்று குறிப் பிடப்பெற்றிருத்தல் கொண்டு, செவ்விதிற் றெளியலாம்.

## பட்டர் :


திருவாய்மொழியில் ''என்நீர்மை கண்டு இரங்கி இது தகாது என்னாத, என் நீலமுகில் வண்ணற்கு என் சொல்லி யான் செல்லு கேனோ?''எனவரும் பாசுரத்தின் ஈட்டுரையில்,

''பட்டரை ஒரு தமிழன், 'கேட்டிரங்கி' என்னாதே, 'கண்டிரங்கி' என்னப் பெறுமோ? என்ன, அணைத்த கை நெகிழ்த்த அளவிலே வெளுத்தபடி கண்டால் பிரியத்தகாது என்று இருக்க வேண்டாவோ? இப்படிக் கூடுமோ? என் னில், 'புல்லிக் கிடந்தேன் புடை பெயர்ந்தேன் அவ்வளவில் அள்ளிக் கொள்வற்றே பசப்பு' எனத் திருக்குறளிலும், ''ஊருண் கேணி உண்துறைத் தொக்க,பாசி யற்றே பசலை,காதலர் தொடுவுழித் தொடுவுழி நீங்கி, விடுவுழி விடுவுழிப்பரத்தலானே' எனக் குறுந்தொகையிலும் (399) வரும். உனக்கு இத்தமிழ்போதோ? என்றார்.''


எனவரும் விளக்கமும், இங்கு நாம் அறிந்து இன்புறுதற்கு உரியது.


## முடிவுரை:

இங்ஙனம் இலக்கியச் சுவை மிக்குத் திக ழும் நம்மாழ்வார் திருவிருத்தத்தினையும், சங்க காலக் குறுந்தொகை போன்ற இலக்கியங்களை யும், நாம் இனிது கற்று மகிழ்வோமாக!




சென்னைத் தியாகராயநகர் அருள்மிகு சிவ-விஷ்ணு திருக்கோயிலில், தமிழ்நாடு தேவார ஓதுவார் மூர்த்திகள் சங்கத்தின் 4-ஆவது ஆண்டுவிழா நடைபெற்ற பொழுது, அற நிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் வருகை தருதலும், உரை நிகழ்த்துதலும். (31-1-1983). மேற்படி விழாவில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி, மாண்புமிகு மோகன் அவர்களும், 'தமிழ்பெரும் நடிகர்' திரு சகஸ்ரநாமம் அவர்களும், இயல் இசை நாடக மன்றச் செயலாளர் நடிகமணி திரு டி. வி. நாராயணசாமி அவர்களும், ' சங்கநூற் பெரும்புலமைச் சான்றோர் ' பேராசிரியர் திரு க. வெள்ளை வாரணனார் அவர்களும் மற்றும் பல பெருமக்களும் கலந்து கொண்டனர் (31-1-1983).





சென்னைத் திருமயிலை அருள்மிகு திருவள்ளுவர் திருக்கோயிலில் திருவள்ளுவர் விழா நடைபெற்ற போது, திரு 'திருக்குறளார்' வீ. முனுசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற பட்டிமன்றத்திற்கு முன்னர், மாண்புமிகு உயர்நீதி மன்ற நீதிபதி திரு பி. ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்து உரையாற்றுதல்.



சென்னைத் திருமயிலை அருள்மிகு திருவள்ளுவர் திருக்கோயிலில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவுக்கு அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் வருகைபுரிந்து உரை நிகழ்த்துதல் (21-1-83).

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.